Y73(V2).6
N47
108886

# தென்னாப்ரிக்க இந்தியர் போராட்டம்

MADRAS

எஸ். எஸ். மாரிசாமி

விற்பனை உரிமையாளர்:

**பாரி நிலையம்**

59, பிராட்வே : சென்னை 1.

முதற் பதிப்பு 1947

M. I. P. PROJECT
Microfilmed.

வெளியிடுவோர்

**தமிழகம்**

ராமச்சந்திரபுரம்

விலை ரூ. 3—8—0

M. I. P. PROJECT
Microfilmed.

## பதிப்புரை

காரசாரமான நடை எழுதுவதில் மிகச் சிறந்தவர் எனப் போற்றப்படும் பேராசிரியர் சொக்கலிங்கத்தின் குழுவைச் சேர்ந்தவர் நண்பர் மாரிசாமி. "தினசரி" உதவி ஆசிரியர். பல ஆண்டுகளாக உலக அரசியல் கவனம் செலுத்தி வருகின்றவர். அதில் தோன்றும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் உண்மைக் காரணம் என்ன என அறிவதில் மிகத்திறமை உள்ளவர். அதுமட்டும் அல்ல, அதை பிறர் மனதில் பதியுமாறு எழுதுவதில் வெற்றியு[ம்] பெற்றவர். அவருக்கென அமைந்த வீரம் செறிந்த நடையில் இந்நூலை இயற்றியுள்ளார். கொடுமை கண்ட போது குமுறுகின்ற அவர் உள்ளத்தை வருகின்ற பக்கங்களில் காண்பீர்கள்.

தென்னாப்பிரிக்க இந்தியர் போராட்டத்தைக் குறித்து ஒரு சிறிய புத்தகம் எழுதித் தருமாறு கேட்டோம். அவரளித்த பதில் இப்பெரிய நூல் வடிவில் வந்தது. எங்கள் விருப்பத்தை ஒன்றுக்குப் பத்தாக நிறைவேற்றித்தந்த ஆசிரியருக்கு எங்கள் நன்றி.

— பதிப்பகத்தார்.

நிர்மலகுமாரிக்கு

எஸ். எஸ். மாரிசாமி





ஜெனரல் ஸ்மட்ஸ்



நமக்குதவிய ஸ்ரீ-மாலட்டோவ்




தென் மேற்கு ஆப்பிரிக்கா
கேப் மாகாணம்
கேப்டவுன்
டர்பன்
கிம்பர்லி
மைல்

# வாழ்க நீ!

சுமார் நானூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால்.

இந்தியாவைக் கண்டுபிடிக்கும் எண்ணத்துடன் கிளம்பிய பார்த்தலோ மியூவ் டியாஜ் என்ற போர்ச்சுகீஸிய மாலுமி இந்தியாவைக் காணமுடியுமா என்று கலங்கி நின்றான்.

கண்ணுக்கு எட்டிய தூரம்வரை கடல் மயமாக இருப்பதைக்கண்டு மாலுமிகள் கவலை அடைந்தார்கள். பிரயாண அலுப்புத்தட்டி எப்பொழுது இந்தியாவைக் காண்போம்—எப்பொழுது ஊர் திரும்புவோம் என்று கலங்கினார்கள்.

இந்த சமயத்தில் திடீரென ஒரு கரை தெரிந்தது!

மாலுமிகள்—கப்பல் தலைவன் முதலிய எல்லோருடைய கலக்கத்தைப் போக்கியது அந்தக் கரைதான். அதுதான் உலகமே இன்று செல்லப் பெயரிட்டு அழைக்கும் **நன்னம்பிக்கை முனை**. பிறகு வாஸ்கோடி காமா இந்தியாவைக்காண அவனுக்கு உதவியதும் இந்தக் கரைதான். போர்ச்சுகீஸியர் இந்தியாவை தாங்கள் தான் முதலில் கண்டதாக பெருமைப்படவும் காரணமாக நின்றது இந்த நன்னம்பிக்கை முனைதான். இந்த நன்னம்பிக்கை முனையைக் கொண்டிருக்கும் தென்னாப்பிரிக்காவை அன்று போர்ச்சுகீஸீயர் நீ வாழ்க என்றார்கள்!

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னதாக.

புத்தர் பிரானின் அஹிம்சை நெறியை அன்றாட வாழ்வில் புகுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் **மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி** என்ற ஒரு மனிதர் ஒரு பரீட்சையில் இறங்கினார். அந்த மகத்தான பரீட்சை முதலில் கடும்

கஷ்டத்துக்கு உள்ளாகி, சொல்லொண்ணா துன்பங்களைக் கொடுத்தது. மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்ற அந்த மனிதர் துன்பத்தை தூண்டுகோலாகவும், கஷ்டத்தை வெற்றியின் அறிகுறியென்றும் எண்ணி, தனது விசித்திர பரீட்சையை விடாமல் நடத்திக்கொண்டே போனார்.

துன்பத்துக்கும் ஓர் எல்லை உண்டு என்பதற்கு ஒப்ப இறுதியில் பரீட்சை வெற்றி தந்தது. இப்பரீட்சை நடந்த இடமும் வெற்றி கிட்டிய இடமும் அதே தென்னாப்பிரிக்காதான். இதைக்கண்ட தென்னாப்பிரிக்கா வாழ் இந்தியர்கள் தென்னாப்பிரிக்காவே நீ வாழ்வாயாக என்று வாழ்த்தினார்கள்!

தென்னாப்பிரிக்காவில் நடந்த இதே பரீட்சை பிறகு உலக சரித்திரத்தையே மாற்றிய பரீட்சையாகும். வணங்காமுடி மன்னர்களை வணங்க வைத்தது இப்பரீட்சை. வாளும் வேலும் தாங்கிநின்ற வீரர்கள் சாதிக்க முடியாத வேலையை சாதித்தது இந்தப் பட்ரீசை. சூழ்ச்சிக்கு சூழ்ச்சி செய்தும், உயிருக்கு உயிர் கொடுத்தும் நிறைவேற்ற முடியாத காரியத்தை, இருதலை முறைக்குள் நிறைவேற்றி வைத்தது இந்த பரீட்சைதான்.

பிளாஸி யுத்தத்திலே ஏற்பட்ட ஏமாற்றம் பல நூற்றாண்டுகளுக்கு மறக்க முடியாததாகும். சிராஜ் உத்தௌலாவின் சமாதிக்கு வாயிருக்குமானால், அதன கதறல் உக்கிரம் உலகத்தையே அதிரச்செய்யும். பிளாஸி அடைந்த ஏமாற்றம் போதாதென்று பகதூர் ஷாவும், லக்ஷ்மிபாயும், தந்தியா தோபியும், நானாசாகிபும் எவ்வளவு பலி கொடுத்தார்கள்? ஜான்ஸிக்கும் ஆக்ரா, டில்லி, முராதாபாத்துக்கும் சொல்லி அழும் சகதி இருக்குமானால் அவைகளின் சோகக்குரல் இன்றும் நம் காதில் விழும்.

சிராஜ் உத்தௌலாவும் பகதூர் ஷாவும், லக்ஷ்மிபாயும் நானாசாகிபும், கட்ட பொம்முவும் வெள்ளைத் துரையும் எந்த லட்சியத்தை சாதிக்கவேண்டுமென்று



வீரசுவர்க்கம் புகுந்தார்களோ அதே லட்சியத்தை இந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி தனது அந்த விசித்திர பரீட்சையின் மூலமாக சாதித்தார். சர்வ தேசங்களிடை இன்று இந்தியா ராஜகம்பீரமாக நிற்கிறது. ரஷ்யா ஒரு பக்கமும் பிரிட்டன்—அமெரிக்கா மற்றொரு புறமும் நேச வலை வீசுகின்றன. அடிப்பட்ட சிங்கம் போலக்கிடந்த இந்தியா இன்று வீறுகொண்டு எழுந்து விட்டது. இதற்கு யார் காரணம் என்றால், அந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியும் அவர் செய்த பரீட்சையும்தான்! சர்வ வல்லமை மிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், இந்தப் பரீட்சை முன் படுதோல்வி கண்டது. இவ்வளவு மகோன்னதம் கொண்டிருக்கும் அந்தப் பரீட்சைக்குப் பெயர்தான் **சத்தியாக்கிரகம்**!

இப்பேர்ப்பட்ட இந்த சத்தியாக்கிரகம் முதன் முதலில் பிறந்த இடம் **தென்னாப்பிரிக்கா**. ஆகவே நாற்பது கோடி இந்தியமக்களும் தென்னாப்பிரிக்காவே நீ பல்லாண்டு வாழ்வாயாக என்று வாழ்த்தி தென்னாப்பிரிக்கா இருக்கும் திசை நோக்கி வணங்கி நிற்கிறார்கள்!

கறுப்பர் பூமி—இருள் மண்டிய கண்டம்—கொடும் வன விலங்குகளும் விஷப் பூச்சிகளும் நெளிந்து திரியும் காடு—அநாகரிகமும் மிலேச்சத்தனமும் மலிந்து, நரபலி கோரும் கொலைக்களம் என்று மேலை நாடுகள் என்ன சொல்லி அழைத்தாலும் எப்பேர்கொடுத்து தூற்றினாலும் ஆப்பிரிக்கா—அதிலும் தென்னாப்பிரிக்கா இந்தியருக்கு புண்ணியபூமி. காசியும் ஹரித்துவாரும், இராமேசுவரமும் காளாஸ்தியும், மெக்காவும் மெதினாவும், ஜெருசலேமும் வாட்டிகனும் எப்படி பற்பல மதத்தாருக்கு தம்தம் க்ஷேத்திரமாக விளங்குகின்றனவோ, அதைவிட பன்மடங்கு இந்திய மக்களுக்கு புண்ணியாம்சம் கொண்ட க்ஷேத்திரம் தென்னாப்பிரிக்கா. எல்லா மதத்தாரும் சமயப்பற்றுடையாரும் கொண்டாடி நிற்கும் பெறும் பேறு பெற்றது தென்னாப்பிரிக்கா ஒன்றுதான்.

இத்யாதி புகழ்கொண்ட தென்னாப்பிரிக்கா இன்று என்ன நிலைமையில் இருக்கிறதென்றால் ரொம்ப பரிதாப

மான நிலையில் இருக்கிறது. பூர்வ குடிகள் இருக்கிற இடமே தெரியாமலிருக்கிறார்கள். அங்கு வாழும் இந்திய மக்கள் நிலையோ படுமோசமானதாக இருக்கிறது. கறுப்பர்—வெள்ளையர் என்ற நிறவெறி அங்குள்ள வெள்ளையருக்கு தலைக்கேறி இன்று மற்றவர்களின் பிராணனுக்கு ஆபத்தைக் கொண்டு வந்துவிட்டிருக்கிறது. நிறவெறிக்கு இந்தியர் இலக்காகி இன்று வாய்விட்டு சொல்லமுடியாத துன்பத்துக்கு ஆளாகி இருக்கிறார்கள். பிஜித்தீவு இந்திய மக்களின் துயரக் குரலைக் கேட்ட பாரதி நெஞ்சு பொறுக்காமல் காற்றினிடம் செய்தி கேட்டு கதறினார். அதே பாரதி இன்றிருப்பாரேயானால், தென்னாப்பிரிக்காவில் இந்தியர் படும் அவதியைக் கேட்டு உள்ளம் துடிப்பார். கண்காணா தேசத்தில், இரும்புச் சட்டத்தை எதிர்த்து இந்திய மக்கள் போராடுகிறார்கள். இந்தப் போராட்டத்தில் வயிர நெஞ்சம் படைத்த தமிழர்கள் முன்னிற்கிறார்கள்! இந்த போராட்டத்தில் பல களபலிகள் கொடுக்கப்பட்டுவிட்டன. 1946 ஜூன் 21-ம் தேதி அன்று டர்பனில் கான்ஸ்டேபிள் **கிருஷ்ணசாமி பிள்ளை** என்பவர் வெள்ளை குண்டர்களின் நிறவெறிக்கு உயிரைப் பலி கொடுத்தார். பிள்ளையின் மரணத்தைக் கேட்டு இந்தியா பெரும் அதிர்ச்சி அடைந்தது. தென்னாப்பிரிக்கா இந்தியரோ இடியோசை கேட்ட நாகம் போலாயினர். எனினும் போராட்டம் நிற்கவில்லை. மனதிலே துவேஷமோ, பகைமையோ இல்லாமல் அங்கு அறப்போர் புரிகிறார்கள். இந்த செய்தி கேட்ட மகாத்மா தென்னாப்பிரிக்க இந்தியரைக் கண்டு பெருமிதம் கொள்ளுகிறேன் என்றார்.

கிருஷ்ணசாமி பிள்ளை நூற்றில் ஒரு நபர். எவ்வளவோ பேர் தென்னாப்பிரிக்க வெள்ளயரின் வெறிக்கு பலியாயிருக்கிறார்கள். கிருஷ்ணசாமி பிள்ளையும் அந்த இந்திய மக்களும் செய்த குற்றம் என்ன தெரியுமா?

வெள்ளைக்காரர்கள் வீட்டுச்சொத்தை களவாடவில்லை.



வெள்ளைக்காரன் நிலத்துக்குள் புகுந்து இரவோடு இரவாய் கதிர் அறுத்துக்கொண்டு ஓடிவந்துவிடவில்லை.

ஜோன்ஸ் துரையின் தோட்டத்திலோ ஸ்மட்ஸ் துரை வீட்டு வைக்கப் படைப்பிலோ இவர்கள் மாடு கன்றுகளை ஓட்டிக்கொண்டு வந்து விடவில்லை.

பின்னர் என்னதான் குற்றமென்றால், வெள்ளையரையும் கிருஷ்ணசாமி பிள்ளையையும் சிருஷ்டித்த கடவுள் பண்ணின ஒரு பெரிய தப்புதான் இதற்குக் காரணம். அசிரத்தையாலோ, வேலையின் சிரமத்தாலோ அந்த கடவுள் ஒரு காரியத்தை அசட்டையாக விட்டுவிடவே அது கிருஷ்ணசாமி பிள்ளையின் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்திவிட்டது. அந்த கடவுள் பூலோக வாசியாய் இருந்தால், யூனியன் சர்க்காரின் சட்ட வரம்புக்கு உட்பட்டு அவரை கைதுசெய்து விசாரிக்கலாமென்றிருந்தால், அவரை நடுக்கோர்ட்டில் நிறுத்திவைத்து விசாரிக்கலாம் — தண்டிக்கலாம்! ஆனால் கிருஷ்ணசாமி பிள்ளையின் துரதிர்ஷ்ட வசத்தாலும் வெள்ளை துரைகளின் அதிர்ஷ்ட வசத்தாலும் அவர் பூலோக வாசியாகவும் தென்னாப்பிரிக்க யூனியன் சர்க்கார் பிரஜைகளில் ஒருவராகவும் இல்லை. இவ்வளவு பெரிய நெருக்கடி ஏற்பட அந்த கடவுள்தான் என்ன அவ்வளவு பெரிய குற்றத்தை செய்தாரென்று கேட்டால், குற்றம் இதுதான்.

வெள்ளை துரைகளுக்கு சிவப்புத் தோலையும் கிருஷ்ணசாமி பிள்ளைக்கு கறுப்புத் தோலையும் கொடுத்ததுவே அக்குற்றம். வெள்ளைத் தோலுடையவர்களான வெள்ளைக்கார துரைமார்கள் கறுப்புத் தோலுடைய கிருஷ்ணசாமி பிள்ளையை எப்படி சகிப்பார்கள்? துரை நடக்கும் வீதியில், வசிக்கும் தெருவில், கறுப்புவாடை வீசிவிட்டால், துரையின் நிலைமையும் அவரது சுற்றத்தாரின் நிலைமையும் என்ன ஆகும்? துரைமார்கள் உடனே ஆகாசத்துக்கும் ஆகாசம் துரைகளைத் தாங்கி நிற்கும் பூமிக்கும் நிலைபெயர்ந்துவிட மாட்டாரா?

மேலும் கிருஷ்ணசாமி பிள்ளை நடந்து சென்று போன பாதை சுட்டு சுண்ணாம்பாகி, அதில் கால் வைக்கும் துரைமார்களின் வர்க்கத்தாரை சாம்பலாக்கிவிட்டதா? இம்மாதிரியான ஆபத்துக்களை எல்லாம் எதிர்பார்த்து தான் வெள்ளைநிற வர்க்கத்தார் இன்று தென்னாப்ரிக்காவில் தலைவிரி கோலமாக ஓடி ஆடி, கறுப்பர்களை விரட்டுகிறார்கள். அவர்களை தேசத்திலிருந்தே விரட்டித்தள்ளுகிறார்கள். ஸ்மட்ஸ் துரை வர்க்கத்தாரிடம் சர்க்கார் லகானும் இருப்பதால் சட்டத்தின் துணை கொண்டு இக்காரியத்தை சாதிக்கிறார்கள்.

இம்மாதிரியான நிலைமையில் கிருஷ்ணசாமி பிள்ளையாவது விட்டுக்கொடுத்தாரா என்றால், இல்லை.

கறுப்பர் அவ்வளவு பேரையும் கூட்டி சத்தியாக்கிரகம் நடத்தினார்.

தடுக்கப்பட்ட பிரதேசத்துக்கு வந்து கூடாரம் அடித்தார்.

கூடாரம் அடித்ததோடு அல்லாமல், ஸ்மட்ஸ் துரையும் மனிதர், நானும் மனிதன்தான் என்று பேசினார்.

தாம் பேசியதோடு அல்லாமல் மற்றவர்களையும் பேசச் சொன்னார்.

வெள்ளையர் இவ்வளவுக்கும் பொறுத்திருந்தனர். பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா? ஆகவே, ஒரு நாள் காரமான பானத்தை அருந்திவிட்டு வந்த துரைமார்கள் தமது சாகாக்களை எல்லாம் அழைத்தனர். கூடாரம் இருக்குமிடத்துக்கு சென்று, கூப்பாடு போட்டார்கள். பிறகு கேலி செய்தனர். வெட்கமில்லையா என்று பல்லிளித்தார்கள். கடைசியில், நரி போல ஊளையிட்டு, ஓடுங்கள் என்றார்கள். அப்பொழுதாவது கிருஷ்ணசாமி பிள்ளையாவது அவரது கூடார கோஷ்டியாவது சென்றார்களா? இல்லை.

கூடாரத்தின்மீது பாய்ந்தனர். கூடாரம் ஆடி இலை பறப்பது போல பறந்தது. கிருஷ்ணசாமி பிள்ளை



மார்பில் பலத்த அடி. அவரது கோஷ்டியாருக்கும் அடி. கிருஷ்ணசாமி பிள்ளையை ஆஸ்பத்திரிக்கு தூக்கிச் சென்றார்கள். சில நாட்களில் அவரின் ஆவி பிரிந்தது.

மறுநாள் கிருஷ்ணசாமி பிள்ளை இல்லை. அவருக்கு பதிலாக வேறு இந்தியர்கள். அதே இடத்தில் கூடாரம். அனைவரும் சமத்துவம் என்ற அதே பேச்சு. துரைகளுக்கு பழையபடியும் கோபம் வந்தது. அந்தக் கோபத்தை வெளிப்படுத்துவதற்கு முன்பாக, அவர்களுக்கு ஒரு குயுக்தி தோன்றியது. உடனே சர்க்கார் கட்டிடத்துக்கு சென்றார்கள்.

சில மணி நேரத்தில் கூடாரம் பிரிக்கப்பட்டது. கூடாரத்திலிருந்த இந்தியர்கள் கைதானார்கள். அன்றைய விவகாரம் அதோடு முடிந்தது.

மறுநாள். இன்றும் கூடாரம். புது ஆட்கள். கிருஷ்ணசாமி பிள்ளையின் ஆட்கள்தான். போலீஸ் புலிகள் வந்தன. கைது செய்யும் நாடகம் திரும்ப நடக்கிறது!

# நாணயப் பிசகு

மகாத்மாவின் சத்தியாக்கிரகம் தென்னாப்பிரிக்காவில் 8 வருஷங்கள் நடந்தது. சத்தியாக்கிரகம் என்ற சொல் பிறந்ததே தென்னாப்பிரிக்காவில்தான். இந்த சொல்லுக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது என்பது முதலில் யாருக்குமே தெரியாது. காந்திஜியுடனிருந்தவர்கள் பல தடவை இதன் சக்தியைக் குறித்து ஆரம்பத்தில் பயந்திருக்கிறார்கள். ஆகவே தென்னாப்பிரிக்க வெள்ளையர்கள் இதை அசட்டை செய்தார்களென்றால் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏதோ சில கையாளாகாதவர்களின் அர்த்தமற்ற கூப்பாடு என்று அவர்கள் எண்ணினார்கள். கூலிவேலைசெய்து பிழைக்க வந்த கூட்டம், நம்மை எதிர்த்துப் பேசுவதா என்று துச்சமாக மதித்தார்கள். காந்திஜி சொன்ன புத்திமதிகளை எல்லாம் கேலி செய்தார்கள். கடவுள் சத்தியம், அஹிம்சை என்ற சொற்களெல்லாம் செத்து வெகு நாளாகி விட்டதே, இந்தக் காலத்தில் போய் இந்த மனிதர் இப்படி பேசுகிறாரே என்று கூட சில அனுதாபி வெள்ளைக்காரர்கள் இரங்கினார்கள். ஆனால் காந்திஜியின் சத்தியாக்கிரகம் ஆரம்பமானதும் நிலைமை சிறிது சிறிதாக மாற ஆரம்பித்தது.

விதியின்மீதும், அதிர்ஷ்டத்தின்மீதும் நம்பிக்கை என்னும் மாயைப் பிசாசை தூக்கி வைத்து விட்டு கொட்டாவிவிட்டுக் கொண்டிருந்த இந்தியர்களிடை ஒரு விழிப்பு ஏற்பட்டது. உடைந்து கிடந்த அவர்கள் உள்ளத்திலே ஒரு உற்சாகம் பிறந்தது. தாங்களும் மனிதர்கள் தான் — மனிதனை மனிதன் அடக்கியாள்வதா என்ற உணர்ச்சி அவர்களிடையே தோன்றியது. தங்களை அடக்கி ஒடுக்கும் யாரையும், எந்த சட்டத்தையும், தடையையும் மீறுவோமென இந்தியமக்கள் கிளம்பினார்கள். பெண்கள்கூட கிளம்பினார்கள். கடல் கடந்து



வந்திருக்கும் எங்களுக்கு, 'காந்தியே நீதான் எங்கள் தலைவன்—தளகர்த்தன்' என்று கூறினார்கள். காந்திஜி காட்டின வழி எவ்வளவு கரடுமுரடானதாக இருந்தாலும் அதைக் கடைசி வரை பின்பற்ற தயாராக இருந்தார்கள். இந்த வீரர்கள் கூட்டத்தில் இந்திய மக்கள் முன்னணியில் நின்றார்கள்! தமிழ் நாட்டு வீரப் பெண்மகளிரும் முன்னின்றார்கள்! வீர மறக்குலத்துதித்த வள்ளியம்மை இதில் காட்டிய தீரம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியது. அப்பெண் திலகம் தென்னாப்பிரிக்காவில், மகான் காந்தி நடத்திய அறப்போருக்கு தன்னுயிரையே அர்ப்பணம் செய்தவர்!

இறுதியில், எள்ளி நகையாடியவர்கள் தோற்றனர். மகாத்மா வென்றார். புழுப்போல மதிக்கப்பட்ட இந்தியர், சர்க்காரையே பணியவைத்தார்கள். அதுவும் பத்தாம் பசலி ஏகாதிபத்திய திமிரோடு இருந்த சர்க்காரை அடிபணியச் செய்தார்கள். இது லேசான காரியமல்ல. சொந்த நாட்டிலேயே பிரர்க அடிமையாக இருக்கும் இந்தியர், கடல்கடந்துபோய் போராடி வெற்றி பெறுவது என்றால் சாமான்யமான காரியமல்ல. இதை மகாத்மா காந்தி ஒருவரால்தான் செய்ய முடிந்தது. இதற்கு அவர் பட்ட கஷ்டம், துன்பம் சொல்லி முடியாது.

இந்த சத்தியாக்கிரகத்தின் மூலம் கிடைத்த வெற்றி ரொம்ப நாள் நீடிக்காமற் போய்விட்டது. காரணம், ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஒரு சாரார் தங்களின் நாணயத்தை காற்றில் பறக்க விட்டு விட்டு வம்பு செய்கிறார்கள். இந்த சாரார் சாதாரணமானவர்களாக இருந்தால் கவலை இல்லை. கோர்ட்டில் நிற்க வைத்து நாணயப் பிசகை அம்பலப்படுத்தலாம். இவர்களே சர்க்காராக இருப்பதால் கோர்ட் எங்கே? ஆகவே தென்னாப்பிரிக்க இந்திய மக்கள் தங்களின் பழைய சத்தியாக்கிரக ஆயுதத்தை மேற்கொண்டு, அந்த கண்காணா தேசத்தில் அறப்போர் புரிகிறார்கள். அந்த அறப்போரில்தான் கிருஷ்ணசாமி பிள்ளை முதல் பலியானார்.

ஒரு வெள்ளைக்கார பிரமுகரும், ஒரு வெள்ளைக்கார
மாதும் கைதியாயிருக்கிறார்கள். கறுப்பர் வெள்ளை
யரை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில், கறுப்பருக்
காக பரிந்து இரு வெள்ளையர்கள் கைதாவது என்றால்,
இந்தியர் போராட்டம் எவ்வளவு நியாயமானது? இதை
கிறிஸ்துவ தர்மம் பேசும் பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் ஒப்
புக்கொள்ள மறுக்கிறார்!

தென்னாப்ரிக்கா, வெள்ளையரின் சுரண்டும் ஸ்தலம்.
ஆகவே கறுப்பராகிய உங்களுக்கு இடமில்லை, வீடு
வாசல்களை விட்டு விட்டு ஓடுங்களென அங்குள்ள வெள்
ளைக்கார அரசாங்கம் கூறுகிறது. எதற்காக வெளியேற
வேண்டும்? இட நெருக்கடியா, இல்லை. உள்நாட்டு
உணவுப் பொருள்கள் முடையா என்றால் அதுவுமில்லை.
அல்லது வேறெவ்வித நியாயமான காரணம் உண்டா
என்றால் அதுவும் கிடையாது. மேலும் கறுப்பரை
விரட்டி விட்டு வெள்ளையரை குடியேற வரும்படி
அழைக்கிறார்கள். ஆகவே அநியாயமான இந்த கோரிக்
கைக்கு உட்பட முடியாதென்று இந்தியர்கள் கூறி விட்
டார்கள். சர்க்கார் தங்களுக்கு விரோதமாக நிறை
வேற்றி யிருக்கும் சட்டத்தை எதிர்த்து சத்தியாக்கிரகம்
செய்கிறார்கள்.

இப்பொழுதுள்ள இந்திய தேசிய சர்க்கார் பற்றி
அனைவருக்கும் தெரியும். தேசிய சர்க்கார் இந்தியர்
பிரச்னையை லேசில் விடாது என்பது நம்மை விட
ஸ்மட்ஸுக்கு வெகு நன்றாகத் தெரியும். அதிலும்
இந்த சர்க்காரின் தலைவரான பண்டித நேரு எப்பேர்ப்
பட்டவர் என்பதை ஸ்மட்ஸ் நன்றாக அறிவார். இருந்
தாலும் அவர் சர்ச்சில் வர்க்கத்தவர். இவரது ஆட்
களோ, பிற்போக்கு என்ற புடத்திலிருந்து கிளம்பிய
அசல் முதலாளி வர்க்கம். ஆகவே நிலைமை லேசில் தீரு
மென்று சொல்லுவதற்கில்லை.

இந்திய சர்க்காருக்கும் தென்னாப்ரிக்காவுக்கும்
இருந்த வர்த்தக உறவு ஏற்கெனவே அறுபட்டு



விட்டது. நேசதேச ஸ்தாபனத்துக்கு இந்தியா, தென்
னாப்ரிக்கா மீது புகார் அனுப்பி வெற்றி பெற்று விட்
டது. இனி தென்னாப்ரிக்கா ஒழுங்காக நடக்க வேண்
டும். அப்படி நடக்குமா என்பது நமக்குத் தெரியாது.
ஆனால் ஒன்று. நிறவெறி பிடித்த வெள்ளையருக்கு
எப்படி பாடம் கற்பிக்க முடியுமென்பதை இந்தியா நன்
கறியும்! அதற்கு முன்பாக, தென்னாப்ரிக்கா இந்தியர்
பிரச்னையை நாம் அறிய வேண்டும். தென்னாப்ரிக்கா
வில் முன்பு நடந்த சத்தியாக்கிரகத்தை பார்க்க வேண்
டியது அவசியம். இதற்கு முதலாவதாக தென்
னாப்ரிக்கா சரித்திரமும், அங்கு இந்தியர் குடியேறிய வர
லாறும் தெரிந்திருக்க வேண்டியது ரொம்ப முக்கியம்.

# தங்குமிடத்தில் அடிதடி!

15-ம் நூற்றாண்டில் மத்தியகிழக்கு நாடுகளில்
ஆதிக்கம் வகித்திருந்த உதுமானிய துருக்கியர் இந்தியா
வுக்கும் ஐரோப்பாவுக்கும் இருந்த தரைப்பாதையைத்
தடுத்துவிட்டார்கள். இதனால் ஐரோப்பாவுக்கும் இந்
தியாவுக்கும் அதன்மூலம் கீழ்க்கோடி நாடுகளுக்கும்
இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டது. இந்த துருக்கி
யர் பராக்கிரமசாலிகளாகவும், உறுதி படைத்தவர்க
ளாகவுமிருந்ததால், ஐரோப்பியர் இவர்களிடம் வந்து
செய்த தந்திரங்களெல்லாம் பலிக்கவில்லை. தரைப்
பாதையை அளித்தால், மிகுந்த காணிக்கை செலுத்
துவதாக பல ஐரோப்பிய நாடுகள் கூறின. வரி
கொடுப்பதாக இன்னும் சில நாடுகள் அறிவித்தன.
இவைகளுக்கு துருக்கிய சாம்ராஜ்யம் உடன் பட மறுக்
கவே, வர்த்தகத் துறையில் முன்னணியில் நின்ற சில
ஐரோப்பிய நாடுகள் துருக்கி மீது யுத்தம் தொடுப்பதாக
மிரட்டின. துருக்கிய சுல்தான்கள் இந்த மிரட்டல்களை
சட்டைபண்ணவே இல்லை.

இதே நிலைமை நாளுக்குநாள் நீடிக்கவே, மேலை
நாடுகள் நிலைமை படுமோசமாகிவிட்டது. நெடுங்கால
மாக அடித்துவந்த கொள்ளை போய்விட்டதாக அந்
நாடுகள் வருந்தின. இந்தியாவும் கீழ்க்கோடியும் பொன்
கொழிக்கும் பூமி எனபது இவர்களின் திட நம்பிக்கை.
இந்தப் பொன்னைப் பெறுவதற்கிருந்த எல்லா சாத்தி
யங்களையும் இடையே நிற்கும் உதுமானியன் தடுக்கி
றானே என்று வயிறு எரிந்தார்க்ள். இந்த சமயத்தில்
போர்ச்சுகீஸிய மன்னன் ஹென்றி ஒரு ஏற்பாடு செய்
தான். அதாவது கடல்மார்க்கமாக இந்தியாவை
அடைவது என்று ஏற்பாடு செய்தான். இதற்காக
அவன் தன் ஆயுள்நாள் முழுவதையும் செலவிட்டான்.
ஹென்றி ஒரு சிறந்த மாலுமி. அதோடு உறுதி



படைத்தவன். எனினும் அவன் ஆயுள் நாளில் இந்தியா
வுக்கு கடல்பாதை தென்படவில்லை. ஹென்றிக்குப்
பிறகு பார்த்தோலோ மீயூவ் டியாஜ் என்னும் ஒரு மாலுமி
கிளம்பினான். ஹென்றி இடத்தில் இவனுக்கு அபார
பக்தி. ராஜாவே கப்பலை ஓட்டிக்கொண்டு அலையும்போது,
நாமும் போய்க் கஷ்டப்பட்டால் என்ன என்று கிளம்பிய
வன். ஹென்றி வந்த திசையிலேயே இவனும் வந்தான்.
அதோடு தெற்கே மேலும் மேலும் கப்பலை செலுத்தி
கொண்டு வந்தான். இவனது கப்பல் ஒரு சமயம் வழி
தெரியாமல் திகைத்து நின்றது. எந்தப்பக்கம் திரும்பி
னாலும் ஒரே தண்ணீர் மயமாய் இருக்கவே, இவனும்
ஏனைய மாலுமிகளும் கலங்கினார்கள். இந்த சமயத்தில்
தான் கரை தெரிந்தது. அதுவே நன்னம்பிக்கை முனை.
1486-ல் இந்த முனை கண்டுபிடிக்கப்பட்டது.

இரண்டாவது ஜான் என்னும் இளவரசன் பட்டத்
துக்கு வரவே, அவன் வாஸ்கோடி காமா என்னும் மாலு
மியை இந்தியாவை கண்டுவா என்று அனுப்பினான்.

நன்னம்பிக்கை முனைக்கு அப்பால் தரை இருக்கிறதா
என்பதை அறியும் நோக்கத்தில் வாஸ்கோடி காமாவின்
கப்பல் புறப்பட்டது. 1498-ம் ஆண்டு இந்த கப்பல்
இந்தியாவின் கரையை அடைந்தது. கள்ளிக் கோட்
டையை (கோழிக்கூடு) வாஸ்கோடி காமா முதலில்
அடைந்தாரென்பது இந்திய சரித்திரம்.

நன்னம்பிக்கை முனையை கண்டுபிடித்த உடனேயே
தென்னாப்ரிக்கா மீது வெள்ளையரின் திருஷ்டி விழவில்லை.
வாஸ்கோடி காமா கப்பல் நன்னம்பிக்கை முனையைத்
தாண்டி வரும்போது, ஒருநாள் இரவு, வாஸ்கோடிகாமா
ஒரு கனவு கண்டாராம். அக்கனவில், நன்னம்பிக்கை
முனையைத் தாண்டிச் சென்றால் மரணம் சம்பவிக்கும்
என்று ஆண்டவன் சொல்லுவதாக இருந்ததாம்.
அதோடு நன்னம்பிக்கை முனையிலும் ஆபத்து உண்டு
என்று ஆண்டவன் அறிவுறுத்தினாராம். வாஸ்கோடி
காமா இக்கனவுபற்றி சட்டைபண்ணவில்லை. ஆனால்
அவர் பின்னுக்கு வந்த போர்ச்சுகீஸீய மாலுமிகளும்

கப்பல் தலைவர்களும் நன்னம்பிக்கை முனையை கொஞ்சம் அருகையை கொண்டே பார்த்து வந்தார்கள். வாஸ்கோடி காமாவை எச்சரித்த அந்த ஆண்டவன் இந்தியாவுக்கும் போகவேண்டாமென்று தான் எச்சரித்தார். ஆனால் இந்தியாவில் கிடைத்துவந்த லாபம் இந்த எச்சரிக்கையைப் புறக்கணிக்கும்படி தூண்டியது! நன்னம்பிக்கைமுனை அவ்வளவு தூரம் முக்கியத்துவம் பெற்று அபபொழுது இல்லை. ஆகவே, போர்ச்சுகீஸியர் வெகுகாலம் வரை தென்னாப்ரிக்காவை முக்கிய இடமாகக்கொள்ளவில்லை. இந்தியாவுக்கு செல்லும் பாதையில், ஒரு தங்குமிடமாகவே தென்னாப்ரிக்காவை கருதி வந்தார்கள். இந்த சமயத்தில் டி'ஆல்மிடா என்ற போர்ச்சுகீஸிய அதிகாரி ஒருவர் வந்தார். வரும் வழியில், தென்கோடியிலிருக்கும் டேபிள் வளைகுடாவில் சிலநாள் தங்கினார் இந்த சமயத்தில் தென்னாப்ரிக்க பூர்வகுடிகள் சிலர் அவர் முகாம் போட்டிருந்தஇடத்தை சுற்றி முற்றுகைபோட்டு அவரையும் அவரது பரிவாரங்களையும் தாக்கினார்கள். இதில் டி'ஆல்மிடா என்பவர் இறந்து விட்டார். ஆண்டவனின் விருப்பத்துக்கு மாறாக நாம் தென்னாப்ரிக்காவில் இறங்கினோமென போர்ச்சுகீஸியர்கள் சஞ்சலப்பட்டார்கள். அதிலிருந்து தென்னாப்ரிக்க மண்ணில் கால் வைபபதென்றால் அவர்களுக்கு சிறிது கலக்கம்தான். ஆகவே ஸெயின்ட் ஹெலினா என்னும் தீவிலியே இறங்கி, அதை இந்தியாவுக்குப் போகும்வழியில் ஒரு தங்குமிடமாக உபயோகித்துவந்தார்கள்.

இந்த சமயத்தில் ஐரோப்பாவில் வர்த்தகப் போட்டியும் ஏகாதிபத்தியம் சிருஷ்டிக்கும் திருவிளையாடல்களும் வெகு மும்முரமாக நடந்தன. ஒரு பக்கம் ஸ்பெயின் அமெரிக்காவை கண்டுபிடித்த பெருமையில் ராஜநடைபோட்டுக் கொண்டிருந்தது. இதைக் கண்ட பிரிட்டிஷாருக்குப் பொறுக்கவில்லை. இதற்காக அவர்கள் ஸ்பெயின் கப்பல்களை, அமெரிக்காவிலிருந்துவரும் வழியில் கொள்ளை அடித்துக்கொண்டு படுஅமர்க்களப் படுத்திவந்தார்கள். இதனால் பிரிட்டனுக்கும் ஸ்பெயி



னுக்கும் எந்த சமயத்திலும் சண்டை மூளுமென்ற நிலைமை ஏற்பட்டது. இதே சமயத்தில் டச்சுக்காரர்கள் (ஹாலந்து) கப்பல் வர்த்தகத்தில் தாங்களும் இறங்க வேண்டுமென மும்முரமானார்கள். ஸ்பெயின்மீது அவர்களுக்கு பொறாமை மூண்டது. 1580-ல் ஸ்பெயின்—போர்ச்சுகலை தன்னோடு சேர்த்துக்கொண்டது. இதை அடுத்து போர்ச்சுகீஸிய கடற்படை பலம் ரொம்ப சீர்குலைந்தது. டச்சுக்காரர்கள் பிரிட்டிஷாரின் துணையைக் கொண்டு போர்ச்சுகல் மீது படையெடுத்து போர்ச்சுகலின் தலைநகரான லிஸ்பனைக் கைப்பற்றினார்கள். பிறகு ஐரோப்பிய வர்த்தகத்தையே தங்கள் ஆதினத்துக்குக் கொண்டுவந்தார்கள். 1595-ல் டச்சுக் காரர்கள் 4 கப்பல்களை இந்தியாவுக்கு அனுப்பிவைத்தார்கள். இக்கப்பல்கள், தென்னாப்ரிக்காவில் இறங்கின. பிறகு தென்னாப்ரிக்காவிலிருந்து கிளம்பி டச்சுக் கிழக்கிந்திய தீவுகளைக் கண்டு பிடித்து அங்கு தங்கள் கொடிகளை நாட்டினார்கள். இதற்குள்ளாக, 160[illegible]-ம் வருஷம் டச்சு கிழக்கிந்திய கம்பெனி என்றொரு கம்பெனியை ஸ்தாபித்து கீழ்க்கோடியையும் ஐரோப்பாவையும் வர்த்தக துறையில் ஒன்றாக இணைத்தார்கள். டச்சுக்காரர்களின் இந்த சுறுசுறுபபால் போர்ச்சுகீஸியர் இந்தியாவிலும் தென்னாப்ரிக்காவை ஒட்டிய தீவுகளிலும் கட்டியிருந்த ஏகாதிபத்திய கோட்டை ஆட்டங் கண்டது. 1641-ல் மலாக்காவை டச்சுக்காரர்கள் கைப்பற்றினார்கள். 1658-ல் இலங்கை டச்சுக்காரர்களின் கையில் சிக்கியது.

போர்ச்சுகீஸியர் மாதிரி டச்சுக்காரர்கள் தென்னாப்ரிக்காவை துச்சமாக மதிக்கவில்லை. தென்னாப்ரிக்காவின் வலிமையையும், ராணுவ முக்கியத்துவத்தையும் முதன் முதலில் பரிபூர்ணமாக உணர்ந்தது டச்சுக்காரர்கள்தான். 1652-ம் வருஷம் ஜான் வான்ரீபெக் என்ற டச்சு கப்பற்படை தலைவன் டேபிள் வளைகுடாவில் இறங்கினான். இவனை அனுப்பிவைத்த டச்சு சர்க்கார் தென்னாப்ரிக்காவில் இருந்துகொண்டு கீழ்க்கோடிக்கு செல்லும் டச்சுக் கப்பல்களுக்கு உதவி செய்யும்படி தான் முதலில் கூறிற்று. வான்ரீபெக்குக்கு இந்த

யோசனை பிடிக்கவில்லை. ஏனென்றால், தென்னாப்பிரிக்காவில் சும்மா இருந்துகொண்டு வரும் போகும் கப்பல்களுக்கு ரொட்டி சப்ளை செய்துகொண்டிருப்பதால் யாதொரு பலனும் இல்லை என்று அவனுக்குத் தோன்றியது. மேலும் இவன் தலைமையிலிருந்த ஆட்கள் எல்லாம், கப்பல்களில் வரும் மாலுமிகள் கிழக்கோடியில் வியாபாரம் செய்து அமோக கொள்ளை லாபத்தோடு திரும்புவதைக்கண்டு பொறாமைப் பட்டுவந்தார்கள். இந்தப் பொறாமை வளர்ந்தால் இறுதியில் ஆபத்து ஏற்படும் என்று ரீபெக்குக்குத் தோன்றியது. அதோடு இந்த பொறாமை நியாயமானது என்றும் அவனுக்குப் பட்டது. இதை டச்சு சர்க்காருக்கு அவன் எழுதினான். இதன்பேரில் டச்சு சர்க்கார் ஒரு யோசனை கூறினார்கள். அதாவது தென்னாப்பிரிக்காவில் இறங்கி யிருக்கும் டச்சு கம்பெனிக்காரர்களில் சிலர் அங்கு நிலத்தை சுவீகரித்துக் கொள்ளலாமென்றும் அங்கு விவசாயம் செய்யலாமெனவும் அனுமதி கொடுத்தார்கள். அதோடு தென்னாப்பிரிக்காவில் விவசாயம் செய்ய ஆட்களையும் பிடித்து அனுப்பினார்கள். இதன் விளைவாக 1688-ம் வருஷத்துக்குள் 600 பேர், தென்னாப்பிரிக்காவில் நிலச்சுவான்தார்களாக ஆகிவிட்டனர். ஆளில்லா காட்டில் இவர்களே ராஜாக்களாக விளங்கினார்கள். காடுகளை களைந்து, விவசாயத்துக்கு வேண்டியபடி நிலங்களை உழுவதற்கு டச்சுக்காரர்களால் முடியவில்லை. இதற்கு ஒரு நிவாரணமும் கண்டுபிடித்தார்கள். அதாவது மலாக்கா, ஜாவா இங்கிருந்தெல்லாம் ஆட்களை அடிமைகளாகப் பிடித்து வந்து உழச்செய்தார்கள். இப்படியாக டச்சுக்காரர்களின் ஆதிக்கம் மெள்ள மெள்ள தென்னாப்பிரிக்காவில் உரம்பெற்று வந்தது. தென்னாப்பிரிக்க பூர்வகுடிகள் நிலைமை அப்பொழுது எப்படியிருந்தது என்று கேட்கலாம்.

தென்னாப்பிரிக்க பூர்வ குடிகள் (நீக்ரோக்கள்) டச்சுக்காரர்களின் குடியேற்றத்தையும் அவர்கள் காடுகளை அழித்து விவசாய பூமியாக்குவதையும் எதிர்த்து வந்தார்கள். இவர்களை ஹாட்டன்ட்டோஸ் என்று டச்சுக்



காரர் அழைப்பது வழக்கம். இந்த பூர்வ குடிகளுக்கு வில்லும் அம்பும்தான் ஆயுதம். ஐரோப்பியர் கொண்டு வந்த நவீன ஆயுதங்கள் முன் இவர்கள் எதிர்ப்பு ரொம்ப நாள் நீடிக்கவில்லை. சிலர் இந்த வெள்ளையர்களைக் கண்டதும் அவர்களை அன்போடு வரவேற்றனர். சிலர் வெள்ளையருக்காக உழைக்கவும் செய்தனர். டச்சுக்காரர்கள் இந்த பூர்வ குடிகளை ரொம்ப நம்பவில்லை. வேண்டும் என்கிற அளவுக்கு அவர்களை நெருங்கவிட்டும், வேண்டாத சமயத்தில் விரட்டி அடித்தும் வந்தார்கள். இதனால் அடிக்கடி சண்டைகள் நடப்பது உண்டு. இவ்வாறு சண்டைகள் நடக்கும் செய்தி ஹாலந்துக்குப் போனதும் அங்குள்ள தலைமை சர்க்கார், குடியேறியிருக்கும் தனது காலனி பிரஜைகளுக்கு ஒரு உத்தரவு அனுப்பியது. அதாவது எப்பொழுதும் டச்சுக்காரர்கள் கரையோரப் பகுதிகளில்தான் இருக்கவேண்டுமே ஒழிய, உள் பிரதேசங்களுக்கு போகக் கூடாதென்று கூறினார்கள். உள் பிரதேசத்துக்கு சென்றால் பூர்வகுடிகள் அவர்களை பிடித்து கொன்று விடுவார்களென்று பயந்தனர். இதனால் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிதான் டச்சுக்காரர்களின் குடியேற்றமும் விவசாயமும் நடந்தது. பூர்வ குடிகளிடம் கால்நடை ஏராளமாக இருந்தது டச்சுக்காரர்களின் கண்ணை இது சதா உறுத்திக்கொண்டே இருந்தது. இந்தக் கால்நடைகளை பறிக்க அவர்கள் துப்பாக்கியை உபயோகித்ததிலிருந்து, பல தந்திரங்களைக் கையாண்டார்கள். அப்பாவிகளான பூர்வ குடிகள், துப்பாக்கியைக் கண்டு அஞ்சினார்கள். மனுஷ சக்திக்கு அப்பாற் பட்ட சக்தி இந்த வெள்ளைக்காரர்களின் கையில் இருப்பதாகவும், அதுவும் துப்பாக்கி ரூபத்தில் காட்சி அளிப்பதாகவும் கருதி அவர்கள் சுதந்திரம், உடைமை முதலியவைகளை எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக பறி கொடுத்து வந்தார்கள். இந்த செய்திகளெல்லாம் அப்போதைக்கப்போது டச்சுசர்க்காருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. டச்சுப்பிரஜைகள் தென்னாப்பிரிக்காவில் டச்சு ஆதிபத்தியத்தை சிருஷ்டித்து வருவதாக அந்த சர்க்கார் நினைத்து சந்தோஷப்பட்டது. மேலும்மேலும் ஆட்களை குடியேற்றி வந்தது. இதற்குள்ளாக தென்னாப்பிரிக்

காவிலிருந்து கால்நடைகளை ஐரோப்பாவுக்கு கப்பலில் அனுப்பும் தொழிலும் ஆரம்பமாகி விடவே டச்சு சர்க்காரின் சந்தோஷம் கூடக் கொஞ்சம் அதிகமாகியது. புதிதாக வந்து குடியேறிய ஆட்கள் தலைக்கு 6000-ஏக்கரா பூமியை எடுத்துக் கொள்ளலாமென ஹாலந்திலிருக்கும் சர்க்கார் கூறினார்கள். இதற்கு பதிலாக வருஷமொன்றுக்கு ரூ 75-வரி செலுத்தினால் போதுமென்று கூறினார்கள். இந்த வரி தவறாமல் செலுத்தப்பட்டு வந்தால், பரம்பரையாக இந்த நிலம் இருந்துவருமெனவும் ஆசை காட்டினார்கள். இதை நம்பி 1732-ல் ஆயிரக்கணக்கான பேர் தென்னாப்ரிக்காவில் குடியேறினார்கள். ஏற்கனவே இருக்கிறவர்களும் புதிதாக வருகிறவர்களும் குடியிருப்பது எங்கே? கரையை ஒட்டி எவ்வளவு பேர்தான் குடியிருக்க முடியும்? மேலும் நிலங்கள் கரையோரத்திலேயே கிடைக்குமா? இதற்காக உள் பிராந்தியத்துக்கு ரொம்பப் பேர் நகன்றார்கள். உள் பிராந்தியத்துக்கு போவதென்றால் அது சாமான்யமான காரியமல்ல. அங்குள்ள பூர்வகுடிகள் முரண்டு செய்தால் அவர்களை சுட்டு தள்ளியாகவேண்டும். இது விஷயத்தில் டச்சுக்காரர்கள் சளைக்கவில்லை! இவ்வாறு குடியேறின டச்சுக்காரர்கள் தங்களை **போயர்கள்** என்று அழைத்துக் கொண்டனர். அதாவது விவசாயிகள் என்று பொருள். டச்சுகாரர்களின் இந்த சுறுசுறுப்பைக்கண்டு பெல்ஜியம், ஜெர்மனி, பிரான்ஸ் இங்கிருந்தெல்லாம் ஆட்கள் கூட்டம் கூட்டமாக வந்து தென்னாப்ரிக்காவில் குடியேறினார்கள். நாளாவட்டத்தில் இவர்களெல்லாம் டச்சுக்காரர்களோடு இரண்டறக் கலந்து விட்டனர்.

தென்னாப்ரிக்காவில் டச்சுக்காரர்கள் குடியேறி அங்கு விவசாயத் தொழிலில் ஈடுபடுவது டச்சு தலைமை சர்க்காருக்கு அவ்வளவாக பிடிக்கவில்லை. குடியேறுகிறவர்கள் தங்கள் நலனைத்தான் கவனிப்பார்களே ஒழிய டச்சு கிழக்கிந்திய கம்பெனியின் நலனை கவனிக்க மாட்டார்களென்று எண்ணினார்கள். இதற்காக பல இடைஞ்சல்களை உண்டு பண்ணினார்கள். அதாவது கால்நடை



வியாபாரத்தை தனிப்பட்ட நபர் எவனும் செய்யக்கூடாது. புகையிலை, திராக்ஷை முதலியவைகளை பயிரிட்டால், அதிலிருந்து கிடைக்கும் வருமானமெல்லாம் கம்பெனிக்குத்தான் சொந்தமென்றார்கள். குடியேறியிருக்கும் டச்சுக்காரர்களுக்கு இந்த உத்தரவுகளெல்லாம் பெரும்விலங்குகளாகத்தோன்றின. தங்களின் சுயேட்சை பறிக்கப்படுவதாகக் கருதினர். கம்பெனியின் கெடுபிடி பற்றி முணுமுணுப்பு கிளம்ப ஆரம்பித்தது. இந்த சமயத்தில் ஐரோப்பாவிலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. டச்சுக்காரர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் அடிதடி ஆரம்பமாகியது. இந்தியாவில் டச்சுக்காரர்கள் இடம் பிடித்து வருவதுதான் இந்த அடிதடிகளுக்குக் காரணம். இதன் விளைவாக பிரிட்டிஷார் ஏராளமான படைகளை அனுப்பி, இந்தியாவிலிருந்த டச்சுக்காரர்களை ஒழிக்க எத்தனித்தார்கள். இந்த சமயத்தில்தான் பிரிட்டிஷாரின் திருஷ்டி தென்னாப்ரிக்காமீது விழுந்தது!

> “நன்னம்பிக்கை முனை யார் கையிலிருக்கிறதோ அவர்களே, இந்தியாவுடன் நடக்கும் வியாபாரத்துக்கு ராஜா! நன்னம்பிக்கை முனை நம் வசமிருந்தால் இந்தியாவை வெகு நன்றாக பிரயோஜனப் படுத்திக் கொள்ளலாம்”

என்று **ஸர் யாங்** என்ற பிரிட்டிஷ் அதிகாரி லண்டனுக்கு அறிவித்தார். அதோடு டச்சுக்காரர்களிடம் சிக்கித் தவிக்கும் நன்னம்பிக்கை முனை ஒரு இறகுமாதிரி இருக்கிறது. நம்மிடம் வந்தாலோ வலிமை மிக்க வாள் ஆகிவிடுமெனவும் எழுதினார். லண்டன் சர்க்கார் உஷாரானார்கள். டச்சு மக்களுக்கும் அவர்களின் தலைமை சர்க்காருக்கும் பூசல் இருக்கிறது என்பதையும் அறிந்தார்கள். உடனே நன்னம்பிக்கை முனையைக் கைப்பற்றும் திருவிளையாட்டல் ஆரம்பமானது. குடியேறியிருக்கும் டச்சுக்காரர்களைத் தூண்டி விட்டு தலைமை சர்க்காருக்கு விரோதமாக கிளர்ச்சி செய்யத் தூண்டினார்கள். தென்னாப்ரிக்காவில் பெயரளவில் இருக்கும் டச்சு சர்க்காரை எதிர்க்கும்படி தூபம் போட்டார்கள். இந்தியாவுக்கு செல்லும் வழியில் நன்னம்பிக்கை முனையில்

பிரிட்டிஷார் இறங்குவது வழக்கம். அப்பொழுது ஸ்தலத்திலுள்ள டச்சு பிரமுகர்களை நெருங்குவார்கள். அவர்கள் மூலமாகவே இந்த "பிரித்துவிடு" வேலை நடந்தது. இதே சமயத்தில் நன்னம்பிக்கை முனையை எப்படி, எந்த சமயத்தில் தாக்கினால் நல்லது என்பதையும் உளவு அறிந்து லண்டனுக்கும் தெரிவித்து வந்தார்கள்.

1795-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் சரியான சமயம் என்று பிரிட்டிஷாருக்குப் பட்டது. திடீரென பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்கள் வந்திறங்கின. நீட்டிய துப்பாக்கிகளுடன் பிரிட்டிஷார் வந்திறங்கி தாக்க ஆரம்பித்துவிட்டார்கள். முனையிலிருந்த டச்சு ஸ்தல சர்க்கார் சரணாகதி என்று அலறிப்புடைத்தது! பிரிட்டிஷார் தங்கள் கொடியை பறக்கவிட்டார்கள். உள் பிரதேசத்தில் குடியேறியிருந்த டச்சு மக்களுக்கு செய்தி எட்டும் முன்பே, பிரிட்டிஷ் ஆட்சி கரையை ஒட்டின பிரதேசத்தில் ஸ்தாபிதமாகி விட்டது!

அதே வருஷம் அக்டோபர் மாதம் பிரிட்டிஷ தளபதி ஒரு பிரகடனம் வெளியிட்டார். அதாவது டச்சு சர்க்கார் விதித்திருந்த தடைகளெல்லாம் ரத்து செய்யப்பட்டுவிட்டன என்று அந்த பிரகடனம் கூறியது. அதோடு தனிப்பட்ட நபர்கள் வியாபாரம் செய்ய எவ்வித தடையும் கிடையாது என்று தளபதி கூறினார். டச்சு சர்க்கார் குடியேறின தம் பிரஜைகளை சுரண்டி வந்ததுபோல, பிரிட்டிஷார் சுரண்ட மாட்டார்களென தெனாழுகப் பேசினார். அந்த பிரகடனத்தை கேட்டதும் டச்சுப் பிரஜைகள் வழிக்குவந்து விடுவார்களென பிரிட்டிஷார் நம்பினார்கள். டச்சு ஆட்சிக்குப் பதிலாக பிரிட்டிஷ் ஆட்சியையே ஏற்பார்களென்றும் எண்ணினார்கள். ஆனால் இதில் ஏமாற்றம் தான் கிடைத்தது. டச்சுக்காரர்கள் எதிர்ப்பை விடவில்லை. தங்கள் சர்க்காரின் கொடுமையைவிட அந்நிய ஆட்சியின் கொடுமை ரொம்ப மோசமென கூறிவிட்டார்கள். பிரிட்டிஷாரை விரட்டி அடித்தால்தான் விமோசனம் பிறக்குமென தீர்மானம் செய்தார்கள். இதனால் அடிக்கடி பிரிட்டி



ஷாருக்கும் டச்சுக்காரர்களுக்கும் சண்டை நடந்து வந்தது. சில சமயம் டச்சுக்காரர்கள் கையும் சில சமயம் பிரிட்டிஷார் கையும் ஓங்கி நிற்கும்.

சண்டையில் இரு கட்சியாரும் காட்டிவந்த தீவிரம் ஒரு விஷயத்தை உணர்த்தியது. அதாவது தென்னாப்ரிக்கா ஒரு தங்கும் இடமட்டுமல்ல. ரொம்ப ராணுவ முக்கியத்துவமும் வாய்ந்த இடம் என்ற உண்மை புலனாகியது. பல ஐரோப்பிய நாடுகள், தங்களுக்கும் ஆப்ரிக்காவில் இடம் வேண்டுமென ஆசைப் பட்டன!

# பிரிட்டிஷார் திருஷ்டி!

தென்னாப்பிரிக்காவில் இவ்வாறு சண்டை நடந்து வரும் சமயம் ஐரோப்பாவில் பல விபரீதங்கள் நடந்தன. பிரெஞ்சு புரட்சியில் வாகைசூடிய புரட்சிக்காரர்கள் சகல நாடுகளிலும் புரட்சியைத் தூண்டிவிடுவதாக மிரட்டி வந்தார்கள். பிரெஞ்சு மன்னன் கொலையுண்டதையும் முடியாட்சி தலைதெறிக்க பிரான்ஸில் ஓடியதையும் கேள்விப்பட்ட சிலர், இங்கிலாந்திலும் அதே மாதிரி புரட்சி வேண்டுமென கிளர்ச்சி செய்து வந்தார்கள். பிரிட்டிஷ் சர்க்கார் இந்தக் கூப்பாட்டுக்காரர்களை நொடிப்பொழுதில் அடக்கிவிட்டது. இதைக்கண்ட பிரான்ஸ் 1793-ல் ஆண்டு இங்கிலாந்து மீது யுத்தம் தொடுத்தது. ஹாலந்து, ஸ்பெயின் போன்ற குட்டி நாடுகளும் பிரிட்டன் மீது யுத்தம் தொடுத்தன. ஹாலந்தின் போக்கைக்கண்ட பிரிட்டிஷார் உடனே பழிவாங்க முனைந்தனர். இந்த சமயத்தில்தான் அவர்கள் தென்னாப்பிரிக்காவை பிடித்தது. தென்னாப்பிரிக்காவை பிரிட்டிஷார் பிடிக்க பல காரணங்கள் உண்டு. சுரண்டல் என்ற முதல் காரணத்திலிருந்து, ஏகாதிபத்திய கௌரவம் என்ற கடைசிக் காரணம்வரை இருந்தாலும், ஹாலந்துக்கு நல்லபாடம் கற்பிக்க வேண்டுமென்பதும் முக்கிய காரணம்.

தரைப்போரில் பிரிட்டிஷாருக்கு அடிக்குமேல் அடியாக விழுந்தது. பிரிட்டன் மீதே நெப்போலியன் படையெடுத்து வருவான் என்ற ஆபத்துகூட ஏற்பட்டது. கடற்போரில்மட்டும் பிரிட்டிஷார் பக்கம் தான் வெற்றி இருந்தது. இப்படியாக சண்டை 3 வருஷம்வரை நடந்தது. கடைசியில் நெப்போலியனே சண்டையை நிறுத்த வேண்டுமென எண்ணினான். பிரிட்டிஷாருக்கும் சண்டை நின்றால் போதுமென்ற நிலைமை இருந்தது. ஆகவே இருவரும் 1802-ல் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். ஆமியன்ஸ் என்ற யிடத்தில் ஒப்பந்



தம் செய்தனர். ஹாலந்தும் பிரான்ஸ் கட்சியிலிருந்ததால், தென்னாப்பிரிக்காவை மீண்டும் ஹாலந்திடமே விட்டுவிட வேண்டுமென நெப்போலியன் கூறினான். இதற்கு உடன்பட்டு 1803-ல் பிரிட்டிஷார் தென்னாப்பிரிக்காவை விட்டு வெளியேறினார்கள். 8 வருஷமாக தென்னாப்பிரிக்காவில் இழுபறியாக இருந்த பிரிட்டிஷ் ஆட்சி 1803-ல் முடிவுற்றது.

தென்னாப்பிரிக்காவிலிருந்து வெளியேறிய பிரிட்டிஷார், திரும்பவும் தாங்கள் அந்நாட்டை பிடிக்கவேண்டுமென்ற எண்ணத்தில்தான் வெளியேறினார்கள். ஏனென்றால் பிரான்ஸுடன் நடந்த சண்டையில், தென்னாப்பிரிக்காவின் முக்கியமாக நன்னம்பிக்கை முனையின் முக்கியத்துவம் அவர்களுக்கு பரிபூர்ணமாக தெரிந்து விட்டது. நன்னம்பிக்கைமுனை நம் வசமிருந்தால், இந்தியா நம் கையிலிருப்பதற்கு ரொம்ப வசதியாக இருக்குமென்பதை அவர்கள் பகிரங்கமாக கூறி வந்தார்கள். ஆகவே வாபஸ் தற்காலிக வாபஸ்தான்.

ஆமியன்ஸ் என்ற இடத்தில் ஏற்பட்ட ஒப்பந்தம் வெகுநாட்கள்வரை நீடிக்கவில்லை. பிரான்ஸை எப்படியும் மட்டந்தட்ட வேண்டுமென பிரிட்டன் காத்திருந்தது. நெப்போலியனுக்கும் பிரிட்டனை தலைவணங்கச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருந்தது. ஆகவே இருசாராரும் சமயத்துக்காக ஆவலோடு காத்திருந்தார்கள். இதில் நெப்போலியனே பிரிட்டனை முந்திக்கொண்டான். 1803-ல் பிரிட்டன்மீது மீண்டும் யுத்தம் தொடுத்தான். பிரிட்டன் உடனே ஆஸ்ட்டிரியா, ரஷ்யா ஆகிய நாடுகளை நெப்போலியனுக்கு எதிராகத் தூண்டிவிட்டது. ஆஸ்ட்டிரியா யுத்தம் தொடுத்த சில நாட்களுக்கெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. ரஷ்யா மட்டும் எதிர்த்து நின்றது.

பிரிட்டிஷார் முன்போல இந்தத்தடவை கோட்டைவிடவில்லை. தரையில் சண்டை நடந்தால், அந்தப் பக்கமே போகாதபடி ஒதுங்க ஆரம்பித்தார்கள். தங்கள் கடற்படையே நெப்போலியனுக்கு பதில் சொல்லு

மென்று சொல்லி கடற்படையை பலப்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். நெப்போலியனும் இதில் சளைக்கவில்லை. உலகமே கண்டு அதிசயிக்கும்படியாக 1605-ல் ஸ்பெயின் கரை அருகே உள்ள டிராபல்கரில் ஒரு கடற்படை யுத்தம் நடந்தது. சரித்திரப் பிரசித்தி பெற்ற நெல்ஸன் பிரிட்டிஷ் தளபதியாக நின்று போர் புரிந்து வெற்றிபெற்றான். நெப்போலியன் கை பலம் ஒடிந்தது!

டிராபல்கர் வெற்றி மமதையில் இருந்த பிரிட்டிஷார் உடனே தென்னாப்பிரிக்கா பக்கம் தங்கள் கவனத்தை செலுத்தினார்கள். 1806-ஜனவரியில், ஒரு பிரிட்டிஷ் கடற்படை நன்னம்பிக்கை முனையை அடைந்தது. டேபிள் வளைகுடா ஆக்கிரமிக்கப்பட்டது. அங்கிருந்த ஹாலந்து சர்க்காரின் கவர்னர் சரணாகதி அடைந்தார். பிரிட்டிஷ் கொடி நன்னம்பிக்கை முனையில் சூழப்பறந்தது! இந்தத் தடவை வந்த பிரிட்டிஷார் இதுநாள் வரை நகரவே இல்லை. டச்சு ஏகாதிபத்தியத்துக்கு சாவு மணி அடிக்க வந்தவர்களாக விளங்கினார்கள். டச்சு மக்கள் எதிர்ப்பை எப்படி அடக்குவது என்பதில் முனைந்தார்கள். நன்னம்பிக்கை முனையைச் சுற்றி வாழ்வதற்கு லாயக்காக இருக்கும் பிரதேசமெல்லாம் பிரிட்டிஷாருக்கு சொந்தமென அறிவித்தார்கள். இந்தப் பிரதேசத்துக்குத்தான் கேப் மாகாணம் என்று பெயர். தென்னாப்பிரிக்காவின் 4 மாகாணங்களில் இதுவே முக்கியதும், முதலாவதுமான மாகாணம்.

தென்னாப்பிரிக்கா தம் கையைவிட்டு போய்விட்டதென்று உணர்ந்த ஹாலந்து மன்னர் தாம் அக்காலனியை பிரிட்டிஷாருக்கு 60 லட்சம் பவுனுக்கு விற்றுவிடுவதாக கூறினார். இதற்கு பிரிட்டிஷாரும் உட்பட்டனர். பிரிட்டிஷார் ஆட்சி ஏற்பட்டதும் தென்னாப்பிரிக்காவில் நிலைமை சரியாக இல்லை. டச்சுக்காரர்கள் முன்பு போலவே எதிர்க்க தலைப்பட்டார்கள. பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட மறுத்து, கேப் மாகாணத்தைவிட்டு உள்பிரதேசத்துக்கு மேலும் மேலும் நகன்று சென்றார்கள். தங்கள் மன்னன் துரோகம் செய்துவிட்டதாக துக்கித்



தார்கள். இவர்களிடம் பிரிட்டிஷார் கூறின பசப்பு வார்த்தைகளுக்கு எல்லாம் செவிசாய்க்கவே இல்லை. மேலும் பிரிட்டிஷார் 1807-ல் ஒரு புது சட்டத்தை ஏற்படுத்தினார்கள். அதாவது அடிமை விற்பனை கூடாது என்று சொன்னார்கள். பிரிட்டனில் நிறைவேறின இந்த சட்டம் பிரிட்டிஷ் ஆட்சி இருக்கும் தென்னாப்பிரிக்காவிலும் அமுலுக்கு வந்தது. இதற்கு முன்பாக ஆப்பிரிக்காவிலிருக்கும் பூர்வகுடிகளை பிடித்து அமெரிக்காவுக்கு அடிமைகளாக விற்பனை செய்வது வழக்கமாக இருந்தது. அமெரிக்காவில் குடியேறி இருக்கும் வெள்ளையர்களுக்கு ஊழியம் செய்யவே இவ்வாறு அனுப்பி வந்தார்கள். இதில் டச்சுக்காரர்களும் ஈடுபட்டிருந்தார்கள். இந்த பூர்வ குடிகளை அடிமைகளாக விற்கும் வழக்கம் அனேக ஆண்டுகளாக நடந்து வந்தது. கடைசியில் சிலர் இந்த வழக்கத்தை நிறுத்த வேண்டுமெனக் கிளர்ச்சி செய்தார்கள். மனுஷ நாகரிகத்துக்கு புறம்பானது என்று கூறினார்கள். இந்த கிளர்ச்சி பிரிட்டனில் வலுத்தது. அதன் விளைவாகத்தான் பிரிட்டனில் சர்க்கார் இதை தடுத்து சட்டம் செய்தார்கள். டச்சுக்காரர்கள் இந்த சட்டத்தை எதிர்த்தனர். பிரிட்டிஷ் ஆட்சியை டச்சுக்காரர்கள் வெறுத்ததற்கு இதுவும் ஒரு காரணம். மேலும் டச்சுக்காரர்கள் சுதந்திரப் பிரியர்கள். பிறருக்கு அடிமையாய் இருந்து வாழ்வதைவிட மாள்வதே மேலென்ற விரதம் பூண்டவர்கள் இதில் ஆண் பெண் என்ற வித்தியாசமே கிடையாது டச்சு மாதர்கள், ஆண்களை விட, சுதந்திரத்துக்கு அதிகமாகப் போராடியவர்கள். அதை வேறொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

தென்னாப்பிரிக்காவில் பிரிட்டிஷ் ஆட்சி ரொம்பக் கொடுமையாகவே இருந்து வந்தது. புதிதாக பிரிட்டிஷ் ஆட்களை கொண்டுவந்து கேப் மாகாணத்தில் குடியேற்றினார்கள். கம்பிளி, தோல், திராக்ஷை ரசம் முதலியவைகளை ஏராளமாக ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தார்கள். இதனால் உள்நாட்டு விவசாயம் பெருகியது. முன்பெல்லாம ஹாலந்து சர்க்காரின்

அர்த்தமற்ற உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டு நாசமாகி வந்த விவசாயத்தை பிரிட்டிஷார் இப்பொழுது தாராளமாய் நடந்துவர அனுமதித்தார்கள். இந்த சீர்திருத்தங்களெல்லாம் யார் நலனுக்காக செய்யப்பட்டன என்று கேட்டால், சதா அனலுக்கும் புனலுக்கும் பாடுபட்ட பூர்வகுடிகளுக்கில்லை. வீடு வாசல்களை விட்டு விட்டு வந்து குடியேறியிருக்கும் சகோதர போயர்களுக்காகவும் இல்லை. எங்கோ, லண்டனில் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்த பிரிட்டிஷ் சர்க்காருக்கே இந்த லாபம் போய் வந்தது. பிரிட்டிஷாரும் காலனி வளம் பெற்று வருவதை ரொம்ப உன்னிப்பாகக் கவனித்து வந்தார்கள். 1814-ல் கேப் மாகாணம் பிரிட்டிஷ் முடியாட்சியின் ஆதிக்கத்துக்கு வந்ததும் லெப்டினன்ட் ஜெனரல் லார்ட் சார்ல்ஸ் சாமர்ஸெட் என்பவர் ஏப்ரல் 6-ம் தேதி அன்று கேப் மாகாண கவர்னராக நியமனமானார். பிரிட்டிஷ் மக்களும் கேப் மாகாணத்துக்கு குடியேற்றப்பட்டனர். எனினும் 1820-ம் வருஷம் வரை பிரிட்டிஷாரின் குடியேற்றம் அவ்வளவு மும்முரமாக இல்லை. 1820-ல் குடியேற்றம் அதிகமாவதற்கு ஒரு காரணமிருந்தது. பிரிட்டனில் அப்பொழுது பொருளாதார மந்தம் ஏற்பட்டிருந்தது. லக்ஷக்கணக்கான பேர் வேலையில்லாத் திண்டாட்டத்தில் தவித்தார்கள். பிரிட்டிஷ் பொருளாதார அமைப்பே சீர் குலைந்துவிடும்போலிருந்தது. இந்த வருஷம் ஏராளமான பேரை பிரிட்டிஷார் தென்னாப்பிரிக்காவிற்கு குடியேற்றுவதென முடிவு செய்தார்கள். நெப்போலியனோடு நடத்திய யுத்தத்தின் விளைவே இது. பிரிட்டிஷ் சர்க்கார் குடியேறுகிறவர்களுக்கு வசதியாக 60,000 பவுனைத் தருவதாகக் கூறியது. பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி காமன்ஸ் சபையில் இந்த மான்யம் தரும் மசோதாவை பிரேரித்து பேசுகையில் தென்னாப்பிரிக்காவைக் குறித்து கீழ்வருமாறு கூறினார்:—

"பிரிட்டனில் பொருளாதார நிலைமை சீர்குலைந்திருப்பதால் ஜனங்கள் வெளியே குடியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் குடி-



யேறுவதற்கு தயாராக முன்வரும் ஆட்கள் வட அமெரிக்காவுக்கே போவதாகக் கூறுகிறார்கள். இது கூடாது. தென்னாப்பிரிக்காவுக்குத் தான் போக வேண்டும். காரணம், தென்னாப்பிரிக்காவில் வளமான பூமி இருக்கிறது. விவசாயத்துக்கு ஏற்றதாக பருவகால நிலைமையும் இருக்கிறது. ஆகவே, 50,000 பவுனை நாம் இன்று செலவிட்டால், நல்ல பலனை திரும்பப் பெறலாம். மேலும் கால் நடைகளை வளர்ப்பதற்கோ அவற்றை பெருக்குவதற்கோ ஏற்ற இடம் தென்னாப்பிரிக்கா தான். குடியேறுகிற மக்கள் நல்ல லாபத்தையும் சுகத்தையும் பெறுவார்கள்."

பிரிட்டிஷ் சர்க்காரின் இந்த ஆதரவைப் பெற்று பல ஆயிரக்கணக்கான பேர் குடியேற முன்வந்தார்கள். ஸ்காட்லாந்திலிருந்து வந்தவர்களின் தொகையே அதிகம். அலோகா வளைகுடாவிலுள்ள அல்பானி என்னும் ஜில்லாவில் சுமார் 5000-பிரிட்டிஷார் குடியேறினர். இதில் ஏராளமான பிரிட்டிஷ் பெண்களும் வந்திருந்தார்கள். இவர்களோடு லண்டன் பாதிரிமார்களும் வந்தார்கள். பூர்வகுடிகளையும், டச்சுக்காரர்கள் அடிமைகளாக பிடித்து வந்து குடியேற்றியிருக்கும் மலாய், ஜவா வாசிகளையும் இந்த பாதிரிமார் அணுகி, பரமண்டலம், மோக்ஷ சாம்ராஜ்யம் என்றெல்லாம் ஞானமார்க்கத்தை காட்டும் திருத்தொண்டை நடத்தி வந்தார்கள்! இவர்களில் டாக்டர் ஜான் பிலிப் என்பவர், அடிமைகளைப் பிடித்துவைத்திருக்கும் வழக்கம் ஒழியவேண்டுமென்பதற்காக உண்மையிலேயே பாடுபட்டவர். பூர்வகுடிகளையும் மலாய் பிரதேச மக்களையும் அடிமையாய் வைத்திருப்பதை எதிர்த்து இவர் கிளர்ச்சி செய்தார். இந்த அடிமை ஜனங்களிடை சென்று நீங்களெல்லாம் பிறவி அடிமைகளல்லவென்று பிரசாரம் செய்தார். இதன் விளைவாக அடிமை ஜனங்களிடம் ஒரு புத்துணர்ச்சி பிறந்தது. ஆண்டைகளாக இருந்த வெள்ளைக்காரர்களும் (போயர்களும் பிரிட்டிஷாரும்) தங்களின் பழைய கெடுபிடிகளெல்லாம் இனி செல்லாது என்று உணர்ந்து

பயந்தார்கள். டாக்டர் பிலிப் லண்டனுக்குச் சென்று வெள்ளைக்காரர்கள், கறுப்பராகிய பூர்வகுடிகள் மீதும், அடிமைகள் மீதும் நடத்தி வரும் கொடுமைகளை பிரசாரம் செய்தார். இதன் விளைவாக 18 8-ல் ஒரு சட்டம் பிறந்தது. அதாவது எந்த ஒரு ஆளும் மற்றொரு ஆளை, நிறத்தின் காரணமாக பலவந்தப்படுத்தி வேலை வாங்கக்கூடாது என்று ஏற்பட்டது. அதோடு வெள்ளையரல்லாதவர் நிலபுலம் வைத்திருக்கக் கூடாது என்ற வழக்கமும் ஒழிந்தது. எல்லையில் சதா அடிதடி நடந்து வந்ததும் இதனால் பெருமளவுக்குக் குறைந்தது.

டச்சுக்காரர்களுக்கு அந்நியரான பிரிட்டிஷாரின் ஆட்சி கொஞ்சங்கூட பிடிக்கவில்லை. மேலும் அவர்கள் கொண்டுவந்த சட்டங்களெல்லாம் அறவே பிடிக்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து தப்பினாலே போதுமென்றாகிவிட்டது. இதற்காக அவர்கள் உள் பிராந்தியத்துக்கு குடியேறுவதை மும்முரப்படுத்தினார்கள். 1836-ல் கூட்டம் கூட்டமாக டச்சுக்காரர்கள கேப் மாகாணத்திலிருந்து (கேப் காலனி என்றும் சொல்லலாம்) வெளியேறினார்கள். பெண்டு பிள்ளைகளுடனும் உழவுக்கு வேண்டிய கருவிகளுடனும் இக்கூட்டம் வடகிழக்கே சென்றது. வருஷ ஆரம்பத்தில் இவ்வாறு வெளியேறினவாகள், வருஷக்கடைசிக்குள் ஒரு நல்ல இடத்தைத் தேடிப் பிடித்துவிட்டார்கள். வியசாயத்துக்கு ஏற்றதாக அப்பிரதேசம இருக்கவே அங்கு டச்சு கொடியை பறக்கவிட்டு விட்டு குடி அமர்ந்தார்கள். இதுதான் டிரான்ஸ்வால் பிரதேசம். டச்சுக்காரர்களின் தலைமை சர்க்கார் குடியரசு சர்க்காராக அப்பொழுது இருந்தது. அதுபோலவே இவர்களும் டிரான்ஸ்வாலில் ஒரு குட்டி குடியரசு சர்க்காரை ஏற்படுத்திக் கெண்டார்கள். இன்னொரு கூட்டம் ஆரஞ்ட் சுதந்திர சர்க்கார் என்று ஆரஞ்ச் நதி அருகே ஒரு சர்க்காரை ஸ்தாபித்தது. இக்கூட்டத்தினர் வழியில் பட்ட துன்பங்களுக்கு கணக்கு வழக்கே இல்லை. கூட்டமாக செல்லும் இவர்கள் இரவு நேரத்தில் எங்காவது தங்குவது உண்டு. அந்த சமயத்தில் பூர்வ குடிகள் திடீரென பாய்ந்து



இவர்களைத் தாக்குவார்கள். மேலும் பிரிட்டிஷாரால் தூண்டிவிடப்பட்ட கூட்டம் கொடுக்கும் உபத்திரவம் வேறு. இதில் எத்தனையோ கூட்டங்கள் அழிந்தன. ஆயிரக்கணக்கில் டச்சுக்காரர்கள் மாண்டிருக்கிறார்கள். எனினும் சுதந்திரத்தோடு வாழவேண்டுமென்ற அவர்களின் ஆர்வம் இந்த துன்பங்களையும் ஆபத்துகளையும் துச்சமாக மதித்தது.

1847-ல் ஒரு பிரிட்டிஷ் பருத்திக் கம்பெனி 300 பேருடன் நேட்டாலில் குடியேறியது. 1851-ம் வருஷத்துக்குள் நேட்டால் பிரிட்டிஷாரின் மற்றொரு மாகாணமாக விளங்க ஆரம்பித்துவிட்டது.

பிரிட்டிஷ் கவர்னருக்கு டச்சுக்காரர்களின் இந்தக் குடியேற்றம் என்னவென்று புரியவே இல்லை. இவர்களை எப்படி அடக்கி வைத்திருப்பது என்பதும் தெரியவில்லை. இவர்களை பின்தொடர்ந்து செல்ல வசதியும் இல்லை. ஆகவே, அப்பொழுது பிரிட்டிஷ் கவர்னராக இருந்த ஸர் பெஞ்சமின் என்பவர் பல டச்சுக்காரர்களுக்கு பணம் கொடுத்து திரும்ப பிரிட்டிஷ் ஆட்சிப் பிராந்தியத்துக்கே வந்துவிடும்படி கூறினார். டச்சுக்காரர்களை வெகுதூரம் புகழ்ந்து பேசிப் பார்த்தார். டச்சுக்காரர்கள் இதற்கும் மசியவே இல்லை. இவருக்குப் பின் வந்த கவர்னர்கள் சற்று முரட்டு சுவாப முடையவர்கள். ஆகவே பெஞ்சமினைப்போல இவர்கள் டச்சுக்காரர்களை நயமாகப் பேசி நெருங்கவில்லை. கடும் சட்டங்களை இயற்றி வலுக்கட்டாயமாக இவர்களை பிரிட்டிஷ் பிராந்தியத்துக்கு தூக்கி வந்தார்கள். அப்படியும் வராதவர்களை சுட்டார்கள். குழந்தை குட்டிகளென்று கூடப் பாராமல் காட்டுமிராண்டித் தனமாக நடந்து கொண்டார்கள். இதற்கும் டச்சுக்கார்ரர்கள் அசையவில்லை. இந்த அடக்குமுறை செய்திகளெல்லாம் லண்டனுக்கு எட்டவே, லண்டனில் பெரும் கிளர்ச்சி தோன்றியது. பிரிட்டிஷ்காரர்களை கண்டிக்காமல் விட்டால் ஆபத்து என்று பார்லிமெண்டில், சில உதார புருஷர்கள் பேசினார்கள். இதன் பேரில் பிரிட்டிஷ் சர்க்கார் "சற்று நிதானம்" என்று கவர்னர்களுக்கு எச்சரிக்கை அனுப்பியது.

உடனே பிரிட்டிஷ் கவர்னர்களும் 'உள்ள நிலைமையை விளக்கி'' எழுதினார்கள். அதாவது குடியேறிச் செல்லும் டச்சுக்காரர்கள் திடீரென பிரிட்டிஷார்மீது தாக்கி அவர்களின் காலனியை பறித்து விடுவார்களென்றும் அதற்கு திட்டம் போட்டிருப்பது ரொம்ப விகசிதமாய் தெரிகிறது என்றும் கூறினார்கள். இந்தியாவுக்கு செல்லும் பிரிட்டிஷ் கப்பல் பாதை டச்சுக்காரர்களால் ஆபத்துக்கு உள்ளாகி இருப்பதாகவும் எழுதினார்கள். இந்தியா என்றதும் பிரிட்டன் உஷாரானது! உடனே "உசிதப்படி" நடவடிக்கை எடுக்கலாமென அனுமதி பறந்தது!

ருசிகண்ட பூனையான பிரிட்டிஷார் ஆரஞ்ச் நதியை அடுத்து குடியேறியிருக்கும் டச்சுக்காரர்கள் மீது தங்கள் கவனத்தை உடனே செலுத்தினார்கள். இதன் விளைவாக 1848-ல் ஆரஞ்ச் நதிக்கும் வால் நதிக்கும் மத்தியிலுள்ள பிரதேசம் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு உள்ளாகியது. இதுதான் ஆரஞ்ச் பிரி ஸ்டேட் என்றழைக்கப்படும் மாகாணம். டச்சுக்காரர்களின் இப்பிரதேசத்தை ஆக்கிரமித்த பிரிட்டிஷார் ஒரு விசித்திரமான காரணம் சொன்னார்கள். அதாவது டச்சுக்காரர்களுக்கும் பூர்வ குடிகளுக்கும் அடிக்கடி சண்டை மூள்வதாகவும் இதில் இருதரப்பாரும் அனாவசியமாக மாள்வதாகவும் தாங்கள் இதைத் தவிர்க்கவே ஆக்கிரமித்து "ஒழுங்கையும் அமைதியையும்" நிலைநாட்டுவதாகவும் சொன்னார்கள். ஓரிரு சண்டைகள் நடந்ததை தங்களுக்கு ஆதாரமாகவும் காட்டினார்கள். ஆரஞ்ச் பிரி ஸ்டேட் பறிபோனதும் அதற்கு நேர் வடக்கே உள்ள டிரான்ஸ்வால் என்ற டச்சு குடியரசு மீது கண் விழுந்தது. இதுவும் 1877-ல் பிரிட்டிஷார் வசமாகியது.

# யுத்தம் தீர்ந்தது

நமக்கு ஒரு கண் போனாலும் எதிரிக்கு இரு கண்ணும் போகவேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவர்கள் டச்சுக்காரர்கள் பைபிளின் பழைய ஏற்பாட்டில் பரிபூர்ண நம்பிக்கை கொண்டவர்கள். சுதந்திர வாழ்வுக்காக, எல்லாத் தியாகத்தையும் செய்யலாமென்பது இவர்களின் சித்தாந்தம் கஷ்டம் நிறைந்த வாழ்வே சுகமென நினைக்கும் மனோபாவமுடையவர்கள். இவர்களில் ஆண்கள் எவ்வளவு தைரியம் காட்டினார்களோ, அதை மிஞ்சும்படியான உறுதியை பெண்கள் காட்டினார்கள். ஒரு பக்கம் பூர்வ குடிகளுடனும், மறுபக்கம் பிரிட்டிஷாருடனும் இடைவிடாமல் போராடிக்கொண்டு சுதந்திரமே லட்சியமென இருந்து வந்தார்கள். ஒருயிடத்தில் நிலைமை சரியில்லை என்றால், அங்கு அடிமையாக வாழ இவர்கள் விரும்பமாட்டார்கள். சூழ்நிலை எவ்வளவு மோசமாக இருந்தாலும் சுதந்திரத்தைத் தேடி வேறிடத்துக்கு குடிபுகுவார்கள். இந்த மாதிரி கூட்டம் கூட்டமாக குடியேறின இவர்களின் வாழ்க்கை ரொம்பப் பரிதாபமாக இருந்தது. பிரிட்டிஷாருக்கும் இவர்களை என்ன செய்வது என்று தெரியவில்லை. போகிற இடத்துக்கெல்லாம் விரட்டிக்கொண்டே சென்றார்கள். டச்சுக்காரர்களும் ஓடுவதில் சளைக்கவில்லை. எனினும் எவ்வளவு தூரம்தான் ஓடுவது? இன்னும் மேலே மேலே சென்றால் பிரிட்டிஷாரின் ஆதிக்கம்தான் வலுக்கும் என்று அவர்களுக்கு பட்டது. அதோடு மற்றொரு விஷயமும் அவர்களை உறுத்தியது. அதாவது காடுகளை அழித்து நாடுநகரமாக ஆக்கினதும், பிரிட்டிஷாரிடம் அவற்றை விட்டுவிட்டு ஓடுவதா என்று பட்டது. இதற்காக எதிர்த்து நின்று போர் புரிவது என்று தீர்மானித்தார்கள். இவர்கள் கட்சியில் பால் குருகர் என்று ஒருவர் கிளம்பினார். இவர் ரொம்ப தைரியசாலி. அதோடு நாவன்மை மிக்கவர்.

விவசாயத்துறையில் மிக்க தேர்ச்சி பெற்றவர். போயர்களான டச்சு விவசாயிகளை பிரிட்டிஷார் பண்ணும் கொடுமைகளை இவர் லண்டனுக்கே தூது சென்று எடுத்துரைத்தார். பிரிட்டிஷ் பார்லிமெண்ட் மெம்பர்களைக் கண்டு தென்னாப்ரிக்காவில் நடக்கும் கொடுமைகளை எடுத்து விவரித்தார். பிரிட்டிஷ் பார்லிமெண்டும் மெம்பர்களும் கல்லுப் பிள்ளையாராக இருந்து விடவே இவர் மனமுடைந்து திரும்பினார். பிறகு ஜெர்மனியின் துணைகொண்டு பிரிட்டிஷாரை விரட்டி அடித்து விடலாமெனவும் எண்ணினார். இதுவும் பலிக்க வில்லை. இப்படியாக நிலைமை இழுபறியாக இருந்து வந்தது.

பிரிட்டிஷார் இதற்குள் கேப் காலனியில் ரயில்பாதை போட ஆரம்பித்து விட்டார்கள். செப்பு சுரங்கம் ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டது. நேட்டாலில் கரும்பு சாகுபடிக்கு நிலம் ரொம்ப ஜோராக இருப்பதாக பிரிட்டனிலிருந்து வந்த விவசாய நிபுணர்கள் கூறினார்கள். உடனே கரும்பு சாகுபடிக்கு ஏற்பாடுகள் ஜரூராக நடந்தன. தேயிலை, காப்பி முதலியவைகளை பயிரிட பல தோட்டங்கள் முளைத்தன. இவ்வாறு பிரிட்டிஷாரின் விவசாய ஏற்பாடுகள் வெகு மும்முரமாக நடந்து வரும் போது ஒரு நெருக்கடி ஏற்பட்டது. அதாவது பெருமளவுக்கு விவசாயத்தை நடத்தவேண்டுமென்றால், ஏராளமான தொழிலாளர் வேண்டும். குடியேறி இருக்கும் பிட்டிஷாரோ, அவ்வளவு தொகையில் இல்லை. மேலும் நிலத்தில் புகுத்து "கறுப்பர் மாதிரி' சேற்றிலும் சகதியிலும் நிற்க அவர்களுக்கு மனக் கஷ்டமாக இருந்தது. ஆகவே, கறுப்பராகிய நீக்ரோக்களை அணுகினார்கள். அப்பொழுது அடிமையாக்கும் சட்டம் அமுலில்லை. நீக்ரோக்களோ, சுயேட்சையாக ஆடுமாடுகளை மேய்த்து, அவைகளை பிரிட்டிஷாரிடமே விற்று வயிறு வளர்த்து விடலாமென்ற தீர்மானத்தில் இருந்தார்கள். ஆகவே பிரிட்டிஷார் விவசாயத்துக்கு கூலியாக வரும்படி அழைத்ததை கேட்கவில்லை. பிரிட்டிஷாருக்கு இந்த போக்கு பிடிக்கவில்லை. என்னென்னமோ சொல்லி பார்த்தும் நீக்ரோக்கள் அசையாமல் இருப்ப



தைக் கண்டு மிரட்டிப் பார்க்கவும் செய்தார்கள். பனங்காட்டு நரிகளான நீக்ரோக்கள் இந்த சல சலப்புக்கு அஞ்சவில்லை. பிரிட்டிஷார் உடனே தலைமை சர்க்காருக்கு செய்தி அனுப்பினார்கள். தலைமை சர்க்கார், கடல் கடந்த தம் பிரஜைகள் வேலையாட்கள் இல்லாமல் திண்டாடுவதைக் கண்டு மனம் வருந்தினார்கள். அந்த வருத்தத்திலே அவர்களுக்கு ஒரு யோசனை பிறந்தது. அதாவது இதர காலனிகளிலிருந்து ஆட்களைப் பிடித்து அனுப்பலாமே என்ற யோசனை பிறந்தது. ஜனத்தொகை அதிகமாக இருக்கும் காலனி எங்கே என்று தேடும்போது, இந்தியாதான் அவர்கள் கண்ணில் முதன் முதலில் பட்டது.

1860-ம் வருஷம் பிரிட்டிஷ் சர்க்கார் தென்னாப்ரிக்கா வாழ் தம் பிரஜைகளுக்கு ஒரு கடிதம் மூலம் இந்திய சர்க்காரை நாடினால் உதவி கிடைக்குமென எழுதினார்கள். உடனே தென்னாப்ரிக்க பிரிட்டிஷ் காலனி சர்க்கார் இந்திய சர்க்காருக்கு கடிதம் எழுதி, ஆள் பிடித்து கூலிக்கு அனுப்ப முடியுமா என்று கேட்டார்கள். அப்போதிருந்த இந்திய சர்க்கார் எப்படிப்பட்ட சர்க்கார் என்பது வாசகர்களுக்கு சொல்லாமலே விளங்கும். பெயரளவுக்குத்தான் "இந்திய சர்க்கார்". பிரிட்டிஷ் ராணுவ வெறியர்கள் ஆட்சியே அப்போது இந்தியாவில் நடந்து வந்தது. லண்டன் சர்க்காரின் கைப்பாவையாக இந்திய சர்க்கார் நடந்து வந்தது. லண்டன் சர்க்கார் சிபார்சுடன் வந்திருக்கும் தென்னாப்ரிக்க வெள்ளையரின் கோரிக்கையை அவர்கள் உடனே கவனிக்க ஆரம்பித்தார்கள். அடிமைகளாக இருக்கும் இந்தியரை எவ்வளவு வேண்டுமென்றாலும் கூலி யாட்களாகப் பிடித்து அனுப்புகிறோமென்று கூறினார்கள். உடனே இந்தியாவில் ஆட்களைப் பிடிக்கும் வேலை ஆரம்பமாகியது. இந்திய சர்க்காரின் ஏஜண்டுகள், ஜனங்களிடம் சென்று தென்னாப்ரிக்காவுக்கு ஆட்கள் தேவை என்றும் 5-வருஷ காலத்துக்கு இவர்கள் தென்னாப்ரிக்காவில் இருக்க வேண்டுமென்றும் அப்படி இருந்து விட்டால் கோடீசுவரர்களாக இந்தியாவுக்கு திரும்பலாமென்றும் கூறி

னார்கள். இவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பை இந்திய சர்க்காரே கொடுக்குமென்றும் சொன்னார்கள். அப்பொழுது இந்தியாவின் பொருளாதார நிலைமை மோசமாக இருந்தது மழை தண்ணீர் இல்லாமல் இந்தியாவின் விவசாயம் படுபாதாளத்திலிருந்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவின் இந்த துர்ப்பாக்கியமான நிலையை கவனிக்க மறுத்தனர். காரணம் 1857-ல் நடந்த சுதந்திரப் புரட்சிதான். பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிக்க புரட்சி செய்தவர்களுக்கு நிவாரணம் எதுவும் கொடுக்க கூடாதென வஞ்சம் தீர்த்தார்கள். ஆகவே, இந்திய மக்களில் பலபேர், கடல் கடந்தாவது தம கஷ்டத்தைத் தொலைக்கலாமென முடிவு செய்தனர். 1860 நவம்பர் மாதம் இந்தியர்கள் ஒரு கப்பலில் அனுப்பி வைக்கப் பட்டனர். அதாவது ஐந்து வருஷம் வரை இவர்கள் தென்னாப்பிரிக்காவில் உழைக்க வேண்டும். இந்த 5-வருஷ சம்பளத்தை கடைசியில் கொடுப்பார்கள். இந்த குத்தகைக் காலத்துக்குள் யாரும் இந்தியா திரும்புவதில்லை என்று முதலில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என்றெல்லாம் கூறப்பட்டனர். இந்தியர்களில் பலர் குடும்பத்துடனேயே புறப்பட்டார்கள். இவர்களுக்கு "குத்தகைக் கூலிகள்" என்று பெயரிட்டார்கள். இந்த குத்தகை முறையை பின்னர் கவனிப்போம்.

பிரிட்டிஷாருக்கும் டச்சுக்காரர்களுக்கும் இருந்து வந்த பூசல் தீரவில்லை என்பது முன்பே கூறப்பட்டிருக்கிறது. குருகர் தலைமையில் டச்சுக்காரர்கள் பிரிட்டிஷாரை எதிர்த்து விரட்ட ஆயத்தம ஆகிக்கொண்டிருக்கும் சமயம் பிரிட்டிஷாரும் டச்சுக்காரர்களின் எதிர்ப்பை அடியோடு ஒழிக்க முஸ்தீபு செய்துகொண்டிருந்தார்கள். 1899-ல் டச்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்த ஜோஹனாஸ்பர்க்கை பிடிப்பதென பிரிட்டிஷார் ஒரு திட்டம் போட்டார்கள். இதற்காக ஜோஹனாஸ்பர்க்கிலுள்ள பிரிட்டிஷ் தங்கச் சுரங்க முதலாளிகளுடன் ஒரு ரகசிய ஒப்பந்தமும் செய்திருந்தார்கள். இந்த முதலாளிகளெல்லாம் டிரான்ஸ்வாலிலிருக்கும் டச்சுக் குடியரசு



சர்க்காரை ஒழித்து டச்சு அதிகாரிகளைப் பிடித்துத் தருவதாக வாக்களித்தனர். டாக்டர் ஜேம்ஸன் என்ற ஒரு பிரிட்டிஷ் முரட்டு ஐவான் தலைமையில் ஒரு கோஷ்டி இரவோடு இரவாக ஜோஹனாஸ்பர்க் புறப்பட்டது. இந்த கோஷ்டியினர் புறப்பட்டு வரும் செய்தி டச்சு தலைவர் குருகருக்கு எப்படியோ எட்டிவிட்டவே, அவர் எல்லை அருகே பெரும் பட்டாளத்துடன் தயாராக வந்து நின்றார். ஜேம்ஸன் கோஷ்டியார் அவ்வளவுபேரும் பிடிபட்டார்கள். பிரிட்டிஷாருக்கு இதுபெரும் ஏமாற்றமாக இருந்தது. தங்கச்சுரங்க முதலாளிகளும் கைதியானார்கள். குருகரின் புகழ் நாலாபக்கமும் பரவியது. அப்போது காலனி மந்திரியாக இருந்த ஸ்ரீ. சேம்பர்லென் முதலாளிகளை விட்டு விடும்படி கெஞ்சிக்கேட்டு குருகருக்கு கடிதம் எழுதும்படி குருகர் பண்ணிவிட்டார்.

குருகர் ரொம்ப கெட்டிக்காரர். ஜேம்ஸன் நடத்திய முயற்சி தோல்விகண்டுவிட்டது என்று அவர் சும்மாயிருந்து விடவில்லை. பிரிட்டிஷார் சும்மா இருக்கமாட்டார்களென்பது அவருக்குத் தெரியும். ஆகவே அவர் டச்சுக்காரர்களைத் திரட்டி வந்தார். அதே சமயத்தில் பக்கத்திலிருந்த ஆரஞ்ச் ஸ்டேட் போயர்களையும் குருகர் நாடி அங்கும் ஆட்களை தயார் பண்ணினார். அப்போது பிரிட்டிஷ் ஹைகமிஷனராக இருந்த லார்ட் மில்னரும் கெட்டிக்காரர். அவரும் சண்டைக்கு ஆயத்தமானார். 1899-ம் வருஷ மத்தியில் யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. இதுவே சரித்திரப் பிரசித்திப் பெற்ற **போயர் யுத்தம்.**

போயர் (டச்சுக்காரர்) தரப்பில் ஆண்களும் பெண்களும் விவசாயிகளும், வக்கீல்களும் சேர்ந்து நின்று போராடினார்கள். பிரிட்டிஷார், பூர்வ குடிகளையும், புதிதாகக் கொண்டுவந்த துருப்புக்களையும் கொண்டுவந்து போரில் இறக்கினார்கள். 1900-ம் வருஷத்தில் புலோம்பாண்டின், ஜோஹனாஸ்பர்க், பிரிட்டோரியா முதலிய இடங்களெல்லாம் பிரிட்டிஷாரிடம் பிடிபட்டன. போயர்கள் தரப்பில், பிரமாதமான வெற்றி எதுவும் இல்லை.

எனினும் போயர்கள் ரொம்பப் பயங்கரமாகப் போர் புரிந்தார்கள். திடீர் திடீரெனத் தோன்றி தாக்கிவிட்டு மறைந்து விடுவார்கள். இம்மாதிரியாகத் தாக்கிய படைகளுக்கு கமாண்டோ படைகள் என்று பெயர். ஜெனரல் போதா, **ஜெனரல் ஸ்மட்ஸ்**, ஜெனரல் ஹெர்ட்ஜாக் என்பவர்கள் இப்படைகளின் தலைவர்களாக விளங்கினார்கள். ஸ்மட்ஸும் ஹெர்ட்ஜாக்கும் சண்டைக்கு முன் வக்கீல்களாக இருந்தவர்கள். சுதந்திரத்துக்காக சண்டை நடக்கிறது என்றதும் தம் தொழில்களை விட்டு இவர்கள் சண்டையில் சேர்ந்து போராடினார்கள். பிரிட்டிஷாருக்கு அதிக ஆள் வசதியும், தளவாட பலமும் இருந்ததால் இவர்கள் என்ன தீரர்களாக இருந்தாலும் யுத்தப்போக்கை மாற்ற முடியவில்லை.

1902-ல் உலகமே கண்டு திடுக்கிடும்படியான ஒரு சம்பவம் நடந்தது. பிரிட்டிஷ் தளபதியாக வந்த லார்ட் கிட்சனர் என்பவர், புலோமி பாண்டின் என்ற ஊருக்குள் புகுந்தார். அங்கிருந்த ஆண்களெல்லாம் சண்டையில் முன்பே வீர சுவர்க்கம் அடைந்து விட்டார்கள். நகரத்தில் பெண்களும் குழந்தைகளும் தான் பாக்கி. கிட்சனரை அந்தப் பெண்கள் வணங்கவில்லை. அவரை வெற்றிவீரரெனவும் சொல்லவில்லை. அதோடு, பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்ப்பதாகவும் அவர் முன் வந்து முழங்கினார்கள். கிட்சனர் பெரிய தளபதி. ஆகவே அவருக்கு இந்த 'திமிரை'' சகிக்க முடியவில்லை. உடனே இவர்களை எல்லாம் சிறையில் அடையுங்களெனக் கட்டளையிட்டார். 27000 பெண்களும் குழந்தைகளும், கிழவர்களும் சிறையிலடைக்கப்பட்டனர். நாள் கணக்கில் இவர்களுக்கு சோறு தண்ணீர் கொடுக்காமல் இருந்தார். எனினும் போயர் வமிசத்திலே பிறந்த அந்த வீரப் பெண்மணிகள் தங்கள் எதிர்ப்பை விடவில்லை. பிறகு பிரிட்டிஷ் துருப்புகளை ஏவிவிட்டு சித்திரவதை செய்யச் சொன்னார். இந்த உத்திரவை பெற்ற பிரிட்டிஷார் என்னமாதிரி நடந்துகொண்டார்களென்பதை விவரிக்க முடியாது. 1945-ல் பெல்ஸன் என்ற



சிறைமுகாமில் நாஜிகள் கொடுமை பண்ணியதாக நேசதேச நாடுகள் அலறியதை நண்பர்கள் படித்திருப்பார்கள். 10ப பெல்ஸன்களைக் கொண்டது இந்த பிரிட்டிஷ் சிறை முகாம். பெண்களை நாஜிகள் சுட்டுக்கொன்றதாக சொன்னார்கள். கிட்சனரின் துருப்புகளோ சுட வில்லை, அணு அணுவாக மானத்தையும் உயிரையும் போக்கினார்கள். இந்த சிறை முகாமில் நடந்த கொடுமைகள் நாலா பக்கமும் பரவின. பிரிட்டனுக்கு எட்டியதும் லண்டன் நகர மக்களே அலறினார்கள். பிரிட்டிஷார் நடப்பது சரியல்லவென்று கிளர்ச்சி செய்தார்கள். ஒரு பிரிட்டிஷ் பாதிரி, தென்னாப்பிரிக்காவில் மிருகத்தனமாக நடக்கும் பிரிட்டிஷார் தோல்விகாணவேண்டுமென பிரார்த்தனை நடத்தினார். பிரிட்டிஷ் சர்க்கார் இந்தக் கிளர்ச்சி வலுத்து வருவதைப் பார்த்ததும் சிறிது மலைத்தார்கள். உடனே 'நிதானம்' என்ற தந்தி பறந்தது. அப்பொழுதும் பிரிட்டனில் கிளர்ச்சி நிற்கவில்லை. எப்படியாவது சமாதானம் செய்யுங்களென மறுபடியும் தந்தி பறந்தது. இதன் பேரில் சண்டையை நிறுத்திவிட்டு சமாதானம் செய்வது எப்படி என்று ஸ்தல பிரிட்டிஷ் அதிகாரிகள் யோசித்தார்கள். இதன் விளைவாக **1902-ல் வெரினிகிங்** என்ற இடத்தில் பிரிட்டிஷாருக்கும் குருகருக்கும் ஒரு சமாதானம் ஏற்பட்டது. மூன்று வருடங்களாக நடந்து வந்த போயர் யுத்தம் ஒருவாறாக முடிந்தது.

யுத்தம் முடிந்ததும், பல பிரிட்டிஷார் லண்டனுடன் இருக்கும் தொடர்பு சற்று சுதந்திர அடிப்படையில் இருந்தால் ரொம்ப நல்லது என்று நினைத்தார்கள். போயர்களை அடக்க பிரிட்டனை எதிர்பார்த்த இவர்களிடமே இந்த எண்ணம் உதித்தது. இதற்குக் காரணம் சர்வதேச ராஜீய துறையில் விழிப்பு ஏற்பட்டு விட்டது. டிரான்ஸ்வாலில் இந்தக் கிளர்ச்சி முதன் முதலில் ஆரம்பமாகியது. பிறகு ஆரஞ்ச் ஸ்டேட்டுக்கும் பரவியது. காலனி ஆட்சியை ஒழிக்க வேண்டுமென இவர்கள் கிளர்ச்சி செய்து வந்தார்கள். அப்போது இவர்களின் அதிர்ஷ்ட வசத்தால் பிட்டனில் கன்ஸர்வேடிவ் ஆட்சி ஒழிந்தது. லிபரல் கட்சியினர்

பதவிக்கு வந்தார்கள். வந்ததும் இக்கட்சியினர் செய்த முதல் காரியம் டிரான்ஸ்வாலுக்கும் ஆரஞ்ச் பிரிஸ்டேட்டுக்கும் பொறுப்பாட்சி வழங்கியதுதான். டிரான்ஸ்வாலில் ஜெனரல் போதா என்பவர் பிரிஸிடென்ட்டாக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஸ்மட்ஸ் நீதி இலாகா மந்திரியாக இவருக்குக் கீழ் வேலை செய்தார். இருவரும் போயர் யுத்தத்தில் சண்டை போட்டவர்கள். இந்த ஸ்டேட்டில் ஹெர்ட்ஜாக்கும் நிதி மந்திரியாக இருந்தார். இந்த இரு மாகாணத்திலும் போயர்களே பெரும்பான்மையினராக இருந்ததால் போயர் குடியரசாட்சியே இங்கு நடந்து வந்தது. கேப்மாகாணத்திலும் ஜெனரல் மேயர் என்ற போயரே பிரதமராக இருந்து வந்தார்.

1908-ல் தனித்தனியாக பிரிந்து நிற்கும் 4 மாகாணங்களான கேப், நேட்டால், டிரான்ஸ்வால், ஆரஞ்ச் ஸ்டேட் ஆகியவைகளை ஒன்று சேர்க்க ஒரு மகாநாடு கூடியது. இந்த மகாநாட்டில் பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளும் போயர் ராஜதந்திரிகளும் பரிபூரணமாக ஒத்துழைத்தார்கள். இதன் விளைவாக 1910-ல் யூனியன அரசியலமைப்பு தயாராகியது. ஸ்மட்ஸ்தான இந்த அரசியலமைப்பு திட்டத்திற்கு கர்த்தா என்று சொல்லுவார்கள். 1910-ல் யூனியன சட்டம் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் நிறைவேறியது. அதன்படி தென்னாப்பிரிக்கா பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் இருந்தாலும் ஒரு பரிபூர்ண சுதந்திரநாடு என்று ஆகியது. இந்த ஐக்கியத்தை டச்சுக்காரர்களில் சிலர் எதிர்த்தார்கள். இந்த எதிர்ப்பை அடக்கி, ஐக்கியத்துக்காக ஜெனரல் போதாவும் ஸ்மட்ஸும் ரொம்பப் பாடு பட்டார்கள். இதல் பூர்ண வெற்றியும் பெற்றனர். ஆனால் எதிர்ப்புக் கட்சியினர் இப்போதும் இருக்கத்தான் செய்கிறார்களென்றாலும் அவர்கள் தொகை ரொம்பக் குறைவு.

யூனியன் சட்டப்படி பிரிட்டோரியாவில் யூனியன் சர்க்கார் காரியாலமொன்று ஏற்பட்டது. யூனியன் சட்டசபை இருக்குமிடம் கேப்டவுன்தான். யூனியன் சர்க்காருக்கு உட்பட்டு 4 மாகாணங்களும் சுயாட்சியுட



னும் இருந்துவரும். யூனியன் சர்க்கார் பார்லிமெண்ட் முறைப்படியே அரசாட்சி நடத்திவரும். மேல் சபை என்ற செனட் சபை ஒன்று. 10 வருஷத்துக்கு ஒரு தடவை இந்த சபைக்குத் தேர்தல் நடக்கும். கீழ்சபை என்ற அசெம்பிளிக்கு 5 வருஷத்துக்கு ஒரு முறை தேர்தல். பிரிட்டிஷ் மன்னர் சார்பாக கவர்னர் ஜெனரல் என்றொருவர் இருப்பார். செனட் சபைக்கு சரிசமத்துவ உரிமையில் மாகாணங்கள் பிரதிநிதிகளை அனுப்ப வேண்டும். இவர்களின் தொகை 8. சர்க்காராக 8 பேரை நியமனம் செய்வார்கள். சர்க்கார் நியமனம் செய்யும் மெம்பர்கள்சிறந்தயோக்யதாம்சங்கள்கொண்டவர்களாக இருப்பார்கள். இதே ரீதியில் மாகாணங்களில் சர்க்கார் இருந்துவரும். மாகாணங்களிலும் இரு சபைகள் உண்டு. இங்கிலீஷும் டச்சு மொழியும் அரசியல் பாஷைகள். யுத்தத்தில் ஈடுபடுவதா இல்லையா என்ற பிரச்னையைத் தீர்ப்பது ஸ்தல யூனியன் சர்க்கார்தான். பிரிட்டிஷ் கொடிமட்டும் அடையாளமாக இருந்துவரும். இக்கொடி வேண்டாமென ஜனப் பிரதிநிதிகள் கூறினார்களேயானால் பிரிட்டனுக்கு இதை எதிர்த்துச் சொல்ல அதிகாரம் கிடையாது. இதுதான் யூனியன் சர்க்காரின் முக்கியாம்சங்கள்.

தென்னாப்பிரிக்க சரித்திரக் குறிப்பை இதோடு நிறுத்திக்கொள்ளுவோம். இந்தியாவிலிருந்து பஞ்சத்து ஆண்டிகளாகக் குடியேறினவர்களின் கதி என்ன ஆயிற்று என்பதுதான் நம் கவலை. ஆகவே இந்தியர் பிரச்னையை இனி பார்ப்போம்.

# பஞ்சத்து ஆண்டிகள்!

பஞ்சத்து ஆண்டிகளாக இந்தியாவிலிருந்து குடியேறினவர்களுக்கு 7 ரூபாய் சம்பளம். இதல்லாமல் உணவு, உடை, வைத்திய வசதிகள் முதலியவை தருவதாக பிரிட்டிஷார் கூறினார்க்ள். ஆனால் ஒரு தடவை தென்னாப்பிரிக்காவில் கால் வைத்து விட்டால் 5 ஆண்டுகளுக்குள் வெளியேறக் கூடாதென்று குத்தகைப் பத்திரத்தில் கையெழுத்துப்போட வேண்டுமென தென்னாப்பிரிக்க சர்க்கார் கூறியது. இதற்கு இந்திய சர்க்காரும் ஒத்து ஊதியது. இவைகளல்லாமல் ஒப்பந்த முடிவில் சிறிது நிலம் தருவதாகவும் தென்னாப்பிரிக்கா கூறியது. ஆனால் இந்த நிலம் தருவதாக சொன்ன வாக்குறுதி ஒன்றிரண்டு பேர் விஷயத்தில்தான் நிறைவேறியதே ஒழிய பாக்கிப்பேர் விஷயத்தில் நிறைவேறவே இல்லை.

முதலில் குத்தகைக் காலம் 3 வருஷ மென்றனர். ஆனால் அனுஷ்டானத்துக்கு வரும்போது அது 5 ஆண்டுகளாக மாறிவிட்டது.

இந்தியாவிலிருந்து சென்ற முதல் கோஷ்டி, முதன் முதலில் நேட்டால் மகாணத்தில்தான் இறங்கியது. இக்கோஷ்டியிலிருந்த பெரும்பாலோர் சென்னை மாகாண வாசிகள். இவர்களை ஏற்றிக்கொண்டுபோன பிரிட்டிஷ் கப்பல் முதலில் மாரிஷியஸ் தீவில் இறங்கியது. அத்தீவில் ஏற்கெனவே இந்தியர் குடியேறி இருக்கிறார்கள். தீவுவாசிகளுடன் வர்த்தகம் செய்து இந்தியர் பிழைத்து வந்தனர். தென்னாப்பிரிக்க பிரிட்டிஷார், இந்த தீவிலுள்ள இந்தியர் சிலரையும் தென்னாப்பிரிக்காவுக்கு வரும்படி அழைத்தார்கள். ஏனென்றால், புதிதாக செல்லும் இந்திய குத்தகை கூலிகளுக்கு, இவர்கள் குடியேறினால் வசதியாக இருக்குமே என்று அழைத்தனர். பிரிட்டிஷாரின் இந்த அழைப்புக்கு இணங்கி, மாரிஷியஸ் தீவிலிருந்த



சில வியாபாரிகளும் தங்களது மூட்டை முடிச்சுகளுடன் தென்னாப்பிரிக்காவுக்கு அதே கப்பலில் புறப்பட்டனர்.

குத்தகை கூலிகளை பிரிட்டிஷார் கரும்பு, தேயிலை காப்பித் தோட்ட வேலைகளில் ஈடுபடுத்தினார்கள். சென்னை மாகாண தமிழ் விவசாயிகளின் உழைப்பைக் கண்ட பிரிட்டிஷாருக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. தென்னாப்பிரிக்காவிலேயே பிறந்து வளர்ந்தவர்கள் மாதிரி இந்தியர்கள் வேலை செய்தார்கள். நிலத்தின் குணத்தையும், வளத்தையும் அறிந்து இன்னின்ன பயிரிட்டால், இந்த இந்தயிடத்தில் வெள்ளாமை நன்றாக இருக்குமெனக் கூறினார்கள். பஞ்சத்து ஆண்டிகளான இவர்களின் விவசாயத்திறமை பிரிட்டிஷாரை ஆச்சரியம் அடையும்படி செய்தது. இதே சமயத்தில் மற்றொரு நிகழ்ச்சியும் நடந்தது.

மாரிஷியஸ் தீவிலிருந்து குடியேறின இந்திய வியாபாரிகள், குத்தகைக் கூலிகளை அடுத்து, சிறு சிறு கடைகள் போட ஆரம்பித்து விட்டார்கள். ஆகவே, இந்தியக் கூலிகள் அவ்வளவு பேரும் சாமான்கள் வாங்குவதெல்லாம் இங்குதான். இந்த சில்லறை வியாபாரம் நாளை பெரும் வியாபாரமாக ஆகுமென பிரிட்டிஷார் அப்போது எதிர்பார்க்க வில்லை. ஆதலால், இந்திய வியாபாரிகளை அவர்கள் அவ்வளவாக பொருட்படுத்தவில்லை. குத்தகைக் கூலிகளின் உழைப்பை எவ்வளவு தூரத்துக்குப் பயன் படுத்தலா மென்பதிலேயே முழு கவனம் செலுத்தி வந்தார்கள். மாரிஷியஸ் தீவிலிருந்து சென்ற வியாபாரிகளில் **சேத் அபுபக்கர்** முதலில் சில்லறை வியாபாரத்தில்கடையை ஆரம்பித்து, பிறகு பெரிய வியாபாரமே ஆரம்பித்து விட்டார். தென்னாப்பிரிக்காவில் நிலபுலம் வாங்கி, பெரிய முதலாளியாக விளங்கினார். இந்த செய்தி மாரிஷியல் தீவுக்கு எட்டியதும், இதர இந்திய வியாபாரிகளும் தென்னாப்பிரிக்காவுக்கு விரைந்தனர். குத்தகைக் கூலிகள் பிரதேசத்தை அடுத்து, இந்தியரின் கடைகளே ஏராளமாக காணப்பட்டன. மாரிஷியஸ் தீவிலிருந்து வியாபாரிகள்

செல்லுகிறார்களென்ற செய்தி இந்தியாவுக்கும் எட்டியது. அபுபக்கர் கூர்ஜரத்தில் உள்ள சூரத் நகர்வாசி ஆகவே, சூரத் நகரிலிருந்தும் பலர், அபுபக்கரின் அதிர்ஷ்டத்தைக் கேள்விப்பட்டு தென்னாப்பிரிக்காவுக்கு வர்த்தகம் செய்யும் வியாபாரிகளாகப் புறப்பட்டனர். கத்தியவார், சூரத் இங்கிருந்தெல்லாம் ஏராளமான பேர், பெரும் பணத்துடன் கப்பலேறினார்கள். இதே சமயத்தில் குத்தகை கூலகளை பிடிக்கும் வேலையும் இந்தியாவில் நடந்து வந்தது. ஒரு கப்பல் இந்திய வியாபாரிகளைக் கொண்டு சென்றால், மற்றொரு கப்பல் இந்திய குத்தகைச் கூலிகளைக் கொண்டு செல்லும். இபபடியாக இந்தியாவிலிருந்து கப்பல்கள் சென்ற வண்ணமாக இருந்தன.

குத்தகைக் கூலிகளாக சென்ற இந்தியர்களில் பலர் குடும்பத்துடனேயே சென்றார்கள். ஆணும் பெண்ணும் குத்தகையின் பேரில் உழைப்பது என்பது ஏற்பாடு. ஆனால் இவர்களுக்குப் பிறக்கும குழந்தைகள் கதி என்ன ஆவது? இந்தப் பிரச்னையை எப்படி தீர்ப்பது என்பதை இந்திய சர்க்கார் அப்பொழுது நினைக்கவே இல்லை. லண்டனின் சிபார்சு பெற்று வந்திருக்கும் தென்னாப்பிரிக்க பிரிட்டிஷாருக்கு உதவவேண்டுமென்பதுதான் அவர்களின் ஒரே நோக்கமாக இருந்தது. இதை தென்னாப்பிரிக்க சர்க்கார் நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு, குத்தகைக் கூலிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளும் தங்களுக்கு ஊழியம செய்ய வேண்டுமென்று மிரட்டினார்கள். இதை பின்னர் கவனிப்போம்.

வியாபாரிகளாக சென்ற இந்தியர் வாழ்க்கை ரொம்ப சுகமாக ஓடியது. நேட்டாலில் உள்ள பூர்வ குடிகள் இந்தியரை நேசிக்க ஆரம்பித்துவிட்டார்கள். முக்கியமாக இந்திய வியாபாரிகளிடம் சாமானை வாங்கவோ விற்கவோ ரொம்ப சௌகரியமெனக் கருதினார்கள். இந்தியர் கடைகள் மாதிரி வெள்ளைக்காரர்களும் கடை போட்டிருந்தார்கள். வெள்ளைக்காரர்களின் கடைகளை விட்டு விட்டு இந்தியர்களிடம் வந்து சாமான்களை



எதற்காக வாங்கினார்களென்றால், அதற்கு காரணம் இல்லாமலில்லை.

வெள்ளைக்காரர்களின் கடைக்கு ஒரு நீக்ரோ சென்றானால், தன்னிஷ்டப்படி சாமானை வாங்க முடியாது. வெள்ளைக்கார கடை முதலாளி கொடுத்ததைத் தான் அவன் வாங்கவேண்டும். அது உடைசலாக இருந்தாலும் சரி, மட்டரகமாக இருந்தாலும் சரி, கேட்டு விட்டால் வாங்கித்தான் தீரவேண்டும். அதோடு விலையோ, அதிக விலை. அதிலும் கறார் விலை. பேரம் பேசுவதற்கோ, சாமானைப் பொறுக்கி எடுப்பதற்கோ சாத்தியமிருக்காது. சாமான் வேண்டாமென்று சொன்னால், வெள்ளைக்கார முதலாளி முதலில் திட்டுவார். அதற்கும் வாங்க மறுத்தால் அடிப்பார்! பிறகும் வாங்க முடியாதென்றால், சாமான் வாங்க வந்த நீக்ரோவுக்கு திருடன் பட்டம் கட்டி பக்கத்தில் ரோந்து கொடுத்துக் கொண்டிருக்கும் போலீஸ்காரனிடம் ஆளைக்காட்டி விட்டால் போதும். போலீஸ்காரன் உதைகள் கொடுப்பதோடு அல்லாமல் கச்சேரிக்கும் இழுத்துச் செல்வான், இந்த ஆபத்துக்களுக்கு உள்ளாவதைவிட சாமானே வாங்காமல் இருந்துவிடலாமென்று நீக்ரோக்கள் நினைத்தார்கள். இந்த சமயத்தில் தான் இந்தியர் போய் கடை போட்டது.

இந்தியர் கடைகளுக்கு வந்தால், இந்த ஆபத்துகளெல்லாம் கிடையா. வேண்டிய சாமான்களை பொறுக்கி எடுக்கலாம் பேரம்பேசவும் இடமுண்டு. சாமானோ, விலையோ பிடிக்க வில்லை என்றால் பேசாமல் திரும்பி விடலாம். இந்திய வியாபாரி கோபிக்கவும் அடிக்கவும் மாட்டார். ஆகவே, நீக்ரோக்கள் இந்தியர் கடைகளுக்குப் போனதில் ஆச்சரியமில்லை. இதனால் இந்தியரின் வியாபாரம் ஓங்கியது. குடியேறின இந்திய வியாபாரிகள் நல்ல லாபமடைந்து வந்தார்கள்.

குத்தகைக் காலம் முடிவடைந்ததும் இந்தியக் கூலிகள் முன் இரு கேள்விகள் எழுந்தன. ஒன்று தாய் நாடு திரும்பிவிடலாமா என்பது. அல்லது கையில்

உள்ள ஐந்து பத்தை வைத்துக் கொண்டு சில்லறை வியாபாரம் நடத்தலாமா என்பது இரண்டாவது கேள்வி. சில மாஜி கூலிகள் ஊர் திரும்புவதே மேலென ஊர் திரும்பினார்கள். உடலில் தெம்பிருந்த சிலர் வியாபாரத்தில் தலையிட்டனர். சிறுகச் சிறுக இந்தியர் வியாபாரம் பெருகி ஓரிரு வருஷங்களில், குட்டி முதலாளிகளாக இவர்கள் ஆகிவிட்டனர்.

நேட்டாலில் குடியேறின இந்தியருக்கு மற்றொரு யோசனை பிறந்தது. பக்கத்திலிருக்கும் ஆரஞ்ச் ஸ்டேட்டுக்கும் டிரான்ஸ்வாலுக்கும் குடியேறி அங்கும் வியாபாரம் நடத்தினால் என்ன என்று சிலர் யோசித்தார்கள். அப்போது ஆரஞ்ச் ஸ்டேட்டிலும் டிரான்ஸ்வாலிலும் போயர்களின் (டச்சுக்காரர்களின்) குடியரசாட்சி நடந்து வந்தது. இந்த மாகாணங்களில் நீக்ரோக்கள் நிலைமை படுமோசமாக இருந்தது. நீக்ரோக்களை பிரிட்டிஷ் வியாபாரி அடித்து விரட்டினான் என்றால், போயர் வியாபாரி சுட்டே விரட்டினான். ஆகவே, இம்மாகாணங்களில் உள்ள நீக்ரோக்கள் நம்மிடம்தான் சாமான்கள் வாங்குவார்களென இந்திய வியாபாரிகள் நினைத்தார்கள். உடனே இவ்விரு மாகாணங்களுக்கும் இந்திய வியாபாரிகளின் குடியேற்றம் ஆரம்பமாகியது. நேட்டாலிலிருந்த எல்லா இந்திய வியாபாரிகளும் இப்படிப் போகவில்லை. சிலர்தான் குடியேறினார்கள். இன்னும் சிலர், பிரிட்டிஷாரின் மற்றொரு மாகாணமான கேப் மாகாணத்துக்கும் குடியேறினார்கள்.

இந்திய வியாபாரிகளை போயர்கள் முதலில் வெறுக்கவில்லை. மாறாக இந்திய வியாபாரிகளுடன் தாங்கள் வியபாரமும் நடத்தினார்கள். பிரிட்டிஷ் மாகாணங்களான கேப்பிலும் நேட்டாலிலும் இப்படி யில்லை. நீக்ரோக்கள்தான் இந்திய வியாபாரிகளிடம் சாமான்களை வாங்குவார்களே ஒழிய ஒரு பிரிட்டிஷ்காரன்கூட சாமான் வாங்கமாட்டான். இந்தியரிடம் சாமான் வாங்குவது பெரிய இழுக்கென பிரிட்டிஷ் துரைகள் நினைத்தார்கள். இது விஷயத்தில் போயர்களின் போக்கு மாறுபட்டிருந்தது. ஆகவே, டிரான்ஸ்வாலிலும், ஆரஞ்ச்



ஸ்டேட்டிலும் குடியேறின இந்திய வியாபாரிகளுக்கு நல்ல வியாபாரம் நடந்து வந்தது. போயர்களும், நீக்ரோக்களும் இந்தியரிடம் எவ்வித துவேஷமும் காட்டாமல் சாமான்களை வாங்கினார்கள்.

நேட்டாலில் இந்தியர் வியாபாரம் செழித்து வருவது நாளடைவில் பிரிட்டிஷாருக்கு பொறாமையை உண்டுபண்ணியது. மேலும், குத்தகைக் கூலியாக வரும் இந்திய விவசாயி, குத்தகைக் காலம் முடிவடைந்ததும், விடுதலைக் கேட்பதும் பிறகு வியாபாரம் நடத்துவதும் அவர்களுக்கு பிடிக்கவில்லை. விவசாயத்துக்கு அழைத்து வரப்பட்ட இந்தியர், வியாபாரம் நடத்துவதா என்று பிரிட்டிஷ் வியாபாரிகள் பொறாமைப் பட்டார்கள். இதற்கு ஏதுவாக இந்தியரின் வியாபாரமும் பெருகி வருவதைக்கண்டு அவர்களுக்கு ஆத்திரமேற்பட்டது. வியாபாரத்துக்குப் பிறந்தவன் பிரிட்டிஷ்காரன்தான் என்ற மமதையிலிருக்கும் இவர்கள் தங்களின் ஆத்திரத்தை வெளிப்படையாகக் காட்ட ஆரம்பித்து விட்டார்கள். இந்த சமயத்தில் ஒரு புது நிலைமை ஏற்பட்டது.

குத்தகையிலிருந்து விடுபட்ட இந்தியக் கூலிகளில் பலர், இந்திய வியாபாரிகள் வாங்கி யிருந்த நிலங்களில் உழைக்க ஆரம்பித்தனர். காய்கறிகள் பயிரிடுவதையே பிரதானமாகக் கருதி அதில் கவனம் செலுத்தினர். இதன் விளைவாக, உருளைக்கிழங்கு, தக்காளி முதலிய அரிய காய்கறிகள் ஏராளமாகக் கிடைத்தன. இவற்றை மார்க்கட்டுக்குக் கொண்டுவந்து விற்கவும் செய்தனர். பிரிட்டிஷ் விவசாயிகளும் இதே காய்கறிகளைப் பயிரிட்டுப் பார்த்தார்கள். ஆனால் இந்தியரின் உற்பத்திக்கும் இவர்கள் உற்பத்திக்கும் ரொம்ப வித்தியாசமிருந்தது. இதில் இந்தியர் கையே ஓங்கியிருந்தது. பிரிட்டிஷார் உடனே தங்களின் தோல்வியை ஒப்புக்கொள்ளவில்லை. விலையைக் குறைத்து போட்டிபோட்டார்கள். இந்தியரும் விலையைக் குறைத்தார்கள். கடைசியில், பிரிட்டிஷாரால் சமாளிக்கவே முடியவில்லை. காய்

கறி பயிரிடும் தொழிலே பெரும் ஆபத்துக்குள்ளாகி விட்டதாக கூப்பாடு போட்டார்கள். இந்திய விவசாயிகளை மட்டந்தட்ட வேண்டுமென கிளர்ச்சி ஆரம்பித்தனர். இந்திய விவசாயிகள் தென்னாப்ரிக்காவில் இருந்தால், பிரிட்டிஷ் ஆட்சியே அஸ்தமித்து விடுமென பெரும் கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. இதே சமயத்தில் மற்றொரு ரசமான காரியமும் நடந்து வந்தது. குடியேறியிருக்கும் இந்தியர் மீது துவேஷம் காட்டும் நேட்டால் மாகாண பிரிட்டிஷார், இந்தியாவில் கூலிகளைப் பிடிக்கும்வேலையை நிறுத்தினார்களா என்றால், இல்லை ஒருபக்கம் இந்திய விவசாயிகளை தென்னாப்ரிக்காவிலிருந்து விரட்டிக்கொண்டும், அதேசமயம் ஆட்களைப் பிடித்துக்கொண்டும் இருந்தார்கள். அதாவது இந்தியரை கூலிகளாகத்தான் பாவிக்க அவர்கள் விரும்பினார்களே ஒழிய, இந்தியரை வியாபாரிகளாக மதிக்க அவர்கள் விரும்பவில்லை.

பிரிட்டிஷ் வர்த்தகர்களின் கிளர்ச்சி வரவர வலுத்தது. குத்தகையிலிருந்து விடுதலையாகும் இந்தியக் கூலி, தென்னாப்ரிக்காவில் ஒரு நாள் கூட தங்கக்கூடாது. இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பி விட வேண்டுமென இவர்களில் சற்று தீவிரவாதிகள் கிளர்ச்சி செய்தனர். ராஜ தந்திர நோக்குடைய சிலர், அதை வேறு விதமாக மழுப்பிக் கூறினார்கள். அதாவது குத்தகையிலிருந்து விடுபடும் இந்தியர் மீண்டும் குத்தகையை புதுப்பிக்க வேண்டும். இல்லா விட்டால், வருஷ மொன்றுக்கு இவ்வளவு தொகை யென வரி செலுத்த வேண்டுமெனக் கூறினார்கள். வரி என்று இவர்கள் சொல்லிய பணம், இந்தியரால் செலுத்த முடியாததாய் இருந்தது. ஆகவே, வயிற்றில் ஈரத்துணியைப் போட்டுக் கொண்டு இந்தியர் தென்னாப்ரிக்காவில் வியாபாரம் நடத்த மாட்டார்கள். ஓடிவிடுவார்களென இந்த கோஷ்டியினர் நினைத்தார்கள். பிரிட்டிஷ் வியாபாரிகள் தினம் கூட்டம் போட்டு, இவற்றை ரொம்ப ஆக்ரோஷமாகப்பேசினார்கள். நேட்டால் சர்க்கார் மீதும் நெருக்கடி கொண்டுவந்தார்கள். சர்க்கார் அசைந்து கொடுத்தது. தம் பிரஜைகளின் நலன் பாதிக்கப் படுவதை தாம் விசாரிப்பதாகக் கூறி, ஒரு கமிஷனை ஏற்படுத்தினார்கள். திடீரென்று இந்தியர்மீது நடவடிக்கை எடுத்தால், காலனி மந்திரி இலாகா குறை சொல்ல இடமிருக்கும். ஆகவே விசாரணைக் கமிஷனை நியமித்து, பிறகு நியாய் அநியாயம் பார்ப்பது போல பார்த்து, கடைசியில் இந்தியரை விரட்டுவது என்று சர்க்கார் நினைத்தது. ஆனால் இதில் ஏமாந்தது.

சர்க்கார் நியமித்த விசாரணைக் கமிஷன் பல பிரிட்டிஷ் பிரமுகர்களை வரவழைத்து விசாரித்தார்கள். நியாய் புத்தியுள்ள சிலர் இந்திய விவசாயிகளை வெள்ளைக்காரர்கள் விரட்ட யத்தனிப்பது அநியாயம் என்று சாட்சியம் கூறினார்கள். ஹாரி எஸ்கோம்ப் என்பவர், இந்தியரை வெள்ளைக்காரர்கள் " அடிமை போலவே " நடத்துகிறார் களென்பதை பல திருஷ்டாந்திரங்களுடன் எடுத்துக் கூறினார். இந்திய விவசாயிகளும் இக்கமிஷன் முன் தங்கள் குறைகளை எடுத்துக் கூறினார்கள். இதே சமயத்தில் ஸர் ஹன்ட்டர் என்பவர், இந்தியர் குத்தகைக் கூலிகளாக வந்து அவஸ்தைப் படுவதை விளக்கி பல பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்கு எழுதினார். எல்லாவற்றிற்கும் மேலாக, கிளர்ச்சிக் காரர்களாலேயே இந்தியரை விரட்ட வேண்டு மென்பதற்கு சரியான காரணங்களைக் கூற முடியவில்லை. கடைசியில், கமிஷன், கிளர்ச்சிக்கு நியாயமான காரணம் எதுவுமில்லை என்று தீர்ப்பளித்தது.

பிரிட்டிஷ் வர்த்தகர்களுக்கு கமிஷனின் இந்த தீர்ப்பு பேரிடி போலிருந்தது, என்றாலும் கிளர்ச்சியை அவர்கள் விட்டுவிடவில்லை. நேட்டால் சர்க்கார் தான் கமிஷனின் இந்த தீர்ப்புக்குக் காரணமெனக் கற்பித்து, நேட்டால் சர்க்காரைத் தாக்கினார்கள். நேட்டால் சர்க்காருக்கு தர்ம சங்கடமாகி விட்டது. நேட்டால் சர்க்கார் இதற்கு ஒரு தந்திரம் செய்தார்கள். குத்தகைப்படி, இந்திய விவசாயி விடுதலையாகும்போது, சிறிது நிலம் தருவதாக இருந்தது. இது பெயரளவில்தான் இருந்தது. இதையும் இப்பொழுது ரத்து செய்துவிடுவதாகக்

கூறினார்கள். கிளர்ச்சிக்காரர்களை சிறிது சமாதானப் படுத்தவே இவ்வாறு கூறப்பட்டது. ஆனால் கிளர்ச்சிக்காரர்கள் இதற்கு ஏமாறவில்லை. நேட்டால் சர்க்கார் மற்றொரு காரியமும் செய்தது. கிளர்ச்சிக் காரர்களின் கட்சியை இந்திய சர்க்காருக்கு அனுப்பி வைத்து ஏதாவது செய்ய முடியுமா என்று கேட்டது. இந்திய சர்க்கார், லண்டனை கேட்கவும் என்று கூறிவிட்டது. நேட்டால் சர்க்கார் லண்டனையும் விடவில்லை. இதற்குள் ஸர் ஹண்டரின் கட்டுரைகள் லண்டனில், இந்திய விவசாயிகளுக்கு அனுகூலமான அபிப்பிராயத்தை ஏற்படுத்திவிட்டதால், லண்டன் சர்க்காரும் ஒன்றும் செய்யமுடியாது என்று கூறிவிட்டார்கள்.

கடைசியாக 'எல்லாம் லண்டன் சர்க்கார் கையில் இருப்பதாக' சொல்லி நேட்டால் சர்க்கார் தப்பித்துக் கொள்ள முயன்றது. கிளர்ச்சிக்காரர்கள், உடனே 'காலனி மந்திரி ஆட்சி ஒழிக' என்று கிளர்ச்சியை இன்னும் சற்று அதிக மும்முரப்படுத்தினார்கள். நேட்டாலுக்கு பொறுப்பாட்சி வேண்டுமென கிளர்ச்சி செய்தனர். பொறுப்பாட்சி வேண்டுமென ஏற்கனவே ஒரு கிளர்ச்சி இருந்து வந்தது. இப்பொழுது இந்த பிரிட்டிஷ் வியாபாரிகளின் ஐக்கியத்தால் அது கூடக்கொஞ்சம் வலுத்தது. பிரிட்டிஷ் சர்க்காரும் பொறுப்பாட்சி வழங்க அப்பொழுது தயாராகத்தான் இருந்தார்கள். இப்பொழுது கிளர்ச்சி வலுத்து வருவதைக் கண்டதும் அவர்கள் 2 வருஷம் தள்ளிக் கொடுப்பதாக இருந்த பொறுப்பாட்சியை 1893-லேயே வழங்கினார்கள்!

பொறுப்பாட்சி அல்லது சுயாட்சி பெற்ற நேட்டால் சர்க்கார் செய்த முதல் காரியம், சில வெள்ளையர்களைப் பிடித்து இந்தியாவுக்கு அனுப்பி வைத்ததுதான். இதற்குள் இந்தியாவுக்கு தென்னாப்ரிக்க பிரிட்டிஷாரின் போக்குபற்றி செய்திகள் வந்துவிட்டன. வெள்ளையர்கள் தூதுகோஷ்டி இந்திய சர்க்காருடன் கலந்து பேசினார்கள். இந்திய விவசாயிகள், குத்தகை காலம் முடிந்ததும் எப்படி வியாபாரம் நடத்தி, பிரிட்டிஷ் வர்த்த



கத்தை போக்கடிக்கிறார்களென்று கூறினார்கள். இதற்காக தாங்கள் குத்தகையிலிருந்து விடுதலை ஆகும் இந்திய கூலிகள்மீது வருஷமொன்றுக்கு 20 பவுன் வரி விதிக்கப்போவதாக தெரிவித்தனர். அப்போது இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்த லார்ட் எல்ஜின் சற்று உதார மனதுடன் நடந்து கொண்டார். 20 பவுன் ரொம்ப அதிகமென்றும், 3 பவுனாக குறைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்! 3 பவுன் வரி செலுத்த வேண்டுமென்றால், இந்தியக்கூலி அதற்கு அல்லும் பகலுமாக 6 மாதம் உழைக்கவேண்டுமென்பது எல்ஜினின் மனதில் படவில்லை. அப்படி பட்டிருந்தாலும், அது இந்தியரின் உழைப்புத்தானே!

நேட்டால் வெள்ளைக்கார தூது கோஷ்டி 1895-ல் ஊர் திரும்பியது. உடனே 3 பவுன் வரி விதிக்கப்பட்டது. அதாவது குத்தகையிலிருந்து விடுதலையாகும் இந்தியக் கூலி, தென்னாப்ரிக்காவிலேயே இருப்பதென முடிவுசெய்தால், வருஷமொன்றுக்கு 3 பவுன் வரி செலுத்தவேண்டும். அந்தக் கூலி மட்டும் வரி செலுத்திவிட்டால் போதாது. அவன் மனைவியும் வரி கொடுத்தாக வேண்டும். சிறு குழந்தைகள் இருந்தால் வரியில்லை. ஆனால் 13 வயதுக்கு மேற்பட்ட பெண்ணோ, 16-வயதுக்கு மேற்பட்ட ஆணோ இருந்தால் அவர்களுக்கும் உண்டு! இந்த உத்திரவு வெளியானதும் இந்திய விவசாயிகள் அனைவரும் திடுக்கிட்டனர். அவர்களுக்கு இதைப்பற்றி ஒன்றுமே தெரியாது. இந்திய சர்க்கார் சிபார்சின் பேரில் இம்மாதிரி வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்றதும் அவர்கள் நிலைமை ரொம்ப பரிதாபமாக இருந்தது. சிலர் இந்த வரி கொடுக்க முடியாதென்றார்கள். நேட்டால் போலீஸ்காரர்கள் இந்த எதிர்ப்பு காட்டினவர்களை லேசில் அடக்கிவிட்டார்கள். குறுந்தடி பிரயோகம் தண்ணீர் பட்ட பாடாய் அடிபட்டது! இந்திய விவசாயிகளின் எதிர்ப்பு புசுபுசுத்தது! பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு முதல் வெற்றி இது.

அடுத்தபடியாக இந்திய வியாபாரிகள். பிரிட்டிஷ் வியாபாரிகள் இவர்கள் மீது திரும்பினார்கள். இதற்குள்

நேட்டால் அசெம்பிளிக்கு தேர்தல் ஆரம்பமாகியது. அசெம்பிளி கூடியதும் இந்த இந்திய வியாபாரிகளைக் கவனிப்பதாக வெள்ளைக்கார வியாபாரிகளுக்கு சர்க்கார் ரகசியமாக வாக்களித்தனர். இந்திய வியாபாரிகளுக்கு இந்த விஷயம் எட்டவே அவர்கள் உஷாரானார்கள். அசெம்பிளி தேர்தலுக்கு வோட்டர் ஜாபிதாவுக்கு யோக்கியதாம்சங்கள் வெளியானதும் இந்திய வியாபாரிகளும் தங்களது பெயரை அதில் பதிவு செய்து கொள்ளலாமென அதில் இடமிருந்தது. உடனே இந்திய வியாபாரிகள் தங்கள் பெயரை பதிவு செய்ய ஏற்பாடு செய்தனர். வெள்ளைக்காரர்களுக்கு இது மேலும் ஆத்திரத்தை மூட்டியது. "கறுப்பராகிய இந்தியர். வாக்குரிமை பெறுவதா" என்று பகிரங்கமாக கிளர்ச்சி செய்தார்கள்.

நேட்டால் அசெம்பிளி 1894-ல் கூடியதும், சர்க்கார் ஒரு விசித்திரமான மசோதா கொண்டு வந்தது. அதாவது பிரிட்டிஷார் தான் வாக்குரிமை பெறலாமே ஒழிய, கறுப்பராகிய இந்தியர் வாககுரிமை பெறக் கூடாது என்று அப்பட்டமாக அந்த மசோதாவில் கூறப்பட்டிருந்தது. இந்தியருக்கு வோட்டுரிமை இருப்பதைப் பறித்து, இறுதியில் இந்தியரை தென்னாப்ரிக்காவிலிருந்தே விரட்டவேண்டுமென்பதுதான் இந்த மசோதாவின் உள்ளர்த்தம். இந்த மசோதா வெளியானதும் இந்திய வர்த்தகர்கள் தாங்கள் இனியும் சும்மா இருப்பது ஆபத்து என்று உணர்ந்தார்கள். உடனே இந்திய வியாபாரிக்ள் 100 பேர் கையெழுத்துப் போட்டு நேட்டால் அசெம்பிளிக்கு ஒரு மகஜர் அனுப்பினார்கள். இந்தியரின் வாக்குரிமையைப் பறிப்பது அநியாயம் என்று அந்த மகஜர் கூறியது. நேட்டால் சர்க்கார் இந்த மகஜரை பூராவும்கூட படிக்கவில்லை. மசோதா நிறைவேறிவிட்டது !

இந்தியர் உடனே தோல்வி யென்று உட்கார்ந்து விடவில்லை. 10,000 இந்தியர் கையெழுத்துப் போட்டு காலனி மந்திரியான லார்ட் ரிப்பனுக்கு ஒரு மகஜர்



அனுப்பினார்கள். லார்ட் ரிப்பன், நேட்டால் அசெம்பிளியில் நிறைவேறிய மசோதாவை தாம் ரத்து செய்வதாகக்கூறினார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் நிறவெறி இருக்கக் கூடாது என்று அவர் காரணமும் சொன்னார். இந்தியருக்கு மட்டில்லா மகிழ்ச்சி. தங்களின் மகஜர், நேட்டால் சர்க்காரின் நிற வெறியை தலையில் அடித்து மட்டந் தட்டி விட்டதாக சந்தோஷப் பட்டார்கள். இந்த வெற்றிக்கு யார் காரணம் என்பது உங்களுக்குத் தெரியுமா? மகாத்மா காந்திதான் காரணம். அவர்தான் பிரஸ்தாப மகஜரை தயார் பண்ணினார். முதலில் நேட்டால் அசெம்பிளிக்கும் பிறகு லார்ட் ரிப்பனுக்கும் அனுப்பினார்.

# காந்தி வந்தார்!

குத்தகைக் கூலியாக சென்ற இந்திய மக்கள் எந்த விதமாக நடத்தப்பட்டார்கள் என்பது ரொம்ப முக்கியம். வெள்ளைக்காரர்களின் கரும்புத் தோட்டத்தில் தான் முதலில் இவர்கள் உழைத்தனர். எத்தனை மணிநேரம் உழைக்க வேண்டுமென்பதற்கு ஒரு வரம்போ எல்லையோ கிடையாது. நாளுக்கு 24 மணி நேரமும், வருஷத்துக்கு 365 நாட்களும் உழைத்து ஆகவேண்டும். இவர்களுக்கு வேண்டிய சவுகரியங்களை பிரிட்டிஷார் தருவதாக முதலில் வாக்களித்திருந்தனர். ஆனால் தரப்பட்ட சவுகரியங்கள் மகாமோசமானவை. குடியிருப்பு இடமோ, சகிக்க முடியாத நிலைமையில் இருந்தது. காலஞ்சென்ற தீனபந்து ஆண்ட்ரூஸ் இவர்களின் நிலைமையைப் பார்த்து கீழ்வருமாறு கூறினார் :—

"ஒரு இடத்தைக் காட்டி இதுதான் இந்தியக் கூலிகள் வசிக்கும் இடமென்று கூறினார்கள். என் ஆயுள் நாளிலேயே, இதுமாதிரியான மோசமான இடத்தை நான் இதற்குமுன் பார்த்ததே கிடையாது. ஒரு பொந்துக்குள் நுழைவதைப் போல, குனிந்துகொண்டு உள்ளே சென்றேன். உள்ளே போனதும் நிமிர முடியவில்லை. ஏனென்றால் நிமிர்ந்தால் தலையிடிக்கும். உள்ளே காணப்பட்ட குப்பை கூளத்தைப் பார்த்ததும் நிற்கவே முடியவில்லை. மூச்சுவிடுவதற்குக்கூட இடமில்லை. எலிப்பொந்து மாதிரி ஒரு ஜன்னல். இது வழியாக காற்று வருமா என்பது சந்தேகம்.

'இந்தமாதிரியான விடுதிகள் தான் இந்தியக் கூலிகளுக்கு வழங்கப்பட்டது. இவற்றுக்கு சற்று தூரத்தில், மாடமாளிகைகள் மாதிரி வீடுகள் இருந்தன. அவற்றில் முதலாளிகளான வெள்ளைக்காரர்கள் வசிக்கிறார்கள்.........இந்த மாளிகையை



யும், இந்தியர் விடுதியையும் பார்க்கும்போது, இந்த நிலைமை எவ்வாறிருக்கிறது என்பதை என்னால் யூகிக்கவே முடியவில்லை. இந்தியர் விடுதி பக்கம் என்னால் ஓரிரு நிமிஷங்கள் கூட நிற்க முடியவில்லை.

'இந்தியரை நடத்தும் விதத்தைப் பார்த்து நான் ரொம்ப ரொம்ப வருந்தினேன். இதனால் பலநாட்கள் நான் தூங்கக்கூட முடியவில்லை......"

குத்தகைக் காலம் முடிவடைந்ததும், திரும்பவும் குத்தகையை புதுப்பிக்க இந்தியர் மறுத்ததற்கு என்ன காரணமென்பதை தீன பந்துவின் வர்ணனை ஒன்றே நன்கு விளக்கும். கற்பனைக்கும் எட்டாத வகையில், இந்தியரை வெள்ளையர்கள் நடத்தினார்கள். குத்தகையில் கையெழுத்து போட்டு விட்டால், தனக்கு நிரந்தர அடிமையென நினைத்து இரவு பகலென பார்க்காது வேலை வாங்கினார்கள். ஓய்வு என்பதே இந்தியருக்குக் கிடையாது இந்திய விவசாயிக்கு நோய் நொடி எதுவும் ஏற்பட்டு விட்டால், அவனை படாத பாடு படுத்தி, அந்த நொந்த உடலிலேயே உழைக்கும்படி வதைத்தனர். இந்திய குத்தகைக் கூலிகள் பட்ட கஷ்டங்களையும் அவர்களை வெள்ளையர்கள் நடத்திய விதத்தையும் திருஷ்டாந்திரங்களுடன் இங்கு விவரிப்பதற்கு இந்நூலில் இடம் போதாது. இந்திய விவசாயிகள் தாங்கள் பட்ட கஷ்டத்தின் காரணமாகவே குத்தகையை புதுபிக்க மறுத்தனர். குத்தகைக்கூலியாக இல்லாமல் அரை வயிறு பட்டினியானாலும், சுயேட்சையாக இருக்க விரும்பினர். வியாபாரத்துறையில் மோசமில்லை என்றதும், வியாபாரத்தை மேற்கொள்ளக் கருதி விடுதலை கோரினர்.

இந்திய வியாபாரிகளும் கஷ்டமில்லாமல் இருந்தார்களா என்றால், அதுவுமில்லை. இந்திய வியாபாரிகளை வெறுப்புடனேயே வெள்ளைக்காரர்கள் கவனித்தனர். ஹோட்டலிலோ, பொதுவிடங்களிலோ இந்தியர் தலை காட்டக் கூடாது. எப்பேர்ப்பட்ட இந்தியரானாலும் சரி, வெள்ளைக்காரர் உட்கார்ந்திருக்கும் ரயிலில் ஏறக்

கூடாது. வெள்ளைக்காரன் உட்கார்ந்து சாப்பிடும் மேஜை அருகே போனால் கூட குற்றம். குற்றத்தை எப்படிக் கண்டிப்பார்களென்றால், இந்தியரை நையப் புடைப்பது. இந்தியரை நாலைந்து பேராகத் தூக்கிக் கொண்டு வந்து வீதியில் எறிவது. ஓட ஓட விரட்டிச் சென்று கல்லையும் மண்ணையும் வீசுவது. இவ்வளவு அவமானத்தையும், எதிர்ப்பையும் சமாளித்துக் கொண்டு இந்தியர் இருந்தார்கள்.

மகாத்மா காந்தி 1893-ல் தென்னாப்பிரிக்கா வந்தார். போர்பந்தரில் உள்ள ஒரு வியாபாரிக்காக, வழக்காடவே, வக்கீல் என்ற முறையில் அவர் வந்தார். தென்னாப்பிரிக்காவில் இந்தியரை எப்படி நடத்துகிறார்கள், எப்படி இந்தியர் வாழ்கிறார்கள் என்பதெல்லாம் அப்போது காந்திஜிக்கு தெரியாது. டர்பனில் அவர் காலடி எடுத்து வைத்ததும் அவர் திடுக்கிட்டார். இதை அவரே கூறுவது தான் பொருத்தமாக இருக்கும்:—

“பாரிஸ்டர் என்ற முறையில் எனக்கு மிகுந்த மதிப்பு இருக்குமென நினைத்து, டர்பனில் இறங்கினேன். நான் நினைத்தது தப்பு என்பது எனக்கு அரைநொடியில் தெரிந்துவிட்டது. இந்தியரை வெள்ளைக்காரர்கள் ரொம்ப துச்சமாக மதித்து இழிவு படுத்தினார்கள். கோர்ட்டுக்கு போனதும் என்னை நடத்தின விதத்தைப் பார்த்து எனக்கே வெட்கமாக இருந்தது.

“ரயிலில் இடம் கிடைக்கப் பட்டபாடு, வழியில் பட்ட அடிகள், ஹோட்டலில் கறுப்பன் என்ற காரணத்தால் சோறு கிடைக்காமற்போன கஷ்டம் இவைகளை மறக்கவே முடியாது.........”

பாரிஸ்டர் பரீட்சை தேறின மகாத்மா காந்தியையே நிறவெறி பிடித்த வெள்ளையர் படாதபாடு படுத்தினார்களென்றால், சாதாரண வியாபாரிகளான இந்தியரை வெள்ளைக்காரர்கள் என்ன பாடுபடுத்தியிருப்பார்கள் என்பதை சுலபமாக யூகித்துக் கொள்ளலாம். 1893-ல்



தென்னாப்பிரிக்கா வந்த மகாத்மா இந்தியர் படும் துன்பத்தைக்கண்டு மன மிரங்கினார். 1894-ல் அவர் இந்தியா திரும்ப ஆயத்தமாகும்போதுதான் இந்தியரின் வோட்டுரிமையை பறிக்கும் முயற்சி நடந்தது. ஏற்கனவே மனம் நொந்திருந்த மகாத்மாவுக்கு இச் செய்கை மனசை மேலும் அரித்தது. இந்திய மக்களை சுற்றி ஆபத்து வட்டமிடுகிறது என்பதை உணர்ந்ததும் அவர் தம் பயணத்தை நிறுத்தினார்.

“1894-ல் டர்பனுக்கு வந்து இந்தியாவுக்கு திரும்ப ஆயத்தமானேன். எனக்கு வழியனுப்பு மரியாதை செய்ய இந்திய வியாபாரிகள் ஒரு கூட்டம் கூட்டினார்கள். அந்தக் கூட்டத்தில் இருக்கும்போது, தாதா அப்துல்லா “நேட்டால் மெர்க்குரி” என்னும் பத்திரிகையை கையில் கொடுத்தார். பத்திரிகையில் இந்தியர் வோட்டுரிமை என்று போட்டிருந்தது. படித்தேன். இந்தியரின் வோட்டுரிமையைப் பறிக்க ஒரு மசோதாவை தென்னாப்பிரிக்க சர்க்கார் கொண்டு வரப்போவதாக அதில் இருந்தது. உடனே அங்கு கூடியிருந்த இந்திய வியாபாரிகளுக்கு இதைப் படித்துக்காட்டி, ஏற்பட்டிருக்கும் நிலைமையை, என்னால் முடிந்த வரை விளக்கி வைத்தேன்.

‘இந்தியர் உரிமை பறிக்கப்படுவதை எதிர்க்க வேண்டும் என்று சொன்னேன். நான் சொல்லுவது சரியென்றார்கள். ஆனால் தங்களால் இந்தப் போராட்டத்தை நடத்த முடியாதென்றும், என்னை இருந்து நடத்தும்படியும் கேட்டு கொண்டார்கள். சரியென்றேன். இந்தப் பிரச்னை முடியும்வரை அங்கே இருப்பதாகக் கூறினேன். அன்றிரவே சட்டசபைக்கு ஒரு மகஜர் தயாரிக்கப்பட்டது......”

என்று மகாத்மா இந்தியர் போராட்டம் மூண்ட விவரத்தைக் கூறுகிறார்.

மகஜரை சட்டசபை நிராகரித்துவிடவே மகாத்மா காலனி மந்திரியான லார்ட் ரிப்பனுக்கு 10,000

பேர் கையெழுத்துக் கொண்ட மகஜரை அனுப்பி, தென்னாப்பிரிக்க வெள்ளையரின் நிறவெறியை மண்டையில் அடித்தாரென்பதை முன்பே பார்த்தோம்.

மகஜர் இந்தியருக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்ததும், இந்தியரிடையே இந்த வெற்றி மகத்தான மாறுதலை ஏற்படுத்தியது. நெல்லிக்காய் மூட்டைகளாக இருந்த இந்தியரை இந்த மகஜர் வெற்றி ஐக்கியப்படுத்திவிட்டது. மகாத்மா இந்த ஐக்கியத்தை இன்னும் பலப்படுத்த முயன்றார். அப்போது தாதாபாய் நவ்ரோஜி தலைமையில் இந்தியாவில் தேசியக் காங்கிரஸ் உரம் பெற்று வருவது மகாத்மாவுக்கு தெரியும். ஆகவே அவர் தென்னாப்பிரிக்க இந்தியரும் ஒரு சங்கத்தை ஏற்படுத்த வேண்டுமெனக் கோரினார் இதன் விளைவாக 1894-ல் **நேட்டால் இந்தியர் காங்கிரஸ்** என்று ஒரு ஸ்தாபனம் தோன்றியது. இந்த ஸ்தாபனத்துக்கு வருஷசந்தா 3 பவுன் என்று விதித்தார். மே மாதம் ஆரம்பமான இந்த காங்கிரசுக்கு ஜூன் மாத முடிவுக்குள் சந்தா செலுத்தின மெம்பர் தொகை 30/-என்றாகியது. மகாத்மா இந்த காங்கிரசுக்கு காரியதரிசியானார்.

நேட்டால் இந்தியர் ஐக்கியத்தைக் கண்டதும் டிரான்ஸ்வாலில் இருந்த இந்தியரும் ஒரு சங்கத்தை ஏற்படுத்தினார்கள். கேப் மாகாணத்திலும் இந்தியர் சங்கமென்று ஒரு சங்கம் தோன்றியது. வெள்ளைக்காரர்கள் இந்தியரிடையே ஏற்படும் இந்த ஐக்கியத்தைக் கண்டு கோபத்தோடு இருந்தார்கள். சமயம் கிடைத்தபோது, இந்த ஐக்கியத்தை தொலைத்துவிட வேண்டுமெனவும் எதிர்பார்த்திருந்தார்கள். இதற்குள், இந்த ஐக்கியக் கர்த்தாவான மகாத்மா 1896-ல் இந்தியா கிளம்பினார்.

மகாத்மா இந்தியா அடைந்ததும் சும்மா இருக்கவில்லை. தென்னாப்பிரிக்காவில் இந்தியர் படும் துன்பங்களை பல தலைவர்களைக் கண்டு எடுத்துரைத்தார். சிறு புஸ்தகமாக எழுதி வெளியிட்டார். ஸர் பிரோஸ் ஷா மேத்தா, மகாதேவ கோவிந்த ரானடே போன்ற மா



பெரும் தலைவர்களைக் கண்டு தென்னாப்பிரிக்க வெள்ளையர்களின் நிறவெறியை எடுத்துரைத்தார். லோகமான்ய திலகர், கோகலே முதலியவர்களிடமும் மகாத்மா முறையிட்டு, இந்தியா கடல் கடந்த தம் மக்களைக் காக்க வேண்டுமென மன்றாடினார். பம்பாய், புனா, சென்னை முதலிய நகரங்களுக்கு சென்று பொதுக் கூட்டம் கூட்டி அங்கு இந்தியர் படும் துயரத்தை எடுத்துக் கூறினார். இந்தியா, மகாத்மா கூறும் விவரங்களைக் கேட்டு ஆத்திரங் கொண்டது. இந்தியா வெங்கும், தென்னாப்பிரிக்கா பற்றியே பேச்சாயிருந்தது.

நேட்டால் சர்க்கார் மகாத்மாவின் செய்கைகளை அப்போதைக்கப்போது அறிந்தே வந்தார்கள். இந்தியாவில் தங்களுக்கு எதிர்ப்பு சூறாவளிமாதிரி கிளம்புகிறது என்பதை அறிந்ததும் அவர்களுக்கு கோபம் பிறந்தது. இந்த கோபத்தை யார்மீது காட்டுவது? இந்தியா மீது காட்டமுடியாது. ஆகவே தென்னாப்பிரிக்காவில் வாழும் இந்தியர் மீது காட்டினார்கள். இதற்குள் 1896-ல் நவம்பர் மாதம் மகாத்மாவை தென்னாப்பிரிக்கா திரும்பும்படி ஒரு தந்தி வந்தது. வெள்ளையரின் சூழ்ச்சிகள் வரவர அதிகரித்து வருவதாக நேட்டால் இந்தியர் தந்தி கொடுத்திருந்தார்கள். உடனே மகாத்மா புறப்பட்டார்.

மகாத்மா புறப்பட்டு விட்டார் என்று ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தந்தி கொடுத்தது. அதோடு 400 இந்தியரும் தென்னாப்பிரிக்கா வருகிறார்களென அத்தந்தி கூறியது வெள்ளைக்காரர்கள் இந்த தந்தியைக் கண்டதும் ஆத்திரமடைந்தார்கள். இந்தியாவில் வெள்ளையரைப் பற்றி இந்த "மிஸ்டர் காந்தி" இல்லாததையும் பொல்லாததையும் பேசினாரென்றும், ஆகவே இவரை திரும்பி வர விடக்கூடாதென்றும் கிளர்ச்சி செய்தார்கள். உடனே நேட்டால் வெள்ளையர் சங்கமென்று ஒரு சங்கத்தை திரட்டி, நேட்டால் முழுவதும் பொதுக் கூட்டம் போட்டார்கள். மகாத்மாவை நேட்டாலில் இறங்கவிடுவது, வெள்ளையர்களுக்கு ஆபத்து என்றார்

கள். மகாத்மா 400 பேரை திரட்டிக்கொண்டு வருகிறார், எதற்காக என்றால் வெள்ளையரை அழிக்க என்று ஒரு பிரசங்கி பேசினார். மற்றொரு வெள்ளைக்காரர் 400 பேரல்ல, 4000 பேர் என்றார். அவரை அடுத்துப் பேசிய பிரசங்கி, 4000 அல்ல 40000 என்று கூறினார். இப்படியாக வெள்ளைக்காரர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். மகாத்மாவின் கப்பல் டர்பனை அடையும் தினம் அதிகாலையில் ஒரு பிரம்மாண்டமான கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது :—

"ஐரோப்பியரின் விரோதியான மிஸ்டர் காந்தியும் அவரது ஆட்களும் நேட்டாலுக்கு வருவதைத் தடுக்க வேண்டும். அவர்களை சர்க்கார் தடுக்க முடியாவிட்டால், இக்கூட்டம் நியமிக்கும் கமிட்டியினர், அவர்களை எந்த வகையிலும் தடுப்பார்கள். எந்த சட்டமும் இக்கமிட்டியினரை மிரட்டவோ பயமுறுத்தவோ முடியாது..."

இந்த தீர்மானத்தை கூட்டத்தினர் நேட்டால் சர்க்காருக்கு அனுப்பி வைத்தார்கள். நேட்டால் சட்ட புத்தகத்தில், அப்போது குடியேறுகிறவர்களைத் தடுக்கும் வசதி எதுவும் இல்லை. ஆகவே சட்டத்தின் துணையைக் கொண்டு காந்திஜியைத் தடுக்கமுடியவில்லை. சர்க்கார் இந்த நெருக்கடியைக் கண்டு சிறிது கலங்கினார்கள். ஆனால் ஸ்ரீ. எஸ்கோம்ப் என்னும் மந்திரி ஒருவர் இந்த கலக்கத்தைப்போக்க ஒரு அற்புதமான வழி சொன்னார். இந்தியாவில் பிளேக் நோய் இருப்பதாகவும், ஆகவே கப்பலிலிருந்து வந்தவர்களை குவாரன்டைனில் போட்டு அடைத்து வைத்திருக்கலாமெனவும் கூறினார். எவ்வளவு அதிக நாட்களுக்கு அடைத்து வைக்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது. இவர்களே ஊர் திரும்பி விடுவார்களென்று எஸ்கோம்ப் சொன்னார். இந்த எஸ்கோம்ப்தான் வெள்ளைக்காரர்களை கூட்டம் போடச் சொன்னது. இந்த தீர்மானத்தை எழுதிக் கொடுத்ததும் இவர்தான். ஆகவே இவர் எப்



பேர்பட்ட மந்திரி என்பதை அறிந்து கொள்ளலாம். உடனே நேட்டால் சர்க்கார், காந்திஜியையும் மற்றவர்களையும் குவாரன்டைனில் போட்டு அடைத்து வைக்குமாறு கூறினார்கள்.

இதே சமயத்தில் காந்திஜியையும், இதர இந்தியர்களையும் திரும்பி இந்தியாவுக்குத் திரும்பிவிடுமாறு தூண்டி வந்தனர். நேட்டால் காங்கிரஸ் காரியதரிசி மீது நெருக்கடி கொண்டு வரப்பட்டது. காந்திஜியுடனிருக்கும் 400 இந்தியருக்கு மிரட்டல் கடிதம் அனுப்பினார்கள். டர்பனுக்குள் வந்தால், தூக்கி கடலில் எறிந்து விடுவதாகக் கூட கூறினார்கள். காந்திஜியோ இந்தியரோ இதற்கு அசைபவர்களாகக் காணோம்!

டர்பன் துறைமுக குவாரன்டைனில் மகாத்மாவும் இந்தியரும் 23 நாட்கள் வரை கப்பலிலேயே இருந்தார்கள். சர்க்கார்தான் பொறுமையை இழந்தார்களே ஒழிய, இந்தியர் இழக்கவில்லை. இதற்குள் இந்தியாவுக்கும் லண்டனுக்கும பல தந்திகள் பறந்து விட்டன. காந்திஜியின் ஆணைக்குக் கட்டுப்பட்டு இந்தியர் கப்பலிலேயே 23 நாட்கள் இருந்தார்களென்பதைக் கேட்டதும், லண்டனும் இந்தியாவும் காந்திஜியைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள ஆவல் கொண்டார்கள்.

24-வது நாள் நேட்டால் சர்க்கார், பொறுமையை முற்றிலும் இழந்து, இந்தியரை கரைக்கு வரலாமென்று கூறியது. இதற்குள் சர்க்கார் மந்திரிகள் சென்று, வெள்ளையரைக் கண்டு பேசினார்கள். இந்தியர் விவகாரம் லண்டனுக்கு எட்டிவிட்டதாகவும், கரைக்கு வரும் இந்தியரை அடித்தாலோ, இம்சித்தாலோ லண்டன் சர்க்கார் லேசில் விடாதென்றும் கூறினார்கள். அதோடு தாங்கள் இந்திய வியாபாரிகளை பூர்ணமாக விரட்டியடிக்க ஒரு திட்டம் தயாரித்திருப்பதாகவும், சில காலம் பொறுத்திருந்தால் எல்லாம் சரியாய் விடுமெனவும் கூறினார்கள். அதற்குமேல், இந்தியரை கரைக்குக் கொண்டு போகும் படலம் நடந்தது. மகாத்மாவை மட்

டும் பகலில் கரைக்கு வர வேண்டாமென கூறி யிருந்தார்கள்.

400 இந்தியரும் கரைக்குப் போனபிறகு மகாத்மா தனியாக இருந்தார். பகலில் கரைக்குப் போனால், வெள்ளைக்காரர்கள் இம்சிப்பார்களென்றே, சர்க்கார் அவரை பகலில் வரவேண்டாமென கூறியிருந்தது. மகாத்மாவுக்கு இந்த யோசனை பிடிக்கவில்லை. ஆகவே, அவரும் கரைக்கு வந்தார். மகாத்மா மீது ஆத்திரங் கொண்டிருந்த வெள்ளையர்கள் காலித்தனமாக நடந்து கொண்டார்கள். காந்திஜி வீதியில் செல்லும்போது அவர் மீது கல்லையும் மண்ணையும் வீசி எறிந்தார்கள் அவரை பரபரவென இழுத்துக்கொண்டு போய் கீழே தள்ளினார்கள். ஒரு வெள்ளை குண்டன் மகாத்மாவின் முகத்தில் உமிழ்ந்து அவரை கன்னத்தில் அறைந்தான். மகாத்மா கோபிக்கவோ, எதிர்த்து அடிக்கவோ இல்லை. டர்பனில் உள்ள தம் நண்பர் வீடு நோக்கி ரத்தம் வழிந்தோட நடந்தார். வழி நெடுக அவரை வெள்ளையர் கூட்டம் ஒன்று தொடர்ந்து வந்து படாதபாடு படுத்திற்று. கடைசியில் போலீஸார் வந்து அவரை அழைத்து சென்றார்கள்.

மகாத்மா தம் நண்பர் வீட்டை அடைந்தும் தொல்லை நீங்கவில்லை. வெள்ளைக்கார காலிகள் கூட்டம் ஒன்று திரண்டு வந்து, வீட்டை முற்றுகை யிட்டது. "காந்தியை விடா விட்டால் வீட்டை கொளுத்துவோம்" என்று கூக்குரலிட்டார்கள். இந்தியா தெய்வமெனக் கொண்டாடும் பேறு பெற்ற அந்த மகாத்மா, அந்த சமயத்தில் தம் உயிருக்காக அஞ்ச வில்லை. வெளியேறினால் தம்மை ரத்த வெறி கொண்டலையும் இந்த மிலேச்சர் கூட்டம் வதைப்பார்களே என்று நடுங்கவும் இல்லை. அடைக்கலம் கொடுத்த தம் நண்பர் அவதிக்கு உள்ளாவாரே என்றுதான் வருந்தினார். நாற்பது கோடி மக்கள் இன்று தலைவனெனக் கொண்டாடும் அந்த மகாத்மா மாறுவேடம் புனைந்து நண்பரின் உடைமையைக் காக்க வீட்டை விட்டு வெளியேறினார். போலீஸ் ஸ்டேஷனில் அன்றிரவு பொழுதைக் கடத்தினார்!



'மகாத்மாவை வெள்ளையர் அடித்தார்கள். அவரை துன்புறுத்தி, முகத்தில் உமிழ்ந்தனர்' என்று தந்திகள் வந்தன. லண்டனில் இருந்த சில உதார புருஷர்கள், இது அக்கிரமம் என்று பத்திரிகைகளுக்கு எழுதினார்கள். இந்தியா இந்த செய்தியைக் கேட்டு துடி துடித்தது. லண்டனில் பத்திரிகைகளும் வெள்ளைக்காரர்களின் போக்கைக் கண்டித்து பத்தி பத்தியாய் எழுதின. உடனே லண்டன் சர்க்கார் காலனி மந்திரி ஸ்ரீ சேம்பர்லென் மூலமாக நேட்டால் சர்க்காருக்கு ஒரு தந்தி கொடுத்தது. "மிஸ்டர் காந்தியை துன்புறுத்திய குற்றவாளிகளை தண்டிக்கவும்" என்று தந்தி கூறியது.

நேட்டால் சர்க்கார் பயந்தது நடந்தே விட்டது. காலனிமந்திரியின் தந்தியை வைத்துக்கொண்டு, நேட்டால் உள்நாட்டிலாகா மந்திரி மகாத்மாவை வந்து பார்த்தார். உங்களைத் துன்புறுத்தியவர்களை கூறுங்கள் என்றார். மகாத்மா, அந்த சந்தர்ப்பத்தில் என்னவிதமாக நடந்து கொண்டாரென்பதை உலக சரித்திரத்திலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கவேண்டும்.

"எனக்கு யார் மீதும் துவேஷம் இல்லை. நான் யாரையும் குற்றவாளி என்று சொல்லவும் தயாரில்லை. என்னை அடித்தது உண்மை, எனினும் இதனால் யாரும் தண்டிக்கப்படுவதை ஏற்கமாட்டேன்......

"நான் சொல்லுவதை எழுத்து மூலமாக நான் உங்களுக்குத் தருகிறேன்."

நேட்டால் சர்க்காரின் உள் நாட்டு மந்திரி மகாத்மாவின் இந்த உதாரப் போக்கைக் கண்டு அப்படியே மலைத்துவிட்டார். காந்திஜியின் இந்த பெருந் தன்மையைக்காண அந்த மந்திரிக்கே வெட்கமாக இருந்ததாம்.

# போயர் யுத்தம்

1899-ம் ஆண்டு, திடீரென டச்சுக்காரர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் ஒரு யுத்தம் மூண்டது. டச்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்த டிரான்ஸ்வாலில், பிரிட்டிஷ் முதலாளிகள் சிலருக்கு தங்க வயல்கள் இருந்தன. இந்த தங்க வயல்கள் மீது டச்சுக்காரர்களுக்கு ஒரு கண் இருந்து வந்தது. இதே சமயத்தில் பிரிட்டிஷார், டிரான்ஸ்வாலையே பிடித்துவிட வேண்டுமென திட்டம் போட்டார்கள். அப்போது டிரான்ஸ்வாலில் குருகர் என்பவரின் ஆட்சி நடந்தது. குடியரசு சர்க்காரின் பிரசிடெண்ட் இவர். ராஜியத்துறையிலும் ராணுவத் துறையிலும் இவர் சமர்த்தர். பிரிட்டிஷாருக்கு டிரான்ஸ்வால் மீது ஒரு கண் இருந்து வருகிறது என்பதை அறிந்ததும் இவர் உஷாரானார். 1899-ல் இவருக்கு ஒரு ரகசிய செய்தி எட்டியது. அதாவது தங்க வயல் முதலாளிகளின் துணையைக்கொண்டு ஒரு பிரிட்டிஷ் படை ஜோனாஸ்பர்க் மீது படையெடுக்கப் போவதாக இவருக்கு செய்தி கிடைத்தது. உடனே இவரும் ரகசியமாக ஒரு படையை முஸ்தீபு செய்தார்.

சில நாட்களுக்குள் செய்தி சொல்லிய படையெடுப்பு நடந்தே விட்டது. டாக்டர் ஜேம்ஸன் என்ற பிரிட்டிஷ்காரர் ஒருவர் தலைமையில் பிரிட்டிஷ் படைகள் ஜோனாஸ்பர்க்குக்குள் முன்னேறி வந்தன. உடனே பிரசிடெண்ட் குருகரின் துருப்புகள் எதிர்த்தார்கள். கடுமையான போராட்டம் மூண்டது. பிரிட்டிஷாரை டச்சுத் துருப்புகள் விரட்டி விரட்டி அடித்தன. தங்க வயல் முதலாளிகளெல்லாம் கைதியானார்கள். டாக்டர் ஜேம்ஸன் தலைதெறிக்க ஓடிவிட்டார். குருகரின் சைன்யத்துக்கு மாபெரும் வெற்றி கிடைத்தது. அந்த வெற்றி பெருமிதத்தால் அவர்கள் மேலும் மேலும் விரட்டினார்கள். கடைசியில் டாக்டர் ஜேம்ஸனே பிடிபட்டார். பிரிட்டிஷ்



சர்க்காருக்கு இந்த செய்தி எட்டினது. நிலைமை சிக்கலாகி விட்டதாக அவர்கள் உணர்ந்தார்கள். பிரசிடெண்ட் குருகர் பொல்லாத மனிதரென்று உணர்ந்தனர். உடனே படையெடுத்துப் போன துருப்புகளுக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை என்று குருகருக்கு எழுதினார்கள்.

குருகர் மற்றொரு காரியத்தையும் செய்தார். அதாவது கைதான பிரிட்டிஷ் முதலாளிகளை உடனே கோர்ட்டில் நிறுத்தி விசாரித்து, அனைவருக்கும் தூக்கு தண்டனை விதித்திருப்பதாக அறிவித்தார். தூக்கு தண்டனை செய்தி வெளியானதும் பிரிட்டிஷ் காலனி மந்திரி திடுக்கிட்டு விட்டார். இந்த தூக்கு தண்டனை நிறைவேறுவதை நிறுத்தா விட்டால், பிரிட்டிஷ் மானமே போய் விடுமென எண்ணி, பிரசிடெண்ட் குருகருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதாவது இவர்கள் அறியாமல் செய்து விட்ட பிழையை பொறுத்து, இவர்கள் மீது கருணை காட்டி, தண்டனையை ரத்துசெய்ய வேண்டுமென காலனி மந்திரியின் கடிதம் கூறியது. குருகர் பெரிய ராஜதந்திரி. ஆகவே, அவர் உள்ள நிலைமையை ஆராய்ந்தார். இவர்களுக்கு கருணை காட்டாவிட்டால், நாளை இது பெரும் ஆபத்தில் கொண்டுபோய் விடுமென அவருக்குப் பட்டது. கருணை காட்டினாலோ, தனக்கு ஒரு நல்ல பெயர் கிடைக்குமென்றும் அவருக்குத் தோன்றியது. உடனே, தாம் காலனி மந்திரியின் கோரிக்கைக்குக் கட்டுப்படுவதாகக் கூறி, தூக்குத் தண்டனை பெற்றிருந்த பிரிட்டிஷ் முதலாளிகளை விடுதலை செய்து விட்டார். ஜேம்ஸன் படையெடுப்பு இவ்வாறாக தோல்வியுற்றது.

பிரசிடெண்ட் குருகருக்கு எளிதில் கிட்த்த வெற்றியைக் கண்டு பிரிட்டிஷார் ரொம்ப பொறாமைப பட்டார்கள். இதற்கு எப்படியாகிலும் பழிக்குப்பழி வாங்க வேண்டுமென திட்டம் போட்டார்கள். குருகரும் இதை அறிந்துதானிருந்தார். பக்கத்திலிருந்த ஆரஞ்ச் ஸ்டேட்டில் டச்சுக்காரர்கள் ஆதிக்கம் தான் இருந்ததால், அந்த மாகாணத்தின் நல்லுறவைப்பெற அவர்

முயன்றார். ஆரஞ்ச் ஸ்டேட் டச்சு மக்கள் குரூகருக்கு வேண்டிய உதவியை செய்வதாகவும், பிரிட்டிஷாரை மட்டந்தட்டவேண்டியது தங்களின் கடமை யென்றும் அறிவித்தார்கள். டிரான்ஸ்வாலிலும் குரூகர் பல கோட்டை கொத்தளங்களை கட்டினார். இதே சமயத்தில் பிரிட்டிஷார் புதிது புதிதாக பிரிட்டனிலிருந்து துருப்புகளைக் கொண்டுவந்து நேட்டாலிலும் கேப் மாகாணத்திலும் இறக்கிக் கொண்டிருந்தார்கள். தென்னாப்பிரிக்கா முழுவதும் யுத்தபேச்சே அடிபட்டுவந்தது.

குரூகரின் முஸ்தீபைக் கண்ட பிரிட்டிஷாரும் பலத்த ஏற்பாடுகளை செய்து வந்தனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே, ஆபத்துக்கு உள்ளாகி இருப்பதாக நேட்டால் அதிகாரிகள் முழங்கிவந்தனர். லண்டன் சர்க்காரும் நிலைமை ஆபத்துதான் என்பதை அறிந்தனர். புதிதாக யுத்தக் கப்பல்களை அனுப்பி வைப்பதாக பிரிட்டிஷ் யுத்தமந்திரி தெரிவித்தார். யுத்தக் கப்பல்கள் வந்தால் குரூகர்பாடு ஆபத்தாகிவிடும். ஆகவே, தாக்குவதை துரிதப் படுத்த வேண்டுமென குரூகர் முனைந்தார். குரூகரின் ஏற்பாடுகளெல்லாம் பூர்த்தியானதும் டிரான்வாலின் எல்லையில், நேட்டால், கேப் மாகாணங்கள் நோக்கி, டச்சு சைன்யம் முன்னேறி வந்தது. லேடிஸ்மித், கிம்பர்லி முதலிய பிரிட்டிஷ் நகரங்களெல்லாம் பிடிபட்டுவிட்டன. சரித்திரப் பிரஸித்திபெற்ற **போயர் யுத்தம்** ஆரம்பமாகிவிட்டது.

டச்சு சைன்யத்தில், ஆணும் பெண்ணும் நின்று போராடினார்கள். பெரிய பெரிய வக்கீல்களெல்லாம், சட்ட புஸ்தகங்களை தூக்கி வைத்துவிட்டு போரில் இறங்கினார்கள். இன்று ஜெனரல் ஸ்மட்ஸ் என்று வழங்கப் படும் ஸ்மட்ஸ் அப்பொழுது வக்கீல். அவரும் போரில் இறங்கி பிரிட்டிஷாரை எதிர்த்தாரென்பதை முன்பே பார்த்தோம். ஆரம்பத்தில் டச்சுக்காரர்களின் கையே வலுத்திருந்தது.

டிரான்ஸ்வாலில் இந்தியர் குடியேறி இருந்ததாக முன்பே படித்தோம். சண்டை ஆரம்பமானதும், இந்தி-



யரை டச்சுக்காரர்கள் நம்பவில்லை. இந்தியர் பிரிட்டிஷார்களின் பிரஜைகளெனக் கூறி இந்தியரை படாத பாடு படுத்தினார்கள். இதே சமயத்தில் பிரிட்டிஷார் இந்தியரை என்ன மாதிரி நடத்தினார்களென்பதுதான் விசேஷம். டச்சுக்காரன் இந்தியரை நம்பவில்லை என்றால், பிரிட்டிஷ்காரன் இந்தியரை நம்பாத தோடல்லாமல் வெறுக்கவே செய்தான். ஆனால் இந்த சமயத்தில், நேட்டால் அதிகாரிகள் போயர்கள் மீது யுத்தம்தொடுத்திருப்பதற்கு ஒரு விசித்திரமான காரணம் சொன்னார்கள். டிரான்ஸ்வாலில் உள்ள இந்தியரை போயர்கள் கொடுமை பண்ணுவதாகவும், அதைத் தடுக்கவே தாங்கள் யுத்தம் தொடுத்திருப்பதாகவும் கூறினார்கள். இந்த விசித்திரமான வாதம் பொய்யென்பதை இந்தியர் அறிந்துதானிருந்தார்கள்.

போயர் யுத்தம் மூண்டதும், இந்தியருக்கு ஒரு பெரும் பிரச்னை ஏற்பட்டது. பிரிட்டிஷாரை ஆதரிப்பதா, போயர்களை ஆதரிப்பதா என்பதே அப்பிரச்னை. சிலர் போயரைவிட பிரிட்டிஷார் மோசமானவர்கள் என்று கூறினார்கள். இதேமாதிரி இன்னும் சிலர், பிரிட்டிஷாரைவிட போயர்தான் கொடியவர்களென சொன்னார்கள். மொத்தத்தில் பார்த்தால், இருவருமே பொல்லாதவர்கள் என்று வேறு சிலர் தெரிவித்தனர். இப்படியே மாறுபட்ட அபிப்பிராயங்கள் வளர்ந்து வந்தன. யாரை ஆதரிப்பது என்ற கேள்விக்கு மட்டும் யாரும் விடை கூறவில்லை. மகாத்மா இந்த பிரச்னையை ஆராய்ந்தார். அவர் கூறிய முடிவு, பிரிட்டிஷாரையே ஆச்சரியமடையச் செய்தது. மகாத்மா கூறிய முடிவு இதுதான்:—

1. நாம் தென்னாப்பிரிக்காவுக்கு பிரிட்டிஷாரை நம்பித்தான் வந்திருக்கிறோம். நாம் ஒவ்வொரு தடவையும் இதை எடுத்துக் கூறிதான் சலுகைகள் கேட்பது வழக்கமாக இருந்திருக்கிறது. பிரிட்டிஷாரும் நம் நலனைக் காப்பதாக பேச்சுக்காவது சொல்லுகிறார்கள்.

2. பிரிட்டிஷார் நம்மைக் கொடுமைப் படுத்துகிறார்களென்றால், போயர்களும்தான் கொடுமை படுத்துகிறார்கள். ஆகவே இருசாராரும் நமக்கு விரோதிகள்தான்; என்றாலும் நம்மைக் கூலியாக அழைத்து வந்த பிரிட்டிஷாரிடம் நமக்கு பிடி இருகிறது. போயரிடமோ இது கிடையாது.

3. மேலும், பிரிட்டிஷாருக்கு இப்பொழுது கஷ்டம் வந்திருக்கிறது. இந்த சமயத்தில் இவர்களுக்கு நாம துரோகம் செய்தால் இந்தியா என்ற சொல்லுக்கே நாம் இழுக்குத் தேடியவர்களாவோம்.

4. ஆகவே, நாம் பிரிட்டிஷாரைத்தான் ஆதரிக்க வேண்டும். பிரிட்டிஷாருக்கு ஏற்படும் வெற்றி தோல்வி நமக்கும் ஏற்படட்டும். ஒருவேளை பிரிட்டிஷாரே ஜெயித்தால், நாம் செய்த உதவியை யாவது எண்ணி, இனிமேலாவது நமக்கு உபத்திரவம் கொடுக்காம லிருப்பார்கள்."

பிரிட்டிஷாரைத்தான் ஆதரிக்கவேண்டுமென்பதற்கு மகாத்மா மேலும் பல காரணங்களைக் கூறினார். பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கே, மகாத்மாவின் இந்த வாதங்களைக் கேட்க ஆச்சரியமாக இருந்தது. மகாத்மாவின் வாதத்தில் உண்மையிருப்பதாக அவர்கள் உணர்ந்தார்கள். இந்திய மக்கள், மகாத்மாவின் இந்த தீர்ப்பை ஏற்றார்கள். பிரிட்டிஷாருக்கு உதவுவதாகவும், தங்களையும் யுத்தத்தில் சேர்த்துக் கொள்ளும்படியும் பிரிட்டிஷ் சர்க்காருக்குக் கடிதம் எழுதினார்கள். நேட்டால் சர்க்கார் இந்த கடிதத்தைப் பெற்றதும், இந்தியருக்கு தம் வந்தனத்தை தெரிவித்து பதில் கடிதம் எழுதியது. ஆனால், உதவி அவசியமில்லை என்று கூறியது. இந்தியர் மீண்டும் எழுதினார்கள். தங்களுக்கு ஆயுதம் பிடித்து சண்டை செய்யும் பயிற்சி இல்லையென்றாலும், மற்ற யுத்த சேவைகளை செய்யும் அனுமதியாவது வேண்டுமெனக் கேட்டார்கள். சண்டையில் காய மடைந்தவர்களை தூக்கி வரவும், அவர்களுக்கு வைத்திய உதவி அளிக்கவும் ஒரு தொண்டர் படை



திரட்டும்படி இந்தியரை சர்க்கார் கேட்டது. இந்த அனுமதி வந்ததும், இந்தியர் சந்தோஷப் பட்டார்கள். உடனே 1100 பேர் கொண்ட இந்திய தொண்டர் படை ஒன்று திரண்டது. இப்படையைத் திரட்டியதும் மகாத்மா தான். இந்தப் படையினருக்கு சிறிது பயிற்சி அளிக்கப்பட்டது. மகாத்மாவும் இந்த படையில் தொண்டருக்கு தொண்டராய் விளங்கினார். கடைசியில் டர்பனிலிருந்து இந்தப் படையை யுத்த முனைக்குக் கொண்டு போனார்கள். யுத்த முனையில் காயமடையும் சோல்ஜர்களையும், ஆபீஸர்களையும் தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வேலை இந்தியருக்குத் தரப்பட்டது. சில சமயம் 10 மைல்வரை சுமந்து செல்லவேண்டும். சில சந்தர்ப்பங்களில் இந்த ஆஸ்பத்திரி நிறைந்து விட்டால் மற்றொரு 10 மைல் நடந்து, இன்னொரு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகவேண்டும். இந்த வேலை மகாக் கஷ்டமானதென்றாலும், இந்தியர் அலுப்பு சலிப்பில்லாமல் இதை செய்து வந்தார்கள். பிரிட்டிஷ் அதிகாரிகளே இந்தியரின் சேவா உணர்ச்சியை பாராட்டினார்களென்றால், வேறென்ன சொல்ல வேண்டும்? மகாத்மாவையும், இந்தியரையும் வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டினவர்கள் பலர் அப்பொழுது ராணுவத்தில் இருந்தார்கள். இப்பொழுது அவர்களெல்லாம் தங்களின் பழைய செய்கையை நினைத்து வெட்க மடைந்தனர். மகாத்மா அன்பைக்கொண்டு அவர்களின் ஆணவத்தை அடக்கி விட்டார்!

1900-ம் வருஷம் பிரிட்டிஷார் பக்கம் காற்று அடிக்க ஆரம்பித்து விட்டது. கிட்சனர் என்ற பிரிட்டிஷ் தளகர்த்தர் தம் சகாக்கள் கோட்டை விட்ட நகரங்களை எல்லாம் பிடித்து விட்டார். மேலும் டிரான்ஸ்வால், ஆரஞ்ச் ஸ்டேட்டுக்குள்ளும் அவர் படைகள் நுழைந்து விட்டன. போயர்களின் கட்டுப்பாடான எதிர்ப்பு சீர் குலைந்தது. சிறு சிறு கூட்டமாக போயர்கள் எதிர்த்து வந்தார்கள். கிட்சனர் அப்பொழுதும் விடவில்லை. போயர்களின் பூண்டையே வேரோடு பிய்த்து எறிய திட்டம் போட்டார். போயரை சித்திரவதை செய்வதில் அவருக்கு பரம

திருப்தி இவரின் திருவிளையாட்டல்கள் வர வர வலுத்தன. 27,000 போயர் பெண்களையும் குழந்தைகளையும் இவர் சிறையிலடைத்து சித்திரவதை செய்தார். இந்த செய்தி பிரிட்டனுக்கு எட்டியதும் பெரும் கிளர்ச்சி தோன்றியது. இது 5-வது அத்தியாயத்திலேயே எழுதப் பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் சர்க்காரே கடைசியில் சண்டையை நிறுத்தி சமரஸம் செய்யுங்களென அறிவித்தார்கள். இதன் விளைவுதான் 1902-ல் வெரினிகிங் என்ற யிடத்தில் ஏற்பட்ட ஒப்பந்தம். போயர் யுத்தம் இவ்வாறாக முடிந்தது. இந்த ஒப்பந்த விவரம் முன்பே தரப்பட்டிருக்கிறது.

# இந்தியர் பிரதிக்ஞை

1900-சண்டையில் பிரிட்டிஷாரின் கை வலுக்க ஆரம்பித்து விட்டது என்றதும் இந்திய தொண்டர் படையை அவசியமில்லை என்று பிரிட்டிஷார் கலைத்து விட்டார்கள். எனினும் இந்தியர் செய்த சேவைக்காக 57 இந்தியருக்குமன்னர் சர்க்கார் கவுரவப் பதக்கம் வழங்கிற்று. இதனால் பிரிட்டிஷாரின் குணம் மாறிவிட்டதாக இந்தியர் அனைவரும் நினைத்தார்கள். மகாத்மாவும் அப்படித்தான் நினைத்தார். இனி தமக்கு தென்னாப்பிரிக்காவில் வேலை இல்லை யென்று எண்ணி 1901-க்கடைசியில் அவர் இந்தியா திரும்பி விட்டார். மகாத்மா தென்னாப்பிரிக்காவை விட்டு வந்த பிறகு நிலைமை அவ்வளவு சரியாக இல்லை. யுத்தத்தில் வாகை சூடிய பிரிட்டிஷார், யுத்தத்தையே மறந்து விட்டார்கள். யுத்த சமயத்தில் இந்தியர் காட்டின அன்பையும் மறந்தார்கள்.

1902-ம் வருஷம் மார்ச் மாதம் பம்பாயிலிருந்த மகாத்மாவுக்கு தென்னாப்பிரிக்காவிலிருந்து ஒரு தந்தி வந்தது. நிலைமை சிக்கலாகி விட்டதாகவும் தந்தி கூறியது. வேதாளம் பழையபடி முருங்கை மரம் ஏறிவிட்டதாக மகாத்மா எண்ணினார். உடனே மகாத்மா தென்னாப்பிரிக்காவுக்குப் புறப்பட்டார்.

யுத்த சமயத்தில் பிரிட்டிஷார் போயர் மீது பல குற்றச் சாட்டுகளை சுமத்தினார்கள். அதில் இந்தியரை போயர் நடத்துவது சரியல்ல யென்பதும் ஒன்று. டிரான்ஸ்வாலில் இந்தியர் நிலம் வாங்க உரிமை யில்லை என்று பிரிட்டிஷார் உதாரணத்துக்கு எடுத்துக் காட்டினார்கள். இம்மாதிரியான அக்கிரமம் உலகில் நடப்பது உண்டா என்று காமன்ஸில் பல மெம்பர்கள் அலறியதும் உண்டு. ஆகவே பிரிட்டிஷார் டிரான்ஸ்வால் வந்து விட்டால், நிலைமை சரியாய் விடுமென இந்தி

யர் நினைத்தார்கள். டிரான்ஸ்வாலில் நில புலமும் வாங்கினார்கள். பணத்தைக் கொடுத்த இந்தியர், பத்திரம் பதிய சென்ற பொழுதுதான் நிலைமை தெரிந்தது. அதாவது பத்திரப் பதிவாளர், இந்தியர் நிலம் வாங்க உரிமை கிடையாது என்று கூறினார். இந்தியர், "அது போயர் கால சட்டம்—இது பிரிட்டிஷாரின் காலம்" என்றார்கள். பிரிட்டிஷாரும் அதைத்தான் கூறுகிறார்கள் என்றார் அந்தப் பத்திரப் பதிவாளர். இந்தியருக்கு இந்த பதில் ஆச்சரியத்தை மூட்டியது. பதிவாளர் தான் உளறுகிறாரோ என்று விசாரித்தார்கள். உளறவில்லை என்பது ஊர்ஜித மாகியது. மகாத்மாவுக்கு தந்தி பறந்ததின் காரணம் இதுதான். இதல்லாமல் மற்றொரு காரணமும் இருந்தது. காலனி மந்திரியான ஸ்ரீ சேம்பர்லென் தென்னாப்பிரிக்காவுக்கு விஜயம் செய்வதாக இருந்தார். காலனி மந்திரியிடம் இதை முறையிட வேண்டு மென மகாத்மாவை இந்தியர் அழைத்திருந்தார்கள்.

யுத்த சமயத்தில், மகாத்மா பல பிரிட்டிஷ் அதிகாரிகளைக் கண்டு பேசியிருக்கிறார். அவர்களெல்லாம் டச்சுக்காரர்களின் தடை உத்திரவை கண்டித்திருக்கிறார்கள். தங்கள் கைக்கு டிரான்ஸ்வால் வந்தால், முதலில் இந்த சட்டத்தை ரத்து செய்வதாகவும் கூறினார்கள். பிரிட்டோரியாவிலிருந்த பிரிட்டிஷ் பிரதம அதிகாரி தான் இதை அழுத்தந் திருத்தமாகக் கூறியது. ஆகவே, மகாத்மாவுக்கு புதுநிலைமை புரியவில்லை. நேற்று ஒரு மாதிரி சொன்ன பிரிட்டிஷார், இன்று வேறொரு மாதிரி நடக்கிறார்களே என்பதை புரிந்து கொள்வது கஷ்டமாக இருந்தது. டர்பன் வந்ததும், அவர் பல மந்திரிகளைக் கண்டு இந்த முரண்பாட்டை எடுத்துக் காட்டினார். அவர்களெல்லாம் முன்பு போல இப்பொழுது பேசவில்லை. வாய் பேசா மௌனிகளாக காட்சி அளித்தனர்.

இதற்குள் காலனி மந்திரி ஸ்ரீ சேம்பர்லென் டர்பன் வந்து விட்டார். மகாத்மா தலைமையில் ஒரு தூது கோஷ்டி சேம்பர்லெனைக் கண்டு தங்கள் குறைகளைக்



கூறியது. காலனிமந்திரி அவ்வளவையும் பொறுமையாகக் கேட்டுவிட்டு, தானே டிரான்ஸ்வால் போகப் போவதாகவும், அங்கு விசாரிப்பதாகவும் கூறினார். அதோடு இந்தியர் பிரச்னையைப் பற்றி நேட்டால் அதிகாரிகளுடன் விசாரிப்பதாகவும் சொன்னார். தூது கோஷ்டியினர் திரும்பி விட்டார்கள்.

டிரான்ஸ்வாலில் இந்தியர் நிலபுலம் வாங்கக் கூடாது என்றிருந்ததை போயர்கள் தான் ஏற்படுத்தியது. இந்த சட்டம் 1885-ல் உருவாகியது. 1900-ம் வருஷம் வரை இந்த சட்டத்தை எதிர்த்துவந்த பிரிட்டிஷார், இப்பொழுது, இந்த சட்டத்துக்கு துணையாக மற்றொரு புது தடையை ஏற்படுத்தினார்கள். இது மகாத்மா டர்பனுக்கு வந்த பிறகு புதிதாகக் கிளம்பின தடை. அதாவது இப்பொழுது டிரான்ஸ்வாலுக்குள் யாரும் நினைத்தபடி போகக்கூடாது என்று ஒரு தடையை ஏற்படுத்தினார்கள். அப்படி யாரும் குடியேறுவதாக இருந்தால், குடியேற்ற ஆபீஸ்களில் அனுமதிச் சீட்டு வாங்கித்தான் குடியேற வேண்டுமென கூறினார்கள். இதற்கென ஐரோப்பியர் குடியேற்ற ஆபீஸ் என்று ஒரு ஆபீஸ் முளைத்தது. இந்தியருக்கென்று, ஆசிய குடியேற்ற இலாகா என்று ஒரு இலாகாவை தோற்றுவித்தார்கள். ஐரோப்பிய குடியேற்ற இலாகா பெயரளவில்தான் இருந்தது. அனுமதி என்று வெள்ளையன் ஒருவன் கேட்டுவிட்டாலே போதும். உடனே அனுமதி சீட்டு வழங்கி விடுவார்கள். ஆனால் ஆசிய இலாகாவிலோ இதற்கு நேர்மாறான நிலைமை. எத்தனை குட்டிக்கரணம் போட்டாலும், எப்பேர்ப்பட்ட காரணங்கள் கூறினாலும் அனுமதி சீட்டு கிடைக்கவே கிடைக்காது. டிரான்ஸ்வாலை விட்டு, யுத்தத்தின் காரணமாக வெளியேறிய அநேக இந்தியர், இந்த புது உத்தரவால் தவியாய்த் தவித்தார்கள். அவர்கள் விட்டு வந்திருந்த கடைகளெல்லாம் வெள்ளை குண்டர்களின் கையில் சிக்கிவிடுமோ என்ற ஆபத்திருந்தது. இதனால் அநேக குடும்பங்கள் நொடிந்து விடும் நிலையில் இருந்தன.

டிரான்ஸ்வாலுக்கு சேம்பர்லென் போகும்போது மகாத்மாவும் அங்கு போகவேண்டுமென இந்தியர் வேண்டினார்கள். சேம்பர்லெனை அங்கும் ஒரு தூது கோஷ்டி பேட்டி கண்டு குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டுமென்பது ஏற்பாடு. மகாத்மா பயணத்துக்கு ஆயத்தமானார். ஆனால் அனுமதி சீட்டு வாங்குவதெப்படி? மகாத்மா தனியாக சென்றால் அனுமதி சீட்டு நிச்சயமாகக் கிடைக்காது. டிரான்ஸ்வாலுக்கு பிறகு போவதெப்படி? இதற்கு மகாத்மா ஒரு வழி செய்தார். டர்பன் போலீஸ் சூப்ரண்ட் மகாத்மாவின் நண்பர். மகாத்மாவின் தெய்வ பக்தியைக்கண்டு பாராட்டுபவர். ஆகவே, அவரின் செல்வாக்கைக் கொண்டு, மகாத்மா அனுமதி சீட்டுபெற்று டிரான்ஸ்வால் போய்ச் சேர்ந்தார். உடனே இந்திய தூது கோஷ்டி ஒன்று சேம்பர்லெனைப் பார்க்கவேண்டுமென மனு ஒன்று அனுப்பினார்கள். மனுவில் பார்க்க வருகிறவர்களின் பெயரும் இருந்தது. டிரான்ஸ்வால் குட்டி பூதங்களின் கண்ணில் மகாத்மர் பெயர் தென்பட்டதும் அவர்கள் அப்பெயரை அடித்துவிட்டு, பாக்கி தூதுகோஷ்டி மெம்பர்கள் வரலாமென அழைத்தார்கள். மகாத்மா இதைக்கண்டு மனமுடைய வில்லை. எப்படியும் இந்தியர் குறைகளை காலனிமந்திரி கேட்டால் போதுமென்று சொல்லி விட்டார்.

காலனி மந்திரி சேம்பர்லென் தூது கோஷ்டியினருக்கு வாக்குறுதி எதுவும் கொடுக்கவில்லை. எல்லாவற்றையும் விசாரித்து, நியாயமான போக்கை அனுஷ்டிக்கும் படியாக அதிகாரிகளுக்கு சொல்லுவதாகக் கூறினார். இந்த வழவழா பதிலோடு காலனி மந்திரி ஊர் திரும்பி விட்டார். இந்தியர் பேட்டிகள் கண்டது தான் மிச்சம்.

இதே சமயத்தில் டிரான்ஸ்வாலில் பிரிட்டிஷ் வியாபாரிகள் ஏராளமாகக் குடிபுகுந்தார்கள். குடிபுகுந்தவர்கள் சாமான்யமான ஆட்களல்ல. நேட்டால் சர்க்காரின் லகானே இவர்கள் வசம்தானிருந்தது. ஆகவே



டிரான்ஸ்வாலில் இந்தியர் வியாபாரம் செய்யாமல் தடுக்க வேண்டுமென்று இவர்கள் நேட்டால் சர்க்காரை வற்புறுத்தி வந்தார்கள். நேட்டால் சர்க்காரும் இந்த வற்புறுத்தலுக்கு உடன்பட்டே வந்தது.

காலனி மந்திரி லண்டன் திரும்புவதற்கு முன்பே, இந்தியருக்கு மற்றொரு பேரிடி விழுந்தது. அதாவது குடியேற்றத்தைக் கட்டுப்படுத்த சர்க்கார் குடியேற்ற ஆபீஸ்களை ஏற்படுத்தினார்கள் அல்லவா? ஐரோப்பியர் குடியேற்ற ஆபீஸ் என்றிருந்ததை இப்பொழுது மூடிவிட்டார்கள். இந்தியருக்கென இருந்த ஆசிய ஆபீஸை மூடவில்லை. மேலும் இந்த ஆபீஸ் அதிகாரிகளை, இந்தியர்களை என்ன வேண்டுமானாலும் செய்யுங்களென தூண்டிவிட்டார்கள். இந்த நிறவெறியை மகாத்மா கண்டித்தார். இந்தியரை விரட்டவே, இந்த சூழ்ச்சி நடக்கிறது என்பதை அவர் பகிரங்கமாகக் கூறினார். நேட்டால் அதிகாரிகளோ, டிரான்ஸ்வாலில் புகுந்திருக்கும் பிரிட்டிஷ் ராஜதந்திர ஜாம்பவான்களோ இந்த கண்டனத்தை சட்டை பண்ணவில்லை. யுத்த சமயத்தில் போயரை, எந்தக் காரணத்துக்காக பிரிட்டிஷார் திட்டி வந்தார்களோ, அதே காரியத்தை, இன்னும் மோசமாக பிரிட்டிஷார் செய்துவந்ததைக் கண்டதும் மகாத்மாவின் மனது ரொம்ப வேதனைப்பட்டது.

டிரான்ஸ்வாலிலிருந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் இவ்வளவோடு திருப்தி அடையவில்லை. குடியேறியிருக்கும் இந்தியர் ஒவ்வொருவரும், தங்களின் பெயர், தொழில், வயது முதலியவைகளை அதிகாரிகளுக்குத் தெரிவித்து தங்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்று கூறினார்கள். அதோடு அதிகாரிகள் கொடுக்கும் பத்திரத்தில் கையெழுத்தும் நபரின் போட்டோ படமும் இருக்கவேண்டுமெனவும் சொன்னார்கள். இதற்காக ஒரு காரணமும் கூறினார்கள். கள்ளத்தனமாக இந்தியர் குடியேறுவதாகவும அதைத் தடுக்கவே, இந்த புது ஏற்பாடு என்றும் சொன்னார்கள். மகாத்மாவுக்கு இந்த புதுமுறை பிடிக்கவில்லை. இந்தியரை மேலும்

அவமானப்படுத்துவதாக அவர் கருதினாரென்றாலும், அவரின் பொறுமை இதற்கும் விட்டுக் கொடுத்தது. அவரின் யோசனையைக் கேட்டு இந்தியர் அனைவரும் தங்களை இந்த புதுமுறைப்படி பதிவு செய்து கொண்டார்கள்.

டிரான்ஸ்வால் சர்க்காருக்கு இந்தியரின் போக்கு புரியவேயில்லை. புது முறையில் பதிவு செய்ய வேண்டுமென்று சொன்னால், இந்தியர் அதற்கு கட்டுப்பட மறுப்பார்கள் என்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். அப்படி கட்டுப்பட மறுத்தால், உடனே அவர்களை வெளியேற்றி விடலாமென திட்டம் போட்டிருந்தார்கள். இந்தியரோ, புது முறைக்கு உட்பட்டதன் மூலம் சர்க்காரின் எண்ணத்தில் ஈர மண்ணைப் போட்டு விட்டார்கள். மேலும் இந்தியரின் வியாபாரமும் சிறுக சிறுக வளர ஆரம்பித்து விட்டது. ஆகவே, இந்தியரை ஒழிக்க வேண்டுமென்றால், இன்னும் கட்டுப்பாடுகளை பலப்படுத்த வேண்டுமென யோசித்தார்கள். இந்த யோசனையில் ஒரு அவசரச் சட்டம் 1906-ல் பிறந்தது. இந்த சட்டத்துக்கு 'கொடூரச் சட்டம்' என்று மகாத்மா பெயரிட்டார். அந்த கொடூரச் சட்டத்தின் விவரமாவது :—

ஒவ்வொரு இந்தியரும், அவர் ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி தங்களின் பெயரை கண்டிப்பாக அதிகாரிகளிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும். சிறு குழந்தைகளாக இருந்தால் கூட அவர்களை பெற்றோர்கள் கூட்டி வந்து, குழந்தைகளின் பெயரையும் பதிவு செய்தாக வேண்டும்.

பதிவு செய்யும் போது ஒவ்வொருவரும் கையெழுத்தோ, ரேகையோ போடுவதோடல்லாமல், தமது அங்க அடையாளங்களையும் கூற வேண்டும். இவற்றை செய்ய யாரேனும் தவறினால், அவர்களை உடனே டிரான்ஸ்வாலிலிருந்து நாடு கடத்தி விடுவார்கள். அல்லது சிறைவாசம், அபராதம் விதிக்கப்படும்.



பதிவு செய்யப்பட்டவர்களுக்கு ஒரு பத்திரம் வழங்கப்படும். இந்தப் பத்திரத்தை சதாகாலமும் பத்திரத்துக்கு உரியவர் தம்முடனேயே வைத்திருக்கவேண்டும். சந்தேகத்தின் பேரில், எந்த விடத்திலும், எந்த நேரத்திலும் அதிகாரிகள், அதாவது சாதாரண போலீஸ்காரன் கேட்டாலும் கூட, உடனே எடுத்துக் காண்பிக்கவேண்டும். இந்த பத்திரத்தை பரிசோதிப்பதற்காக, போலீஸ்காரர்கள், எந்த இந்தியர் வீட்டுக்குள்ளும் நுழையலாம். அனுமதிக்காக காத்திருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அதிகாரிகள் பத்திரத்தை கேட்கும்போது, யாரேனும் கொடுக்கத் தவறினால் அவர்களுக்கு கடுமையான தண்டனை, பெரும் அபராதம் முதலியவை விதிக்கலாம்............

இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம் என்று கொடியன் ஜார் ஆட்சியை பாரதி வர்ணித்தார். இந்த அவசரச் சட்டத்தை பார்த்தால், ஆயிரம் ஜார்களை தூக்கி விழுங்கக் கூடிய வெள்ளையர்கள் டிரான்ஸ்வாலில் அப்பொழுது இருந்தார்களோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இந்த அவசரச் சட்டத்தை பிறகு நிரந்தர சட்டமாகக போவதாகவும் சர்க்கார் அறிவித்திருந்தது. மகாத்மாவுக்கு இந்த அவசரச் சட்ட நகல் கிடைத்ததும் அவர் பதறி விட்டார். இந்தியர் இனியும் சும்மா இருந்தால், தலைக்கே ஆபத்து என அவர் உணர்ந்தார்.

1906- செப்டம்பர் 10-ம் தேதி இந்த அவசரச் சட்டம் பிரசுரமாகியது. 11-ந் தேதி அன்று மகாத்மா டிரான்ஸ்வாலில் உள்ள ஜோனாஸ்பர்க்கில், ஒரு யூத சினிமாக் கொட்டகையில் இந்தியரின் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். அவசரச் சட்டத்தின் ஷரத்துகளை மகாத்மா ஒவ்வொன்றாகப் படித்துக் காட்டினார். கூட்டத்திலிருந்தவர்களில் பாதிப்பேர் தமிழர்கள். மற்றும் பாதிப்பேர் தெலுங்கர்களும் வட இந்தியர்களும். ஆகவே மகாத்மாவின் பிரசங்கத்தை தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய 3 பாஷைகளில் மொழி பெயர்த்துச் சொன்னார்கள். சபையிலே ஊசி விழுந்தால் அதன் சப்தம்

கேட்கும். அவ்வளவு பேரும் அச்சடித்த பதுமை போல இருந்தார்கள். ஆனால் அவர்கள் உள்ளத்திலே குமுறிக்கொண்டிருந்த ஆத்திரத்தை மகாத்மா அறிந்தார்.

இந்த சட்டத்தை எதிர்ப்பது என்று மகாத்மா கூறினார். இந்த யோசனையை ஆதரித்து அநேகம் பேர் பேசினார்கள். ஒவ்வொருவரும பேசி முடிந்ததும் செய்த கரகோஷம், இந்தியர் எவ்வித தியாகத்துக்கும் தயாராக இருக்கிறார்களென்பதை வலியுறுத்தியது. இந்த சமயத்தில் சேத் ஹாஜி ஹபீப் என்பவர் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்:—

"இந்த சட்டம் நம் மானத்தைவாங்குவதாகும். இதற்கு ஒரு நாளும் கட்டுப் படக்கூடாது. ஆகவே, ஆண்டவனை சாட்சியாக வைத்து, நான சொல்லுகிறேன், நான் ஒரு பொழுதும இந்த அவமானகரமான சட்டத்துககுக் கட்டுபபடமாட்டேன. இது சத்தியம்......"

இதேமாதிரி ஒவ்வொருவரும் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளவேண்டு மென்று அவர் கூறினார். இந்த சமயத்தில் மகாத்மா குறுக்கிட்டு, பிரதிக்ஞை எடுத்தால் அதன்படி நடக்கவேண்டும்; பின் வாங்குவதாக இருந்தால், பிரதிக்ஞை எடுத்து அதை மீறும் பாபததை புரியாதீர்கள் என்று கூறினார். சபையினர் உயிரை வேண்டுமென்றாலும் கொடுக்கிறோம் என்று கூறினார்கள். கடைசியில் ஒவ்வொருவராக மேடைக்கு வந்து சேத் ஹாஜி ஹபீப் பிரதிக்ஞை எடுத்தது மாதிரியே தாங்களும் எடுத்துக் கொண்டார்கள். இவ்வாறாக உலக சரித்திரத்திலேயே புது யுகம் சமைக்கும சத்தியாக்கிரகப் போராட்டத்தின் விதது, இந்தக் கூட்டத்தில்தான் விதைக்கப்பட்டது.

இந்தியர் பிரதிக்ஞை எடுத்துக் கொண்ட செய்தி எங்கும் பரவியது. சர்க்காருக்கும் எட்டியது. மகாதமா மறுநாள் காலனி மந்திரியை பேட்டி கண்டார். இந்தியர்



இந்த சட்டத்தை கடைசிவரை எதிர்ப்பதாக முடிவு செய்து விட்டார்களென்பதை தெரிவித்தார். மந்திரிக்கு இந்த பிரதிக்ஞை விஷயம் அவ்வளவாக மண்டையில் ஏறவில்லை. ஆகவே, அவர் ஏதாவது சலுகைகள் காட்டுவதாக கூறினாரே ஒழிய சட்டத்தைக் கை விடுவதாகக் கூறவில்லை. வேண்டுமானால் பெண்கள் பதிவு செய்து கொள்ளாதபடி சட்டத்தை தடுக்கலாமென்று சொன்னார். மகாத்மா "இது மட்டும் போதாது, சட்டம் பூராவும் ஒழிய வேண்டும்" என்று பதிலளித்து விட்டு வந்து விட்டார். அடுத்தபடி என்ன என்பதே கேள்வியாக இருந்தது.

# சத்தியாக்ரகம்

டிரான்ஸ்வால் சர்க்கார் கடைசி நேரத்தில் ஒரு
தந்திரம் செய்தார்கள். இந்தியர் எப்படியும் இந்த சட்
டத்தை எதிர்க்கப் போகிறார்களென அறிந்ததும்,
பெண்களுக்கு விதி விலக்கு அளித்திருப்பதாகக் கூறி
னார்கள். அதாவது இந்திய பெண்கள் அவசரச் சட்டத்
தில் கண்டுள்ளபடி தங்களைப் பதிவு செய்து கொள்ள
வேண்டாமென தெரிவித்தனர். மற்றபடி அவசரச் சட்
டத்திலுள்ள இதர ஷரத்துகளெல்லாம் டிரான்ஸ்வால்
சட்டசபையில் நிரந்தர சட்டமாக ஆக்கப்பட்டன. சர்க்
காரின் இந்த தந்திரம் எதிர்பார்த்த பலனை ஏற்படுத்த
வில்லை. இந்தியர் இந்த சலுகையைக் கண்டு திருப்தி
கொண்டு, தங்களின் உத்தேச போராட்டத்தை நிறுத்தி
விடுவார்களென டிரான்ஸ்வால் அதிகாரிகள் நினைத்
தார்கள். ஆனால் இந்தியர் இதை சட்டை பண்ணவே
இல்லை. சட்டம் முழுவதும் ரத்தானால்தான் தாங்கள்
திருப்தி அடையப் போவதாக தெள்ளத் தெளிய தெரி
வித்தார்கள்.

டிரான்ஸ்வால் சட்டசபையில் நிறைவேறின சட்டம்
மன்னர் சர்க்காரின் கை யெழுத்தைப் பெற வேண்டும்.
ஏனென்றால் டிரான்ஸ்வால் அப்பொழுது காலனியாகத்
தான் இருந்தது. ஆகவே, மன்னரின் கையெழுத்துக்
காக அது லண்டன் போக வேண்டும். லண்டனில்
அங்கீகாரம் கிடைக்கா விட்டால், சட்டம் நிறைவேறின
தாகக் கருதப்பட மாட்டாது. மகாத்மா இந்த சட்
நுணுக்கத்தை ஆராய்ந்து, லண்டனுக்கு ஒரு இந்திய
தூது கோஷ்டி சென்று காலனி மந்திரியிடமும் இந்தியா
மந்திரியிடமும் இந்த சட்டத்தின் கொடூரத் தன்மையை
எடுத்து விளக்க வேண்டுமெனக் கூறினார். அவர்கள்
இந்தியரின் துன்பத்தைக் கண்டு மன மிரங்குவார்
களென்றும் நம்பினார். டிரான்ஸ்வால் இந்தியரிடம்



மகாத்மா இந்த யோசனையைக் கூறியதும் அவர்கள் இதை ஆதரித்தார்கள். மகாத்மாவும், ஸ்ரீ. எச். ஓ. அலி என்பவரும் லண்டன் போவது என்று ஏற்பாடாகியது.

மகாத்மாவும் ஸ்ரீ. அலியும் லண்டன் வந்து பல பிரமுகர்களைப் பேட்டி கண்டு இந்தியரை தென்னாப்ரிக்க வெள்ளையர்கள் நடத்தும் விதத்தை எடுத்துக் கூறினார்கள். பிறகு இந்தியா மந்திரியாயிருந்த லார்ட் மார்லியையும் கண்டு, புள்ளி விவரங்களுடன் இந்தியரை டிரான்ஸ்வால் சர்க்கார் கொடுமைப் படுத்துகிறது என்பதைக் கூறினார்கள். லார்ட் எல்ஜின் அப்பொழுது காலனி மந்திரியாக இருந்தார். மகாத்மா எல்ஜினையும் பேட்டி கண்டார். மொத்தத்தில் மாகாத்மா லண்டனில் எல்லா தலைவர்களையும் பார்த்து முறையிட்டார். காலனி மந்திரி உள்பட எல்லா பிரமுகர்களும் மகாத்மாவின் முயற்சியைப் பாராட்டினார்கள். இந்தியருக்கு அனுதாபம் கூறி, வேண்டியவற்றை செய்வதாக வாக்களித்தார்கள். மகாத்மாவும் ஸ்ரீ அலியும் 6 வார காலம் லண்டனில் தங்கியிருந்தார்கள். காலனி மந்திரியான லார்ட் எல்ஜின் மகாத்மா கூறிய விஷயங்களை தாம் மிகுந்த அனுதாபத்தோடு கவனிப்பதாக மீண்டும் வாக்களித்தார். அதன் பேரில் மகாத்மா தென்னாப்ரிக்கா திரும்பினார்.

இதற்குள் டிரான்ஸ்வால் சட்டம் லண்டனுக்குச் சென்றது. எல்ஜின் ரொம்ப தந்திரக்காரர். மகாத்மாவிடம் இந்தியர் விஷயத்தில் அனுதாபம் காட்டுவதாகக் கூறின அவர், டிரான்ஸ்வால் வெள்ளையர்களுக்கு அதே சமயத்தில் ஒரு வாக்குறுதியும் கொடுத்தார். அதாவது நிறவெறி காட்டும் இந்த சட்டத்தை மன்னர் அங்கீகரிக்கக் கூடாது என்று தாம் கூறிவிடப் போவதாகவும், ஆனால் டிரான்ஸ்வாலுக்கு இன்னும் சில மாதங்களில் பொறுப்பாட்சி வழங்கப் போவதாகவும் அப்பொழுது இந்த சட்டத்தை மன்னரின் அங்கீகாரத்துக்காக காத்திராமல், நீங்களாக கொண்டுவர முடியுமெனக் கூறியிருந்தார். மகாத்மாவுக்கு இந்த தந்திரம் முதலில் தெரிய வில்லை. எல்ஜின் தனக்கு கொடுத்த வாக்குப்

படியே கடைசிவரை நடப்பாரென அவர் கருதினார். ஆனால் தென்னாப்பிரிக்காவை மகாத்மா அடைந்ததும் இந்த தந்திரம் புலனாயிற்று.

எல்ஜின் மகாத்மாவிடம் சொல்லியபடி டிரான்ஸ்வால் சட்டத்தை அங்கீகரிக்க முடியாது என்று அறிவித்தார். ஆனால் டிரான்ஸ்வால் காலனி 1907 ஜனவரி முதல் தேதி அன்றிலிருந்து பொறுப்பாட்சி பெற்றுவிடுமென அவர் கூறினார் பொறுப்பாட்சி பெற்ற பிறகும் இதுமாதிரியான சட்டத்தை நிறைவேற்றக்கூடாது என்று அவர் கூறினாரா என்றால், இல்லை. இங்குதான் எல்ஜினின் ராஜதந்திர மூளை தகிடுதத்தம் செய்தது. மகாத்மா லண்டனை விட்டு கிளம்பியதுமே, அவர் தாம் செய்யப்போகும் ராஜதந்திரத்தை டிரான்ஸ்வாலின் பிரதிநிதியான ஸர் ரிச்சர்ட் ஸாலமன் என்பவரிடம் கூறினார். தாம் சட்டத்தை அங்கீகரிக்க முடியாது என்று கூறியதும் டிரான்ஸ்வால் சர்க்கார் பதற வேண்டாமெனக் கூறினாராம்.

மகாத்மா இந்தராஜதந்திரத்தை "பித்தலாட்டம்" என்று கண்டித்தார். பிரிட்டிஷாரின் உடன் பிறந்த இந்த சூழ்ச்சியால் அனர்த்தம்தான் ஏற்படுமெனவும் எச்சரித்தார். டிரான்ஸ்வால் சர்க்கார் இந்த எச்சரிக்கையை லட்சியம் பண்ணவில்லை. இந்த சமயத்தில், தென்னாப்பிரிக்க இந்தியர் எப்படி இருந்தார்களென்பதை சற்று கவனிக்க வேண்டும். மகாத்மாவின் லண்டன் தூது முடியட்டும் என்றுதான் இந்தியர் காத்திருந்தார்கள். போராடினால் ஒழிய, டிரான்ஸ்வால் சர்க்கார் வழிக்கு வராது என்று எண்ணி, போராட்டத்துக்கு முஸ்தீபு செய்து வந்தார்கள். இப்போது எல்ஜினின் ராஜதந்திர விளையாட்டு, வரப்போகும் போராட்டத்துக்கு போர்ப் பறை கொட்டி விட்டதாக எண்ணி சந்தோஷமே கொண்டார்கள். சட்டம் நிறைவேறியதும் போராட்டத்தை ஆரம்பிக்க ஏற்பாடுகள் ஜரூராக நடந்தன.

1907-ல் பொறுப்பாட்சி அமுலுக்கு வந்தது. உடனே மார்ச் மாதம் டிரான்ஸ்வால் சட்டசபையில்



இந்தியருக்கு விரோதமான "ஆசிய மக்களின் பதிவு சட்டம்" நிறைவேறியது. ஜூலை முதல் தேதியிலிருந்து இந்த சட்டம் அமுலுக்கு வருமென அதிகாரிகள் பிரகடனப் படுத்தினார்கள். ஜூலை முதல் தேதியிலிருந்து 31-ம் தேதிக்குள் அவ்வளவு இந்தியரும் தங்களைப் பதிவு செய்து கொண்டு அடையாளப் பத்திரம் வாங்கியாகவேண்டுமென அந்த பிரகடனம் அறிவுறுத்தியது. இதே சமயத்தில் டிரான்ஸ்வால் வெள்ளையர்கள் ரொம்ப அகம்பாவமாக இந்தியரைக் குறித்து இழிவு படுத்திபேசி வந்தார்கள். லண்டனுக்கு இந்தியர் இந்தத் தட்வை காவடி எடுக்க முடியாது என்று பொறுப்பு வாய்ந்த மந்திரி ஒருவர் பொறுப்பற்ற முறையில் நையாண்டி பண்ணினார். லண்டனுக்கு இந்தத் தட்வைஓடினால், கல்த்தாதான் கிடைக்குமென்று அந்த நிறத்திமிர் பிடித்த மதி மந்திரி ஆவேசத்தோடு அலறினார்.

டிரான்ஸ்வால் மந்திரிகளின் கூச்சல்களைக் கேட்டு மகாத்மா அசந்து விடவில்லை. இந்தியரிடையே ஒரு போரட்ட உணர்ச்சியை உண்டுபண்ண இரவுபகலாக பாடுபட்டார். "சாத்விக போராட்ட சங்கம்" என்று ஒரு சங்கத்தைத் துவக்கி, அதற்கு அங்கத்தினர்களை சேர்க்கும் வேலையில் ஈடுபட்டார். இதில் அங்கத்தினர்களாகச் சேருகிறவர்கள், பிரஸ்தாப சட்டத்தை எதிர்க்க வேண்டும். அதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை ஏற்றாக வேண்டும். இதில் தயக்கமோ, பின் வாங்குதலோ கூடாது என்று மகாத்மா முழங்கினார். ஏராளமான இந்தியர் மகாத்மாவின் முழக்கத்தைக் கேட்டு இந்த சங்கத்தில் தங்களின் பெயரை பதிவு செய்து கொண்டார்கள். போராட்ட வீரர்களுக்கு வசதி செய்ய நிதியும் திரட்டப்பட்டது. நிதிக்கு ஏராளமான பணம் வசூலாகியது. மகாத்மா போராட்டத்துக்கு ஒரு திட்டம் வகுத்தார். அந்த திட்டம் பிரமாதமாக வேலை செய்தது. டிரான்ஸ்வால் சர்க்காரில் உள்நாட்டு மந்திரியாக இருந்த ஜெனரல் ஸ்மட்ஸ், இந்த திட்டத்தைக் கண்டு வெலவெலத்துப் போனார். அதை இனி கவனிப்போம்.

1907-ஜுலை முதல் தேதி இந்தியர் பதிவு செய்து கொள்ள வேண்டியதினம். டிரான்ஸ்வால் சர்க்கார் ரொம்ப உஷாராக இருந்தது. மகாத்மா தலைமையில் திரண்டிருக்கும் இந்தியர் இன்று என்ன செய்யப்போகிறார்களென்பதை அறியவேண்டுமென சர்க்கார் மந்திரிகளெல்லாம் ரொம்ப ஆவலோடு இருந்தார்கள்.

பிரிட்டோரியாவிலும் ஜோஹன்ஸ்பர்க்கிலும் இந்தியர் பெயரை பதிவு செய்யும் ஆபிஸ்கள் திறக்கப்பட்டன. ஆபிஸ்களுக்கு வெளியே நீட்டிய துப்பாக்கிகளுடன் போலீஸார் பாரா கொடுத்துகொண்டு நின்றார்கள். மகாத்மா தலைமையில் திரண்டிருக்கும் இந்தியர்கள் பலாத்காரத்தில் இறங்கி விடுவார்களோ என்ற அச்சம் தான் இந்த போலீஸ் பாரா வேலைக்குக் காரணம். ஆனால் மகாத்மாவின் திட்டம் சாத்விகத்தை கொண்டது என்பதை அவர்கள் அறியவில்லை.

போலீஸார் வந்து சேர்ந்ததும் இந்திய தொண்டர்கள் அணி அணியாக வந்து அவர்கள் அருகே நின்றார்கள். கையில் "சாத்விகப் போராட்ட தொண்டர்கள்" என்று எழுதப் பட்டிருக்கும் சின்னங்களை அத்தொண்டர் படை தரித்திருந்தது. கோழை மனம் படைத்த இந்தியர் எவரும் சர்க்காரின் கட்டளைக்குப் பயந்து தங்களின் பெயர்களை பதிவு செய்து கொள்ள வருவார்களென மகாத்மா எதிர்பார்த்தார். அப்படி வருகிறவர்களை, சாத்விகமான முறையில் தடுக்க வேண்டும். அவர்களிடம் நயந்து பேசி, பதிவுசெய்து கொள்வதால் ஏற்படும் அவமானத்தை எடுத்துரைக்க வேண்டும். அதற்கு அவர்கள் உடன்பட மறுத்தால், அந்த இந்தியரை திட்டவோ, பலவந்தம் செய்யவோ கூடாது. இது தான் தொண்டர் படைக்கு மகாத்மா பிறப்பித்திருந்த கட்டளை. தொண்டர்கள் இவ்வாறு செய்வதை போலீஸார் தடுத்தாலோ, அல்லது தொண்டர்களை அடித்தாலோ தொண்டர்கள் பதிலுக்கு அடிக்கவோ, திட்டவோ கூடாது. போலீஸார் கைது செய்யும்பட்சத்தில், தொண்டர்கள் கைது ஆவதற்கும் தயாராக இருக்க



வேண்டும். துடுக்குத்தனம் என்பதே கூடாது. நெஞ்சில் பகைமையோ, துவேஷமோ இல்லாமல், ஆத்ம சக்தியின் துணையைக்கொண்டு அநியாயத்தை எதிர்க்க வேண்டும். துப்பாக்கியின் தைரியத்தைக்கொண்டு நிற்கும் வெள்ளையர்களை ஹிதமாகப் பேசி, போராடி வெட்கித் தலை குனியச் செய்யவேண்டும். இதுதான் மகாத்மாவின் திட்டம். மகாத்மா அனுப்பி வைத்த முதல் தொண்டர் படை கோஷ்டியில் சின்னஞ் சிறுவர்களே ஏராளமாக இருந்தார்கள். 18-வய்துக்கு உட்பட்ட இந்தியச் சிறுவர்கள்தான் முதன் முதலில் சத்தியாக்கிரகம் என்ற புனித போராட்டத்தை ஆரம்பித்தது.

டிரான்ஸ்வால் முழுவதிலும் இந்தியர் பதிவு ஆபீஸ் என்று அதிகாரிகள் புதிது புதிதாக ஆபீஸ்களைத் திறந்தார்கள். இந்தியர்கள் பதிவு செய்து கொண்டால் கஷ்டம் எதுவும் இருக்காதென டிரான்ஸ்வால் வெள்ளைக்கார பத்திரிகைகள் எழுதின. காந்திஜியின் பேச்சைக் கேட்டால், இந்தியர் குட்டிச்சுவராகப் போக வேண்டியதுதான் என்று சர்க்கார் ராஜதந்திரிகள் முதலைக் கண்ணீர் வடித்தார்கள். இந்தியர் ஆபீஸ்களுக்கு வந்து பதிவு செய்ய முடியவில்லையென்றால், தாங்களே வீடுகளுக்கு வந்து பதிவு பெற்று செல்லுவதாகக் கூறினார்கள். ஏனென்றால் ஆபீஸ்களின் வெளியே நிற்கும் தொண்டர்கள் இவர்களை கோழைகளென சொல்லுவார்களென்றும், அந்த 'தர்ம சங்கடம்' ஏற்படாமல் பார்த்துக் கொள்வதாகவும் அதிகாரிகள் அறிவித்தனர். இந்த பசப்பு வார்த்தைகளோடு ஒரு மிரட்டலும் வந்தது. அதாவது பல இந்திய வியாபாரிகளுக்கு, வெள்ளைக்காரர்களுடன் வர்த்தக தொடர்பு இருந்தது. பெய்ரை பதிவு செய்யாத இந்திய வியாபாரிகளை இந்த வெள்ளைக்கார முதலாளிகள் மிரட்டினார்கள். கடன் கொடுக்க முடியாது என்றனர். கடனாகக் கொடுத்திருக்கும் பெரும் தொகையை ஒரே அடியாக உடனே திருப்பித்தர வேண்டுமெனக் கோரினார்கள். ஆனால் பெயரை பதிவு செய்து கொண்டால், சவுகரியப் பட்டபோது, கொஞ்சம்

கொஞ்சமாக திருப்பிக் கொடுக்கலாமெனக் கூறினர். இப்படியாக என்னென்ன ஜகஜஜாலப் புரட்டுகள் பண்ண முடியுமோ, அவ்வளவும் பண்ணினார்கள். இந்தியர் இந்த புரட்டுகளில் ஏமாந்து விட்வில்லை. சர்க்கார் எவ்வளவோ முயன்றும் 500 பேருக்குமேல், இந்தியரை வலைக்குள் சிக்க வைக்க முடியவில்லை. தங்களின் பெயரை பதிவு செய்த இந்த 500 பேரும், வெளியே இந்தியரிடையே தலைகாட்டவே வெட்க மடைந்தார்கள். இந்திய சமூகத்துக்கு தாங்கள் தங்களின் கோழைத் தனத்தால் துரோகம் இழைத்து விட்டதாக பின்னர் மனம் வருந்தினார்கள்.

10,500 இந்தியர் இருக்கும் டிரான்ஸ்வாலில் 500 பேருக்குமேல் பதிவு செய்யவில்லை என்றதும் சர்க்காருக்கு ஆத்திரமேற்பட்டது. இதற்காக சிலரை கைது செய்வது என்று தீர்மானித்தார்கள். கைது செய்து கொடுமைப் படுத்தினால் இந்தியர் பயந்து போய் மளமளவென்று வந்து பதிவுசெய்து கொள்வார்களென நினைத்தனர். இதற்கு முதல் பலியானவர் பண்டித ராமசுந்திரம் என்பவர். ஜெர்மிஸ்டன் என்னும் நகரில் இவர் இந்தியரிடையே பிரக்யாதி பெற்றவர். இந்தியர் விரோத சட்டத்தை எதிர்த்து பல பிரசங்கங்கள் செய்திருக்கிறார். ஜெர்மிஸ்டன் நகர இந்தியர் பதிவு செய்து கொள்ள மறுத்ததற்கு இவரே தான் காரணமென்று அதிகாரிகள் நினைத்து கைது செய்தனர். சர்க்கார் கைதுசெய்துவிட்டது என்ற செய்தி நாலாபக்கமும் எட்டியது. இந்தியர் பெரும் பரபரப்புக் கொண்டனர். மகாத்மா சிரித்தார்! அதிகாரிகளின் கால், இப்பொழுதுதான் இடற ஆரம்பிக்கிறது என்று புளகாங்கிதமடைந்தார். பண்டித ராமசுந்தரத்துக்கு ஒரு மாத வெறுங்காவல் தண்டனை விதித்து அவரை ஜோஹன்ஸ்பர்க் சிறைக்குக் கொண்டு வந்தார்கள். தண்டனை விதிக்கப் பட்டதைக் கேட்ட இந்தியர் பண்டித ராமசுந்திரம் வாழ்க என்று கோஷித்தார்கள். ஜெர்மிஸ்டன் நகர இந்தியர், தாங்களும் பண்டிதரைப் பின் பற்றி சிறை செல்லுவோமே தவிர, பெயரை பதிவு செய்து



கொள்ள மாட்டோமென்று தண்டனைசெய்தி வெளியான அதே தினம் ஒரு பொதுக்கூட்டத்தில் முழங்கினார்கள்.

போராட்டத்தை நடத்தும் இந்தியருக்கு பத்திரிகை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. 'இந்தியன் ஒப்பினியன்' என்ற பெயரில் சாத்விக போராட்ட விவரங்களைத் தாங்கி ஆங்கிலம், தமிழ், ஹிந்தி, குஜராத்தி ஆகிய மொழிகளில் பத்திரிகைகளை டர்பனில் அச்சடித்து வழங்கி வந்தார்கள். மகாத்மா இப்பத்திரிகை மூலம், நாற்புறமும் பிரிந்து இருக்கும் ஒவ்வொரு தென்னாப்ரிக்க இந்தியனிடமும் பேசி வந்தார். போராட்டம் தார்மிக பலத்தைத்தான் ஆதாரமாகக் கொண்டிருக்கிறதே ஒழிய, மிருக பலம் லவலேசமும் கிடையாது என்று எழுதி வந்தார். இயக்க வளர்ச்சிக்கு இப்பத்திரிகை பெரிதும் உதவியது. இந்தியத் தொண்டர்களின் மறியல்களை வெள்ளைக்கார பத்திரிகைகள் பிரசுரிப்பதே இல்லை. இந்தியத் தலைவர்கள் செய்யும் பிரசங்கங்களையும் இவை போடுவதில்லை 'இருட்டடிப்பு' வேலையை ரொம்பத் திறமையாகக் கையாண்டு வந்தன. உதவி அளிக்க மறுத்த இந்த பத்திரிகைகள் சும்மா இருக்காமல், இடை இடையே இந்தியரின் மன உறுதியையும் போராட்ட வெற்றிகளையும் உருக்குலைக்க செய்திகளை திரித்துக் கூறிவந்தன. இவைகளுக்கு கன்னத்தில் அறைந்தால்போல இந்தியரின் பத்திரிகை பதிலளிக்கும். அதோடு இயக்கம் நாலா பக்கமும் முழு வேகத்தில் பரவி வரும் விவரத்தையும் எடுத்துக் காட்டும். இந்தப் பத்திரிகைக்கு பலர் ஆசிரியராக இருந்திருக்கிறார்கள். காரணம் சர்க்கார் அடிக்கடி இந்த ஆசிரியர்களை சிறையில் தள்ளி ஓய்வு கொடுத்துக் கொண்டு வந்தது!

பண்டித ராமசுந்திரத்தைக் கைது செய்து முடித்த பின்னர், கொஞ்சநாள் வரை சர்க்கார் சும்மா இருந்தார்கள். பிறகு பலருக்கு சம்மன் அனுப்பினார்கள். அதாவது பதிவு செய்ய மறுத்ததால் நாடு கடத்த வேண்டுமென்றும், இதை மறுத்துச்சொல்ல ஏதாவது காரண

மிருந்தால் கோர்ட்டுக்கு வந்து சொல்ல வேண்டுமெனவும் கோரினார்கள். சம்மன் பெற்ற இந்தியர் அனைவரும் கோர்ட்டுக்கு போகவேண்டுமென மகாத்மா கூறினார். மகாத்மாவுக்கும் அந்த 'மாட்சிமை தங்கிய சர்க்கார்' சம்மன் அனுப்பி யிருந்தார்கள். எதிர்பார்த்தபடி மாஜிஸ்டிரேட் டிரான்ஸ்வாலை விட்டு ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் வெளியேறிவிட வேண்டுமென உத்தரவு பிறப்பித்தார். இந்த உத்தரவு நிறைவேறாது என்பது அந்த மாஜிஸ்டிரேட்டுக்கே தெரியும்.

1908-ஜனவரி 10-ம் தேதி மகாத்மா டிரான்ஸ்வாலை விட்டு ஒன்று வெளியேறவேண்டும், அல்லது பெயரை பதிவு செய்து கொள்ளவேண்டும். மகாத்மா இதில் எதையுமே செய்ய மறுத்தார். மறுநாள் மகாத்மாவுக்கு 2 மாத வெறுங் காவல்தண்டனை விதித்தார்கள். அவருடனிருந்தவர்களுக்கு 3 மாதத்திலிருந்து 6 மாதம் வரை கடுங்காவல் தண்டனை விதித்தார்கள். அதோடு பெரும் அபராதத் தொகையையும் விதித்தார்கள். பிரிட்டோரியாவிலும் பலருக்கு இம்மாதிரி தண்டனைகள் விதிக்கப்பட்டன. மகாத்மா தமக்கு 2 மாதம் வெறுங் காவல் தண்டனை என்றிருப்பது சரியல்ல, தனக்கும் 6 மாத கடுங்காவல் தண்டனையும் அபராதமும் விதிக்க வேண்டுமெனக் கேட்டார். தண்டனையைக் குறைக்க வேண்டும் என்று கதறி அழும் கைதிகளைத்தான் அந்த மாஜிஸ்டிரேட் அதுவரை பார்த்திருந்தார். இம்மாதிரி தண்டனையை அதிகரிக்க ஒருவர் கேட்பதை அவரால் நம்பவே முடியவில்லை. மாஜிஸ்டிரேட் ஆச்சரியப்பட்டார். கோர்ட்டில் குழுமியிருந்த இந்தியர், வெள்ளையர் அனைவரும் மகாத்மாவின் போக்கைக் கண்டு அப்படியே மலைத்து விட்டார்கள் இந்தியர் மலைப்பிலே, கிடைத்தற்கரிய தலைவர் நமக்குக் கிடைத்து விட்டாரென்ற பெருமிதம் பரிணமித்தது!

ஜோஹன்ஸ்பர்க் சிறைக்கு மகாத்மாவை கொண்டு போனார்கள். நீக்ரோ கிரிமினல் குற்றவாளிகள் அடைபட்டிருந்த கொட்டடியில் மகாத்மாவை அடைத்தனர்.

அதேபோல மற்ற சத்தியாக்கிரக கைதிகளையும் கொண்டுபோய் அடைத்தார்கள். நீக்ரோ கைதிகளுக்கு வழங்கப்படும் கிழிசல் முரட்டு உடைகளை தரித்துக் கொண்டு, உப்பும் உரைப்பும் அற்ற கூழை அருந்திக் கொண்டு, சூரிய ஒளியே அற்றிருந்த இருண்ட குகையிலே, மகாத்மா தனது முதல் தபசை ஆரம்பித்தார். மகாத்மாவைக் கைது செய்து தண்டித்துவிட்டார்களென்றதும், நூற்றுக் கணக்கில் இந்தியர் கைதானார்கள். சர்க்கார் அப்பொழுது சாதாரண இந்தியர்களைக் கைது செய்ய விரும்பவில்லை. தலைவர்களைத் தான் பிடித்து உள்ளே தள்ள விரும்பினார்கள். ஆனால் சாதாரண இந்திய மக்கள் இதற்கு ஒரு வழி கண்டு பிடித்தார்கள். அதாவது வீதியில் யாரும் சாமான் விற்கக்கூடாது. அனுமதிபெற்றுதான் விற்கவேண்டும். குடியிருக்கவே அனுமதி வாங்க மறுக்கும் இந்தியர், இந்த அனுமதியை வாங்கவா போகிறார்கள்? ஆகவே, அவர்கள் சிறுதட்டில் சாமானை வைத்துக்கொண்டு போலீஸ்காரன் இருக்குமிடத்தை தேடிப்போய் விற்பார்கள். உடனே போலீஸ்காரன் 'லைசென்ஸ் இருக்கிறதா' என்று கேட்பது வழக்கம். இல்லை யென்றதும் கைதாவது. இப்படியாக வலிய வந்து, இந்தியர் சிறைக் கோட்டம் புகுந்தார்கள். மனதில் உள்ள லட்சியம் நிறைவேற உடலை வருத்தும் கஷ்டத்தைத் தாமே வலிய ஏற்பது என்ற போராட்ட முறை முதன் முதலில் பிறந்தது இங்கே தான். இதன்படி ஆயிரக்கணக்கான மக்கள் மகாத்மா கைதான ஒருவாரத்துக்குள் கைதாகி விட்டார்கள்.

தென்னாப்ரிக்க சர்க்காருக்கு என்ன செய்வது என்பதே புரியவில்லை மகாத்மாவை உள்ளுக்கு தள்ளிவிட்டால் இயக்கம் செத்து விடுமென எதிர்பார்த்தார்கள். இப்பொழுது இயக்கம் சாகாமல் உரம்தான் பெறுகிறது என்பதை அறிந்ததும் அவர்களுக்கு பெரும் ஏமாற்றமாக இருந்தது. இந்தசமயத்தில் உதார குணம்படைத்த சில வெள்ளைக்காரர்கள், இந்தியரை இப்படி வதைப்பது அநியாயம் என்று கூறினார்கள். இதில் ஸ்ரீ. ஆல்பர்ட்

கார்ட்ரைட் என்பவர் முன்னணியில் நின்றார். "டிரான்ஸ்வால் லீடர்" என்ற ஒரு பத்திரிகைக்கு இவர் ஆசிரியராகவும் இருந்தார். மகாத்மாவை கைது செய்ததை இவர் கண்டித்து அன்றே பத்திரிகையில் எழுதினார். இந்தியர் போராட்டம் லேசில் ஓயாது என்று சர்க்காரை ரொம்ப துணிச்சலோடு எதிர்த்தார். ஆம். இவ்வாறு எழுதுவதற்கு துணிச்சல் வேண்டும்தான். ஏனென்றால் வெள்ளைக்காரர்களும் சர்க்காரும் இந்தியர் மீது பழிவாங்க வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும்போது, இம்மாதிரி ஒரு பத்திரிகை ஆசிரியர் எழுதுவதென்றால், அவருக்கு எவ்வளவோ கஷ்டங்களை ஏற்படுத்த முடியும். சர்க்கார் மனது வைத்தால் பத்திரிகையையே மூடிவிடலாம். அல்லது பத்திரிகைக்கு சொந்தக்காரரை கூப்பிட்டு மிரட்டி ஆசிரியரை பதவியிலிருந்து விரட்டி அடிக்கலாம். இத்தகு முயற்சிகள் எல்லாம் நடக்கத்தான் செய்தன. ஆனால் ஆல்பர்ட் கார்ட்ரைட் என்ற அந்த ஆசிரியா இதற்கெல்லாம் அசையவில்லை

இந்த ஆசிரியர், இந்திய மக்களுக்கும் சர்க்காருக்கும் இருக்கும் தகராறை தீர்க்கவேண்டுமென முயன்றார். முதலில் மகாத்மாவை பேட்டிகண்டு விட்டு சர்க்கார் உள்நாட்டு மந்திரியான ஜெனரல் ஸ்மட்ஸைப் பார்த்தார். ஜெனரல் ஸ்மட்ஸ் எப்பேர்ப்பட்டவர் என்பதை விளக்கவேண்டியதில்லை. அவர் வயதில் முதியவர். அவர் தந்திரமும் முதிர்ந்தது. அவர் நாவன்மையில் சிறந்தவர். சிறந்தவர் என்றால், உண்டு என்பதை இல்லை என்றும் இல்லை என்பதை உண்டு எனவும் சாதிக்கும் செயல் திறன் கொண்டவர். பெரிய சட்ட அறிஞர். நியாயமான வழக்கைத் தான் எடுத்து வழக்காட வேண்டுமென்ற விதி எதுவும் இல்லையாதலால் இவர் எப்பொழுதும் நியாயத்துக்கு எதிராகவே தான் வழக்காடுவது வழக்கம். சண்டை போடுவதில் இவர் அசகாய சூரர். சண்டைக்கு ஆள் இல்லை என்றால், இவரின் அசகாய சூரத்தனம் வெளிப்படாமல் போய்விடுமென அஞ்சி, ஏதாவது ஒரு சண்டையை துவக்கி விட்டுத் தன் அசகாய சூரத்தைக் காட்டி கொண்டிருப்பார். சென்ற மகா



யுத்தம் முடிந்ததும் வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையைத் தயாரித்த பொழுது இவரின் யோசனையை பிரிட்டிஷார் பெரிதும் ஏற்று நடந்தார்கள். ஏதோ ஒரு காலத்தில் உதவாக்கரையாக சர்வ தேச சங்கம் என்று ஒரு சங்கம் இருந்து மெள்ள மெள்ள அது பிராணனை விட்டு வந்ததே, அந்த சங்கததின் ஆதிகர்த்தா இவர்தான் என்று சொல்லுவது வழக்கம. இத்யாதி புகழைக் கொண்ட இவரை "பழுத்த ராஜதந்திரி" என்று பிரிட்டிஷார் உறவுகொண்டாடுவது வழக்கம். இவர் பேசுவது கிறிஸ்துவ தர்மம். ஆனால் செய்வதோ அதர்மம். இப்பேர்பட்ட குணசீலரை ஸ்ரீ ஆல்பர்ட் கார்ட்ரைட் பேட்டி கண்டு இந்தியர் தகராறை முடிக்கவேண்டுமென வேண்டினார்.

ஜெனரல் ஸ்மட்ஸ் இந்த ஆசிரியரிடம் ரொம்ப அழகாகப் பேசினார். இந்தியர் மீது தனக்கு விரோதமே கிடையாதென்றும் இந்தியர்தான் தப்பாக நினைத்துக் கொண்டு இப்படி கிளர்ச்சி நடத்துவதாகவும் கூறினார். ஆசிரியர் இதற்கு விடவில்லை. உருப்படியாக ஏதாவது சொல்லுங்களென வற்புறுத்தினார். இந்த சமரஸ முயற்சி நாடகம் ஒரு புறம் நடக்கும்பொழுது, வெளியே இந்தியர் தாமாகச் சென்று கைதாகும் இயக்கம் படு வேகத்தில் நடந்து வந்தது. இந்தியர் கைதாகிறார்கள், துன்பத்துக்கு உள்ளாகிறார்கள் என்ற செய்திகள் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் பரவி பெரும் பரபரப்பை உண்டு பண்ணி வந்தன.

# சமரஸ நாடகம்

ஸ்ரீ ஆல்பர்ட் கார்ட்ரைட் ஜெனரல் ஸ்மட்ஸை அடிக்கடி பேட்டி கண்டு ஏதாவது ஒரு சமரஸ யோசனை கூறவேண்டுமென வற்புறுத்தி வந்தார். இதே சமயத்தில் இந்தியர் கைதாவதும் பிரிட்டனிலும் இந்தியாவிலும் இந்தியருக்கு சாதகமாக பொதுஜன அபிப்பிராயம் திரண்டு வருவதும் முழுவேகத்தில் நடந்தன. ஜெனரல் ஸ்மட்ஸ் இவற்றையெல்லாம் பார்த்து வந்தார். கடைசியாக இந்தியர் தாமாக வலிய சென்று தங்களை பதிவு செய்துகொண்டால், 'இந்தியர் பதிவு சட்டத்தை' ரத்து செய்துவிடுவதாக கூறினார். சமரஸத் தூதரான ஸ்ரீ. ஆல்பர்ட் கார்ட்ரைட்டுக்கு இது பெரிய சலுகையாகத் தோன்றியது. உடனே ஜோஹன்ஸ்பர்க்கிலுள்ள இந்தியத் தலைவர்களிடம் ஓடி, சமரஸத்துக்கு ஸ்மட்ஸ் தயாராக இருப்பதாகவும், இதுதான் அவரின் யோசனை என்றும் கூறினார். ஜோஹன்ஸ்பர்க் இந்தியர்களுக்கு ஸ்மட்ஸை வெகு நன்றாகத் தெரியும். ஆகவே, அவர்கள் மகாத்மாவிடம்தான் இதுபற்றி பேசவேண்டுமென கூறிவிட்டார்கள். சிறையிலிருந்த மகாத்மாவிடம் ஸ்ரீ. கார்ட்ரைட் ஓடி, சமரஸ விஷயத்தைக் கூறினார். அதோடு ஜெனரல் ஸ்மட்ஸ் கூறும் சமரஸ யோசனையை தாம் எழுதிக்கொண்டு வந்திருப்பதாகவும் கூறி, ஒரு கடிதத்தைக் காட்டினார். அக்கடிதத்தில் கீழ்வரும் விஷயங்கள் அடங்கியிருந்தன:—

1. இந்தியர், எந்த சட்டத்துக்கும் கட்டுபடாமல் தாங்களாக வலிய வந்து பெயரை பதிவு செய்துகொள்ளலாம். பத்திரத்தில் என்னென்ன பதிவு செய்து கொள்ளுவது என்பதை, இந்தியத் தலைவர்கள் சர்க்காருடன் பேசி ஒரு சமரஸத்துக்கு ஏற்பாடு செய்து கொள்ளலாம்.



2. இப்படி, இந்தியரே பெருமளவில் முன் வந்து பதிவு செய்துகொண்டால், சர்க்கார் 'இந்தியர் பதிவு சட்டத்தை' ரத்து செய்வார்கள். பிறகு வலிய வந்து பதிவு செய்ததை சட்டப்படி செல்லுமென்று செய்ய ஏற்பாடுகள் செய்வார்கள்......"

சர்க்கார் இந்தியர் பதிவு சட்டத்தை ரத்து செய்வது என்ற 2-வது ஷரத்து வழவழாவென்று இருந்தது. எப்பொழுது ரத்து செயவார்களென்பதை தெளிவான பாஷையில் விள்க்கவில்லை. மகாத்மா இந்த குற்றத்தை உடனே கண்டு பிடித்து விட்டார். இந்த குறைபாட்டை நீக்கவேண்டுமென அவர் ஸ்ரீ கார்ட்ரைட்டிடம் கூறினார். மேலும் தாமாக இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்முடியாதென்றும் சகாக்களின் சம்மதம் முதலில் கிடைக்க வேண்டுமெனவும் மகாத்மா அறிவித்தார்.

ஸ்ரீ கார்ட்ரைட்டின் நிலைமை தர்ம சங்கடமாக இருந்தது. ஜெனரல் ஸ்மட்ஸ் இதற்குமேல் விட்டுத்தர தயாரில்லை என்று கூறினார். ஒப்பந்தத்தை ஏற்றக்கொண்டுவிட்டால் பிறகு எல்லாம் சரியாகி விடுமென அவர் மகாத்மாவிடம் கூறினார். மகாத்மா 2-வது ஷரத்தைக் குறித்து தம்மால் ஒன்றும் மேற்கொண்டு சொல்லுவதற்கில்லை என்று தெரிவித்து விட்டார். இதன் பேரில சமரஸத் தூதரான அந்த ஆசிரியர் பழையபடியும் ஸ்மட்ஸை பேட்டிகண்டு மகாத்மாவின் கருத்தைக் கூறினார். ராஜதந்திரத்தில் பேர்போன ஜெனரல் ஸ்மட்ஸ் இது சாதாரண விஷயம்—இதை நான் வாக்குக் கொடுத்துவிட்டால், கண்டிப்பாக செய்தே தீருவேன் என்பதை மிஸ்டர் காந்தியிடம் கூறுங்களென பதிலளித்தார். மீண்டும் ஆசிரியர் கார்ட்ரைட் மகாத்மாவை பேட்டிகண்டார். இதற்கிடையே கைதியான சில தொண்டர்கள் மூலம் வெளியே இருக்கும் இந்தியத் தலைவர்கள் மகாத்மாவுக்கு ஒரு செய்தி அனுப்பினார்கள். அதாவது உங்களுக்குப் பிடித்தமான எந்த ஒப்பந்தத்திலும் நீங்கள் இந்தியர் சார்பாக கையெழுத்திடலாம்; வெளியே உள்ள எங்களிடம் கேட்க வேண்டுமென்ற அவசியமில்லை என்று அந்த செய்தி கூறியது.

மகாத்மா சிறையிலிருந்த மற்ற இந்தியத் தலைவர்களையும் அழைத்து ஒப்பந்த விஷயமாக வாதித்தார். ஸ்ரீ. கார்ட்ரைட் கூறுவதையும், ஜெனரல் ஸ்மட்ஸ் கூறும் வாக்குறுதியையும் சிறைக்குள்ளே இருப்பவர்கள் மகாத்மாவுடன் கலந்து பேசினார்கள். கடைசியில், வாக்குறுதியை நம்பி, ஒபபந்தத்தில் கையெழுத்திடலாமென அனைவரும் அபிப்பிராயப் பட்டார்கள். ஜெனரல் ஸ்மட்ஸ் சரியாக நடக்க வில்லை என்றால், மீண்டும் போராட்டத்தை ஆரம்பித்து விடலாமென்ற தைரியத்திலேயே இந்த முடிவுக்கு வந்தனர். மறுநாள் ஸ்ரீ கார்ட்ரைட் வந்ததும், இம்முடிவை மகாத்மா அவரிடம் தெரிவித்தார். தம் வாழ்விலேயே ஒரு மகத்தான காரியத்தைச் சாதித்து விட்டதாக அந்த ஆசிரியர் சந்தோஷப் பட்டார். ஒப்பந்தத்தில் மகாத்மா காந்தி, ஸ்ரீ தம்பி நாயுடு, ஸ்ரீ. லியு குயின் (இவர் ஒரு சீனக்காரர். இந்தியர் போராட்ட அனுதாபி) ஆகியோர் கையெழுத்திட்டனர்.

1908 ஜனவரி 30-ம் தேதி அன்று சிறையிலிருந்த மகாத்மாவை ஜெயில் சூப்ரண்ட் பிரிட்டோரியாவுக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஜெனரல் ஸ்மட்ஸுடன் மகாத்மா பேட்டி காண்பதாக ஏற்பாடு. மகாத்மாவிடம் ஜெனரல் ஸ்மட்ஸ் அன்பொழுக பேசினார். இதை மகாத்மாவே கூறுவதை கேளுங்கள்.

"உங்கள் ஜனங்களை நான் எப்பொழுதும் வெறுத்ததே கிடையாது. நானும் உங்களைப் போல ஒரு பாரிஸ்டர்தான். எனினும் நான் என் கடமையை செய்ய வேண்டும். இச் சட்டத்தை (இந்தியர் பதிவு சட்டத்தை) ஐரோப்பியர் அவசியம் இருந்தாக வேண்டுமெனக் கூறுகிறார்கள். போயர்கள் இப்படிக் கூற வில்லை, பிரிட்டிஷார்தான் இப்படிக் கூறுகிறார்கள்.

"நீங்களாக வலிய வந்து பதிவு செய்து கொண்டால், இந்த சட்டத்தையே ரத்து செய்து விட முடியும். இது விஷயத்தை பிரதமரான ஜெனரல்



போதாவிடமும் கலந்து பேசினேன். அவரும் இப்படித்தான் அபிப்பிராயப் பட்டார். வலிய பதிவு செய்வதை அங்கீகரிக்க நான் மசோதா கொண்டு வரும்போது, முன் கூட்டியே உங்களுக்கு ஒரு நகல் அனுப்புகிறேன். நீங்கள் அதைப் படித்துப் பார்த்து உங்களுக்குப் படும் குறைகளைக் கூறலாம். பழைய படியும் தகராறு எதுவும் ஏற்படக் கூடாது என்பதுதான் என் கருத்து. உங்கள் ஜனங்கள் எந்தக் காரணத்துக்காக இப்பொழுதுள்ள சட்டத்தை எதிர்க்கிறார்களென்பதை நானும் உணருகிறேன்............"

ஜெனரல் ஸ்மட்ஸ் இதே தோரணையில் பேசினார். மகாத்மாவும், சர்க்காருக்குத் தொல்லை கொடுக்கும் எண்ணம் இந்திய மக்களுக்குத் துளிகூட இல்லை என்று கூறினார். இப்பேட்டி முடிந்ததும், ஜெனரல் ஸ்மட்ஸ் மகாத்மாவை விடுதலை செய்து விட்டதாகக் கூறினார். பாக்கிப் பேர் நாளை விடுதலை ஆவார்களென்றும் உறுதி கூறினார். கைதியாக பிரிட்டோரியா வந்த மகாத்மா, இப்பொழுது விடுதலைபெற்றவராக அன்றிரவே ஜோனாஸ்பர்க் வந்து சேர்ந்தார். ஜோனாஸ்பர்க் தான் சத்தியாகிரக முகாம். அன்றிரவே ஜோனாஸ்பர்க்கிலிருந்த இந்தியரை எல்லாம் அழைத்து மகாத்மா ஒரு கூட்டம் போட்டு, ஏற்பட்ட ஒப்பந்தத்தை விளக்கிக் கூறினார். இந்திய மக்கள் இந்த ஒப்பந்தத்தை ஏற்கிறார்களா இல்லையா என்பதை அறியவே மகாத்மா இக்கூட்டத்தைக் கூட்டியது. மகாத்மா செய்த ஒப்பந்தத்தை அங்கீகரிப்பதாகக் கூட்டம் கூறியது. ஒரு சிலர் மட்டும் எதிர்த்தார்கள். ஒரு பட்டாணியன் மகாத்மா இந்தியரைக் காட்டிக் கொடுத்து விட்டதாகக் கூட் கூறினான். இதற்குக் காரணம் மகாத்மா லஞ்சம் வாங்கி விட்டாரம்!

ஒப்பந்தப்படி மகாத்மாவே தம்மை முதலில் பதிவு செய்து கொள்ள முன்வந்தார். ஆனால் வரும்வழியில் முன்பு ஆடுக்காகப்பேசிய அதே பட்டாணியன் மகாத்

மாவை நையப் புடைத்துவிட்டான். நடு வீதியில்,
ஸ்மரணையற்று மகாத்மா விழுந்தார். ஆனால் மூர்ச்சை
தெளிந்ததும் அவர் செய்த முதல் காரியம், தம்மைப்
பதிவு செய்து கொண்டதுதான். மகாத்மாவுடன் இருந்த
இந்தியத் தலைவர்களும் தங்களைப் பதிவுசெய்து கொண்
டார்கள். தலைவர்களே இவ்வாறு பதிவு செய்து
கொள்ளும்போது, மற்றவர்களைக் கேட்பானேன். இப்
படியாக, ஜெனரல் ஸ்மட்ஸுக்குக் கொடுத்த வாக்
குறுதிப்படி மகாத்மா, இந்திய ஜனவரையும் வலிய
வந்து பதிவுசெய்துகொள்ளும்படி செய்து விட்டார்.
இனி அடுத்தபடியாக நடவடிக்கையில் இறங்க வேண்டி
யது ஸ்மட்ஸ்தான். அதாவது சட்டத்தை ரத்து
செய்ய நடவடிக்கை எடுப்பது. ஆனால் ஜெனரல் ஸ்மட்ஸ்
என்ன செய்தார் என்பதுதான் ஆச்சரியப்படவேண்
டிய விஷயம்!

முன்பு மகாத்மாவிடம் வாக்களித்தபடி ஜெனரல்
ஸ்மட்ஸ் இந்திய மக்கள் பதிவு சட்டத்தை ரத்துசெய்ய
வில்லை. வலிய சென்று பதிவு செய்த இந்தியர்கள்
பத்திரங்களை செல்லுபடியாகுமென்று மட்டும் ஒரு
மசோதா கொண்டுவந்தார். அதோடு பழைய சட்டத்
தில் வரையறுக்கப்பட்டிருந்த ஒரு மாத காலத்தைப்
போக்கிவிட்டு எப்பொழுது வேண்டுமானாலும் பதிவு
செய்து கொள்ளலாமென 'சலுகை' காண்பித்தார்.
ஆனால் புதிதாக பதிவு செய்யும்போது பழைய சட்டப்
படியே பதிவுசெய்யவேண்டுமெனக் கூறினார். இதுதான்
ஜெனரல் ஸ்மட்ஸ் செய்த காரியம். மகாத்மாவிடம்
செய்து கொண்ட ஒப்பந்தம் காற்று வாக்கில் விடப்
பட்டது. இந்த மசோதா வெளியானதும் மகாத்மா
திடுக்கிட்டார். இந்திய மக்களில் சிலர் இந்த ஒப்பந்
தத்தை முதலிலேயே விரும்பவில்லை. மகாத்மா ஸ்மட்
ஸின் வாக்குறுதியை எடுத்துக் கூறி, வற்புறுத்திய
தின் பேரில்தான் அவர்கள் ஒப்பந்தப்படி நடந்தனர்.
இப்பொழுது ஸ்மட்ஸ் நம்பிக்கைத் துரோகம் செய்து
விட்டார். மகாத்மா திடுக்கிட்டதற்கு இதுதான்
காரணம்.



மகாத்மா உடனே டிரான்ஸ்வால் இந்தியர் கூட்டம்
ஒன்று கூட்டி ஜெனரல் ஸ்மட்ஸ் ஒப்பந்தத்தை மீறி
யிருக்கும் விஷயத்தை எடுத்துரைத்தார். மகாத்மா
நினைத்தது மாதிரியே, அனைவரும் ஜெனரல் ஸ்மட்ஸ்
நம்பிக்கை மோசடி செய்ததாகக் கூறினார்கள். அடுத்த
படி இந்திய மக்கள் என்ன செய்வது என்று யோசிக்கப்
பட்டது. மகாத்மா பழைய போராட்டத்தை ஆரம்
பிக்க வேண்டியதுதான் என்று கூறினார் உடனே
சத்தியாக்கிரகக் கமிட்டி என்று ஒரு கமிட்டி உருவாகி
யது. பிரபல வர்த்தகரான ஸ்ரீ கச்ஹாலியா சேத்
என்பவர் இக்கமிட்டியின் தலைவரானார். திடசிந்தையும்
போராட்டத்தில் மிகுந்த பற்றுதலும் கொண்ட இவ
ருக்கு வெள்ளை வர்த்தகர்கள் சொல்லொண்ணாத கஷ்
டத்தை உண்டு பண்ணினார்கள். லக்ஷக் கணக்கில்
வியாபாரம் நடத்திவந்த இவர்மீது பொருளாதார
நெருக்கடியை ஏற்படுத்தி, இன்ஸால்வென்ட் கொடுக்
கும்படி செய்தனர். ஓட்டாண்டி என்ற பட்டமும் கட்டி
னர். ஆனால் இவர் அசையாத குன்றுபோல இருந்
தார். உடைமை முழுவதையும் துறந்தாரே ஒழிய,
போராட்டத்தை விட்டு ஓடவில்லை.

சத்தியாக்கிரக கமிட்டி ஸ்தாபிதமாகியதும் உடனே
போராட்டம் ஆரம்பமாகவில்லை. மகாத்மா முதலில்
ஜெனரல் ஸ்மட்ஸுக்கு ஒரு கடிதம் எழுதினார். பழைய
ஒப்பந்தத்தை நீங்கள் கவுரவிக்கவில்லை என்று கூறினார்.
ஜெனரல் ஸ்மட்ஸ் இக்கடிதத்துக்கு பதிலே அளிக்க
வில்லை. முன்பு சமரஸம் பேசிமுடித்த அந்த ஆசிரிய
ருக்கும் மகாத்மா கடிதம் எழுதினார். அந்த ஆசிரியர்
மகாத்மாவுக்கு எழுதிய பதிலில், ஜெனரல் ஸ்மட்ஸ் நம்
பிக்கைத் துரோகம் செய்தது உண்மைதானென்று ஒப்
புக்கொண்டார். அதற்குப் பிறகுதான் மகாத்மா மற்
றொரு போராட்டத்துக்கு சங்கநாதம் ஒலித்தது!

## சங்கநாதம்!

ஜெனரல் ஸ்மட்ஸின் மசோதா டிரான்ஸ்வால் அசெம்பிளியில் பிரேரிக்கப் பட்டது. இம்மசோதாவை பிரேரித்து விட்டு ஸ்மட்ஸ் துரை ரொம்ப அகம்பாகமாக பேசினார். இந்த விவரம் பத்திரிகையில் வெளியானதும் மகாத்மா சத்தியாக்கிரகக் கமிட்டியை உடனே கூட்டினார். ஜெனரல் ஸ்மட்ஸின் பேச்சை கவனித்த கமிட்டியினர் அன்றே சர்க்காருக்கு ஒரு கடிதம் அனுப்புவதெனக் கூறினர். மகாத்மா கீழ்க் கண்ட கடிதத்தை எழுதி அனுப்பினார்:—

"இந்தியர் தாமாக வலிய வந்து தங்களைப் பதிவு செய்து கொண்டால் பழைய சட்டத்தை ரத்து செய்வதாகக் கூறினீர்கள். டிரான்ஸ்வால் சர்க்கார் திருப்தி அடையும் வண்ணம் இந்தியர் வலிய வந்து பதிவு செய்து கொண்டார்கள். ஆனால் நீங்கள் வாக்குறுதிப்படி பழைய சட்டத்தை ரத்து செய்யவில்லை. இந்திய மக்கள் ஜெனரல் ஸ்மட்ஸுக்கு எவ்வளவோ கடிதங்கள் எழுதி ரத்து செய்யும்படி கேட்டார்கள். சட்ட ரீதியாக என்னென்ன செய்ய வேண்டுமோ அவை எல்லாவற்றையும் செய்து பார்த்தார்கள். ஆனால் ஒரு பயனும் கிடைக்கவில்லை.

ஆகவே கடைசியாக இக்கடிதத்தை எழுதுகிறோம். சட்டத்தை ரத்து செய்யா விட்டால், நாங்கள் வேறு வழியின்றி, முன்பு வலிய வந்து பதிவு செய்து பெற்ற பத்திரங்களை எல்லாம் எரித்துவிடுவதாகத் தீர்மானித் திருக்கிறோமென்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். இதனால் ஏற்படும் விளைவுகளை ஏற்க தயாராகவே இருக்கிறோம்..............."



இக் கடிதம் சாக்காருக்கு அனுப்பி வைக்கப் பட்டதும். ஜெனரல் ஸ்மட்ஸ் இக் கடிதத்தோடு அசெம்பிளிக்கு மறுநாள் வந்து, கடிதத்தைப் படித்துக் காட்டினார். இந்தியர் அனுப்பியிருக்கும் இந்த இறுதி எச்சரிக்கைக்கு என்ன விதமான பதில் அளிப்பது என்று சர்க்காருக்குத் தெரியுமென அவர் கூறினார். உடனே சபை அங்கத்தினர்கள் பலத்த கரகோஷம் செய்தார்கள். கரகோஷத்தை கேட்டதும் ஸ்மட்ஸின் ஸ்தாயி மேலே மேலே ஏறியது. சர்க்காரின் வலிமையை அறியாத இந்த இந்தியர்களின் புத்தி கெட்ட காரியத்தால் வீணாக் கெட்டுப் போகிறார்கள்—நாசத்தை நோக்கி ஓடுகிறார்கள் 'என்று முழங்கினார். உடனே ஜெனரல் ஸ்மட்ஸ் பிரேரித்த மசோதா, ஏக மனதாக நிறை வேறி விட்டது!

அதே தினம் அதாவது 1908-ஆகஸ்டு 16-ம் தேதி அன்றுமாலை ஜோஹான்ஸ்பர்க் ஹமீதியா மசூதி மைதானத்தில் இந்தியரின் பிரம்மாண்டமானதொரு கூட்டம் கூடியது. கூட்டத்துக்கு மகாத்மா தலைமை வகித்தார். தலைவர் மேடைக்கு அருகே, தீக்குண்டம் வளர்த்திருந்தார்கள். இந்த சமயத்தில் சர்க்காரிடமிருந்து ஒரு தந்தி வந்தது. தந்தியைப் படித்ததும் கூட்டத்தினர் சந்தோஷக் கடலில் ஆழ்ந்தனர். ஜே ஜே என்ற முழக்கங்கள் கேட்டன. இந்தியர் இவ்வளவு மகிழ்ச்சி அடைய அத்தந்தியில் என்ன எழுதியிருந்தது?

"நீங்கள் அனுப்பின கடிதம் வந்தது. சர்க்கார் இதில் எதுவும் செய்வதற்கில்லை. பத்திரங்களை எரிக்கப்போவதாகக் கேட்டு வருந்துகிறோம். ஆனால் இதற்காக எங்கள் முடிவை மாற்றிக் கொள்ளப் போவதில்லை......"

இனி போராட்டத்தை ஆரம்பித்து விடலாமென்ற எண்ணத்தில்தான் இந்தியர் சந்தோஷப் பட்டதும், ஜே கோஷம் செய்ததும். இத்தந்தியை அனுப்பிவிட்டால் இந்தியர் பத்திரங்களை எரிக்காமல் விட்டுவிடுவார்களென எண்ணியே சர்க்கார் இத்தந்தியை அனுப்பினார்

கள். ஆனால் ஏற்பட்ட பலன் வேறுவிதமாக இருந்தது. இந்தியரிடை இவ்வளவு சுயமதிப்பு வளர்ந்ததற்கும் தன் பலத்தில் நம்பிக்கை ஏற்பட்டதற்கும் போராட்ட உணர்ச்சி தலை எடுத்ததற்கும் மகாத்மா தான் காரணம்.

கூட்டத்தினரை நோக்கி மகாத்மா பேசினார். நெஞ்சிலே உரமில்லாதவர்கள பத்திரங்களை வீண் கவுரவத்துக்காக எரிக்க வேண்டா மென்றார். ஒவ்வொருவரும் பத்திரத்தை எரிக்கும்போது, வரப்போகும் போரட்டத்தில் பூர்ண பங்கெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருக்க வேண்டுமென எச்சரித்தார். மகாத்மா பேசி அமர்ந்ததும் மகாத்மாவை முன்பு அடித்த அதே பட்டாணியன் திரும்பவும் மேடை அருகே தோன்றினான். முன்பு அவனிடத்தில் காணப்பட்ட குரோதம் இப்பொழுது இல்லை. மகாத்மாவிடம் மன்னிப்புக் கேட்கவே அவன் இப்பொழுது வந்திருந்தான். மகாத்மா அவனை ஆரத்தழுவி, அவன் தவறை உணர்ந்து தைரியமாக அதை எடுத்து சொன்னதற்காகப் பாராட்டினார் பிறகு பத்திரங்களை எரிக்கும் சடங்கு ஆரம்பமாயிற்று. 2000 பேர், ஒவ்வொருவராக மேடைக்கு வந்து பத்திரத்தை கொழுந்து விட்டு எரியும் தீக்குண்டத்தில் போட்டுவிட்டு சென்றனர். இந்தியரை அவமதித்த அந்த பத்திரம் அக்னியின் ஜுவாலையிலே எரிந்து சாம்பலாயிற்று அதிலிருந்து எழுந்த புகை, வெற்றி வருகிறது—என்று எக்காளமிட்டு வானுறப் பறந்தது. தங்களின் வாழ்க்கை நாளிலேயே செயற்கரிய காரியத்தை செய்து விட்டதாக இந்தியர் உள்ளப் பூரிப்போடு வீடு திரும்பினார்கள். அவர்கள் கிளப்பிய வெற்றிகோஷம், வரப்போகும்போராட்டத்தின்சங்கநாதமாக, அந்த மசூதி மைதானத்திலிருந்து கிளம்பி, நாற்புறமும் பரவியது!

# கள பலிகள்

ஜெனரல் ஸ்மட்ஸுக்கு இந்தியர் பத்திரங்களைக் கொளுத்திய செய்தி எட்டியதும் அவருக்கு ஆத்திரமாக இருந்தது. இந்த ஆத்திரத்தை அவர் மற்றொரு மசோதா மூலம் வெளிப்படுத்தினார். அதாவது புதிதாக டிரான்ஸ்வாலுக்குள் எந்த ஆசியாக்காரரும் குடியேறக்கூடாது என்று தடை மசோதா ஒன்று கொண்டு வந்தார். இந்த மசோதாவுக்கு "ஆசிய குடியேற்ற கட்டுப்பாடு" மசோதா என்று பெயர். ஆசிய என்று குறிப்பிட்டிருப்பது வெறும் ஜால வித்தை. இந்தியரை குடியேறாமல் தடுக்க வேண்டுமென்பதுதான் இந்த மசோதாவின் தாத்பர்யம். அசெம்பிளியில் பேசிய ஜெனரல் ஸ்மட்ஸே இதை வெளியிட்வும் செய்தார். ஐரோப்பிய பாஷை தெரியாதவர்கள் யாரும் டிரான்ஸ்வாலுக்குள் குடியேறக் கூடாது என்று இந்த மசோதா கூறியது. பாஷை தெரிந்தவர்களாவது குடியேறலாமா வென்றால், அதற்கும் இடமில்லை. பழைய சட்டப்படி பதிவு செய்யாதவர்களுக்கு இடம் கிடையாது என்று ஸ்மட்ஸ் கூறிவிட்டார். மொத்தத்தில் புதிதாக, இந்தியர் எவரும் டிரான்ஸ்வாலுக்குள் வரக்கூடாது என்பதுதான் மசோதாவின் நோக்கம்.

இந்த மசோதா நிறைவேறியதும், மகாத்மா இதையும் எதிர்த்தாக வேண்டுமெனக் கூறினார். மகாத்மாவின் யோசனையை சத்தியாக்கிரக கமிட்டி அங்கீகரித்தது. உடனே இந்தியர் இந்த சட்டத்தை எதிர்க்கப் போவதாக சர்க்காருக்கு அறிவித்து விட்டனர். இந்த புது சட்டத்தை மீறுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக, ஐரோப்பிய பாஷை தெரிந்த ஒருவரையே மகாத்மா தேர்ந்தெடுத்தார். டிரான்ஸ்வால் சர்க்கார் ஐரோப்பிய பாஷை தெரிந்தவர்களை அனுமதிப்பதாகக் கூறியிருப்பது வெறும் செப்பிடு வித்தை என்பதைக் காட்டவே மகாத்மா சோராப்ஜி ஷாபுர்ஜி அஜதா

னியா என்ற ஒருவரை அழைத்து வந்தார். இவர் பார்ஸிக்காரர் இங்கிலீஷில் பட்டம் பெற்றவர்.

சோராப்ஜி தாம் டிரான்ஸ்வாலுக்கு குடியேறிப் போவதாகவும் தம்மை வேண்டுமானால் சர்க்கார் கைது செய்து கொள்ளலாமெனவும் சர்க்காருக்கு கடிதம் எழுதிவிட்டு டிரான்ஸ்வால் எல்லையைக் கடந்தார் அதிகாரிகளுக்கு இந்த ஏற்பாடு முன்பே தெரியாது. ஆகவே திடீரென கடிதம் வந்ததும், அதை அடுத்து சோராப்ஜி எல்லையைக் கடந்து வந்ததும் அவர்களுக்கு திகைப்பை ஏற்படுத்தியது. ஆனால் இந்த திகைப்பு கொஞ்ச நாட்களுக்குத்தான் இருந்தது. 1908 ஜுலை 10-ம் தேதி அன்று சோரப்ஜி டிரான்ஸ்வாலை விட்டு வெளியேற வேண்டுமென உத்தரவு வந்தது. மகாத்மாவும் மற்றவர்களும் இதை எதிர்பார்த்திருந்தார்கள். ஆகவே, இந்திய வட்டாரங்களில் இது ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. திட்டப்படி உத்தரவை சோராப்ஜி மீறினார். அவருக்கு ஒரு மாத காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

சோராப்ஜி கைதான செய்தி நேட்டாலுக்கு எட்டியதும் கோஷ்டி கோஷ்டியாக இந்தியர் புறப்பட்டு வந்து, சத்தியாக்கிரகத்தில் சேருவதாகக் கூறினார்கள். டிரான்ஸ்வாலுக்குள் நுழைந்து கைதாக சித்தமாயிருப்பதாக மகாத்மாவுக்குத் தந்தி கொடுத்தார்கள். மகாத்மா 6 பேரை பொறுக்கி எடுத்து சட்டத்தை மீறும்படி அனுப்பினார். மகாத்மாவின் இந்த ஏற்பாடுகளை அறிந்த ஜெனரல் ஸ்மட்ஸ் வெள்ளைக்காரர்களைத் தூண்டிவிட்டார். "இந்தியர் படையெடுப்பு" நடப்பதாகக்கூறி, வெள்ளைக்காரர் அவ்வளவு பேரும் இந்தியரை பகிஷ்கரிக்கவேண்டுமென பிரசாரம் செய்யும்படி தம் கீழ் அதிகாரிகளை கிளப்பிவிட்டார்.

6 பேர் கொண்ட இக் கோஷ்டி ஆகஸ்ட் 18-ம் தேதி காலை டிரான்ஸ்வால் எல்லையைத் தாண்டினர். உடனே எல்லையில் காத்துக்கொண்டிருந்த போலீஸார் இவர்களைக் கைது செய்து அன்றே கோர்ட்டுக்கு அழைத்து வந்தார்கள். வழக்கப்படி மாஜிஸ்டிரேட் 7 நாட்களுக்



Y73(V2)·6
114

குள் டிரான்ஸ்வாலை விட்டு வெளியேற வேண்டும், இல்லையேல் தண்டனை என்றார் 7 நாட்கள் ஓடின. ஆனால் இந்த சத்தியாக்கிரக படை ஓடவில்லை. திரும்பவும் கைதானார்கள். மாஜிஸ்டிரேட் இவர்களை தண்டிக்காமல், நாடு கடத்தும்படி கூறினார். போலீஸார் புடைசூழ இவர்கள் டிரான்ஸ்வால் எல்லையில் கொண்டுவந்து விடப்பட்டனர். போலீஸார் திரும்பியதும் இவர்கள் பழையபடியும் உள்நுழைந்தார்கள். இப்படியாக நாடுகடத்தும் படலமும் திரும்ப உள் நுழையும் படலமுமாக நடந்து கடைசியில் தலைக்கு ' மாத காவல் தண்டனை விதிக்கப்பட்டார்கள். சத்தியாக்கிரகிகள் அவ்வளவு பேரும் சிறை புகுந்தனர். நேட்டாலிலிருந்து இந்தியர் குடியேறுவதும் கைதாவதும் சிறை புகுவதும் நித்திய சம்பவமாக நடக்க ஆரம்பித்துவிட்டது. இந்த சமயத்தில் டிரான்ஸ்வால் இந்தியரும இயக்கத்தில் முழு வேகத்தில் சேர்ந்தார்கள். அதாவது லைசென்ஸ் இல்லாமல் சாமான்களை விற்பது, டிரான்ஸ்வாலுக்கு வெளியே சென்று, வேண்டுமென்றே திரும்ப நுழைவது இப்படியாக டிரான்ஸ்வால் இந்தியர் சிறை புகுநதார்கள். ஜோஹனஸ்பர்க், பிரிட்டோரியா சிறைகளில் இந்தியக் கைதிகளின் தொகை நாளுக்கு நாள் பெருகி வந்தது.

பெரிய பெரிய இந்திய வியாபாரிகளெல்லாம் இந்த சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு சிறைபுகுந்தனர். சின்னஞ்சிறு பையன்கள்கூட தட்டுகளில் சாமான்களை வைத்துக்கொண்டு போலீஸ்காரர்களை அழைத்துகைது செய்ய சொல்லுவார்கள். இப்படியாக அநேக பையன்கள்கூட கைதாகி 2 நாள் தண்டனை பெற்றிருக்கிறார்கள். சிறையில் இந்தியக் கைதிகளை அதிகாரிகள் பண்ணின கொடுமையை வர்ணிக்க இயலாது. கல் உடைக்கும் வேலையிலிருந்து கக்கூஸ் அள்ளும் வேலை வரை கொடுத்தார்கள். அனாவசியமாக யாதொரு காரணமும் இன்றி இந்தியக் கைதிகளை போட்டு அடிப்பார்கள். உப்போ, உரைப்போ இல்லாத கஞ்சியைக் கொடுத்து அதை ஆவலோடு உண்ணப்போகும் சமயத்தில் தட்டி விட்டு விட்டு சிரிப்பார்கள். இதுமாதிரி சில்லறைக் குறும்புகளும் கொடுமைகளும் ஏராளமாக நடந்தன.

108886

எனினும் சிறைபுகுந்த எந்த இந்தியனும், ஒழுங்கு தவறி நடக்கவில்லை. தன் சமூகத்துக்கும் சத்தியாக்கிரக இயக்கத்துக்கும் இழுக்குகொண்டுவரும்படியாக எதுவும்செய்யவில்லை. ஒரு தரம் சிறை புகுந்தவர்கள், விடுதலை ஆனதும் திரும்பத் திரும்ப சிறை சென்றார்கள். துன்ப வாள் தலைக்கு மேல் சுற்றுகிறது என்பதை அறிந்தும், அவர்கள் தளரா உறுதியோடு இருந்தனர். மகாத்மாவின் ஆணையை மீறுவது அறத்தையே மாய்ப்பதாகுமென்று கருதினர். ஒரு சமயத்தில் தங்களை துரும்பாக மதித்து, நாயினும் கேடாக நடத்திய வெள்ளையரை இந்தியர் பாடம் கற்பிக்கும் நாள் வந்துவிட்டதாகவே எண்ணி, போராட்டத்தில் ஹிருதய பூர்வமாக ஈடுபட்டார்கள். இயக்கம் வளர்ந்து வருவதைக் கண்டதும் மகாத்மாவை மீண்டும் சாக்கார் கைது செய்தது. இந்தத் தடவை மகாத்மாவை டிரான்ஸ்வால் எல்லையில் இருக்கும் வோல்க்ரஸ்ட் சிறையில் காவல் வைத்தார்கள். பிறகு அங்கிருந்து பிரிட்டோரியா ஜெயிலுக்குக் கொண்டு போனார்கள். பயங்கரமான கொலை பாதகங்களைச் செய்த குற்றவாளிகளுக்கு தரப்படும் தனிக் கொட்டடியில் மகாத்மாவை அடைத்தார்கள். தனிமை அவரது உறுதியைக் குலைக்குமென நினைத்தார்கள். சகாக்களின் பிரிவு, அவரின் சத்தியாக்கிரக உத்வேகத்தை அடக்குமென மனப்பால் குடித்தனர். ஆனால் மகாத்மா இந்த மனக்கோட்டைகளை இடித்துத் தகர்த்துவிட்டார்.

மகாத்மாவை உள்ளுக்குப் பிடித்துப் போட்டும் இயக்கம் நின்றுவிடவில்லை. சிறைகளில் கைதிகளை கொடுமை பண்ணியும் கைதிகள் மனமுடைந்து, திரும்ப வருவதை நிறுத்தவில்லை.' சர்க்காருக்கு இந்த நிலைமை பெரும் புதிராக இருந்தது. சிறைகளில் இந்தியக் கைதிகள் வர வர பெருகிவருகிறார்கள். இவர்களுக்கு உணவும் உடையும் தரவேண்டிய பொறுப்பு இருப்பதால், செலவும் மிதமிஞ்சி ஓடுகிறது. ஆகவே, இந்தியரை அடக்க வேறு உபாயத்தைக் கையாண்டனர்.

ஆசிய குடியேற்ற கட்டுப்பாடு சட்டம் 3 வித தண்டனைகளை அளிக்க வசதி செய்து கொடுத்திருந்



தது. முதல் தண்டனை சிறைவாசம். இரண்டாவது அபராதம் விதிப்பது. கடைசியாக நாடு கடத்துவது. டிரான்ஸ்வால் முக்கோண வடிவத்தில் இருக்கும் மாகாணம். ஒரு பக்கம் நேட்டால். மற்றொரு பக்கம் ஆரஞ்ச் பிரி ஸ்டேட். மூன்றாவது எல்லை. போர்ச்சுகீஸிய கிழக்காப்ரிக்க எல்லையை ஒட்டிக் கொண்டிருக்கிறது. ஆகவே, கைதாகும் இந்தியரை நாடு கடத்துவது என்று தீர்மானம் செய்தார்கள். இதன்படி கைதாகும் இந்தியரை 100, 200 மைல் வரைக் கொண்டுபோய் மூன்று பிராந்தியங்களிலும் விட்டுவிட்டு வந்தார்கள். இந்த தந்திரமும் பலிக்கவில்லை மறு நாள் அதே இந்தியர்கள் திரும்பவும் டிரான்ஸ்வாலில் காணப்பட்டனர். அவர்களே அதிகாரிகளைத் தேடிக் கண்டுபிடித்து, தங்களைக் கைது செய்யுமாறு வேண்டி நின்றனர்!

ஜெனரல் ஸ்மட்ஸுக்கு பல நாள் வரை தூக்கமே பிடிக்கவில்லை. இந்தியரை எப்படி மட்டந்தட்டுவது என்று அவர் மூளை தீவிரமாக வேலை செய்தது. கடைசியாக ஜெனரல் ஸ்மட்ஸ் ஒரு முடிவு செய்தார். அதாவது ஒரு கோஷ்டி இந்தியரைப் பிடித்து, இந்தியாவுக்கே நாடு கடத்திவிடுவது என்று தீர்மானித்தார். அப்படி செய்தால் எல்லா இந்தியரும் அடங்கி ஒடுங்கி விடுவார்களென்பது அவரது எண்ணம். இதன்படி 800 க்கு மேற்பட்ட இந்தியரை சர்க்கார் இந்தியாவுக்கு நாடுகடத்தினது. தென்னாப்ரிக்காவிலேயே பிறந்து வளர்ந்தவர்கள் இதில் பலர் இருந்தார்கள். இதில் பல செல்வந்தர்களும் இருந்தனர். அநேகமாக அனைவருக்கும் குடும்பங்கள் இருந்தன. இவற்றை எல்லாம் துறந்துவிட்டு, இந்தியர் நாடு கடந்தாகவேண்டும். இம்மாதிரியான ஆபத்து ஏற்படுவதை இந்தியர் விரும்பமாட்டார்கள். சரணாகதி அடைந்து விடுவார்களென்று ஸ்மட்ஸ் மனக்கோட்டை கட்டினார். இதன்படி சுமார் 800 பேர் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். ஆடுமாடுகளை அடைப்பது போல இவர்களை சர்க்கார் கப்பலில் அடைத்தது.

உயிரை ஊசலாட்டத்திலேயே வைத்துக்கொள்ளும் அளவுக்குத்தான் உணவு வழங்கப்பட்டது.

இந்தியாவுக்கு நாடுகடத்துகிறார்களென்ற செய்தி இதர மாகாணங்களுக்கு பரவியதும், அம்மாகாணத்திலிருந்த இந்தியரெல்லாம் ஆத்திரம் கொண்டனர். உடனே டிரான்ஸ்வால் இந்தியருக்கு தந்திகள் கொடுத்து, தைரியத்தை இழக்காமல் போராடுங்கள் என்று ஊக்கங்கொடுத்தனர். டிரான்ஸ்வால் இந்தியருக்கு இந்த தந்திகள் பெரும் ஆதரவாகத் தோன்றின முன் வைத்த காலை பின் வாங்கமாட்டோமென அவர்கள் போராட்டத்தில் முன்னைவிட தீவிரமாக இப்பொழுது இறங்கினார்கள். ஸமட்ஸ துரை கட்டின இப்புது மனக்கோட்டையும் தகர்ந்தது!

நாடு கடத்தப்பட்ட இந்தியர்களின் குடும்பங்களை பாரமரிக்கும் பொறுப்பை சத்தியாக்கிரகக் கமிட்டியே மேற் கொண்டது. இந்தியா வரும் சகோதரர்களை காப்பாற்றும்படியாக மகாத்மா இந்தியாவிலிருந்த பிரமுகர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இதில் பெரும்பாலோர் சென்னை மாகாண வாசிகள். ஆகவே சென்னையிலுள்ள ஸ்ரீ. ஜி. எ. நடேசனுக்கும் மகாத்மாவிடமிருந்து தந்தி வந்தது. இந்த அகதிகளுக்கு ஸ்ரீ ஜி. எ. நடேசன் செய்த உதவி ரொம்ப பாராட்டத்தக்கது. இந்த அகதிகளுக்கு வழியில் கப்பலில் கஷ்டங்கள் எதுவும் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ள ஸ்ரீ பி. கே. நாயுடு என்பவரையும் மகாத்மா அனுப்பி வைத்திருந்தார். இதற்குள் மகாத்மாவின் தண்டனைக் காலம் முடிவடைந்து பிரிட்டோரியாவிலிருந்து வெளியேறினார்.

இந்தியரை இந்தியாவுக்கு நாடு கடத்துவது அநியாயம் என்று அவர் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். இந்தியரும் இது விஷயத்தில் தீவிரமாக கிளர்ச்சியை ஆரம்பித்தார்கள். இதர மாகாணங்களிலும் இந்தியரின் எதிர்ப்பு திரண்டது. கடைசியில் ஸ்மட்ஸே, இந்த நாடு கட்டத்தும் வேலையால் பிரயோசனமில்லை என்று கை விட்



டார். ஆனால் சிறையில் கைதிகளை வதைக்கும் வேலை மட்டும் நிற்கவில்லை.

பனிகாலம் ஆரம்பமாயிற்று. பனி காலத்தில் யாரும் காலை நேரங்களில் வேலை செய்வது இயலாது. ஏனென்றால் கால் கை மரத்து விடும். ஆனால் கடுங்காவல் பெற்ற இந்திய கைதிகளுக்கு இந்த விதி விலக்கு தரப்படவில்லை. இதனால் அநேக சத்தியாக்கிரகிகளுக்குநோய்கள்பீடித்தன. இதில் சுவாமி நாகப்பன் என்ற வாலிபர் தம் உயிரையே பறி கொடுத்தார். கடுமையான பனி பெய்து கொண்டிருக்கும் ஒரு நாள் இவரை சிறை காம்பவுன்டில் கல்லுடைக்க விட்டிருக்கிறார்கள். கொட்டும் பனியில், எவ்வித ஆடையும் இன்றி இந்த வாலிபர் கட்டளையை நிறைவேற்றினார். அன்று அவரைப் பிடித்த நிமோனியா ஜுரம் அவரை விட்டொழியவே இல்லை. அவர் நிலைமை ஆபத்தானதும் அதிகாரிகள் மெள்ள விடுதலை செய்தார்கள். விடுதலையான சில நாட்களில் அவர் ஆவி பிரிந்தது. கடைசி மூச்சு வரை அந்த வாலிபர் இயக்கம் வளரவேண்டும்-இந்தியர் சுகமாக வாழவேண்டும் என்று சதா முனங்கிக் கொண்டே இருந்தார். நாகப்பனின் பிரார்த்தனை, நிறைவேறும் முன்பே, அந்த பொல்லாத நோய் அவரின் உயிரைப் பறித்துச் சென்றது. சூழ்ந்திருந்த இந்திய மக்கள் கதறினார்கள். மகாத்மா புழுவாய்த் துடித்தார். வாழ்விலே சுகத்தின் தலைவாசலைக்கூட எட்டிப்பாராது அந்த சுந்தர புருஷன் உயிர் நீத்தது இந்தியர் அவ்வளவு பேரின் உள்ளத்தையும் கலக்கி விட்டது. ஆனால் இரும்புச் சட்டத்தின் துணையைக் கொண்டிருந்த ஸ்மட்ஸின் உள்ளம் மட்டும் கலங்கவில்லை. அவர் கையில் சிக்கியிருந்த அதிகார லகானும் பிடி தளரவில்லை!

நாகப்பன் 1908—ஜூலை 7-ம் தேதி உயிர்த் தியாகம் செய்தது. 25 அக்டோபர் மாதம் நாராயண சாமி என்ற மற்றொரு வாலிபரும் உயிர் நீத்தார். அடிக்கடி இவரை நாடு கடத்தியதால், அதன் கொடுமை தாளாது இவர் உயிரும் பிரிந்தது. கள பலிகள் இரண்டாகி விட்டன. இந்தியர் அப் பொழுதும் சளைத்தார்களா? இல்லை.

இயக்கத்தின் வேகத்தை யாவது சிறிது குறைத்தார்களா என்றால் அதுவும் இல்லை. நாராயணசாமி, நாகப்பன் இவர்களின் வீர மரணத்தை தூண்டுகோலாகக் கொண்டு துன்பப் பாதையில் மேலும் மேலும் முன்னேறிச் சென்றார்கள். அவர்களின் ஹிருதய கமலங்களிலே ஒளிவிட்டுக் கொண்டிருந்த லட்சிய தீபமும் சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்தது!

# மகாத்மா முறையீடு

சத்தியாக்கிரக இயக்கம் எவ்வளவு வேகத்தில் நடந்து வந்ததோ, அதே வேகத்தில் சர்க்காரின் அடக்குமுறையும் நடந்துவந்தது. இரு கட்சியாரும் சளைக்கவில்லை. மகாத்மா இறுதி வெற்றி இந்தியருக்குத் தான் என்ற நம்பிக்கையோடு இருந்தார். சர்க்காரும் இந்தியர் இயக்கம் நாளாவட்டத்தில் படுத்து விடுமென எண்ணி வந்தார்கள். இந்த சமயத்தில் தென்னாப்பிரிக்க அரசியலில் ஒரு முக்கிய சம்பவம் நடந்தது.

ஜெனரல் ஸ்மட்ஸுக்கு எதிரிடையாக ஜெனரல் ஹெர்ட்ஜாக் என்பவர் கிளம்பினார். ஸ்மட்ஸைப் போலவே இவரும் முரட்டு ஆசாமி. பிரிட்டிஷ் ஐக்கியத்துக்காகவும் நல்லுறவுக்காகவும் ஸ்மட்ஸ் பாடுபடுவதை இவர் எதிர்த்தார். போயர் குடியரசாட்சி தனித்து இருந்தால்தான் விமோசனம் என்பது இவரது கட்சி. இதற்காக, டிரான்ஸ்வாலும் ஆரஞ்ச் பிரீ ஸ்டேட்டும் பிரிட்டனின் தொடர்பிலிருந்து பிரிந்து இருக்கவேண்டுமென கிளர்ச்சி செய்தார். இவர் கட்சிக்கும் ஆட்கள் சேரவே, இப்பொழுது இரு கட்சிகள் தோன்றின. கடைசியில், இவ்விரு கட்சிகளையும் லண்டன் சர்க்கார் லண்டனுக்கு வருமாறு அழைத்திருந்தார்கள். லண்டனில் ஒரு சமரஸ மகாநாடும் கூட்டியிருந்தார்கள். இதற்காக ஜெனரல் ஸ்மட்ஸ், ஜெனரல் போதா (டிரான்ஸ்வால் பிரதமர்) முதலியோர் லண்டன் சென்றிருந்தார்கள். அப்பொழுது லண்டனில் காலனி மந்திரியாக இருந்தவர் லார்ட் கிரூவ் என்பவர் இந்தியா மந்திரியாக லார்ட் மார்லி இருந்தார்.

மகாத்மா இந்த சமயத்தில் லண்டன் சென்று லண்டன் சர்க்கார் மூலம் டிரான்ஸ்வால் சர்க்காரின் நிறவெறியை அடக்கவேண்டுமென சிலர் கூறினார்கள். இந்த யோசனை நியாயமானதாக மகாத்மாவுக்குத் தோன்

றியது. உடனே இதற்கு மகாத்மா இசைந்தார். சேத் ஹாஜி ஹபீப் என்பவர் மகாத்மாவுடன் செல்லுவதாக ஏற்பாடாகியது.

லண்டனுக்கு மகாத்மா சென்றதும் பலரை பேட்டி கண்டார். அப்போது பிரிட்டிஷ் லார்ட் சபையில் மெம்பராக லார்ட் ஆம்ப்தில் என்றொருவர் இருந்தார். அவருக்கு இந்தியர் போராட்டத்தில் அனுதாபம் உண்டு. மகாத்மா இவரைப் பார்த்தபொழுது இவர் சமரஸத்துக்கு ஏற்பாடு செய்வதாகக் கூறி ஜெனரல் ஸ்மட்ஸையும் ஜெனரல் போதாவையும் பேட்டி கண்டு பேசினார். இருவரும் தெளிவாகப் பேசினார்கள். இந்தியருக்கு எல்லா வித சலுகைகளையும் காட்டுவதாகவும் இந்தியர்தான் வீணாகக் கிளர்ச்சி செய்வதாகவும் சொன்னார்கள். மகாத்மாவிடம் அந்த லார்ட் இந்த செய்தியை சொன்னதும் மகாத்மா இது 'பழைய பல்லவிதான்' என்றார். இந்தியருக்கு விரோதமாக இருக்கும் சட்டத்தை ரத்து செய்ய இவர்கள் தயாரா என்று மகாத்மா கேட்டார். அந்த லார்டால் இதற்கு பதில் சொல்லமுடியவில்லை. திரும்பவும் ஜெனரல் ஸ்மட்ஸை அவர் கண்டு மகாத்மாவின் கேள்வியை சொன்னார். ஜெனரல் ஸ்மட்ஸ் ஒரு தரம் நிறைவேற்றின சட்டத்தை ரத்து செய்வது என்பது சாத்தியமில்லை என்று சொல்லிவிட்டார். இதோடு சமரஸ முயற்சி சமாப்தியாயிற்று.

போயர்களை திருப்தி பண்ணும் முயற்சியில் பிரிட்டிஷ் சர்க்கார் அப்பொழுது ரொம்ப தீவிரமாக ஈடுபட்டிருந்ததால் மகாத்மா விஷயத்தை அவர்கள் கேட்கவே இல்லை. ஏதோ ஒப்புக்கு ஓரிரு வார்த்தைகள் பேசிவிட்டு இந்தியா மந்திரியும் காலனி மந்திரியும் மகாத்மாவை தட்டிக் கழிக்க முயன்றார்கள். மகாத்மாவுக்கு இந்த விஷயம் புரிந்ததும், அவர் லண்டனுக்கு வந்தது வீணான காரியமென்று நினைத்து, தென்னாப்பிரிக்கா திரும்ப பயணமானார். இந்தியர் பிறர் உதவியை எதிர்பாராமல் போராடினால்தான் வெற்றி கிடைக்குமென்ற அவரின் பழைய உறுதி இப்பொழுது மேலும் பலம் பெற்றது. மகாத்மா லண்டனுக்கு சென்று முறையிட்டதில் ஏதாவது பலன்



ஏற்படாதா என்றால் ஒரு பலன் இருக்கத்தான் செய்தது. அதுவும் எதிர்பாராத இடத்திலிருந்து வந்தது. சத்தியாக்கிரகக் கமிட்டிக்கு பணமுடை ஏற்பட்டிருந்தது. தொண்டர்களுக்கும், நாடு கடத்தப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் செலவழித்ததில் கமிட்டியின் நிதி குறைந்துவிட்டது. இதனால் தலைவர்கள் கவலை கொண்டிருந்தனர். ஆனால் மகாத்மா லண்டனிலிருந்து திரும்பியதும் பணமுடை தீர்ந்துவிட்டது. லண்டனில் வசித்து வந்த ஸர். ரதஞ்சி ஷாம்ஷேத்ஜி டாடா ரூ. 25,000 நன்கொடை அனுப்பியிருந்தார். மகாத்மா லண்டனில் செய்த பிரசாரத்தின் லாபம் இது. இந்தியர் படும் அவதியைக் கேட்டு ஸர். டாடா இந்த நன்கொடையை அனுப்பியிருந்தார்.

தென்னாப்பிரிக்க இந்திய பிரமுகர்களில் ஒருவர் டிரான்ஸ்வாலுக்கு 21 மைல் தூரத்தில் ஒரு பெரிய நிலத்தை வாங்கி அதை சத்தியாக்கிரகக் கமிட்டிக்கு தானமாக வழங்கினார். அதாவது சத்தியாக்கிரகிகளும் அவரது குடும்பத்தாரும் கஷ்டப்படாமல் குடியிருக்க இந்த நிலத்தில் குடிசைகள் போட்டுக் கொள்ளலாமென்றும் அறிவித்தார். சத்தியாக்கிரகிகள் சிறை சென்றுவிட்டால் அவர்களது குடும்பம் எவ்வித கஷ்டத்துக்கும் உள்ளாகக்கூடாது என்பது மகாத்மாவின் ஆசை. இந்த நிலம் சத்தியாக்கிரகக் கமிட்டிக்கு வந்ததும், பல குடிசைகள் போடப்பட்டன. சத்தியாக்கிரகிகளின் குடும்பங்கள் எல்லாம் அங்கு குடியேற்றப்பட்டன. நிலத்தைசுற்றி வேலி போட்டார்கள். 1000 ஏக்கராவுக்கு மேலாக நிலம் இருந்ததால் அங்கேயே மரம் செடி கொடிகளை வளர்த்தார்கள். ஆரஞ்சு பழ சாகுபடி நடந்தது. பெரும் பண்ணையாக சீக்கிரத்தில் இந்த இடம் காட்சி அளித்தது. மகாத்மாவும் இந்த பண்ணைக்கே வந்து குடியேறினார். துன்பத்திலிருக்கும் சத்தியாக்கிரகிகளின் குடும்பத்தாருக்கு மகாத்மா தங்கள் அருகில் இருப்பது எவ்வளவோ ஆறுதலாக இருந்தது. தாங்கள் படும் துன்பத்தை மகாத்மாவும் பகிர்ந்து அனுபவிக்கிறாரென அவர்களெல்லாம் சந்தோஷப்பட்டார்கள். மகாத்மா

இந்த இடத்துக்கு டால்ஸ்டாய் பண்ணை என்ற அழகான பெயரிட்டார். பண்ணையில் யாரும் ஜாதிமத வித்தியாசம் காட்டக்கூடாது என்றார். தோழமை உணர்ச்சி இருக்க வேண்டும் என்று கூறினார். ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும். ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடே இருக்கக்கூடாது என்று மகாத்மா சொன்னார். மகாத்மாவின் விருப்பப்படியே அப்பண்ணை விளங்கியது. பண்ணையில் வாழ்ந்த சத்தியாக்கிரகிகள் குடும்பத்தாரின் வாழ்க்கை லட்சிய வாழ்வாக இருந்தது. பெரிய பெரிய பணக்காரர்கள்கூட, அப்பண்ணையில் வாழ்வது கவுரவம் என்று நினைக்க ஆரம்பித்துவிட்டார்கள். பண்ணையில் காணப்பட்ட எளிய வாழ்க்கை அனைவரையும் கவர்ந்தது. சத்தியாக்கிரக இயக்கத்தின் புனிதத் தன்மையையும் எடுத்துக் காட்டியது. சிக்கனமாக வாழ்க்கை நடத்தவேண்டுமென்பதில் மகாத்மா விதித்திருந்த கட்டு திட்டங்கள் ரொம்ப ஆச்சரியமாக இருந்தன. யாரும் வெளியே செல்லவேண்டுமென்றால், நடந்துதான் செல்லவேண்டும். வெளியே சாப்பிடுவது என்பது கூடாது. 21 மைலிலிருக்கும் ஜோனாஸ்பர்க்குக்கு செல்லவேண்டுமென்றால் கூட நடந்துதான் செல்லவேண்டும். இன்னும் இது போன்ற பல கட்டு திட்டங்களை மகாத்மா போட்டு, அவற்றை நிறைவேற்றியும் வைத்தார்.

டால்ஸ்டாய் பண்ணையிலிருந்து அடிக்கடி சத்தியாக்கிரக வீரர்கள் வருவதும் கைதாவதும் ஒழுங்கு தவறாமல் நடந்து வந்தது. நாட்கள் ஓடின. இந்தியாவுக்கு சத்தியாக்கிரக இயக்கம் பற்றி அப்பொழுதைக்கப்போது செய்திகள் வந்து கொண்டிருந்தன. கோகலே இந்தியரை தென்னாப்பிரிக்கா நடத்தும் கொடுமையைக் கண்டித்து இந்திய சட்ட சபையில் தீர்மானம் கொண்டு வந்தார். நேட்டாலுக்கு இந்திய குத்தகைக் கூலிகளை அனுப்பக் கூடாது என்று முழங்கினார். இந்த தீர்மானம் 1910 பிபரவரி மாதம் நிறை வேறிவிட்டது. மகாத்மாவுக்கு இந்த செய்தி எட்டவே கோகலேக்கு தந்தி கொடுத்தார். தென்னாப்பிரிக்காவுக்கு இந்தியத் தலைவர்கள் விஜயம் செய்ய வேண்டுமென மகாத்மாவின் தந்தி



கோரியது. கோகலே தாம் லண்டன் சென்று விட்டு தென்னாப்பிரிக்கா வருதாக பதில் அனுப்பினார். அதன்படி 1912 அக்டோபர் மாதம் கோகலே கேப் டவுனில் வந்திறங்கினார்.

கோகலே லண்டனிலிருந்து புறப்படுவதற்கு முன்பாக இந்தியா மந்திரியைப் பேட்டி கண்டு தம் பயணத்தின் விவரத்தைக் கூறினார். இந்தியர் துன்பப்படுவதை தாம் நேரில் சென்று பார்க்கவே போவதாகவும் கூறினார். இந்தியா மந்திரி இந்த செய்தியை உடனே தென்னாப்பிரிக்க (யூனியன்) சர்க்காருக்கு தெரிவித்தார். கோகலேக்கு இந்தியாவில் எவ்வளவு செல்வாக்கு இருக்கிறது என்பது யூனியன் சர்க்காருக்குத் தெரியும். ஆகவே அவர்கள் கோகலேயை வரவேற்பதாகக் கூறினார்கள்.

* 1910-ம் வருஷத்திலிருந்து 4 மாகாணங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு யூனியன் சர்க்கார் ஏற்பட்டது. விவரத்துக்கு 38-ம் பக்கம் பார்க்க.

# கோகலே முயற்சி

கோகலே ஆறு வாரங்கள் தென்னாப்ரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து இந்தியர் நிலைமையை நேரில் கண்டறிந்தார். மகாத்மா கோகலே உடன்சென்றார். ஒவ்வொரு இடமாக கோகலேயை அழைத்துச் சென்று காட்டினார். இந்தியர் துன்பப்படுவது உண்மைதான் என்று கோகலே உணர்ந்தார். பிறகு டிரான்ஸ்வால் மந்திரிகளுடன் கோகலே பேசுவதாக ஏற்பாடாகியது.

ஜெனரல் போதாவும் ஜெனரல் ஸ்மட்ஸும் கோகலேயை பேட்டி கண்டார்கள். இரண்டு மணி நேரம் கோகலே பேசிக்கொண்டிருந்தார். பேட்டி முடிவுற்றதும் மகாத்மாவை கோகலே அழைத்து எல்லாம் சுமுகமாக தீர்ந்துவிட்டதாகவும் மகாத்மா இந்தியாவுக்குக் கிளம்ப வேண்டியது தான் என்றும் கூறினார். இந்தியர் மீதுள்ள கொடூர சட்டங்களை எல்லாம் ரத்து செய்துவிடுவதாக ஜெனரல் ஸ்மட்ஸும் ஜெனரல் போதாவும் வாக்களித்து விட்டதாக கோகலே கூறினார். அதோடு* தலைக்கு 3 பவுன் வரி செலுத்த வேண்டுமென்றிருக்கும் வரியையும் ரத்து செய்வதாக அவர்கள் வாக்களித்து விட்டதாக கோகலே எடுத்துக் கூறினார் மகாத்மாவுக்கு முதலில் இதை நம்பமுடியவில்லை. இவ்வாறாக சமரஸத்தை ஏற்படுத்திய கோகலே 1912 நவம்பரில் இந்தியாவுக்கு கிளம்பினார்.

சமரஸம் ஏற்பட்டுவிடுமென்று கோகலே கொண்டிருந்த நம்பிக்கைபோல, மகாத்மாவோ, மற்ற தென்னாப்ரிக்க இந்திய மக்களோ நம்பிக்கை கொள்ளவில்லை. ராஜதந்திர நிபுணரான ஜெனரல் ஸ்மட்ஸ் அவ்வளவு லேசில் விட்டுக்கொடுத்துவிடுவாரெனமகாத்மா நினைக்க

* "பஞ்சத்து ஆண்டிகள்" என்ற அத்தியாயத்தில் 1895-ல் விதிக்கப்பட்ட இந்த வரி விளக்கப்பட்டிருக்கிறது. முதலில் நேட்டாலில் தோன்றிய இந்த வரி பிறகு எல்லா மாகாணங்களிலும் அமுலுக்கு வந்தது.



வில்லை வாக்குறுதியை மீறுவது ஸ்மட்ஸுக்கு தண்ணீர் பட்டபாடு. ஆகவே, அவர் கோகலேக்குக்கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவாரா என்று மகாத்மா சந்தேகம் கொண்டார். மகாத்மா கொண்டிருந்த சந்தேகத்தை முதலில் சிலர் கண்டித்தார்கள். ஆனால் ஸ்மட்ஸ் நடந்த விதத்தைப் பார்த்ததும் அவர்கள் தங்களின் தவறுக்காக மகாத்மாவிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள்.

கோகலே இந்தியா போய்ச் சேர்ந்ததும் யூனியன் பார்லிமெண்டில் பேசிய ஜெனரல் ஸ்மட்ஸ் 3 பவுன் வரியை ரத்து செய்யமுடியாது என்று கூறினார். இரண்டாவதாக இந்தியர் அகம்பாவம் பிடித்து சதா தொல்லை கொடுத்துக்கொண்டு வருவதாகவும், இதனால் வெள்ளைக்காரர்களின் அனுதாபத்தையும் நல்லுறவையும் இழந்துவருவதாகவும் கூறினார். மொத்தத்தில், கோகலேயிடம் கொடுத்த வாக்குறுதிகளை மீறினார். அவரின் பேச்சு தோரணை இந்தியர் மீது பழி வாங்குவதாக இருந்தது.

மகாத்மா இந்த விவரங்களை உடனே கோகலேக்கு அனுப்பி, ஸ்மட்ஸின் பித்தலாட்டங்களை வெளிப்படுத்தினார். ஸ்மட்ஸின் வாக்குறுதியில் சற்று தடைபட்டிருந்த சத்தியாக்கிரக போராட்டம் இனி தீவிரம் கண்டு விடுமென்றும், இந்தியர் மானத்தைக் காக்க உயிரை விடவும் தயாராக இருப்பதாகவும் மகாத்மாவின் கடிதம் கூறியது.

இந்தியர் முழுப் போராட்டத்துக்கு மீண்டும் ஆயத்தம் செய்தார்கள். இந்த சமயத்தில் மற்றொரு பேரிடி போன்ற செய்தி திடீரென வந்தது. கேப் டவுனில் ஒரு வழக்கு நடந்துகொண்டிருந்தது. அந்த வழக்கில் தீர்ப்புக் கூறிய நீதிபதி இந்திய மாதர் குலத்தையே பழிக்கும்படியாக ஒரு விசித்திரமான வாதத்தைக் கூறினார். அதாவது கிறிஸ்துவ தர்மப்படி கலியாணம் செய்துகொண்டு, கலியாணமானதை பதிவு (ரிஜிஸ்தர்)செய்துகொண்டால்தான் அது கலியாணம் ஆகும். மற்றபடி

நடந்த கலியாணங்கள் எல்லாம் உண்மைக் கலியாணங்களாகக் கருதப்படமாட்டா. அப்படி கலியாணமானவர்கள் சொத்துக்கு வாரிசுதாரர்களாக ஆகமாட்டார்கள். அவர்களை வைப்பாட்டிகளாகவே பாவிக்க வேண்டும் என்று அந்த நீதிபதி தீர்ப்பளித்தார். அதாவது ஹிந்து தர்மப் படி கலியாணம் செய்தவர்கள், கலியாணத்தை சர்க்காரில் பதிவு செய்வது இல்லை. ஆகவே கலியாணமான ஹிந்துப் பெண்களை எல்லாம் மனைவிகளாகக் கருதக் கூடாதாம் அதே போல முஸ்லிம் பெண்கள், பார்ஸிகள் ஆகியோரையும் கருத முடியாது என்பது அந்த தீர்ப்பின் அர்த்தம்.

இந்த தீர்ப்பு வெளியானதும் இந்தியர் வட்டாரங்களில் இது பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது. இந்த நீதிபதியின் தீர்ப்பை சர்க்கார் அங்கீகரிக்கிறதா என்பதை அறிய மகாத்மா சர்க்காருக்கு கடிதம் எழுதினார். இந்தியாவில் இது மாதிரியாக சட்டம் எதுவும் கிடையாதென்றும், இந்தியர் மரபுக்கு இது புதுமாதிரியான வழக்கமெனவும் அவர் அக் கடிதத்தில் எடுத்துக் காட்டி, இந்த தீர்ப்பை சர்க்கார் அங்கீகரிக்கக் கூடாது என்று கோரினார் சர்க்கார் அப்படி அங்கீகரிக்கும் பட்சத்தில் தென்னாப்ரிக்காவிலுள்ள விவாகமான ஹிந்து, முஸ்லிம், பார்ஸி, பெண்களை எல்லாம் அவமதிப்பதாகுமென்பதையும் எடுத்துக் காட்டினார் மகாத்மாவின் கடிதத்தைப் பெற்ற சர்க்கார் பதிலை அனுப்ப வில்லை!

சர்க்காரின் இந்த மௌனம் பெரும் கொதிப்பை ஏற்படுத்தியது சத்தியாக்கிரக கமிட்டியை மகாத்மா உடனே கூட்டினார். இக் கூட்டத்துக்கு பல பெண்களும் வந்திருந்தார்கள். சர்க்கார் இந்திய மாதர்களுக்கு செய்திருக்கும் பெரும் அநீதியை மகாத்மா அப் பெண்களுக்கு எடுத்து விளக்கினார். அவர்கள் எல்லாம் தாங்கள் இந்த அநீதியை ஒழிப்பதற்காக சத்தியாக்கிரகம் செய்யத் தயாராக இருப்பதாகக் கூறினார்கள் இதுவரை பெண்களை மகாத்மா போராட்டத்தில் ஈடுபடுத்தவில்லை. டால்ஸ்டாய் பண்ணையிலிருந்த பெண்கள் தங்களை



போராட்டத்தில் சேர்த்துக்கொள்ளும்படி எவ்வளவோ வேண்டியும் மகாத்மா அந்நிய தேசத்தில் இந்திய மாதர்கள் துன்பத்துக்கு ஆளாகக்கூடாது என்று தடுத்து வந்தார். இன்று துன்பத்துக்கும் மேலாக, அவமானம் அவர்களை சூழ்ந்து நிற்கும்போது, மகாத்மா பெரும் வருத்தத்துடன் அவர்கள் கோரின அந்த அனுமதியை அளித்தார். பெண்களும் போராட்டத்தில் சேரலாமென்பதே அவர் அளித்த அனுமதி. போராட்டத்தில் சேருவதில் என்னென்ன கஷ்டங்கள் ஏற்படுமென்பதை மகாத்மா அவர்களுக்கு விளக்கினார். துன்பத்தைத் தவிர, வேறெதுவும் எதிர்பார்க்க முடியாது என்பதை மகாத்மா தெளிவாக எடுத்துக் கூறியும், அந்த மாதர் குல மாணிக்கங்கள், அஞ்சா நெஞ்சுடன் எதற்கும் தயார் என்று முழங்கினார்கள். அந்த முழக்கத்திலே மாதர் குலத்தின் அடிமை விலங்கு தகருகிறது என்ற ஆர்ப்பரிப்பு இருந்தது! இந்த தைரியமான போக்கைக் கண்டு மகாத்மாவும் மற்ற தலைவர்களும் சந்தோஷப்பட்டார்கள். இப்பெண்களின் வீரப் போக்கை மாத்மாவே சொல்லுவதைக் கேளுங்கள்:—

"போராட்டத்தில் கலந்துகொள்ளுவதாகக் கூறின பெண்களனைவரையும் பார்க்க சந்தோஷமாக இருந்தது. ஆறு பெண்கள் இடுப்பில் குழந்தைகளுடன் நின்று கொண்டு தாங்கள் எத்தகைய கஷ்டத்தையும் ஏற்க தயாராக இருப்பதாக கூறினார்கள். அவர்களின் உணர்ச்சியைப் பார்த்த நான் அவர்களைத் தடுக்க முடியவில்லை. இந்த ஆறு பேரில் ஒருவரைத் தவிர பாக்கி ஐந்து பேரும் தமிழ்ப் பெண்க்ள்.

'ஸ்ரீமதி தம்பி நாயுடு, ஸ்ரீமதி என். பிள்ளை, ஸ்ரீமதி கே. முருகேச பிள்ளை, ஸ்ரீமதி ஏ. பெருமாள் நாயுடு, ஸ்ரீமதி கே. சின்னசாமி பிள்ளை, ஸ்ரீமதி என். எஸ். பிள்ளை, ஸ்ரீமதி ஆர். ஏ. முதலிங்கம், ஸ்ரீமதி பவானி தயாள், ஸ்ரீமதி. மீனாக்ஷி பிள்ளை, ஸ்ரீமதி. பாக்கியம் முருகேச பிள்ளை.

முதல் சத்தியாக்கிரக கோஷ்டியாக இவர்கள் சென்றவர்கள்......"

டிரான்ஸ்வால் எல்லையை இவர்கள் கடந்து சென்றார்கள். சத்தியாக்கிரகிகளை எல்லையிலேயே கைது செய்வதுபோல இவர்களை அதிகாரிகள் கைது செய்யவில்லை. உள் பிராந்தியத்துக்கு சென்றார்கள். அங்கும் கைது செய்யவில்லை. உடனே இவர்கள் சிறு தட்டுகளில் சாமான்களை வைத்துக்கொண்டு போலீஸ்காரன் இருக்குமிடத்தைத் தேடிச் சென்று சாமான்களை விற்றார்கள். சத்தியாக்கிரகிகள் கைதாவதற்கு அனுஷ்டிக்கும் முறை இது. போலீஸ்காரர்கள் இப்பெண்களை வேடிக்கைதான் பார்த்தார்களே ஒழிய கைது செய்யவில்லை. எப்படி கைதாவது என்று தெரியாமல் இப்பெண் சத்தியாக்கிரக் கோஷ்டி தவித்தது!

மகாத்மா 16 பேர் கொண்ட ஆண் சத்தியாக்கிரக கோஷ்டி ஒன்றை அனுப்பினார். அதாவது இவர்கள் நேட்டாலிலிருந்து டிரான்ஸ்வாலுக்குள் நுழைந்து கைதாக வேண்டும். அதே சமயத்தில் டிரான்ஸ்வாலில் கைதாகாமல் தவிக்கும் பெண்கள், திரும்ப எல்லையைத் தாண்டி நேட்டாலுக்குள் பிரவேசிக்கவேண்டும். ஒரு எல்லையிலிருந்து மற்றொரு எல்லைக்கு வந்தால், அனுமதி பெறவேண்டும். இப்பெண்கள் அனுமதி பெறாமல் இருந்தார்கள். ஆகவே டிரான்ஸ்வாலில் நடந்ததுமாதிரி, நேட்டாலிலும் நடக்காமல் இவர்கள் கைதாவார்கள் என்று மகாத்மா நினைத்தார். அப்படியும் கைதாகாமல் போனால், மகாத்மா ஒரு மாற்று யோசனை கூறினார். நேட்டாலில் அதிகாரிகள் கைது செய்யாவிட்டால் இப்பெண்கள் நிலக்கரி சுரங்கம் இருக்கும் நகரமான நியூகாஸலுக்கு செல்லவேண்டும். சுரங்கத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களில் 100-க்கு 90 பேர் இந்தியர்தான். அவர்களிடம் இப்பெண்கள் சென்று, வேலை நிறுத்தம் செய்யும்படி வேண்டிக்கொள்ளவேண்டும். சர்க்கார் தங்களை அவமானப்படுத்திவிட்டதாகவும், இந்தியர் இதைப் போக்க வேண்டியது அவசியமெனவும் தொழிலாளர்களிடம்



முறையிடவேண்டும். தொழிலாளர் இந்த கோரிக்கைக்கு உடன்பட்டு வேலை நிறுத்தம் செய்தால் சர்க்கார் அப்பொழுதும் சும்மா இருக்காது. உடனே பெண் சத்தியாக்கிரகிகளைக் கைது செய்யுமென மகாத்மா திட்டம் போட்டுக் கொடுத்தார். சுரங்கத்தில் வேலை செய்யும் இந்தியத் தொழிலாளரில் 100-க்கு 90 பேர் தமிழர்கள். ஆகவே, இப்பெண்கள் அவர்களிடம் தமிழிலேயே தங்கள் முறையீட்டைக் கூறவேண்டுமென மகாத்மா யோசனை சொல்லிக் கொடுத்தார்.

பெண்கள் படையில் மகாத்மாவின் தர்மபத்தினியாகிய கஸ்தூரிபாவும் தம்மை ஒரு அங்கத்தினராக பதிவு செய்துகொண்டார்.

## மாதரசி வள்ளியம்மை!

டிரான்ஸ்வாலிலிருந்து பெண் சத்தியாக்கிரகிகள் நேட்டாலுக்குள் நுழைந்தனர். எதிர் பார்த்தபடி எல்லையில் இவர்களை போலீஸார் கைது செய்யவில்லை. இதே சமயத்தில் நேட்டாலிலிருந்து டிரான்ஸ்வாலுக்குள் ஆண் சத்தியாக்கிரகிகள் நுழைந்தனர். போலீஸார் இவர்களை கைது செய்து கொண்டுபோய் கோர்ட்டில் ஆஜர் படுத்தினார்கள். 1913-செப்டம்பர் 23-ம் தேதி அன்று இந்த ஆண் சத்தியாக்கிரகிகளுக்கு தலா 3 மாத காவல் தண்டனை கிடைத்தது.

நேட்டாலுக்குள் நுழைந்த பெண் சத்தியாக்கிரகிகள் உடனே நியூகாஸலுக்கு விரைந்தனர். அங்கு நிலக்கரி சுரங்கத்தில் வேலை பார்க்கும் இந்தியத் தொழிலாளரை அணுகி வேலை நிறுத்தம் செய்யும்படியாக கோரினார்கள். தங்களை அரசாங்கம் இழிவுபடுத்தினதை எடுத்துரைத்தார்கள். பெண்கள் குலத்துக்கே ஏற்பட்டிருக்கும் இழிவை, வேலைநிறுத்தம் செய்வது மூலம் போக்க வேண்டுமென முறையிட்டனர். இந்த முறையீட்டுக்கு பலன் கிடைத்தது. சுரங்கத்தில் வேலைசெய்த தமிழ்த் தொழிலாளர் அனைவரும் வேலை நிறுத்தத்தைத் துவக்கினர். பெண் சத்யாக்கிரகிகளின் முயற்சி வெற்றி கண்டது. மகாத்மாவுக்கு தந்திமூலம் இந்த செய்தியை உடனே அறிவித்தார்கள். மகாத்மா போட்ட திட்டம் நிறைவேறிவிட்டது! உடனே மகாத்மா நியூகாஸலுக்கு ஓடோடியும் வந்தார்.

நியூகாஸல் சுரங்கத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்களென்ற செய்தி சர்க்காருக்கு எட்டியது. இந்த வேலை நிறுத்தத்துக்கு பெண் சத்தியாக்கிரகிகள் தான் காரணமென்றும் அந்த செய்தி கூறியது. சர்க்கார் உடனே உஷாராகியது. பெண் படையினரை உடனே கைது செய்யும்படியாக



தந்திமூலம் சர்க்கார் உத்திரவு அனுப்பியது. உடனே சத்தியாக்கிரகிகள் கைதானார்கள். தலைக்கு 3 மாத காவல் தண்டனை விதிக்கப்பட்டனர். இந்தியர் போராட்ட சரித்திரத்திலேயே பெண்கள் கைதாவதும், தண்டிக்கப்படுவதும் இதுதான் முதல் தடவை. 1913-ல் அக்டோபர் 21-ம் தேதி அன்று சரித்திரப் பிரஸித்தி பெற்ற இந்த சம்பவம் நடந்தது. பெண்கள் கைதாகினார்களென்ற செய்தி உலகில் பல பாகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. இந்தியாவை இந்த செய்தி அடைந்ததும் இந்திய மக்கள் இடியோசை கேட்ட நாகம்போலாயினர். கண்காணாத தேசத்தில் இந்திய பெண்கள் என்ன துன்பத்துக்கு ஆளாகிறார்களோ என்று மனம் வருந்தினார்கள். ஸர் பிரோஸ் ஷா மேத்தா போன்ற தலைவர்கள், தென்னாப்ரிக்காவை அறிவு கொண்ட மக்கள் நிர்வகிக்கிறார்களா அல்லது குண்டர்கள் நிர்வகிக்கிறார்களா என்று முழங்கினார்கள். தென்னாப்ரிக்க சத்யாக்கிரகிகளுக்கு இந்தியாவில் சண்டமாருதம் போல ஆதரவு கிளம்பியது.

மாரிட்ஸ்பர்க் சிறையிலேயே இந்தியப் பெண்களை அடைத்திருந்தார்கள். மிகவும் மோசமான உணவு இவர்களுக்கு வழங்கப்பட்டது. சில்லறை சவுகரியங்களைக் கூட செய்துதர சிறை அதிகாரிகள் மறுத்துவிட்டனர். சிறையிலே இவர்களுக்கு துணிமணிகளை துவைக்கும் வேலை தரப்பட்டது. சதா துவைத்துக் கொண்டே இருக்கவேண்டுமென அதிகாரிகள் கொடுமைப்படுத்தினார்கள். சொந்த செலவிலும் உணவுப் பொருள்களை வாங்கிக் கொள்ளக்கூட அனுமதிக்கவில்லை. பெண் கைதிகள் பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. போதிய உணவு இல்லாமலும் ஓயாத உழைப்பினாலும் இப்பெண்கள் பெரும் கஷ்டத்துக்கு உள்ளானார்கள். 3 மாத சிறை வாசத்துக்குப் பிறகு இவர்கள் வெளியேறியதும் எலும்பும் தோலுமாகவே இருந்தனர். இந்தப் பெண் கைதிகளில் ஸ்ரீமதி வள்ளியம்மை என்றொரு பெண் அரசி இருந்தாள். இந்த மாதரசி சிறை செல்லும்போது நோயோ நொடியோ

எதுவும் கிடையாது. ஆனால் விடுதலையாகி வெளியேறும்போது விஷ ஜுரத்தால் பீடிக்கப்பட்டிருந்தார். கடுமையான ஜுரத்தோடு இவரை விடுதலை செய்தார்கள். விடுதலையான சில நாட்களில் அதாவது 1914-பிப்ரவரி 22-ம் தேதி அன்று இந்த வீராங்கனையின் உயிர் பிரிந்தது. 16-வயது நிரம்பிய இப்பாவை தம் உயிரையே போராட்டத்துக்கு அர்ப்பணித்தார். மகாத்மா இந்த துக்ககரமான சம்பவத்தைக் குறித்து கீழ்வருமாறு எழுதியிருக்கிறார் :—

"ஸ்ரீ. முனிசாமி முதலியார் என்பவரின் மனைவி இந்த வள்ளியம்மை. இவரை என்னால் மறக்கவே முடியாது. இவருக்கு வயது 16 தான். ஜோஹான்ஸ்பர்க்கில் வசித்துக் கொண்டிருந்தார். நான் பார்க்கும்போது அவர் சிறையிலிருந்து விடுதலையாகி படுத்த படுக்கையிலிருந்தார். ரொம்ப உயரமான இவர் வெளிரிட்டுக் கிடந்ததைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

'அவரைப் பார்த்து "வள்ளியம்மா, சிறை சென்றதற்காக நீ வருந்தவில்லையே" என்று கேட்டேன்.

"வருந்துவதா? என்னை மீண்டும் கைது செய்தால் இன்னும் சிறைசெல்லத் தயாராக இருக்கிறேன்" என்று கூறினார்.

"அது உன் உயிரையே பறிப்பதாக இருந்தால் என்ன லாபம்? என்றேன்.

"உயிர் போனாலும் எனக்குக் கவலையில்லை. தாய் நாட்டுக்காக, யார்தான் உயிரைவிட விரும்பமாட்டார்கள்?

'இந்த சம்பாஷணை நடந்த சில நாட்களில் வள்ளியம்மையின் உயிர் பிரிந்தது. இதனால் அவரின் சடலம்தான் மறைந்ததே ஒழிய, அமரத்துவம் வாய்ந்த அவரின் பெயர் எங்களை விட்டு மறையவே இல்லை........."



இந்தியர் உரிமைக்காக தம் உயிரையே சமர்ப்பித்த அந்த பேராசிக்கு இந்திய மக்கள் அனைவரும் துக்கம் கொண்டாடினார்கள். தங்களின் ஹிருதய கமலங்களில் வள்ளியம்மைக்கு கோயில் கட்டி வைத்தனர். தென்னாப்ரிக்க இந்தியர் சத்தியாக்கிரக சரித்திரத்தில் அம்மாதின் திருநாமம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பட்டிருக்கிறது என்று மகாத்மா கூறினார்.

நியூகாஸல் சுரங்கத் தொழிளாலருக்கு இந்த செய்திகள் எட்டியதும் அவர்கள் வேலை நிறுத்தத்தை முன்னைவிட சற்று தீவிரமாக அனுஷ்டிக்க ஆரம்பித்தனர். இதனால் சர்க்கார் ஆத்திரமடைந்து, தங்களின் அடக்குமுறையை இறுகச் செய்தது. தொழிலாளர் எல்லாம் முதலாளிகள் கட்டிக் கொடுத்த குடிசைகளில் தான் இருந்தார்கள். சர்க்காரின் தூண்டுதலின் பேரில் இந்தக் குடிசைகளெல்லாம் இந்தியரிடமிருந்து பறிக்கப்பட்டன. தொழிலாளரை நியூகாஸலை விட்டு வெளியேறும்படியாகவும் முதலாளிகள் துன்புறுத்தினார்கள். இந்தியருக்கு கொடுத்து வந்த சலுகைகளை எல்லாம் பறித்து விரட்டி விரட்டி அடித்தார்கள். இந்தியர் பொறுமையை இழந்து, திரும்பி எதிர் நடவடிக்கையில் இறங்கிவிடக் கூடாது என்று மகாத்மா கண்காணித்து வந்தார். இதன் விளைவாக நூற்றுக்கணக்கிலிருந்த தொழிலாளரின் தொகை ஆயிரக்கணக்கில் பெருகியது. இவர்களை எல்லாம் வைத்து பராமரிப்பது யார் என்ற பிரச்னையும் இப்பொழுது எழுந்தது? சுரங்கத்தில் வேலையும் போய்விட்டது. முதலாளி வீட்டையும் இதர வசதிகளையும் பறித்து விட்டான்? இனி இவர்களை யார் காப்பது என்பதே இப்பொழுது பிரச்னை.

மகாத்மா இப்பிரச்னையை ஒரு புது வழியில் தீர்த்தார். தொழிலாளர் அவ்வளவு பேரும் குடும்ப சகிதம் தம்முடன் வரவேண்டும். அவ்வளவு பேரும் சேர்ந்து சட்டத்தை மீற வேண்டும் என்று மகாத்மா கூறினார். இதற்கு சம்மதமில்லாதவர்கள் திரும்ப வேலைக்குச் சென்று விடலாமென கூறினார். இந்த யோசனையை

அப்படியே ஏற்பதாக தொழிலாளர் கூறினார்கள். நியூகாஸல் நகரிலிருந்து டிரான்ஸ்வால் வரை நடந்து சென்றே எல்லையைக் கடந்து கைதாக வேண்டுமென மகாத்மா நிபந்தனை விதித்தார். இதற்கும் தொழிலாளர்கள் தயார் என்றார்கள் உங்களில் எத்தனை பேர் இதற்கு தயார் என்று மீண்டும் மகாத்மா கேட்டார். நாங்கள் 5000 பேரும் தயார் என்று கூட்டத்தினர் பதில் அளித்தார்கள். மகாத்மாவுக்கே இந்த உறுதி ஆச்சரியத்தை அளித்தது.

நியூகாஸலுக்கும் டிரான்ஸ்வாலுக்கும் உள்ள தூரம் 36 மைல். இந்த தூரத்தை நடந்து சென்றே கடப்பதாகக் கூறினவர்களின எண்ணிக்கை 5000. இதில் பெரும்பாலோர் தமிழர்கள். அநேகம்பேர் குடும்பத்துடன் வந்திருந்தார்கள். ஒருமாதக் குழந்தைகள் சகிதமாகக் கூட வந்திருந்தனர். இவர்களுககு வீடு தரை, மேற்கூரை வானம், கையிருபபு ஒன்றும் கிடையாது. வழியில் இருக்கும இந்தியர், ஏதாவது கொடுத்தால் உண்பது. இல்லா விட்டால், ஆண்டவன் கொடுத்த பச்சைத் தண்ணீர் பசியாற்றும. வெயிலின் கொடுமையை தவிர்க்க மர நிழல்.

மகாத்மாவின் தலைமையில் ஆணும் பெண்ணும் குழந்தைகளும் நிறைந்த இக் கூட்டம் 1913 அக்டோபர் 13-ந் தேதி தம் பயணத்தை தொடங்கியது. கால் நடை யாத்ரீகர்கள் மாதிரி இந்திய மக்கள் நடந்து சென்றார்கள். சிறைவாசம் தரும் அந்த டிரான்ஸ்வால் எல்லையை நோக்கி அவர்கள் நடந்தார்கள். இந்த யாத்ரீகர்களின் முன்னால் மகாத்மா நடந்து சென்றார். அவர் மனதிலே, துன்பமோ, துவேஷமே துளிக்கூட இல்லை. ஞானமார்க்கத்தை தேடிச் சென்ற கௌதமன் நடை போல அவர் நடை இருந்தது. பரிசுத்த வாழ்வைப் போதிக்க அல்லும் பகலும் உழைத்த தேவகுமாரன் யேசுவின் சாயல் அவரின் செயலில் பரிணமித்தது. மாசு மருவற்ற வாழ்க்கை நடத்த வேண்டுமென பாடுபட்ட நபி நாயகத்தின அம்சங்கள் அவரிடம் காணப்



பட்டன. சத்தியமே வெல்லும் என்ற உறுதியில் மகாத்மா நடந்தார். அறமே வெல்லும் என்ற திட சித்தத்தில் 5000 இந்திய மக்கள் அவரை பின் தொடர்ந்து நடந்து சென்றனர்!

இந்தியர் யாத்திரை கிளம்பி விட்டார்களென்ற செய்தி நாற்புறமும் பரவியதும் ஏராளமான பேர் இந்த யாத்திரையில் பங்கெடுத்துக் கொள்ள ஓடோடியும் வந்து சேர்ந்தனர். தொகை 5000 லிருநது 7000 மாகப் பெருகியது. வழியில் பல ஊர்களில் தங்கி விட்டு இந்த யாத்ரீகர்கள் எல்லையை அடைந்தனர். எல்லையைக் கடக்கப் போகும் உத்தேசத்தை மகாத்மா சர்க்காருக்குத் தெரிவித்தார். இதற்கு மறுநாள் அதாவது நவம்பர் 6-ம் தேதி அன்று அதிகாலை எல்லையைக் கடப்பதாக ஏற்பாடு. காலையில் பிரார்த்தனையை நடத்தி விட்டு மகாத்மா எல்லையைக் கடந்தார். எல்லையில் குதிரைப் போலீஸார் நின்றிருந்தார்கள். வெள்ளைக்காரர்களும் ஏராளமாக வ்ந்து கூடி நின்றிருந்தார்கள். ஆனால் யாரும் இந்தியரை ஒன்றும் செய்ய வில்லை. ஒருவர் கூட கைதாக வில்லை. டிரான்ஸ்வாலை சட்டத்தை மீறி நடந்தாகி விட்டது. அதுவும் பெரும் கூட்டமாக கடந்தாகி விட்டது!

பழைய டால்ஸ்டாய் பண்ணைக்கே இந்தசத்யாக்கிரகிகள் செலலவேண்டுமென்பது மகாத்மாவின் ஏற்பாடு. அதாவது 3, 4 நாட்கள் நடந்து சென்றால் டால்ஸ்டாய் பண்ணையை அடையலாம். பாலம்போர்ட் என்ற ஊரில் அன்றிரவுப் பொழுதைக் கடத்துவதாக மகாத்மா திட்டம் போட்டிருந்தார். ஆனால் அன்றிரவு, எல்லோரும் படுத்துத் தூங்கிய பிறகு ஒரு சம்பவம் நடந்தது. மகாத்மாவை கைது செய்ய ஒரு போலீஸ் ஆபீசர் அந்த நள்ளிரவில் அனுப்பிவைக்கப் பட்டிருந்தார். மகாத்மா உடனே கைதியானார். மகாத்மா போவதற்கு முன்பாக தமக்கு பதிலாக ஸ்ரீ. பி. கே. நாயுடு என்பவரை தலைவராக நியமித்து விட்டுச் சென்றிருந்தார். தூங்கிக்கொண்டிருந்த சத்தியாக்கிரகிகளை எழுப்பி அவர் தாம் கைதியான செய்தியைக் கூறவில்லை.

மறுநாள் மகாத்மாவை வோல்க்ரஸ்ட் கோர்ட்டில் ஆஜர்படுத்தினார்கள். சர்க்கார் வக்கீல் தாம் சாட்சியங்களை இன்னும் தயாரிக்கவில்லை என்றும் சிலநாட்களுக்கு ரிமாண்டில் மகாத்மாவை வைக்கவேண்டுமென்றும் கோரினார். மகாத்மா அதுவரை தன்னை ஜாமீனில் விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரினார். சர்க்கார் வக்கீல் இதை எதிர்த்தார். எனினும் மகாத்மா மாஜிஸ்டிரேட்டை தம்மை ஜாமீனில் விடுதலை செய்யும்படி செய்துவிட்டார். விடுதலை கிடைத்ததும் மகாத்மா சத்தியாக்கிரகிகள் முகாமுக்கு திரும்பவும் வந்து சேர்ந்துவிட்டார். மறுநாள் மகாத்மாவுடன் பயணம் ஆரம்பமாகியது. போலீஸாருக்கு அது பொறுக்கவில்லை. உடனே ஸ்டான்டர்ட்டன் என்னும் ஊருக்கு அருகாமையில் பழையபடியும் கைது செய்தார்கள். இந்தத் தடவையும் மகாத்மா வாதாடி ஜாமீனில் விடுதலை பெற்று வந்து விட்டார். மாஜிஸ்டிரேட்டுகளிடம் மகாத்மாவுக்கு இருந்த செல்வாக்கே இந்த விடுதலைகளுக்கு காரணம். சர்க்காருக்கு மகாத்மா இவ்வாறு ஜாமீன் விடுதலை பெறுவது பிடிக்கவில்லை. அதோடு சத்தியாக்கிரகிகள் காட்டிவரும் மனஉறுதியும் அவர்களுக்கு பிடிக்கவில்லை. மறுபடியும் மகாத்மாவை கைது செய்வதென முடிவு செய்தார்கள். டீக்ஓர்த் என்ற இடத்தில் மகாத்மா 4 நாட்களில் 3வது முறையாக மீண்டும் கைதியானார். இதற்குள் சத்தியாக்கிரக கோஷ்டியிலிருந்த பல பிரமுகர்களையும் கைது செய்துவிட்டார்கள்.

மகாத்மாவும் இதர பிரமுகர்களும் கைதியாகிவிட்டால், மற்ற சத்தியாக்கிரகிகள் சும்மாயிருந்துவிடுவார்களென அதிகாரிகள் நினைத்தனர். இதிலும் அவர்கள் ஏமாற்றம் அடையவே, செப்டம்பர் 10-ம் தேதி அவ்வளவு சத்தியாக்கிரகிகளையும் கைது செய்வதென முடிவு செய்தனர். 3-ரயில்கள் இவர்களை ஏற்றி நேட்டால் எல்லையில் கொண்டுபோய் விட்டு விட்டு வந்து விடுவதென ஏற்பாடு செய்தார்கள்.



மகாத்மா மீது "கூத்தகை கூலிகளை வேலை நிறுத்தம் செய்யத் தூண்டினாரென்ற" குற்றச்சாட்டு விதிக்கப்பட்டது. டன்டி என்ற இடத்தில் மகாத்மா மீது விசாரணை நடந்தது விசாரணை நடத்திய மாஜிஸ்டிரேட் 9-மாத கடுங்காவல் தண்டனையை மாகாத்மாவுக்கு விதித்தார். பிறகு மகாத்மாவை வோல்க்ரஸ்ட் கோர்ட்டுக்குக் கொண்டுவந்தார்கள். அவர் மீது ஏற்கெனவே தொடரப்பட்டிருந்த வழக்குக்காக, அதாவது சத்தியாக்கிரகிகளை இழுத்துக்கொண்டு எல்லையைக் கடந்தாரென்பதற்காக 3-மாத தண்டனை விதிக்கப்பட்டது, இதற்குள் நேட்டால் எல்லையில் விடப்பட்ட சத்தியக்கிரகிகள் உடனே கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டனர் நேட்டால், டிரான்ஸ்வால் சிறைகளில் இந்திய சத்தியாக்கிரகிகள் ஏராளமாக கூட்டமாக இருந்தனர். மகாத்மாவை இவர்களுடனேயே சிறை வைத்திருந்தால் ஆபத்தென சர்க்கார் நினைத்தது. உடனே புலோம் பான்டேன் என்ற சிறைக்கு அவரை மாற்றினார்ணார்கள். இந்த சிறையில் மகாத்மா பட்ட துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல.

மகாத்மாவை வதைப்பதையும் சத்தியாக்கிரகிகளை கொடுமைப் படுத்துவதையும் கண்ட நேட்டால் இந்தியர்களிடை பிரமாதமான விழிப்பு ஏற்பட்டது. பொதுக் கூட்டங்கள் போட்டு நேட்டால் இந்தியர், சர்க்காரின் அடக்கு முறையை கண்டித்து வந்தார்கள். சர்க்கார் இவ்விஷயத்தில் உடனே தலையிட்டு வேண்டியதை செய்யாவிட்டால் நேட்டால் இந்தியர் பூராப்பேரும் போராட்டத்தில் சேரவேண்டிய அவசியம் ஏற்படுமென முழங்கினார்கள். இந்தக் கிளர்ச்சி வளர்ந்து வரும் வேகத்தைக் கண்டு சர்க்காரே சிறிது பயந்தது!

# சூழ்ச்சி பலிக்கவில்லை !

நேட்டாலில் சிறை வைக்கப்பட்ட சத்தியாக்கிரகிகளில் பெரும்பாலோர் சுரங்கத் தொழிலாளர்கள். இவர்களெல்லாம் சிறைக்கு வந்து விட்டால், சுரங்கத்தில் வேலை நடப்பதெப்படி? சுரங்கங்களை மூடினால் நிலக்கரி முடை ஏற்படும். ஆகவே சர்க்கார், இந்த பிடிவாதத்தை ரொம்ப நாளுக்குக் காட்ட முடியாது. 3 பவுன் வரியை நீக்குவார்கள். இந்தியர்களையும் கவுரமாக நடத்துவார்கள் என்று மகாத்மா நினைத்திருந்தார். ஆனால் சர்க்கார் இதற்கு ஒரு குறுக்குவழி கண்டு பிடித்தது.

நியூகாஸல் நிலக்கரி சுரங்கங்களுக்கே சத்தியாக்கிரகக் கைதிகளைக் கொண்டுவந்து அடைத்தது. "இது தான் சிறை—உங்களுக்கு விதிக்கப்பட்டிருப்பது கடுங்காவல்—ஆகவே, சுரங்க வேலையையே செய்ய வேண்டும்" என்று மிரட்டியது. இந்த சூழ்ச்சியை சத்தியாக்கிரகிகள அறிந்து கொண்டனர். சுரங்கம் எப்படி சிறையாகுமெனக் கேட்டார்கள். மேலும் கடுங்காவலுக்கும் சுரங்கத்தில் வேலை செய்வதற்கும் என்ன சம்பந்தம் என்றார்கள். அதிகாரிகள் இக் கேள்விகளுக்கு நியாயமான பதிலைக் கூற முடியவில்லை. உடனே மாமூல்படி, கைதிகளை அடிக்க ஆரம்பித்தார்கள். குதிரைச் சவுக்கைக் கொண்டுவந்து விளாறு விளாறு என்று விளாறினார்கள். சத்யாக்கிரகிகள் உடலிலிருந்து ரத்தம் கசிந்தோடியது. அதிகாரிகளுக்கு கை வலித்து அடியை நிறுத்தினர். சத்யாக்கிரகிகள் சிரித்தார்கள்! வேலை செய்யமுடியாது என்பதை திரும்பவும் அழுத்தந் திருத்தமாகக் கூறினர். அதிகாரிகளுக்கு ஆத்திரமேலிட்டதால், உணவோ உடையோ தரமுடியாது என்றனர். சத்தியாக்கிரக கைதிகள் பட்டினி யிருந்து எங்களுக்குப் பழக்கம் என்றார்கள்!



சத்தியாக்கிரகக் கைதிகளை அதிகாரிகள். கொடுமைப் படுத்தும் செய்தி வெளியாகியது. இந்தியாவுக்கு தந்திகள் மேல் தந்திகளாகப் பறந்தன. கோகலே நோய் வாய்ப்பட்டிருந்தும் இந்தியாவில் பெரும் கிளர்ச்சிக்கு ஏற்பாடு பண்ணினார். காங்கிரஸ் மகாசபையில் இந்தியருக்கு சாதகமாகத் தீர்மானங்கள் நிறைவேறின. இந்திய சட்ட சபையிலும் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. அப்போது வைஸ்ராயாக இருந்த லார்ட் ஹார்டிஞ்ச், தென்னாப்ரிக்க சர்க்காருக்கும் லண்டனுக்கும் தந்திகள் மேல் தந்திகளாகக் கொடுத்தார். இதே சமயத்தில் லண்டன் வாழ் இந்தியரும் கிளர்ச்சி செய்தார்கள். தென்னாப்ரிக்க சர்க்காருக்கு நிலைமை கஷ்டமாகிக் கொண்டு வந்தது.

இதே சமயத்தில் தென்பகுதி நேட்டாலிலிருந்த ஆயிரக்கணக்கான இந்தியத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்வதாக முன் வந்தார்கள். இவர்களை அடக்க சர்க்கார் கையாண்ட முறைகள் மிருகத்தனமானவை. நிராயுதபாணிகளாக நின்ற இந்தியரை குதிரைப்படையை தூண்டிவிட்டு தாக்கச் செய்தார்கள். கண்ணை மூடிக்கொண்டு சுட்டுக் குவித்தார்கள். அஞ்சா நெஞ்சம் படைத்து இந்தியத் தொழிலாளிகள் இவ்வளவையும் எதிர்த்து நின்றனர். சர்க்காரின் அடக்குமுறை வலுத்ததும் இவர்களின் எதிர்ப்பும் உரம் பெற்றது "3 பவுன்வரியை ஒழிக்கவேண்டும்—ஒழிக்க வேண்டும்" என்று தென் நேட்டால் இந்திய மக்கள் கிளப்பிய யுத்தகோஷம் தென்னாப்ரிக்காவையே கிடுகிடுக்கச் செய்தது!

கோகலே, தீனபந்து ஆன்ட்ரூஸையும் அவர் நண்பர் ரெவரண்ட் பியர்ஸனையும் தென்னாபிரிக்காவுக்கு அனுப்பிவைத்தார். இவர்கள் வந்து பல வெள்ளைக்கார ராஜீய வாதிகளைப் பேட்டிகண்டு சர்க்காரின் போக்கு அநியாயம் என்று கூறினார்கள். இந்திய வைஸ்ராயும் இப்போக்கு மாறவேண்டுமெனக் கோரினார் சத்தியாக்கிரகிகளின் போராட்டத்தில் இந்திய சர்க்காருக்கு

அனுதாபம் ஏற்பட்டிருப்பதாகவும் அவர் பகிரங்கப்படுத்தினார். அதோடு போராட்டம் வலுத்து வருவதை சிலதென்னாப்பிரிக்க வெள்ளையரும் விரும்பவில்லை. இந்தியர் வேலை நிறுத்தத்தால், பாதிக்கப்பட்ட முதலாளிகளெல்லாம் 'அவ்வளவு தொல்லைக்கும் காரணமான வரி ஒழிய வேண்டும்" என்று வெளிப்படையாக கூறி கிளர்ச்சி செய்தனர். ஜெனரல் ஸ்மட்ஸின் நிலைமை திண்டாட்டமாய் போய்விட்டது. உலகமே தமக்கு எதிராகத் திரளுவதாக அவர் நினைத்தார். உண்மையில் நிலைமை அப்படிதான் அப்பொழுது இருந்தது! தன்னந் தனி ஆளான மகாத்மா கிளப்பிவிட்ட எதிர்ப்பு இப்பொழுது பிரம்மாண்டமாக வளர்ந்துவிட்டது என்பதை உணர்ந்தார்.

3 பவுன் வரியை உடனே ரத்து செய்தால், தென்னாப்பிரிக்கா சரணாகதி அடைந்து விட்டதாக யாரும் நினைப்பார்கள். ஆகவே, இந்த சரணாகதி படலத்தை நாசூக்காக செய்வதென்று ஜெனரல் ஸ்மட்ஸுக்குப் பட்டது. அதற்காக 5 பேர் கொண்ட ஒரு கமிஷனை நியமித்து, இந்தியரின் புகார்களை விசாரிக்கும்படி கட்டளையிட்டார். சத்தியாக்கிரகிகளை விடுதலை செய்யாதிருக்கும் வரை இந்த கமிஷனோடு ஒத்துழைக்க முடியாது என்று இந்தியத் தலைவர்கள் கோரினார்கள். சர்க்கார் இந்தக் கோரிக்கைக்கு உட்பட்டு மகாத்மாவையும் மற்றுமிரு பிரமுகர்களையும் விடுதலை செய்தது. பாக்கிப் பேரையும் கொஞ்சம் கொஞ்சமாக விடுதலை செய்தனர்.

மகாத்மா சிறையிலிருந்து வெளியேறியதும் ஸ்மட்ஸ் நியமித்திருக்கும் கமிஷனில் 2 பேர் பிரஸித்தி பெற்ற இந்திய விரோதிகள் என்றும், இவர்கள் மூலம் எப்படி நியாயம் கிடைக்குமெனவும் கூறினார் இதை ஸ்மட்ஸுக்கும் கடிதத்தின் மூலம் தெளிவு படுத்தினார். இதற்குப் பிறகு மகாத்மாவுக்கும் ஜெனரல் ஸ்மட்ஸுக்குமிடையே பல பேட்டிகள் நடந்தன. ஜெனரல் ஸ்மட்ஸிடம் முன்பு காணப்பட்ட முறுக்கோ, அகம்பாவமோ, அலட்சிய மனப்பான்மையோ இந்தத் தடவை காணப்படவில்லை.



மகாத்மா கூறின அநேக கோரிக்கைகளுக்கு அவர் உடன் பட்டார். ஆனால் கமிஷனில் இந்தியர் ஒருவரை மட்டும் சேர்க்க முடியாது என்றார். அப்படி சேர்த்தால் கோரிக்கைகளை நிறைவேற்றுவது கடினமாக இருக்குமென்று சமாதானம் கூறினார். மகாத்மாவுக்கு இது திருப்தி அளித்தது. மகாத்மாவும், கமிஷன் விசாரணை முடியும் வரை சத்தியாக்கிரகம் நடக்காது என்று உறுதி கூறினார்.

இந்த சமயத்தில் தென்னாப்பிரிக்காவின் ரயில்போக்குவரத்தையே ஸ்தம்பிக்க செய்யும்படியாக தொழிலாளர் வேலை நிறுத்தம் நடந்தது. இந்த வேலை நிறுத்தத்துக்கும் இந்தியர் பிரச்னைக்கும் சம்பந்தமில்லை. இந்த நெருக்கடியினால் தென்னாப்பிரிக்கா சர்க்கார் தடுமாறிக் கொண்டிருந்தது. இந்தத் தொழிலாளருடன் இந்தியரும் சேர்ந்துவிட்டால், நாட்டில் சர்க்காரே ஸ்தம்பித்துவிடுமென ஸ்மட்ஸ் பயந்தார். இந்த பயத்தை மகாத்மா போக்கினார். "சர்க்காருககு துன்பம் நேரிட்டிருக்கும் இந்த சமயத்தில், நாமும் சேர்ந்து துன்பம் கொடுத்து காரியத்தைச் சாதித்துக் கொள்ளுவது என்பது இந்தியர் நோக்கமல்ல. அப்படி செய்வது சத்தியாக்கிரகம் ஆகாது. ஆகவே, கவலை வேண்டியதில்லை" என்று கூறினார். மகர்த்மாவின் இப்போக்கை ஸ்மட்ஸ் உள்பட எல்லா வெள்ளைக்காரர்களும் பாராட்டினார்கள். மகாத்மா பெரிய உதவியை செய்து விட்டாரென்று அனைவரும் பாராட்டினார்கள். லண்டனிலிருந்தும் மகாத்மாவுக்கு இதற்காக பாராட்டு தந்திகள் வந்தன. ஸ்மட்ஸே மகாத்மாவை வரவழைத்து இதற்காக தம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்தியர் பிரச்னையை விசாரிக்க கமிஷன் கூடுவதற்கு சில நாட்களுக்கு முன்பாக, ஸ்மட்ஸுக்கு மகாத்மா ஒரு கடிதம் எழுதினார். அதில் கீழ்க்காணும் கோரிக்கைகள் இருந்தன:—

1. 3-பவுன் வரியை ரத்து செய்யவேண்டும்.

2. ஹிந்து, முஸ்லிம், பார்ஸி மதங்களின்படி நடந்த கலியாணங்களை எல்லாம் அங்கீகரிக்க வேண்டும்.

3. இந்தியருக்கு விரோதமாக இருக்கும் சட்டங்கள், வரிகள் எல்லாம் ரத்தாக வேண்டும்.

4. சத்தியாக்கிரக கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்.

மகாத்மாவின் இக்கடிதத்துக்கு ஜெனரல் ஸ்மட்ஸ் உடனே பதிலளித்தார். முதல் மூன்று கொள்கைகள் சம்பந்தமாக கமிஷன் சிபார்சு தெரியவேண்டுமென்றும் 4-வது கோரிக்கையான விடுதலை விஷயமாக உத்தரவுகள் அனுப்பப்பட்டு விட்டதாகவும் ஸ்மட்ஸின் பதில் கூறியது. உடனே மகாத்மா சத்தியாக்கிரக இயக்கத்தை நிறுத்தினார். சிறையில் தண்டனை அனுபவித்துக்கொண்டிருந்த சத்தியாக்கிரகிகளும் விடுதலை ஆகி வெளிவந்தனர்.

கமிஷன் விசாரணை ஆரம்பமாகியது. சில நாட்களில் கமிஷன் தங்களின் அறிக்கையைப் பிரசுரித்தார்கள். மகாத்மாவின் கோரிக்கைகளை எல்லாம் கமிஷன் அங்கீகரித்ததாக அதிலிருந்து தெரிந்தது. 3-பவுன் வரியிலிருந்து, கலியாண விஷயம்வரை இந்தியருக்கு சாதகமாக கமிஷன் தீர்ப்பளித்தது. சர்க்கார் இவற்றை காரியாம்சத்தில் கொண்டுவர வேண்டியதுதான் பாக்கி. இந்த கமிஷனின் அறிக்கைக்கு ஜெனரல் ஸ்மட்ஸ் தான் காரணம். இதற்காக மகாத்மா, பழைய சம்பவங்களை எல்லாம் மறந்து அவரைப் பாராட்டினார். இந்தியர் அனைவரும் சந்தோஷக்கடலில் ஆழ்ந்தனர். கடல் கடந்த தம் மக்கள் வெற்றி கண்டுவிட்டதாக இந்தியா மகிழ்ச்சி கொண்டது. ஜெனரல் ஸ்மட்ஸ் கமிஷன் சிபார்சுகளை ''இந்திய நிவாரண மசோதா'' என்று கொண்டுவந்து யூனியன் பார்லிமென்டில் அதை நிறைவேறவும் செய்தார். இந்தியருக்கு இருந்த பெரும் தடைகளெல்லாம் இந்த சட்டத்தின் மூலம் நீங்கின.



கேப்டவுனில் மகாத்மா காந்திக்கும் ஜெனரல் ஸ்மட்ஸுக்கும் நடந்த பேட்டியில் இம்மாதிரி ஒரு சட்டத்தை தாம் கொண்டுவரப் போவதாக ஜெனரல் ஸ்மட்ஸ் அறிவித்தார். மகாத்மாவின் அங்கீகாரத்தின் பேரிலேயே ஸ்மட்ஸ் இதற்கு மசோதா தயாரித்தார். ஆகவே, இதை ஸ்மட்ஸ்—காந்தி ஒப்பந்தம் என்று சொல்வது உண்டு.

இப்படியாக 1906-ம் வருஷம் ஆரம்பமான சத்தியாக்கிரகம் 8-வருஷங்களாக நடந்து கடைசியில் 1914-ம் வருஷம் மே மாதம் முடிவடைந்தது. இந்த 8-வருஷத்தில் இந்தியர் அடைந்த கஷ்டங்கள் ஏராளம். நிறத்திமிருக்கு எதிராக நடத்திய போரிலே உயிர்ப்பலிகளும் ஏராளமாக கொடுக்கபபட்டன. போராட்டம் ஆரம்பமாவதற்கு முன்னால் பணக்காரர்களாக இருந்த பலர் முடிவில் வறியர்களாக இருந்தார்கள். இவை எல்லாவற்றையும் மறந்தாலும், நாகப்பன், நாராயணசாமி, வள்ளியம்மை போன்ற தியாகிகளை யார் மறக்க முடியும்? அல்லது மகாத்மாவைத்தான் மறக்க முடியுமா? கண்காணா தேசத்தில், புழுப்போல மதிக்கப்பட்ட இந்தியருக்கு விழிப்பை ஏற்படுத்தியது மகாத்மா அந்த விழிப்பைக் கொண்டு ஐக்கியத்தை உண்டாக்கியதும் மகாத்மா. அத்த ஐக்கியத்தின் துணையைக் கொண்டு அறப்போரும் நடத்தினார். அந்த அறப்போரில் வெற்றியும் கண்டார். அதுவும் அந்நிய நாட்டிலே. சொந்த நாட்டின் உதவியை துளிக்கூட எதிர்பாராமல் போராட்டத்தை நடத்தினார். இதற்காக அவர் பட்ட துன்பம், நஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. சொந்த நாடே பரர்க்கடிமையாக இருக்கும்போது, வெளிநாட்டிலே போராடுவது என்பது எவ்வளவு கஷ்டம்? அதிலும் வெள்ளைக்காரர்களுக்கு எதிராகப் போராடுவது என்பது சாமான்ய காரியமல்ல. இதற்காக மகாத்மாவை என்ன சொல்லி வணங்கினாலும் போதாதுதான்!

# தொல்லை ஓயவில்லை

*1914*-ம் வருஷம் ஜூலை 18-ம் தேதி அன்று மகாத்மா லண்டனுக்குக் கிளம்பினார். போவதற்கு முன்னால் ஜெனரல் ஸ்மட்ஸுக்கு ஒரு கடிதம் எழுதினார். நிராதரவாக இருக்கும் இந்தியர்களை ஸ்மட்ஸின் கையிலே ஒப்படைத்துவிட்டுப் போவதாக மகாத்மாவின் கடிதம் கூறியது அதோடு இந்தியர் மீதிருந்த பெரும் தடைகள் நீங்கியதென்றும், இன்னும் சில தடைகள் நீங்காமலிருக்கின்றன என்றும் கூறினார். இதற்கு ஜெனரல் ஸ்மட்ஸ் அளித்த பதில் பின்வருமாறு இருந்தது :—

> "இன்னும் சில சட்டங்கள் இந்தியருக்கு கஷ்டம் ஏற்படுத்துவதாக இருக்கின்றன என்று கூறுகிறீர்கள். ஆனால் இந்த சட்டங்களை அனுஷ்டிக்கும் இந்த சர்க்கார், நியாயமாகவே நடக்கும். பரஸ்பர நலனை ஒட்டி என்னென்ன செய்தால் சுமுகமான நிலைமை இருக்குமோ அவைகளையே செய்து வரும். இதுவே எங்களின் கொள்கை. எப்பொழுதும் போலவே இனியும் அனுஷ்டித்து வருவோம்......"

இக்கடிதத்துக்கு நன்றி தெரிவித்துவிட்டு மகாத்மா தென்னாப்பிரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குக் கிளம்பினார். போகும்போது இந்தியருக்கு ஒரு புத்திமதி சொன்னார். "8 வருஷங்களாக நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தின் விளைவாக சர்க்காரின் போக்கு மாறி யிருக்கிறது. அதன் விளைவாக 'நமக்கு எதிராக இருந்துவந்த பல சட்டங்கள் ரத்தாகி இருக்கின்றன. இதற்காக இந்தியர் அனைவரும் சர்க்காருக்கு நன்றி காட்டவேண்டும். இந்த ஏற்பாட்டை சிலர் எதிர்க்கிறார்கள். சர்க்கார் பழையபடியும் தனது உண்மை சொரூபத்தைக் காட்டிவிடுமென்று கூறுகிறார்கள்.



இப்படி ஒருவரை சந்தேகிப்பது தப்பு. சர்க்கார், அவர்கள் சந்தேகிக்கிறபடி நடந்தால், உங்களுக்கு என்ன செய்வது என்பது தெரியும். சத்தியாக்கிரகம் என்ற வல்லமை மிக்க ஆயுதம் உங்கள் கையில் இருக்கவே இருக்கிறது" என்று மகாத்மா கூறிவிட்டு கப்பல் ஏறினார். மகாத்மா லண்டனில் இருக்கும் பொழுதே முதல் மகாயுத்தம் ஆரம்பமாகியது. தென்னாப்பிரிக்க யூனியன் சர்க்கார் பிரிட்டன் பக்கம் சேர்ந்தது. இப்பொழுது தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர் நிலைமை என்ன என்ற பிரச்னையும் எழுந்தது.

போயர்—பிரிட்டிஷார் யுத்தம் எழுந்தபோதும் இதே பிரச்னை இந்தியருக்கு எழுந்தது. அப்பொழுது தென்னாப்பிரிக்காவிலிருந்த மகாத்மா, இந்தியர் பிரிட்டிஷாரைத்தான் ஆதரிக்க வேண்டுமெனக் கூறினார். ஆகவே, இந்தத் தடவையும் அதுதான் கொள்கை என்று தென்னாப்பிரிக்க இந்தியர்கள் முடிவு செய்தார்கள். உடனே டர்பன், மாரிட்ஸ்பர்க், ஜோனாஸ்பர்க் ஆகிய முக்கிய நகரங்களில் இந்தியர் பிரம்மாண்டமான கூட்டங்கள் போட்டு, சர்க்காரின் முயற்சியை தாங்கள் முழுமனதுடன் ஆதரிப்பதாகக் கூறினார்கள். பட்டாளத்தில் சேருவதிலிருந்து பண உதவிவரை செய்வதாகக் கூறினார்கள். இந்தியருக்கு துப்பாக்கி பிடித்து சண்டை போடத் தெரியாது என்று பிரிட்டிஷார் நினைக்கும் காலமது. ஆகவே இந்த பட்டாளத்தில் சேரும் உதவியை அவர்கள் முதலில் ஏற்கவில்லை. பிறகு கிழக்காப்பிரிக்காவில் யுத்தம் சூடு கண்டதும், இந்தியரை பட்டாளத்தில் சேர அனுமதி கொடுத்தனர். அதுவும் சண்டை நடக்கும் அணிக்குப் பின்னாலிருந்து கொண்டு வைத்திய உதவி அளிக்கவே இந்தியரை சேர்த்துக் கொண்டார்கள். நிலைமை சுமுகமாகவே போய்க்கொண்டிருந்தது. கிழக்காப்பிரிக்காவில் ஜெனரல் ஸ்மட்ஸ் ஜெர்மனியருடன் அப்பொழுது போராடிக்கொண்டிருந்தார்.

*1917*-ம் வருஷம் ஏகாதிபத்திய நாடுகளின் மகாநாடு லண்டனில் கூடியது. இம்மகாநாட்டுக்கு யூனியன் சர்க்

கார் பிரதிநிதியாக சென்ற ஜெனரல் ஸ்மட்ஸ் இந்தியரைப் பாராட்டிப் பேசினார். இதற்கு அவர் என்னென்னவோ காரணங்களைக் கூறினார். ஆனால் உண்மைக் காரணம் வேறு. பிரிட்டிஷாரின் யுத்த முயற்சிக்கு இந்தியாவின் உதவி அப்பொழுது மிகமிக வேண்டியிருந்தது. அதோடு துப்பாக்கி பிடித்து போராடத் தெரியாது என்ற நினைப்பை இந்தியர் அப்பொழுது தவிடுபொடியாக்கி இருந்தனர். மத்தியகிழக்கில் இந்தியர் போராடியவிதம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே மலைக்கச் செய்திருந்தது. ஆகவே இந்தியரை பழைய தோரணையில் மதிப்பது என்பது முடியாது. அவர்களை ஏகாதிபத்திய மகாநாட்டில் இழிவு படுத்தினால் அது ஆபத்தாகிவிடும். லண்டன் சர்க்காரே முதலில் கோபமடையும். இத்யாதி காரணங்கள் இருந்ததால்தான் ஸ்மட்ஸும் இந்தியரைப் பாராட்டிப்பேசினார். மற்றபடி அவருக்கு இந்தியர் மீது கருணை பிறந்துவிட்டதாக அர்த்தமில்லை.

"இந்தியர்மீது தென்னாப்ரிக்காவில் நிறத்துவேஷம் காட்டப்பட்டால், அதை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளலாம். இந்தியர்மீது எங்களுக்கு விரோதமோ துவேஷமோ இருப்பதாக நினைப்பதே தப்பு" என்று ஸ்மட்ஸ் அம்மகாநாட்டில் பேசினார். இந்தியர் இப்பேச்சைக் கேட்டு சந்தோஷப் பட்டார்கள். ஆனால் யுத்தம் நின்றபிறகு, ஸ்மட்ஸ் துரையின் பேச்சு வேறு விதமாக இருந்தது. இந்தியர் சமர்ப்பித்த புகார் மனுக்களை எல்லாம் தென்னாப்பிரிக்கா சர்க்கார் சட்டை பண்ணவே இல்லை.

1921-ம் வருஷம் திரும்பவும் ஏகாதிபத்திய நாடுகள் மகாநாடு கூடியது. இந்தியாவின் பிரதிநிதியாக இம் மகாநாட்டுக்குச் சென்ற காலஞ்சென்ற வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியார், இந்திய மக்களை தென்னாப்ரிக்கா சர்க்கார் கொடுமைப்படுத்துவதாக எடுத்துக் கூறினார். இந்தியருக்கு பிரஜா உரிமை வழங்கவேண்டுமென அவர் மகாநாட்டில் வாதாடினார். ஏழை சொல் அம்ப



லம் ஏறுது! அதேபோல இந்தியாவின் சொல் மகாநாட்டில் ஏறவில்லை. இந்தியருக்கு பிரஜா உரிமை தரவேண்டியது தான் என்றும் அதை தென்னாப்ரிக்கா நிராகரிக்க உரிமை கொண்டே இருக்கிறதெனவும், இரண்டும் கெட்டான் நிலைமையில் ஏகாதிபத்திய மகாநாடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு சும்மா இருந்துவிட்டது.

தென்னாப்ரிக்க இந்திய மக்கள் ஏகாதிபத்திய மகாநாடுகள் நடத்திவரும் ஜால வித்தைகளை கூர்மையாக கவனித்து வந்தார்கள். மகாத்மாவும் கவனித்துவந்தார். மகாத்மா காந்தி உருவாக்கின நேட்டால் இந்தியர் காங்கிரஸ் இப்பொழுது வேலை செய்யாமலிருந்தது. ஆகவே ஒரு புதிய சங்கத்தை தோற்றுவிக்கவேண்டுமென முனைந்தார்கள். தென்னாப்ரிக்க இந்தியர் காங்கிரஸ் என்று ஒரு ஸ்தாபனத்தை உடனே ஆரம்பித்தார்கள். அடிக்கடி பொதுக்கூட்டங்கள் நடந்து வந்தன. தென்னாப்ரிக்க சர்க்காரின் போக்கை இக்கூட்டங்கள் மூலம் இந்திய மக்களுக்கு எடுத்துரைத்து வந்தார்கள். இந்தியரிடையே முன்பிருந்த ஐக்கியத்தை ஏற்படுத்தவும் இந்த ஸ்தாபனம் முயன்றது. இந்தியர் பழையபடியும் எதிர்ப்பு திரட்டுகிறார்கள் என்பதை அறிந்த வெள்ளையர்கள் சும்மா இருக்க விரும்பவில்லை. தாங்களும் போட்டிக்காக, "தென்னாப்ரிக்கர் லீக்' என்று ஒரு ஸ்தாபனத்தை துவக்கினார்கள். இந்த ஸ்தாபனத்தின் சார்பில் நடக்கும் கூட்டங்களில், இந்தியரை வாய்க்கு வந்தபடி திட்டுவது. மற்றொரு மூச்சில், "இந்தியரை இன்னும் விரட்டாமல் வைத்திருக்கும் சர்க்கார்" என்று வசை புராணம் பாடுவது. இதுதான் "தென்னாப்ரிக்கர்" என்ற வேஷத்தில் வேலை செய்துவந்த வெள்ளைக்கார ஸ்தாபனத்தாரின் வேலை.

1922-ம் வருஷம் நேட்டால் மாகாண சர்க்கார் மூன்று அவசரச் சட்டங்களைக் கொண்டு வந்தார்கள். அந்த அவசரச் சட்டங்கள் ஒவ்வொன்றும் இந்தியரை நேட்டாலிலிருந்தே விரட்டும் நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டன.

முதல் அவசரச் சட்டம் இந்தியரின் வியாபாரத்தை முறித்தது.

இரண்டாவது சட்டம் நேட்டால் நகர சபையில் இந்தியருக்கு இருந்த வாக்குரிமையைப் பறித்தது.

கடைசி அவசரச் சட்டம் ஐரோப்பியர் வாழும் பிரதேசத்தில் இந்தியர் நிலம் எதுவும் வைத்திருக்கக்கூடாது என்று தடுத்தது.

இந்த அவசரச் சட்டங்கள் வெளியானதும் மகாத்மா ஆச்சரியப்பட்டார். தென்னாப்பிரிக்க இந்தியரை அங்கிருந்து விரட்டி அடிக்கவே, இது சூழ்ச்சி என்று எழுதினார். இந்தியாவில் இந்த அவசரச் சட்டங்களை எதிர்த்து கிளர்ச்சி தோன்றியது. தூங்கிக் கொண்டிருந்த இந்திய சர்க்கார் கிளர்ச்சியைக் கண்டு பயந்து போனார்கள். உடனே லண்டனுக்கு தாக்கீது கொடுத்தார்கள். ஏற்கனவே, இந்தியாவில் பிரிட்டிஷார் மீது ஆத்திரம் அதிகரித்து வருவதாகவும் தென்னாப்பிரிக்காவின் போக்கு இந்த ஆத்திரத்தை கூடக் கொஞ்சம் அதிகரிக்கச் செய்யுமென்றும் வைஸ்ராய் கடிதம் எழுதினார். அதன் பேரில் லண்டன் சர்க்கார், "இவ்விஷயத்தை ஏகாதிபத்திய மகாநாட்டில் கவனிக்கலாமென" பதிலத்தது.

1923-ல் ஏகாதிபத்திய மகாநாடு கூடியது. ஸர் தேஜ்பகதூர் சப்ரூ அம் மகாநாட்டில் இந்தியரை தென்னாப்பிரிக்க சர்க்கார்படுத்தும் கொடுமையை விளக்கி அழகாகப் பேசினார். "இதே நிலைமை நீடித்தால், ஏகாதிபத்திய நாடுகளுக்குள்ளேயே பெரிய யுத்தம் மூளும்" என்று எச்சரித்தார். இதற்கு பதிலளித்த ஜெனரல் ஸ்மட்ஸ் ரொம்ப ஆத்திரமாகப் பேசினார். தென்னாப்பிரிக்க இந்தியரின் பிரச்னை, உள் நாட்டுப் பிரச்னையே ஒழிய ஏகாதிபத்திய மகாநாட்டில் விவாதிக்க வேண்டிய பிரச்னை அல்ல என்றார். அப்படி விவாதிப்பதாக இருந்தால், இந்தியர் தென்னாப்பிரிக்காவில் வாக்குரிமை கேட்பதும், பிரஜா உரிமை கேட்பதும் நின்று விட வேண்டும் என்றார். அதாவது இந்தியரை விரட்டி அடிப்ப



தென்ற அகம்பாவம் அவர் வாதத்தில் தொனித்தது. ஜெனரல் ஸ்மட்ஸின் ஆத்திரம் தொனிக்கும் பேச்சைக் கேட்ட பிரிட்டிஷ் சர்க்கார் வெல வெலத்துப் போய் விட்டது. பதில் ஒன்றும் சொல்ல வில்லை. இந்தியாவின் புகாரை "மெம்பர் நாடுகளுக்குள்ளேயே ஒத்துபோக வேண்டும்—சௌஜன்யம் நிலவ வேண்டும்" என்று சமாதானம் சொல்லி தட்டிக்கழித்து விட்டது.

தென்னாப்பிரிக்க இந்தியர் இந்த முடிவைக் கேட்டு அலறினார்கள். நேட்டால் சர்க்காரின் எண்ணமே இந்தியரை விரட்ட வேண்டுமென்பதுதான் என்று கதறினார்கள். தொலை தூரத்திலிருக்கும் லண்டன் சர்க்காருக்கு இந்தக் கதறல் எட்டவே இல்லை. இந்தியாவுக்கு எட்டியது. ஆனால் இந்தியா அப்பொழுது என்ன செய்ய முடியும்? அனுதாபம் காட்டுவதை விட வேறொன்றும் செய்ய முடியாத நிலையில் இந்தியா அப்பொழுது இருந்தது.

1924-ல் தென்னாப்பிரிக்காவில் பொதுத் தேர்தல் நடந்தது. ஜெனரல் ஹொர்ட்ஜாக், ஸ்மட்ஸுக்கு எதிராகப் போட்டி போட்டார். இவர் தீவிர தேசிய வாதி. ஸ்மட்ஸ் பிரிட்டிஷ் சர்க்காரிடம் தாஜாக் கொள்கை காட்டுவதைக் கண்டிப்பவர். இவரின் தேர்தல் பிரசாரம் முழு வேகத்தில் நடந்தது. இதன் பயன் ஸ்மட்ஸ் மண்ணைக் கவ்வினார். ஜெனரல் ஹொர்ட்ஜாக் கட்சி வெற்றி பெற்றது. இதனால் இந்தியருக்கு ஏதாவது நன்மை உண்டா என்றால் பூஜ்யம்தான்!

# ஹெர்ட்ஜாக் ஜபர்தஸ்து

ஜெனரல் ஹெர்ட்ஜாக் ஒரு போயர். பிரிட்டிஷார் ஆதிக்கம் அவருக்குப் பிடிக்காது. அதைவிட, அவருக்குப் பிடிக்காதது இந்தியர். கறுப்பு நிறத்தவராகிய இந்தியர் சமமான உரிமை கேட்பதா என்று கர்ஜிப்பவர். இந்தியர் பூராப் பேரையும் கூண்டோடு சேர்த்து கைலாச மனுப்ப வேண்டு மென்பது இவரின் கொள்கை. இதை அவர் பகிரங்கமாகக் கூட சொல்லி யிருந்தார். ஹிட்லருக்கு யூதர்மீது இருந்த வெறுப்பை விட, இந்தியர் மீது இவருக்கு அதிகமான வெறுப்பு இருந்தது. இவர் அதிகாரம் ரொம்ப நாளுக்கு நீடித்திருந்தால், இவருக்கும் ஹிட்லரின் கதிதான் ஏற்பட்டிருக்கும். ஆனால் இவரின் பூர்வ புண்ணிய பலத்தினால் இவருக்கு அதிகாரம் ரொம்பக்காலம் நீடிக்கவில்லை!

ஹெர்ட்ஜாக் யூனியனுக்கு பிரதமரானதும், டாக்டர் மாலானை உள் நாட்டு மந்திரியாக நியமித்தார். டாக்டர் மாலான் ஹெர்ட்ஜாக்கைவிட எந்தவிதத்திலும் குறைந்தவரல்ல. பழுத்த பிற்போக்காளர். நிறவெறியின் அவதாரமே இவர் தானோ என்று சந்தேகிக்கும் படியாக இவரின் பேச்சும் செயல்களும் இருந்தன. டாக்டர் மாலான் "பிரதேசம் ஒதுக்கும் மசோதா" என்று ஒரு மசோதாவை இந்தியருக்கு விரோதமாகக் கொண்டு வந்தார். இந்த மசோதாவைப் பிரேரித்த டாக்டர் மாலான் கீழ் வருமாறு தமது கருத்தைக் கூறினார்:—

"இந்தியர் இந்த தேசத்துக்கு அந்நியர் என்பதையும், அவர்களின் தொகையைக் குறைத்தால் ஒழிய, இந்தியர் பிரச்னை தீரவே வழியில்லை என்பதையும் ஆரம்பத்திலேயே நான் கூறிவிட விரும்புகிறேன். இந்த நோக்கத்தோடுதான் இந்த மசோதா தயாரிக்கப் பட்டிருக்கிறது. இந்நோக்



கத்தை பலாத்காரத்தின் மூலம் நாங்கள் நிறைவேற்ற விரும்ப வில்லை. இந்நாட்டை விட்டு வெளியேறுங்கள் என்று மெள்ள மெள்ள இந்தியரைத் தூண்டுவது; இந்த நாடு உங்களுக்கு ஒத்து வராது என்று நயமாக அவர்களிடம் கூறி, வெளியேறும்படி செய்வது; இவைதாம் இந்த மசோதாவின் தாத்பரியம்........."

டாக்டர் மாலான் தம் கருத்தை பகிரங்கப்படுத்தி விட்டதற்காக மகாத்மா சந்தோஷப்பட்டார். இந்தியாவில் டாக்டர் மாலானின் பேச்சு பெரும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. உடனே இந்திய சர்க்கார் ஸ்ரீ பாடிஸன் என்பவர் தலைமையில், தென்னாப்பிரிக்க சர்க்காருக்கு ஒரு தூதுகோஷ்டியை அனுப்பிவைத்தார்கள். இந்த மசோதாவை சட்டமாக்க கூடாது என்று இத் தூதுகோஷ்டி ஜெனரல் ஹெர்ட்ஜாக்கிடம் முறையிட்டது. இதே சமயத்தில் தென்னாபிரிக்க இந்தியர் காங்கிரஸும் பிரமாதமான அளவில் கிளர்ச்சியைத் துவக்கியது. இந்திய வைஸ்ராயாக அப்பொழுது லார்ட் ரீடிங் இருந்தார். அவருக்கு தென்னாப்பிரிக்க காங்கிரஸ்காரர்கள் கடிதம் எழுதி, தங்களுக்கு பேட்டி அளிக்கவேண்டுமெனவும், தாங்கள் நேராக வந்து இந்தியர் படும் கஷ்டங்களைக் கூறுவதாகவும் கோரினார்கள். லார்ட் ரீடிங் இதற்கு இசையவே, தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியர் காங்கிரஸ் தூதுகோஷ்டி ஒன்று இந்தியா புறப்பட்டது. ஸ்ரீமதி சரோஜினி நாயுடுவை இந்திய காங்கிரஸ் தென்னாபிரிக்காவுக்கு தூது அனுப்பியது. ஸ்ரீமதி சரோஜனி நாயுடு ஒரு வட்டமேஜை மகாநாடு கூட்டவேண்டுமெனக் கூறினார். இந்த யோசனையின்படி லார்ட் ரீடிங் ஒரு வட்டமேஜை மகாநாட்டைக் கூட்டவேண்டுமென தென்னாப்பிரிக்க சர்க்காருக்கு எழுதினார். இம்மகாநாட்டில் இந்தியர் பிரச்னையை விவாதித்து முடிவுகட்டலாமென்று ரீடிங்கின் கடிதம் கூறியது. லண்டன் சர்க்கார் மூலமும் தென்னாப்பிரிக்கா இதற்கு உடன்படும்படி செய்ய நெருக்கடிகள் கொண்டுவரப்பட்டன. கடைசியாக தென்னாப்பிரிக்க சர்க்கார் இதற்கு

இணங்கினர். 1927-ம் வருஷம் ஜனவரி மாதம் கேப்டவுனில் வட்டமேஜை மகாநாடு கூடியது. இந்த மகாநாட்டில்தான் கேப்டவுன் ஒப்பந்தம் என்ற சரித்திரப் பிரஸித்தி பெற்ற ஒப்பந்தம் கையெழுத்தாகியது. அந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களாவன :—

> தென்னாப்பிரிக்காவில் மேலைய நாடுகளின் நாகரிக வாழ்வுதான் இருக்கவேண்டுமென்பதை இரு சர்க்கார்களும் ஒப்புக்கொள்ளுகின்றன. அதாவது இந்தியர் ஐரோப்பியர் மாதிரி, உடை பழக்க வழக்கம் முதலியவைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு உடன்பட மறுக்கிறவர்கள் வெளியேற விரும்பினால், அவர்களுக்காக சர்க்கார் ஒரு திட்டம் வகுத்துத் தரும். இவ்வாறு வெளியேறும் இந்தியர்கள், இந்தியாவை அடைந்ததும், இந்திய சர்க்கார் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்வதாக ஒப்புக்கொள்ளுகிறது.
>
> ஐரோப்பியர் நாகரிகத்தை மேற்கொண்டு, தென்னாப்பிரிக்காவிலேயே இருக்க விரும்பும் இந்தியருக்கு தென்னாப்பிரிக்க சாக்கார் வேண்டிய உதவிகளை செய்வதாக வாக்களிக்கிறது. அதோடு தென்னாப்பிரிக்க இந்தியரின் நலனைக் கவனித்துவர, இந்திய சர்க்காரின் ஏஜென்ட் ஜெனரல் ஒருவரையும் அனுப்பலாமென உரிமைதருகிறது.
>
> தென்னாப்பிரிக்காவிலேயே வாழ விரும்பும் இந்தியருக்கு உதவிகள் செய்ய சர்க்கார் ஒரு கமிட்டியை நியமிக்கும். அக்கமிட்டி இந்தியரின் கல்வி நிலைமை முதலியவைகளை விசாரித்து வேண்டியதைச் செய்யும். மேலும் இந்தியருக்கு கல்வி வசதிகளையும் செய்து தரும். டர்பன் சுற்றுப்புறத்தில் இந்தியர் குடியேற அனுமதிக்கப் படுவார்கள். இந்தியர் சம்பளம், கூலி, ஆகிய பிரச்னைகளைக் கவனித்து இந்தியர் கஷ்டங்களைப் போக்க வேண்டியவற்றை செய்வதாக தென்னாப்பிரிக்க சர்க்கார் ஒப்புக்கொள்ளுகிறது………"



இந்த ஒப்பந்தத்தில் தென்னாப்பிரிக்காவின் சார்பாக ஜெனரல் ஹெர்ட்ஜாக் கையெழுத்திட்டார். இந்திய சர்க்காரின் சார்பாக ஸர் ஹபிபுல்லா கையெழுத்திட்டார். மேலைய நாகரிகத்தை அனுஷ்டிக்க முடியாது என்ற எண்ணத்தில் இந்தியர் ஏராளமாக வெளியேறிவிடுவார்கள் என்ற நினைப்பிலேயே இந்த ஒப்பந்தத்தை தென்னாப்பிரிக்க சர்க்கார் ஏற்றது. டாக்டர் மாலான் கொண்டுவந்த மசோதா, இந்த ஒப்பந்தத்தின் மூலம் வாபஸ் வாங்கப்பட்டது.

தென்னாப்பிரிக்காவில் ஒப்பந்தம் ஏற்பட்டது என்ற செய்தி எங்கும் பரவியது. மகாத்மா ஒப்பந்த ஷரத்துகளை நியாயமானவை என்று சொல்லி பாராட்டினார்.

1928-ம் வருஷத்தில், தென்னாப்பிரிக்க வெள்ளையர் எதிர்ப்பார்த்தது போலவே, 3000 இந்தியர்கள் வெளியேறினார்கள். மேலைய நாகரிகத்தை வெறுத்துதான் இவர்கள் சென்றதாக டாக்டர் மாலான் பிரசாரம் செய்தார். இது உண்மையல்ல. வெள்ளையர்களின் கொடூரத்தையும் நிறவெறியையும் சகிக்க முடியாமல்தான் இவர்கள் வெளியேறினார்கள். வருஷா வருஷம் இவ்வாறு மனமுடைந்து செல்லுகிறவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டே வந்தது. 1933-ம் வருஷத்துக்குள் 15000 பேர் வெளியேறி இந்தியா வந்து சேர்ந்தனர். வெள்ளைக்காரர்களுக்கு இந்தத் தொகை திருப்தி அளிக்கவில்லை. இந்தியரின் ஜனத்தொகை சுமார் 38-லட்சம். இந்த 38-லட்சம் பேரும் வெளியேற வேண்டுமென அவர்கள் எதிர்பார்த்தார்கள். ஆகவே, 15,000 பேர் வெளியேறியது. அவர்களுக்குத் திருப்தியை உண்டு பண்ணவில்லை. உடனே தங்களின் மாமூல் கொள்கையைக் கையாண்டார்கள். முதலில் கேப்டவுன் உடன்படிக்கை சுத்த மோசமென்றார்கள். பிறகு, இந்தியரை ஒடுக்க புதுச் சட்டமே தேவை என்று கிளர்ச்சி செய்தார்கள். இந்த சமயத்தில் அவர்களுக்கு சாதகமாக ராஜிய அணியில் ஒரு புது நிலைமை ஏற்பட்டது.

தேர்தலில் மண்ணைக் கவ்விய ஜெனரல் ஸ்மட்ஸ், ஹெர்ட்ஜாக்குடன் காதல் நாடகம் நடத்தினார். "நீயும் டச்சுக்காரன்—நானும் டச்சுக்காரன், நமக்குள் ஏன் சண்டை" என்றார். ஹெர்ட்ஜாக்குக்கு இந்த உண்மை ரொம்ப கவர்ச்சியாக இருந்தது!" சரி ஒத்துப் போவோம்!" என்றார். உடனே ஹெர்ட்ஜாக்—ஜெனரல் ஸ்மட்ஸ் நேச ஒப்பந்தம் ஒன்று 1934-ல் ஏற்பட்டது. இருவருமாக சேர்ந்து "ஐக்கிய தென்னாப்ரிக்க தேசியக் கட்சி" என்று ஒரு புதுக்கட்சியைத் தோற்றுவித்தார்கள். இதற்குப் பதிலாக ஜெனரல் ஸ்மட்ஸுக்கு உதவிப் பிரதமர் வேலை கிடைத்தது! டாக்டர் மாலானுக்கு இந்த ஸ்மட்ஸ்—ஹெர்ட்ஜாக் கூட்டுறவு பிடிக்கவில்லை. உடனே அவர் தம் பதவியை ராஜினாமா செய்துவிட்டுப் போய்விட்டார். அவருக்குப் பதிலாக ஸ்ரீ ஹாப்மேயர் என்பவர் உள்நாட்டு மந்திரியாக நியமனமானார்.

இதற்கிடையே, 1932-ல் டாக்டர் மாலர்ன் ஒரு தந்திரம் செய்தார். அதாவது ஜெனரல் ஸ்மட்ஸ் சமரஸத்துக்கு முயலுகிறார், இது சாத்தியமானாலும் ஆகிவிடும், பிறகு இந்தியர் பிரச்னையை எப்படி நிர்வகிப்பார்களோ என்று அஞ்சி, "டிரான்ஸ்வால் ஆசிய நில மசோதா" என்று ஒரு மசோதா கொண்டு வந்தார். அந்த மசோதா கீழ்வரும் கட்டுப்பாடுகளைக் கொண்டிருந்தது:—

1. ஐரோப்பியர் குடியிருக்கும் பிரதேசத்தில் இந்தியர் வாழக் கூடாது.

2. தங்கச் சுரங்கம் இருக்கும் (ரான்ட்) பகுதியில் இந்தியர் நிலம் வாங்கவோ, குடியிருக்கவோ கூடாது.

3. இந்தியர் குடியிருக்க ஸ்தல நகர சபைகளே இடம் ஒதுக்கி விடவேண்டும்.

4. தங்க வயல் இருக்குமிடங்களில் இந்தியர் வியாபாரம் நடத்தினால், அவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டும்.



5. ஸ்தாவர சொத்துக்கள் வைத்துக்கொள்ள இந்தியருக்கு உரிமை கிடையாது.

6. அதிகாரிகள் குறிப்பிட்ட இடங்களில் தான் இந்தியர் வியாபாரம் செய்யலாமே ஒழிய நினைத்த இடங்களில் வியாபாரம் செய்வது நின்றாக வேண்டும்.

இந்த மசோதா 1932-லேயே சட்டமாக்கப்பட்டது. ஆனால் உடனே அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை. ஸ்மட்ஸ் உதவி பிரதமரானதும், இந்த சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென மாலான் கிளர்ச்சி செய்தார். இதற்கு ஸ்மட்ஸ் இணங்கவில்லை. இந்தியர் மீது கருணை பிறந்து ஸ்மட்ஸ் இணங்க மறுத்தாரோ என்று யாரும் நினைத்து விடக்கூடாது. டாக்டர் மாலான் மீது கொண்டிருந்த விரோதம்தான் இதற்குக் காரணம். ஆகவே அவர் ஒன்றும் பேசாமல் கொஞ்ச காலம் இருந்தார். இதற்குள் டாக்டர் மாலான் வெள்ளைக்காரரைத் தூண்டிவிட்டு, பெரும் கிளர்ச்சியை ஆரம்பித்தார். இந்தக் கிளர்ச்சி நாளாவட்டத்தில் வலுக்க ஆரம்பித்ததும், ஜெனரல் ஸ்மட்ஸ், டாக்டர் மாலான் சட்டத்தை கொஞ்சம் திருத்தி புதிதாக ஒரு "டிரான்ஸ்வால் ஆசிய நில உரிமை திருத்தச்சட்டம்" என்று 1936-ல் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார். இந்தியரை ஒதுக்கி வைக்கவேண்டுமென்று இந்த சட்டமும் கூறியது. ஸ்ரீ பித்தாம் என்பவர் தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷனை ஏற்படுத்தி அக் கமிஷன் மூலம் இந்தியர் ஒதுக்குப் புறமாக குடியிருக்க இடமும் ஒதுக்கிக் கொடுத்தார். இந்த இடம் படுமோசமாக இருந்தது. காற்றோட்டமோ, சுகாதார வசதிகளோ இதில் இல்லை. இந்திய மக்கள் இந்த ஏற்பாட்டைக் கண்டித்தார்கள். ஸ்மட்ஸ் பழைய கேப்டவுன் ஒப்பந்தத்தை மீறிவிட்டதாகக் கண்டித்தனர். ஸ்மட்ஸ் இதைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

ஐரோப்பியர் நாகரிகத்தை ஏற்ற இந்தியர் பற்றி இந்த சமயத்தில் ஒரு புது நெருக்கடி ஏற்பட்டது. இவர்

கள் ஐரோப்பியர் வாழும் பிரதேசங்களில் குடியிருக்கலாமென கேப்டவுன் ஒப்பந்தத்தில் இடமிருந்தது. இப்படி சில இந்தியர்கள், டர்பனிலும் ஜோஹன்ஸ்பர்க்கிலும் ஐரோப்பியர் வாழும் பிரதேசத்துக்கு குடியேறினார்கள். அதாவது அப்பிராந்தியங்களில் வீடுகளை வாங்கி குடியிருந்தனர் இந்தியரின் இந்த "துணிச்சலைக்" கண்டு வெள்ளையர்களுக்குப் பொறுக்கவில்லை. 'அநாகரிக இந்தியர் படையெடுத்து விடுவதாக' ஸ்ரீ. ஸ்டட்போர்ட் என்பவர் ஒரு பெரும் கிளர்ச்சியை துவக்கினார். தென்னாப்பிரிக்காவில் இந்தியருக்கு விரோதமாக எந்த மடையன் பேசினாலும் வெள்ளைக்காரர்கள் அவனை அறிவாளி, விவேகி என்று பாராட்டுவது வழக்கம். அவனுக்கு ஆதரவு தருவதும் சகஜம். ஆகவே, இந்த ஸ்டட்போர்ட் என்பவரின் கிளர்ச்சிக்கு ஆதரவு அளித்தனர். உடனே இவர் 1939-ல் 'ஆசிய மக்கள் மசோதா' என்று ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார். அதாவது ஐரோப்பியர் பிரதேசத்துக்குள் இந்தியர் வியாபாரம் செய்யவோ, குடியேறவோ கூடாது. வியாபார லைசென்ஸ் கொடுப்பதை 2 வருஷ காலத்துக்கு நிறுத்தி வைக்க வேண்டும். அதோடு 1939 ஏப்ரல் 10-ம் தேதிக்குப்பிறகு யாரும் ஐரோப்பியர் வாழும் பிரதேசத்தில் குடியேறியிருந்தால், அவர்களை 'ஒதுக்கி வைக்க' வேண்டும். அதாவது கல்தா கொடுக்க வேண்டும் என்பது இதன் பொருள்.

இதற்குள் ஒரு புது நிலைமை ஏற்பட்டது. அதாவது 1939-செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் இரண்டாவது உலக யுத்தம் மூண்டது. இப்பொழுது தென்னாப்பிரிக்கா யுத்தத்தில் சேருவதா இல்லையா என்ற பிரச்னை எழுந்தது. பிரதமர் ஹெர்ட்ஜாக் சேராமல் நடுநிலைமை வகிக்கவேண்டுமென்றார். உதவிப் பிரதமரான ஜெனரல் ஸ்மட்ஸ் சேரத்தான் வேண்டுமென்றார். ராஜ்ய வட்டாரத்தில் இந்த அபிப்பிராய பேதம் பல கட்சிகளைத் துவக்கிவிட்டது. கடைசியாக இருவரும் அசெம்பிளியில் பார்த்துக் கொள்ளலாமென சவால் விட்டுக் கொண்டார்கள். அதன்படி செப்டம்பர் 4-ந் தேதி அன்று



ஜெனரல் ஹெர்ட்ஜாக், "தென்னாப்பிரிக்கா யுத்தத்தில் நடுநிலைமை வகிக்க முடிவு செய்திருக்கிறது" என்ற தீர்மானத்தைப் பிரேரித்தார். இதை உடனே ஜெனரல் ஸ்மட்ஸ் எதிர்த்துப் பேசினார். பிறகு தென்னாப்பிரிக்கா பிரிட்டன் பக்கம் சேர்ந்து ஜெர்மனிமீது யுத்தம் தொடுப்பதாக ஒரு திருத்தம் கொண்டுவந்தார். கடைசியில் வோட்டுக்கு விட்டார்கள். ஸ்மட்ஸ் 15 வோட்டுகள் அதிகமாகப் பெற்று வெற்றிபெற்றார். ஜெனரல் ஹெர்ட்ஜாக் ராஜிநாமா செய்யும்படி நேரிட்டது.

# முடக்கல் சட்டம்

ஸ்மட்ஸ் கையில் சர்க்காரின் லகான் பூர்ணமாக வந்ததும் அவரை ஆதரித்த வெள்ளைக்காரர்கள் இந்தியர் பிரச்னையை உடனடியாக கவனிக்க வேண்டுமென பழையபடியும் கிளர்ச்சியைத் துவக்கினார்கள். ஜெனரல் ஸ்மட்ஸ் சீக்கிரத்தில் கவனிப்பதாகக்கூறி, நீதிபதி எப். என். புரூம் என்பவர் தலைமையில் ஒரு கமிஷனை நியமித்தார். ஐரோப்பியர் வாழும் பிர்தேசங்களில் இந்தியர் 1927-ம் வருஷத்திலிருந்து எவ்வளவு தூரத்துக்குக் குடியேறியிருக்கிறார்கள், வியாபாரத்துக்காக எவ்வளவு பேர் புகுந்தார்கள்? குடியிருப்புக்காக எவ்வளவுபேர் குடியேறியிருக்கிறார்கள் என்பனபோன்ற பிரச்னைகளை எல்லாம் இக்கமிஷன் விசாரித்து முடிவுகூற வேண்டுமென ஸ்மட்ஸ் கூறினார்.

கேப்டவுன் உடன்படிக்கைக்குப் பிறகு இந்தியர் ஐரோப்பியர் பிரதேசத்தில் ஏராளமாகக் குடியேறி அங்கு வியாபாரத்தை தங்கள் ஆதிக்கத்துக்குக் கொண்டு வருகிறார்களென்ற வெள்ளைக்காரர்களின் புகாரை விசாரிப்பதே இக் கமிஷனின் வேலை.

1940 ஜூன் மாதம் இக்கமிஷன் தன் வேலையைத் துவங்கியது. டிரான்ஸ்வால், நேட்டால், முதலிய மாகாணங்களில் எல்லாம் இந்தியருக்கு விரோதமாக வெள்ளையர்கள் சாட்சியங்கள் கூறினார்கள். சுகாதார நாகரிகம் தெரியாத இந்தியர்கள் ஐரோப்பியர் பிராந்தியங்களில் குடியேறி, பிளேக், காலரா பேன்ற கொள்ளை நோய்களை பரப்பி வருவதாகக் கூறினார்கள். வியாபாரத்தில் மிதமிஞ்சி போட்டி போட்டு, ஐரோப்பிய வியாபாரிகளை தலைகாட்டாதபடி அடிப்பதாக குற்றம் சாட்டினார்கள்.

புரூம் கமிஷன் தனது முடிவை 1941-ம் வருஷம் ஜூலை 25-ம் தேதி அன்று வெளியிட்டது. இந்த அறிக்



கையைக் கண்ட வெள்ளையர்கள் அப்படியே மலைத்து விட்டார்கள். ஏனென்றால் வெள்ளையர்கள் கூறும் புகார்களெல்லாம் ஆதாரமற்றவை என்பதை நீதிபதி புரூம் தெளிவாகக் கூறியிருந்தார். கேப்டவுன் உடன்படிக்கையை ஒட்டியே இந்தியர் நடப்பதாகவும் கூறினார். ஐரோப்பியர் பிராந்தியங்களில் நிலம் வாங்கியதைக் குறித்து "வேறு வழியில்லாமலேயே இந்தியர் பணத்தை இம்மாதிரி சேமித்து வைக்க வேண்டியிருந்தது; இதை படையெடுப்புஎன்றோ, ஆக்ரமிப்பு என்றோ. கூறுவது வீண் பழி" என புரூம் வர்ணித்திருந்தார். ஐரோப்பியர் நாகரிகத்தை மேற்கொண்ட இந்தியரை அநாகரிகர் என்று சொல்லி ஒதுக்குவது அநியாயம் என்று கமிஷனின் முடிவு கூறியது. வியாபாரத்தில் ஆதிக்கம் கொள்வதாகக் கூறின புகாருக்கு சரியான பதிலை இக்கமிஷன் அளித்திருந்தது. அதாவது "போக்கு வரத்து வசதிகள் அதிகமானதை இந்தியர் புத்திசாலித் தனமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். பெரிய பெரிய நகரங்களில் பெரிய வியாபார ஸ்தலங்களை நிறுவி, பக்கத்து பிராந்தியங்களில் எல்லாம் வியாபாரத்தை செழிக்கச் செய்தனர். சிறு சிறு நகரங்களுக்கு குடியேறி வியாபாரத்தை பெருக்கினார்கள். சிறு கிராமங்களாக இருந்தால் கூட இந்திய வியாபாரிகள் அங்கு போக தயங்குவதில்லை. ஆனால் வெள்ளைக்காரரோ பெரிய நகரத்தைவிட்டு வெளிக்கிளம்புவதில்லை. கிராமம் என்றால் அங்கு போவதே கிடையாது. இதனால் இயற்கையை ஒட்டி அவர்களின் வர்த்தகம் மந்தமடைந்தது. இதற்காக இந்தியரை ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்று குற்றஞ்சாட்டுவது உண்மையோ நியாயமோ ஆகாது" என்று புரூம் கமிஷன் கன்னத்தில் அறைந்தாற் போல பதில் கொடுத்தது.

வெள்ளைக்காரர்கள், நீதிபதி புரூம் துரோகம் செய்துவிட்டதாகத் தூஷித்தார்கள். சர்க்கார் இவரைப் போய் நியமித்ததே என்றும் வசை பாடினார்கள். ஜெனரல் ஸ்மட்ஸ், இந்த அறிக்கை வெளியானதும் இதர வெள்ளையர்கள் போல தாமும் மலைக்கவில்லை. பேசா

மல் கமிஷனின் முடிவை வாங்கி அலமாரியில் வைத்து
பூட்டி விட்டார். வெளியே அதை எடுக்கும் உத்தேசமே
அவருக்கு இல்லை!

புரூம் கமிஷன் தங்களுக்கு விரோதமாக தீர்ப்
பளித்து விட்டதால். கொஞ்சகாலம்வரை வெள்ளையர்
கள் வாயடைத்து இருந்தார்கள். அடிக்கடி ஏதாவது
ஒரு சங்கம் மூலம் மட்டும் சர்க்காருக்கு "இந்தியரை
ஒடுக்க வேண்டும்" என்று மகஜர் அனுப்பிக்கொண்டி
ருந்தனர். மகஜர் அனுப்பும் வேலை ரொம்ப ஒழுங்காக
நடந்துவந்தது. ஜெனரல் ஸ்மட்ஸூம் புரூம் கமிஷ
னின் அறிக்கை ஜனங்களுக்கு மறக்கட்டும் என்று
கொஞ்சநாள் மௌனம் சாதித்துவந்தார். இப்படியாக
இரண்டு வருஷங்கள் கழிந்தன. பிறகு 1943-ல் "முட்க்
கல் சட்டம்" என்ற ஜகப் பிரசித்திபெற்ற நிறவெறிச்
சட்டத்தைக் கொண்டுவர ஏற்பாடு பண்ணினார். இந்த
சட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :—

1. 1939-ம் வருஷத்துக்குப் பிறகு, ஐரோப்பி
யர் வாழும் பிரதேசத்தில் யாரும் குடியேறி இருந்
தால் அவர்கள் வெளியேற வேண்டும்.

2. ஆசியாக்காரர்களுக்கு (அதாவது இந்திய
ருக்கு) உள்நாட்டு மந்திரிதான் வியாபாரம் செய்ய
லாமென லைசென்ஸ் தரவேண்டும். இதன் அர்த்
தம், புதிதாக இந்தியருக்கு லைசென்ஸ் கிடைக்காது
என்பது.

3. சட்டத்துக்கு மீறி ஐரோப்பியர் பிராந்தி
யத்தில் குடியேறி இருந்தவர்கள் 2-வருஷ காலத்
துக்குள் அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும்.
இல்லாவிட்டால் சர்க்கார் அவர்களுக்கு ஏதாவது
ஆபத்து ஏற்பட்டால் ஜவாப்தாரி அல்ல. இதன்
பொருள், வெள்ளைக்காரர்கள் உங்களை அடித்து,
வெளியே விரட்டுவார்கள், உங்களுக்கு சர்க்கார்
உதவிக்கு வராது என்பது.



இந்தியர் நிலம் வாங்குவதை சர்க்காருக்கு அறி
வித்துவிட்டுத்தான் வாங்கவேண்டும். சர்க்கார் அனு
மதி கொடுக்காவிட்டால் நிலம் வாங்கக்கூடாது என்று
இந்த சட்டம் தடைவிதித்தது. இரண்டாவதாக ஒரு
ஊரில் வியாபாரம் செய்கிற இந்திய வியாபாரி பக்கத்து
ஊருக்கு வியாபாரம் காரணமாக செல்லவேண்டுமென்
றால், அதற்கு லைசென்ஸ் வாங்கவேண்டும். இந்த சட்டத்
தின்படி எந்த இந்தியருக்கும் லைசென்ஸ் கிடைக்காது.
இதனால் டிரான்ஸ்வாலில் இருக்கும் இந்தியர் வியாபாரம்
படுபாதாளத்தை அடைந்தது.

இந்த மசோதா வெளியானதும் இந்தியர் டிரான்ஸ்
வாலில் ஒரு பெரிய கூட்டம் கூட்டினார்கள். ஜோஹனஸ்
பர்க்கில் இந்தியர் மகாநாடு கூடியது. இந்த முட்க்கல்
சட்டத்தை எதிர்த்து இந்தியர் ரொம்ப கோபத்தோடு
பேசினார்கள். இந்த சட்டத்தால் இந்தியர் வாழ்வே
அஸ்தமித்து போய்விடுமென சிலர் கூறினார்கள். அஸ்த
மிக்காவிட்டால், சேரி வாழ்வுதான் வாழவேண்டுமென
சிலர் கூறினார்கள். ஏற்கனவே உறுமிக்கொண்டிருக்
கும் வெள்ளையர்கள், மசோதா நிறைவேறிவிட்டால்,
சட்டத்தின் துணையைக் கொண்டு நகர்ப்புறங்களி
லிருந்து விரட்டி அடிப்பார்கள் என்று தெரிவித்தனர்.
ஐரோப்பியர் வாழும் பிரதேசம் என்பது நகர்ப்புறம்
தான். இதைவிட்டு வெளியேற வேண்டுமென்றால்,
நகருக்கு வெளியே போகவேண்டும். வீடுவாசல்களை
வைத்திருக்கும் இந்தியர் வீடுகளைப் பூட்டிவிட்டு, எதற்
காக வெளியேபோய், சுகாதார வசதியில்லாத இடத்
ட்ல் வசிக்க வேண்டும்? வெள்ளையர்களை விட இந்தியர்
எந்த விதத்திலும் குறைந்தவர்களல்ல. வியாபாரத்தி
லும் சரி, புத்தி விவேகத்திலும் சரி, அப்படி இருக்கை
யில் ஏனிந்த துன்பம் என்று இந்தியர் ஆத்திரம்
தொனிக்க பேசினார்கள். நகருக்கு வெளியே வசிப்ப
தற்கும் சாக்கடையில் வாழ்வதற்கும் வித்தியாசமே
இல்லையென்று பல வாலிபர்கள் அக்கூட்டத்தில் முழங்
கினர்.

உடனே டிரான்ஸ்வால் தேசிய காங்கிரஸ் கோஷ்டியைச் சேர்ந்த ஸ்ரீ ஒய். எம். டாடு என்பவர் நேரடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பேசினார். நேரடி நடவடிக்கை என்றால், வங்க லீகர் மாதிரி காலித்தனம் செய்வது அல்ல. குண்டர்களைக் கொண்டு மிருகத்தனமான காரியங்களை செய்வதல்ல. சத்தியாக்கிரகம் செய்வது என்று இந்த கோஷ்டியார் கூறினார்கள். இதற்காக நடவடிக்கை கவுன்சில் என்று ஒரு கவுன்சிலை ஏற்படுத்தி, சத்தியாக்கிரகம் செய்ய தொண்டர்களை திரட்ட வேண்டுமெனக் கூறினார்கள். டிரான்ஸ்வால் காங்கிரஸிலுள்ள தலைவர்கள், காரியதரிசிகள், மற்றும் சில பிரமுகர்களுக்கு இந்த விதமான தீவிரம் பிடிக்கவில்லை. நேரடி நடவடிக்கை கூடாது என்று கூறிவிட்டார்கள். இதனால் டிரான்ஸ்வால் காங்கிரஸுக்குள் கட்சி, பிரதிக்கட்சி தோன்றியது. இது அடிதடிவரை கொண்டு போய்விட்டது. ஜூன்மாதம் நடந்த ஒரு கூட்டத்தில் நடவடிக்கை வாதிகளுக்கும் மற்றவர்களுக்கும் அடிதடி நடந்து 9 பேருக்கு பலத்த காயம் கூட ஏற்பட்டது.

ஜூலைமாதம் 6000 பேர் கொண்ட இந்தியர் கூட்டம் ஒன்று நடந்தது. நேரடி நடவடிக்கை வேண்டுமென்று கூறுகிறவர்களே இக் கூட்டத்தில் அதிகப்படியாக இருந்தார்கள். இக்கூட்டத்தில் சத்தியாக்கிரகத்தை ஆகஸ்டுமுதல் தேதியில் ஆரம்பிப்பதென ஒரு தீர்மானம் நிறைவேறியது. 2-வது தீர்மானம் தென்னாப்ரிக்காவிலுள்ள இந்திய ஏஜென்ட் ஜெனரலை இந்திய சர்க்கார் வாபஸ் வாங்கவேண்டுமெனக் கூறியது. தென்னாப்ரிக்க சர்க்கார் நிறவெறிகொண்டு இந்தியரை அவமதிப்பதால், ஏஜென்ட்ஜெனரல் இங்கிருப்பதே இந்தியாவுக்கு அவமானம் என்று இத்தீர்மானம் அறிவுறுத்தியது. ஏஜென்ட் ஜெனரலை வாபஸ் வாங்குவது, தென்னாப்ரிக்காவை இந்திய சர்க்கார் கண்டிப்பதற்கு சமமாகுமென இத்தீர்மான கர்த்தாக்கள் கூறியிருந்தார்கள்.

இந்த தீர்மானத்தைக் கண்டதும் இந்தியாவிலிருந்து சத்தியாக்கிரகத்தை இப்பொழுது ஆரம்பிக்க



வேண்டாமென தந்திகள் பறந்தன. ஏனென்றால் இந்தியாவே போராடிக் கொண்டிருக்கும்போது இந்த சமயத்தில் போராட்டத்தை ஆரம்பிப்பது பலனளியாமல் போய்விடுமென இந்தியா கூறியது. மகாத்மா 'இந்திய சர்க்கார் தென்னாப்ரிக்காவுடன் பேச்சு வார்த்தை நடத்தப்போவதால் போராட்டத்தை நிறுத்தி வைப்பதென' தந்தி கொடுத்தார். காங்கிரஸ் காரியக் கமிட்டியும் இதே கோரிக்கையை அனுப்பியது. உடனே சத்தியாக்கிரக கோஷ்டியார் போராட்ட தேதி அறிவிப்பை ரத்து செய்தார்கள். ஆனால் "முடக்கல் மசோதா" சட்டமான பிறகு ஆரம்பிப்பதாகமட்டும் அறிவித்திருந்தார்கள்.

இந்தியரின் இந்த முஸ்தீபைக் கண்ட வெள்ளையர்கள், "இந்தியர் புரட்சிக்காரர்கள்—நாஜி ஏஜென்டுகள் இவர்களை ஒழித்துக் கட்டியாக வேண்டும்" என்று கன்னா பின்னா வென்று பேசிவந்தார்கள். இந்தியர் இதை அப்போதைக்கப்போது மறுத்து வந்தனர்.

1941-ல் யுத்தம் முழு வேகத்தில் நடந்து வந்தது. சென்ற மகாயுத்தத்தில் இந்தியர் சர்க்காருடன் ஒத்துழைத்தது மாதிரி இந்த யுத்தத்திலும் ஒத்துழைபபதா எனற பிரச்னை தோன்றியது. சத்தியாக்கிரக கோஷ்டித் தலைவரான டாக்டர் டாடு ஒத்துழைக்கக் கூடாது என்று பேசினார். இந்தியாவில் இதே மாதிரிக் கொள்கையைத்தான் மகாத்மா அனுஷ்டித்து வருகிறார். சுதந்திரத்துக்காக யுத்தம் என்றால், முதலில் இந்த சர்க்கார் நமக்கு சுதந்திரம் தரட்டும் என்று முழங்கினார். இதற்காக அவருக்கு 25 பவுன் அபராதம் விதித்தார்கள். பிறகு 1941 பிப்ரவரி மாதம் அவரைத் திரும்பவும் கைது செய்து சிறையில் தள்ளினார்கள். உடனே ஸ்ரீ. எஸ். பி. மேத் என்பவர் சர்க்கார் அடக்குமுறையை அனுஷ்டிக்கிறது என்று கிளர்ச்சியை துவக்கினார். இவர் கோஷ்டியைச் சேர்ந்த சிலர் சத்தியாக்கிரகமும் செய்தனர். இப்படியாக இந்தியரின் எதிர்ப்பு திரண்டு வந்தது.

1943-ல் தென்னப்ரிக்க பார்லிமெண்ட்டுக்கு தேர்
தல் நடக்க வேண்டும். டாக்டர் மாலான் போட்டி போட்
டார். அதாவது ஸ்மட்ஸின் விரோதி இவர். ஸ்மட்
ஸும்போட்டி போட்டார். எந்தக்கட்சி ஜெயிக்க வேண்டு
மென்றாலும் " டொமினியன் கட்சி" என்று நேட்டாலி
லிருக்கும் வெள்ளையரின் கட்சியின் ஆதரவைப் பெற்றாக
வேண்டும். இக்கட்சியிலுள்ளவர்கள் அவ்வளவு பெரும்
புடம் போட்டு எடுக்கப்பட்ட நிற வெறியர்கள். ஆகவே,
ஜெனரல் ஸ்மட்ஸ், இவர்களிடம் முடக்கல் மசோதாவை
தாம் அதிகாரத்துக்கு வந்ததும் சட்ட மாக்குவதாக
வாக்களித்தார். இதனால் அவர் கோரிய பிரதி பலனை
அவர்களின் ஆதரவு (வோட்) கிடைத்தது. இதன் விளை
வாக 1943-ல் முடக்கல் மசோதா அசெம்பிளியில் பிரே
ரிக்கப்பட்டது. மே மாதத்திலிருந்து இது அமுலுக்கு
வருமென ஜெனரல் ஸ்மட்ஸ் தனது நம்பிக்கையை
அசெம்பிளியில் அறிவித்ததும் வெள்ளையர்கள் அனை
வரும் புளகாங்கித மடைந்தனர்.

இந்த மசோதா பிரேரிக்கப் பட்டதும் இந்தியரி
டையே பெரும் கொதிப்பு ஏற்பட்டது. நேட்டாலி
லிருந்து பல இந்திய பிரமுகர்கள் கேப்டவுனுக்குச்
சென்று சர்க்கார் மந்திரிகளை பேட்டி கண்டார்கள்.
சர்க்கார் எதுவும் செய்ய முடியாது என்று மறுத்து
விட்டது. இந்தியாவில் தென்னப்ரிக்காவின் போக்
குக்கு பெரும் கண்டனங்கள் எழுந்தன. இந்த சமயத்
தில் ஜப்பான் பஸிபிக்கில் முன்னேறிக் கொண்டு,
" ஆசியா ஆசியருக்கே " என்று முழங்கிக் கொண்டிருந்
தது. ஆசியாக் காரர்களை வெள்ளையர்கள் என்ன மாதிரி
நடத்துகிறார் களென்பதற்கு தென்னப்ரிக்காவே போது
மான உதாரணம் என்று ஜப்பான் ரேடியோக்கள் பிர
சாரம் நடத்தின. இதற்காக ஆசியாக் காரர்கள் ஒன்று
பட்டு வெள்ளையர்களை ஒழிக்க வேண்டு மென ஜப்பான்
சர்க்கார் அறைகூவியது. ஜப்பானின் பிரசாரம் ஒருபக்
கம், இந்தியாவின் கண்டனம் மற்றொரு பக்கம். லண்
டன் சர்க்காருக்கே ஒரு மாதிரி பயம் பிடித்துக் கொண்டு
விட்டது. இந்தியாவின் வாசலில் ஜப்பானியர் நின்று
கொண்டிருக்கும் போது ஸ்மட்ஸ் புத்தி கெட்டு இப்படி



செய்யலாமா என்று லண்டன் சர்க்கார் முணு முணுத்
தது. இந்த முணு முணுப்பை ஸ்மட்ஸுக்கே தெரியப்
படுத்தினார்கள். ஸ்மட்ஸ் தனக்கு இந்த மாதிரியான
தாக்குதல், லண்டனிலிருந்து ஏற்படுமென எதிர்பார்க்க
வில்லை!

யூனியன் பார்லிமெண்டில் 2-வது தடவையாக
மசோதாவைப் படித்தார்கள். அப்பொழுது முன்பு
தென்னப்ரிக்காவில் ஏஜென்ட் ஜெனராலாக் இருந்த
கனம் ஸ்ரீனிவாச சாஸ்திரி, ஸர் மகராஜ் சிங், ஸர்
ராஜா அலி ஆகியோர் ஒன்றாகச் சேர்ந்து, ஜெனரல்
ஸ்மட்ஸுக்கு ஒரு தந்தி கொடுத்தார்கள். உலகத்தில்
யுத்தத் தீ எங்கும் சூழ்ந்து வரும் நேரத்தில், தாங்கள்
இந்த மசோதாவை கைவிடுவீர்கள் என்று இந்தியா
எதிர்ப்பார்ப்பதாக இந்த மூன்று பெரியார்களும் வேண்டி
னார்கள். 1943-ஏப்ரல் மாதம் 2-வது வாரம இத்தந்தி
அனுப்பி வைக்கப்பட்டது.

டாக்டர் ஹாப்மேயர் என்பவர் பொக்கிஷமந்திரியாக
இருந்தார். அவர் தமக்கு இம்மசோதாவில் சில ஷரத்து
கள் பிடிக்கவில்லை என்றும் இதனால் தாம் ராஜினமா
செய்ததாகவும் ஜெனரல் ஸ்மட்ஸ் சமாதானம் சொல்லி
அதை தடுத்துவிட்டதாகவும் வெளியிட்டார். இந்தி
யாவில் அப்பொழுது தலைவர்களெல்லாம் சிறையில்
இருந்தார்கள். இந்திய மக்கள், பலஆயிரம் மைல்
களுக்கு அப்பாலிருந்து இந்த மசோதாவை நிறை
வேற்ற ஸ்மட்ஸ் நடத்தும் நாடகங்களை எல்லாம் கவனித்
துக் கொண்டிருந்தார்கள். பம்பாயில் ஸ்ரீ. ஜெயகர், ஸர்.
ஹோமி மேதா, ஸர். புருஷோத்தம தாஸ் போன்றவர்க
ளெல்லாம் ஒரு கூட்டம் போட்டு தென்னப்ரிக்க சர்க்கார்
இந்த சட்டத்தை நிறைவேற்றினல் ஆபத்தென எச்ச
ரித்தார்கள். இந்த எச்சரிக்கை போய்ச் சேர்ந்த 3-நாள்
கழித்து, பார்லிமெண்டில் 3-வது தடவையாக மசோதா
படிக்கப் பட்டு நிறை வேறி விட்டது. அதாவது 1943
ஏப்ரல் 23-ம் தேதி அன்று.

அதே தினம் நேட்டால் இந்தியர் சங்கம் ஸ்மட்ஸைப்
பேட்டி கண்டது. இப்பேட்டியில் ஜெனரல் ஸ்மட்

ஒன்றும் செய்ய முடியாது என்று கூறி விட்டார் உடனே லண்டன் காமன்ஸ் சபை மெம்பர்களுக்கு தந்தி கள் கொடுத்தார்கள். ஓரிரு தொழிற் கட்சி மெம்பர்கள் இந்தியர் யுத்த முயற்சிக்கு செய்யும் உதவிக்கு இதுதானா பிரதி பலன் என்று கேட்டார்கள். அமெரி என்ற ஒரு புண்ணியாத்மா அப்போது இந்தியா மந்திரியாக இருந் தார். அவர் எதற்கும் இல்லை—இல்லை என்று சொல்லு வதில் நிபுணர். அதேபோல அவர் மேற் சொன்ன கேள்விக்கும் இல்லை என்று பதிலளித்து விட்டு சும்மா உட்கார்ந்து விட்டார்! மறுபடியும் காமன்ஸில் இதைக் குறித்து கேள்வி மேல் கேள்வியாகக் கிளம்பின. உத விப் பிரதமராக இருந்த ஸ்ரீ ஆட்லி (இப்பொழுது பிரத மர்) இது இந்தியாவையும் தென்னாப்ரிக்காவையும் பொறுத்த விஷயம் என்று கூறி விட்டார்.

லார்ட் லின்லித்கோ என்ற மகா புருஷர் அப் பொழுது இந்தியாவில் வைஸ்ராய். அவர் எப்பேர்ப்பட் டவர் என்பது அனைவருக்கும் தெரியும். ஆகவே, அவர் தென்னாப்ரிக்க சர்க்காருக்கு மனு அனுப்பவதோடு தம் கடனும முடிந்து விட்டதென இருந்து வந்தார். இதைக் கண்டித்து இந்தியாவிலும் தென்னாப்ரிக்க இந்தியர் வட் டாரங்களிலும் பலர் காரசாரமாகப் பேசினர் ஆனால் அசையாத கல்லுப் பிள்ளையாரான லின்லித்கோ இவற்றை காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை.

அப்போது தென்னாப்ரிக்காவில் ஹைக்கமிஷனராக இருந்த ஸர் ஷாபத் அகமத்கான் (நேருஜி சர்க்காரில் மந் திரியாக இருந்தவர்) என்பவர் தலைமையில் ஜோனாஸ்பர்க் இந்தியர் காங்கிரஸ் கூடியது. ஸர் ஷாபத் அகமத் கான் தென்னாப்ரிக்காவின் நிற வெறியைக் கண்டித்து ரொம்ப காரசாரமாகப் பேசினார். ஜப்பானையும் பெர்லினையும் கண்டிக்க தென்னாப்ரிக்க வெள்ளையருக்கு உரிமையே இல்லை. இவர்கள் இந்தியர் மீது நிற வெறி காட்டுவ தும் நாஜிஸம் தான்—பாஸிஸம் தான் என்று முழங்கினார். இந்தியரும் தங்களது எதிர்ப்பு முயற்சிகளை பலப்படுத்தி வந்தார்கள். இந்த சமயத்தில் முடக்கல் சட்டம் கவர்னர் ஜெனரலின் கையெழுத்தையும் பெற்று விட்டது!

# வேதாளத்தின் கதை

முடக்கல் சட்டம் நிறைவேறியதும் பிரிட்டிஷ் சர்க்கார் வெலவெலத்து விட்டார்கள். லார்ட் லின்லித் கோவின் நிலைமை ரொம்ப மோசமாகி விட்டது. சும்மாவே வெள்ளையர்—வெள்ளையர் என்று பேசிவரும் ஜப்பான்காரர்கள் இந்த சட்டத்தை தங்களுக்கு சாதக மாக ஆக்கிக்கொண்டு தீவிர பிரசாரத்தை ஆரம்பித்து விடுவார்களென பிரிட்டிஷாரும் லார்ட் லின்லித்கோவும் அஞ்சினார்கள். கடைசியாக பிரிட்டிஷ் சர்க்கார், இனியும் சும்மா இருந்தால் ஆபத்து என்று அஞ்சி, மெள்ள ஸ்மட்ஸை தாஜாபண்ண ஆரம்பித்தது. இந்தியா வில், இந்த சட்டத்தால் யுத்த முயற்சி பாதிக்கப்படு மென முகாரி பாடினார்கள். ஏற்கனவே பிரிட்டிஷ் சர்க் காருக்கு தம்மீது கோபமென்பது ஸ்மட்ஸுக்கு தெரியும். ஆகவே அவர் பிரிட்டனை தாஜாபடுத்த இதுதான் தக்க சமயமென்று பார்த்தார்.

உடனே, சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவராமல் பழையபடியும் நீதிபதி புரூம் தலைமையில் ஒரு விசார ணைக கமிஷனை நியமித்தார். கேப்டவுன் ஒப்பந்தப் படி இந்தியர் கல்வி, சுகாதாரம் குடியிருப்பு வசதி இவைகளை ஏற்படுத்திக் கொடுக்க சர்க்கார் என் னென்ன காரியங்களை செய்தாக வேண்டும் என்பதை இக்கமிஷன் கூறவேண்டுமென ஸ்மட்ஸின் அறிக்கை கூறியது. முதலில் நேட்டாலில் விசாரணை ஆரம்பமாகு மென ஸ்மட்ஸ் கூறினார்.

ஸ்மட்ஸின் ஸ்தாயி இறங்கிவருவதை இந்திய மக்கள் கண்டார்கள். புரூம் கமிஷனின் இந்த வேலைக்கு தாங் கள் பூர்ண உதவி அளிப்பதாக அறிவித்தனர். அதோடு, ஜெனரல் ஸ்மட்ஸ் தங்களுக்குப் பேட்டி கொடுக்க வேண்டுமென ஒரு கோரிக்கை அனுப்பினார் கள். நேட்டால் இந்தியர் காங்கிரஸே இக்கோரிக்

கையை அனுப்பியது இந்தியர் அனைவரும் ஆச்சரியப்படும்படியாக, ஜெனரல் ஸ்மட்ஸ் இக்கோரிக்கைக்கு இணங்கினார். பிரிட்டோரியாவில் இந்தியத்தலைவர்கள்—ஜெனரல் ஸ்மட்ஸ் பேட்டி நடந்தது. பல நாட்கள் தொடர்ந்து சந்தித்தார்கள். கடைசியாக 1944-ஏப்ரல் 19-ம்தேதியன்று ஜெனரல் ஸ்மட்ஸும் இந்தியத்தலைவர்களும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். இதற்கு பிரிட்டோரியா ஒப்பந்தம் என்று பெயர். இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சமாவது:—

“முட்க்கல் சட்டத்தை சர்க்கார் அமுலுக்குக் கொண்டுவராமல் நிறுத்தி வைக்கிறது. ஆனால் இந்தியரையும் ஐரோப்பியரையும் கொண்ட ஒரு போர்டை நியமிக்கும். இந்த போர்டார் நிறவித்தியாசம் இருக்கும் பிராந்தியங்களில் இந்தியர் குடியேறுவதை கண்காணித்து, இந்தியர் குடியேறலாமென்றிருந்தால் அதற்கு லைசென்ஸ் வழங்கி வருவார்கள். இந்த போர்டின் லைசென்ஸ் பெறுமல் யாரும் (எந்த இந்தியரும்) குடியேற முடியாது.

“குடியிருப்புத்தவிர நிலம் வாங்குவதை இந்த போர்டார் கவனிக்கமாட்டார்கள். அதாவது இந்தியர் நிலம் வாங்க தடை எதுவும் இருக்காது.

“முட்க்கல் சட்டபடி இந்தியர் மீதுள்ள தடைகளெல்லாம் வாபஸ் வாங்கப்படும். நேட்டால் மாகாணத்தைப் பொறுத்தவரை இந்தியர் எந்தவிதமான சொத்துக்களை வாங்கினாலும் சர்க்காரோ இந்த போர்டோ தடுக்காது.........”

ஜெனரல் ஸ்மட்ஸ் இம்மாதிரியான ஒப்பந்தத்துக்கு எப்படி ஒப்புக்கொண்டார் என்று அனைவரும் ஆச்சரியப் பட்டார்கள். திடீரென உதார குணம் அவருக்கு ஏற்பட்டுவிட்டதாக சிலர் காரணம் சொன்னார்கள். இன்னும் சிலர் லண்டனின் தலையீடே காரணமென்றனர். ஆனால் உண்மைக் காரணம், ஜப்பான் ரேடியோக்கள் செயத பிரசாரம்தான்!



நேட்டால் இந்திய காங்கிரஸ் இந்த ஒப்பந்தத்தை இரு கை நீட்டி வரவேற்றது. கொட்டாவி விட்டுக் கொண்டிருந்த லார்ட் லின்லித்கோ, ஸ்மட்ஸின் உதார குணத்தை பாராட்டினார். அமெரி காமன்ஸில் இந்த ஒப்பந்தத்தை வெளியிட்டு தனது சந்தோஷத்தையும் மன்னர் சர்க்காரின் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டார். ஆனால் பிறகு என்ன நடந்தது என்பதுதான் விசேஷம்.

அணுகுண்டுவை அமெரிக்கா கண்டு பிடித்து அதை ஜப்பான் மீதும் போட்டுத் தொலைத்தது. இதற்குள்ளாக ஹிட்லர் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டார். ஜப்பான் சர்க்கார் சரணாகதி என்றனர். அச்சு நாடுகள் பூர்ணமாக நசுக்கப்பட்டன. பஸிபிக்கில் ஜப்பான் அடித்துவந்த கொட்டம் அடக்கப்பட்டு விட்டது. ஆகவே லண்டன் சர்க்கார் இனியும் உஷார் கொடுக்கவேண்டிய அவசியமில்லை. ஜப்பான் ரேடியோக்கள் இனி அலறவே முடியாது என்று ஜெனரல் ஸ்மட்ஸ் நினைத்தார். இதன் விளைவாக 1946 ஜனவரி 21-ம் தேதி அன்று யூனியன் பார்லிமெண்டில், தாம் ஒரு முக்கியமான மசோதாவைக் கொண்டுவரப் போவதாக அறிவித்தார். நேட்டாலில் இந்தியர் குடிபுகுவதையும், நிலம் வாங்குவதையும் தடுப்பதே அவரது மசோதாவின் நோக்கம். ஒதுக்கப்பட்ட பிரதேசங்களைத் தவிர வேறு எங்கும் இந்தியர் குடியேறக்கூடாது என்று அவரது மசோதா தடுத்தது!

வேதாளம் பழையபடியும் முருங்க மரத்தில் ஏறி விட்டதாக இந்தியர் கூறினார்கள். இந்திய சர்க்கார் முன்புபோல இந்தத்தடவை கண்டனம் அனுப்பிவிட்டு உட்கார முடியவில்லை. காரணம் இந்தியாவே கொதித்துக்கொண்டிருக்கிறது என்பது வைஸ்ராயிக்குத் தெரியும். ஆகவே, வைஸ்ராய் தென்னாப்ரிக்காவி லிருக்கும் தம் ஹைக்கமிஷனர் மூலம் யூனியன் சர்க்காருடன் பேசச் சொன்னார். சமரஸத்துக்கு ஜெனரல் ஸ்மட்ஸ் தயாரில்லை என்று ஹைக்கமிஷனரிடமிருந்து பதில்

வந்துவிட்டது. இதற்குள் மார்ச் 15-ம் தேதி அன்று ஜெனரல் ஸ்மட்ஸ் "ஆசிய நில உரிமை பிரதிநிதித்வ மசோதா" என்று இந்தியரை 'சேரி' வாழ்வு நடத்த வைக்கும் இந்த மசோதாவை யூனியன் அசெம்பிளியில் பிரேரித்துவிட்டார். ஜூன் மாதம் 3-ம் தேதி இது சட்டமாகிவிட்டது. இந்த சட்டத்தின் முக்கிய நோக்கம் இந்தியரை தென்னாப்பிரிக்காவிலிருந்து ஓட்டாண்டிகளாக விரட்டுவது என்பதே ஆகும். இந்த சட்டத்தின்படி இந்தியர் நகரங்களில் வாழக்கூடாது. நகர்ப்புறங்களில் சர்க்கார் ஒதுக்கிவிடும் இடத்தில்தான் வாழவேண்டும். இந்த ட்டத்திலிருக்கும் இந்தியர், நகருக்குள் வந்து ஏதாவது நிலபுலம் வாங்குவது கூடாது. கையில் இருக்கும் பணத்தை பணங்காத்த பூதம் மாதிரி இரவுபகலாகக் காத்திருக்கவேண்டும். இப்படி கொஞ்ச காலத்துக்கு இந்தியர் இருந்தால் ஓட்டாண்டியாகி இந்தியாவுக்கு ஓடிவிடுவார்களென தென்னாப்பிரிக்க சர்க்கார் நினைத்தது.

நேட்டாலுக்கு அடுத்தபடியாக, டிரான்ஸ்வாலில் தான் இந்தியர் அதிகப்படியாக குடியிருக்கிறார்கள். இந்த மாகாணத்திலும் இந்த சட்டத்தின் ஷரத்துக்கள் வேறு ரூபத்தில் உடனே அமுலுக்குக் கொண்டுவரப் பட்டன. அதாவது டிரான்ஸ்வால் இந்தியர் பழைய வியாபார லைசென்ஸுக்களை எல்லாம் இனி புதுப்பிக்க வேண்டுமென இந்தச் சட்டம் கூறியது. புதுப்பிப்பது என்றால் உள்ள லைசென்ஸைத் தொலைப்பது என்பதுதான் அர்த்தம். ஆகவே டிரான்ஸ்வாலில் இந்தியர் வர்த்தகம் முறிந்தது!

"நிலவுரிமை, பிரதிநிதித்துவ சட்டம்" என்று இந்த சட்டத்துக்கு பெயரல்லவா? பிரதிநிதித்துவம் என்பதை என்ன வென்று பார்க்க வேண்டும். இந்தியருக்கு வோட்டுரிமை கொடுத்ததாக இந்த சட்டம் கூறியது. அதாவது:—

யூனியன் சர்க்காரில் பிரஜைகளாக உள்ள இந்திய ஆண்கள் மட்டும் வோட் போடலாம்.



அதிலும் 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் தான் வோட்டுரிமை பெறுவார்கள்.

வோட்டுரிமை பெற 10 வது வரை படிதிருக்க வேண்டும்.

மேலும் வருஷ வருமானம் 84 பவுனுக்கு மேலாக இருக்க வேண்டும்.

வருஷ வருமானம் இல்லை யென்றால் 250 பவுன் வருமான முள்ள ஸ்தாவர சொத்து இருக்க வேண்டும்.

இதுதான் இந்தியருக்குத் தரப்பட்ட பிரதிநிதித்துவ லக்ஷணம். இதே சமயத்தில் வெள்ளையர்களுக்கு எப்படி வோட்டுரிமை இருந்தது என்றால் ஆச்சரியப் படுவீர்கள். எழுதப் படிக்கத் தெரிந்த வெள்ளையர் அவ்வளவு பேருக்கும் வோட்டுரிமை உண்டு. ஆண் பெண் என்ற வித்தியாசம் கிடையாது. வயது வந்தவர்களாக இருந்தால் போதும். வருமானம் காலணாக்கூட இல்லாமல் இருந்தாலும் கவலை யில்லை. இந்த பாரபட்சத்தோடு அளித்த இந்தியர் வோட்டுரிமை இன்னொரு முக்கிய அம்சத்தைக் கொண்டிருந்தது:—

யூனியன் பார்லிமெண்டில், மேல் சபைக்கு 2 பிரதிநிதிகளைத் தான் இந்தியர் அனுப்பலாம். அதாவது வோட்டுரிமை பெற்ற இந்தியர் தாங்களே தேர்தலில் நிற்கலாமா என்றால், கூடாது. 2 வெள்ளையரைத் தான் இவர்கள் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டும். அதுவும் 2 பேரைத்தான்!

யூனியன் அசெம்பிளிக்கு 3 பேரை அனுப்பலாம்.

நேட்டால் மாகாண கவுன்ஸிலுக்கு 2 பேரை இந்தியர் அனுப்பலாம்.

டிரான்ஸ்வாலில் உள்ள இந்தியருக்கு இந்த உரிமை கூட கிடையாது.

இந்த மகாபெரிய சலுகைக்குத்தான் பிரதிநிதித்துவம் என்று ஸ்மட்ஸ் கூறினார்! இது பிரதிநிதித்துவமா அல்லது பித்தலாட்டமா என்பது சொல்லாமலேயே விளங்கும். இந்தியருக்கு குறைவாக ஸ்தானங்கள் கொடுத்தது கூட குற்றமில்லை. இந்தியர் வெள்ளையரைத்தான் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டுமென இந்த சட்டம் வரையறுத்தது சுத்த அயோக்கியத்தனமானது என்று இந்தியர் கொதிப்படைந்தார்கள். வகுப்புவாத பிரதிநிதித்துவம் என்று கூறி, இந்த வாக்குரிமை எங்களுக்கு அவசிய மில்லையென நிராகரித்தார்கள். இந்திய சர்க்கார் உடனே தம் ஹைக்கமிஷனரை வாபஸ் வாங்கி, நேசதேச பொது அசெம்பிளிக்கு இந்தியரை கொடுமை பண்ணுவதை தெரிவிக்க வேண்டுமெனக் கோரினார்கள். தென்னாப்பிரிக்க வர்த்தக உறவை முறிக்கவேண்டுமென கூறினார்கள். கடைசியில் இந்திய சர்க்கார் அசைந்தது! தென்னாப்பிரிக்காவிலிருந்த ஹைக்கமிஷனர் வாபஸ் வாங்கப்பட்டார். 1946-ஜூலை 17-ம் தேதி அன்று இந்திய சர்க்கார் தென்னாப்பிரிக்காவுடனிருந்த ராஜிய உறவை ரத்து செய்தது! 1946-ஜூன் 2[illegible]-ம் தேதி அன்று இந்திய சர்க்காரின் நேச அசெம்பிளி பிரதிநிதியாக இருந்த ஸர். எ. ராமசாமி முதலியார், தென்னாப்பிரிக்க சர்க்கார் இந்தியரை கொடுமைப்படுத்துவதை விசாரிக்க வேண்டுமென நேசநாட்டு பொது அசெம்பிளிக்கு புகார் செய்தார்.

# இந்தியாவின் புகார்

நேசதேச ஸ்தாபனத்துக்கு இந்தியா புகார் செய்துவிட்டது என்றதும் தென்னாப்பிரிக்க இந்தியர்கள் சந்தோஷப்பட்டார்கள். தாங்கள் நிராதரவாக இல்லை, இந்தியா தங்களுக்கு ஆதரவாக இருக்கிறது என்று மகிழ்ச்சி கொண்டார்கள். இந்த மகிழ்ச்சியில் தங்களின் போராட்டத்தை தீவிரமாக்கினார்கள். ஜோனாஸ்பர்க், டர்பன் முதலிய இடங்களில் இருந்த இந்தியரின் மகிழ்ச்சியை அளவிட்டுச் சொல்ல முடியாது. அவ்வளவு உற்சாகம்!

தென்னாப்பிரிக்க சர்க்காரின் நிலைமை எப்படி இருந்தது என்பதுதான் முக்கியமான விஷயம். நேச தேச அசெம்பிளிக்கு புகார் போய்விட்டது என்பதை அறிந்ததும் இந்தியர் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார்கள். சத்தியாக்கிரகிகளை மிருகத்தனமாகத் தாக்கினார்கள். சத்தியாக்கிரகக் கமிட்டியின் தலைவரான டாக்டர் ஜி. எம். நாயக்கர் போன்றவர்களைக் கைது செய்தனர். சத்தியாக்கிரகிகளை சித்திரவதை செய்த வெள்ளைக் காலிகளை அடக்கவே இல்லை. இந்தியர் தடுக்கப்பட்ட பிரதேசங்களில் கூடார மடித்ததை இந்த குண்டர்கள் எவ்வாறு தடுத்தனர் என்பதை விவரிக்க முடியாது. நூற்றுக் கணக்கில் திரண்டுவந்து, சத்தியாக்கிரகிகளை அடி அடியென்று அடித்தனர். வாய்க்கு வந்தபடி திட்டினார்கள். கிருஷ்ணசாமி பிள்ளை என்பவர் கொலையுண்டது இந்த சமயத்தில்தான்.

வெள்ளை குண்டர்களை சர்க்கார் கைது செய்யாததைக்கண்டு எவ்வளவோ பேர் கண்டித்தனர். ரெவரண்ட் ஸ்காட் என்ற பாதிரி, இந்த சர்க்காரின் மிருகப்போக்கைக் கண்டித்து சத்தியாக்கிரகமே செய்து கைதானார். சர்க்கார் இதே போக்கில் சென்றால் பெரும் ஆபத்து ஏற்படுமென ஸ்ரீமதி பெல் பெங்கர்,

ஸ்ரீ பாஸ்வர் போன்ற ஐரோப்பிய பிரமுகர்களும் எச்சரித்தார்கள். ஸ்மட்ஸ் சர்க்கார் இதை லட்சியம் செய்யவில்லை. தனது அடக்கு முறையை ஒரு பக்கமும், வெள்ளை குண்டர்களை ஏவிவிடும் காரியத்தை மறுபக்கமும் நடத்திக்கொண்டே வந்தது.

1946-அக்டோபர் 23-ம் தேதி அன்று நேசதேச பொது அசெம்பிளி கூடியது. அசெம்பிளி நடவடிக்கை நிர்ணயக் கமிட்டி கூட்டமும் கூடியது. இக்கூட்டம்தான் அசெம்பிளியின் அஜண்டாவில் என்னென்ன விஷயங்கள் இருக்கவேண்டும் என்பதை தீர்மானிப்பது. ஆகவே இந்தியர் — தென்னாப்பிரிக்க தகராறை அஜண்டாவில் சேர்ப்பதா இல்லையா என்ற பிரச்னையை இக் கமிட்டியினர் கவனித்தார்கள். தென்னாப்பிரிக்க தூது கோஷ்டியின் தலைவரான ஜெனரல் ஸ்மட்ஸ் வந்திருந்தார். அனைவரும் எதிர் பார்த்தபடி அவர் இந்தியர் பிரச்னையை அஜண்டாவில் சேர்க்கக் கூடாது என்றார். இந்தியாவின் தூதகோஷ்டியின் தலைவரான ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் இத்தீர்மானத்தை எதிர்த்தார். விவாதம் காரசாரமாக நடந்தது.

ஜெனரல் ஸ்மட்ஸ் தென்னாப்பிரிக்கர்—இந்தியர் தகராறை அஜண்டாவில் சேர்க்கக் கூடாது. என்பதற்கு ரொம்ப விசித்திரமான காரணத்தை சொன்னார். அதாவது தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை உள்நாட்டுப் பிரச்னை. மேலும் சட்ட சம்பந்தமானது. ஆகவே சட்டத் தகராறைத் தீர்க்க சர்வதேச கோர்ட்டுக்குத்தான் போகவேண்டும் என்று கூறினார். நீதிபதி சாக்ளா இது சட்ட சம்பந்தமானதல்ல, உலக மக்களில் முக்கால் வாசிப் பேரின் வாழ்வையே பாதிக்கும் பிரச்னை என்றார். இந்த சமயத்தில் பிரிட்டிஷ், அமெரிக்க பிரதிநிதிகள் நடந்துகொண்ட போக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. பிரிட்டிஷ் பிரதிநிதிகளுக்கு இந்திய பிரச்னை இங்கு வந்து அம்பலமாவதே முதலில் பிடிக்கவில்லை. காரணம் தென்னாப்பிரிக்க வெள்ளையரின் ஏகபோகம் இதனால் பாதிக்கப்படுமென்று அஞ்சினார்கள். தென்னாப்பிரிக்க



வெள்ளையர்களில் ஐந்தில் இரண்டு மடங்குப் பேர் பிரிட்டிஷ்காரர்கள். இரண்டாவது காரணம் தென்னாப்பிரிக்கா இந்தியரை இவ்வளவு தூரம் கொடுமைப்படுத்தி வந்தும் பிரிட்டிஷ் வைஸ்ராய்கள் கொட்டாவி விட்டுக்கொண்டு இருந்தார்களே என்று உலகம் சிரிக்குமே என்று பயந்தார்கள்! அமெரிக்கர் கவலைக்கு வேறு காரணமிருந்தது. அமெரிக்காவில் நீக்ரோக்களை வெள்ளையர்கள் படாதபாடு படுத்துவது உலகம் அறிந்த விஷயம். இதற்கு நிறவெறியைத் தவிர வேறு காரணம் இருந்தாலும் அதற்கு சுயநலம் என்ற பெயரைத் தவிர வேறு பெயரே இருக்க முடியாது. ஆகவே, நிறவெறிப் பிரச்னை அம்பலத்துக்கு வந்தால், அமெரிக்க நீக்ரோக்களும் எங்கு கிளம்பி விடுவார்களோ என்பது அமெரிக்கரின் பீதி. இதற்காக இந்த இரு நாட்டுப் பிரதிநிதிகளும் முட்டுக்கட்டை போட்டார்கள். ஆனால் இவர்களுக்கு கன்னத்தில் அறைந்தாற் போல பதில் கொடுக்க ரஷ்யா இருந்தது. உக்ரைன் பிரதிநிதியான ஸ்ரீ ஆன்ட்ரூவ் மானுலிஸ்கி இவர்களின் வாதங்களை அடித்து நொறுக்கிவிட்டார். கடைசியில் நிலைமை நெருக்கடிக்கு உள்ளாவதைக்கண்ட பிரிட்டன், அமெரிக்கா, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகள் எல்லாம் ஒரு தந்திரம் செய்தார்கள். இந்த தந்திரத்துக்கு அமெரிக்க பிரதிநிதியே தம் பெயரைக் கொடுத்தார். அதாவது இந்தியாவின் புகார் அஜண்டாவிலேயே இருக்கலாமென்றும், ஆனால் நேச அசெம்பிளிக்கு அனுப்பி, பிறகு அங்கிருந்து உடனேயே சட்டக் கமிட்டிக்கும் ராஜீயக் கமிட்டிக்கும் இப் பிரச்னையை பரிசீலனைக்கு விட்டுவிடவேண்டுமென்றும் ஒரு சமரஸத் தீர்மானம் கொண்டுவந்தார். அதாவது இக்கமிட்டிகளின் மெம்பர்கள் இந்தியா, தென்னாப்பிரிக்கா மீது கொடுத்திருக்கும் புகாரை ஆராய்வார்கள். இதை அசெம்பிளியே முடிவு கட்டுவதா அல்லது தென்னாப்பிரிக்கா கூறுகிறபடி சர்வதேச கோர்ட்டுக்கு அனுப்புவதா என்பதை இங்கு தீர்மானிப்பார்கள். தங்கள் தீர்மானத்தை சிபார்சு மூலம் நேச அசெம்பிளிக்கு திரும்ப முடிவு கட்டும்படி அனுப்பவேண்டும் என்பது இதன் ஏற்பாடு. இந்தக் கமிட்டிகளில் இந்தியாவி ன

புகார் சட்ட பிரச்னை சம்பந்தமானது, ஆகவே இதை சர்வ தேசக் கோர்ட்டுக்குத்தான் அனுப்பவேண்டும் என்று தீர்மானம் செய்து விடலாமென்பது இவர்களின் தந்திரம். அமெரிக்க பிரதிநிதியின் தந்திரத்தை இந்திய தூதுகோஷ்டி அறிந்தும், இதற்கு உடன்பட் டார்கள். ஏனென்றால் உண்மைக்கு முன்னால் இந்த தந்திரம் நிற்காது என்பது அவர்களுக்குத் தெரியும். அதோடு உலகம் ரொம்ப தூரத்துக்கு முன்னேறி விட்டது, ஆகவே 15-ம் நூற்றாண்டு காலத்திய இந்த தந்திரம் பலிக்காது என்ற முடிவுக்கு வந்து அமெரிக்க தீர்மானத்துக்கு உடன்படுவதாக தெரிவித்தார்கள். ஸ்மட்ஸும் இதற்கு சரியென்றார். நவம்பர் 25-ம் தேதி இந்தத் தீர்மானம் நிறைவேறிவிட்டது. அதற்கு மறு தினம் 54 நாடுகளின் பிரதிநிதிகள் கூடியிருந்தபோது அசெம்பிளியில், இந்திய தூதுகோஷ்டியின் தலைவரான, ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் கீழ் வருமாறு கர்ஜித்தார் :—

"உலக மக்களின் சுதிந்திரத்தைப் பாதுகாப்ப தற்காக இந்த நேச தேச ஸ்தாபனம் உருவாகி யிருக்கிறது. உலக மக்களின் சுதந்திரத்துக்காக இந் தியா எப்பொழுதும் போராடி வந்திருக்கிறது. அடிக் கடி, இந்தப் போராட்டத்தில் பெரும் நஷ்டத்துக்கு உள்ளாகி இருக்கிறது. எங்கள் சுதந்திரத்தை நாங் கள் இன்னும் பெறவில்லை. ஆனால் சுதந்திரப் பாதையை நோக்கி நாங்கள் வெகு தூரம் முன்னேறி வந்து விட்டோம். இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற தேசிய சர்க்காரின் ஆதரவோடும், அதிகாரத்துட னும் இந்திய பிரதிநிதிகள் வந்து, ஒரு சர்வ தேச சபையில் பேசுவது இதுதான் முதல் தட்வையாகும். தேசிய சர்க்காருக்கு ஜனங்களின் ஆதரவு உண்டு; அந்த சர்க்காரின் பிரதிநிதிகள் நாம் என்ற பொறுப் புணர்ச்சியுடன் நாங்கள் பேசுகிறோம். இந்த சபை யில், இந்தியா இதுவரை போதிய பங்கெடுக்க வில்லை. ஆனால், எடுக்க வேண்டுமென்ற எண்ணம் இந்தியா வுக்கு உள்ளது.



'இந்து மகா சமுத்திரத்தில் இந்தியா ராணுவ முக்கியத்துவம் கொண்ட இடமாக விளங்குகிறது. அண்டை ஆசிய நாடுகளுடன் கலாச்சார உறவு கொண்டிருக்கிறது. இதோடு ஆக்கிரமிப்பை எதிர்த்து போராடி யிருக்கிறது. மனுஷ சுதந்திரப் பாதுகாப் புக்காக இந்தியா செய்திருக்கும் சேவை ரொம்ப மகத் தானது.

'இதுவரை நாங்கள் அடிமை நாடாக இருந்தோம். ஆகவே, நாங்கள் இதர உலக நாடுகளுடன் கொண் டிருந்த உறவு எங்கள் இஷ்டத்தைப் பொறுத்த தாகவோ, நாங்கள் விரும்பினதாகவோ இருக்கவில்லை. ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது. இந்திய சர்க்கார் தங்களது அயல்நாட்டுக் கொள்கை என்ன என்பதை விளக்கி விட்டார்கள்.

'சுதந்திரமும், சமாதானமும் ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ளன. இதைப் பிரிக்க முடியாது. ஒரு இடத்தில் சுதந்திரத்தை மறுத்தால் அது உலக யுத் தத்தையே ஏற்படுத்துமென நாங்கள் திடமாக நம்பு கிறோம். ஜாதீய வெறி காட்டும் நாஜிக் கொள்கையை அடியோடு நாங்கள் வெறுக்கிறோம். பிறர் மீது ஆதிக்கம் கொள்ள வேண்டுமென்பது எங்கள் ஆசை யல்ல. ஜாதீய, நிறவெறி எங்கிருந்தாலும் சரி, எந்த ரூபத்தில் இருந்தாலும் சரி அதை எதிர்ப்பது எங்கள் கொள்கை. ஆகவே எங்கள் ஜனங்கள் எங்கிருந்தாலும் சரியே, அவர்கள் கவுரவமாக நடத்தப்பட வேண்டும். அவர்களை நிற வித்தியாசம் காட்டி விரட்டக் கூடாது.

'நாகரிக வாழ்வு உலகமெங்கும் ஏற்பட வேண்டு மென நேச சாஸனம் கூறுகிறது. இதை அமுலில் நடத்தி வைக்க நேச ஸ்தாபனம் முன் வர வேண்டு மென நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

'தென்னாப்ரிக்காவில் இந்தியரை எப்படி நடத்து கிறார்கள் என்பதை இந்த சபை முன் எடுத்துக் கூறினோம். நேச சாஸனத்தில் கையெழுத்துப் போட்டிருக்கும் ஒரு மெம்பர் நாடே இப்படி நடத்த

லாமா என்பதை சபை என்னமாதிரி கவனிக்கிறது, எப்படி தீர்ப்பு அளிக்கிறது என்பதை இங்குள்ளவர்கள் மட்டுமல்ல, உலகமே உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. முக்கியமாக ஐரோப்பியரல்லாத மக்கள் இதை மிகுந்த அக்கரையோடு கவனித்து வருகிறார்கள். இந்த மக்கள்தான் உலக ஜனத்தொகையில் பெரும் பங்கு வகிக்கிறார்கள் என்பதை சபை மறக்கக் கூடாது.

'தென்னாப்ரிக்க இந்தியர் பிரச்னை, குறுகிய நோக்கம் கொண்டதோ, ஸ்தல சம்பந்தமான பிரச்னையோ அல்ல. ஒரு மக்களை, கொடுமையாக நடத்துவதை இந்த சபை கேட்கக் கூடாது என்று சொல்லுவது ரொம்ப தப்பு. இதை நாங்கள் ஏற்க மாட்டோம். அதுவும் நேச அசெம்பிளியைச் சேர்ந்த ஒரு மெம்பர் நாடே இப்படி கூறக் கூடாது. நிற வெறி காட்டி நடத்தும் கொடுமைகள் இன்னும் நம் மனதை விட்டு அகலவில்லை. இந்தக் கொடுமைகளால் ஏற்படும் கோரங்கள், துக்ககரமான விளைவுகள் இவைகளை சமாளிக்கவே நாம் கூடியிருக்கிறோம்.

'ஏகாதிபத்தியம், அது ராஜீயத் துறையில் இருந்தாலும் சரியே, அல்லது பொருளாதார சமூகத்துறையில் இருந்தாலும் சரியே நேச சாஸனத்துக்கும் அதற்கும் ஒத்து வரவே வராது என்பதை இந்தியா முழுமனதுடன் உணருகிறது. ஏகாதிபத்தியம் துன்பத்தையும் மன முறிவையும் அளிப்பது. உலக மக்களின் பார்லிமெண்ட் இவ்விஷயத்தை நன்றாக உணர வேண்டும். ஏகாதிபத்தியத்தை ஒழிக்க வேண்டுமென கோடிக்கணக்கான உலக மக்கள் நம்மை எதிர்பார்க்கிறார்கள். பாஸிஸ நாஜிஸ கொடுமைகளை ஒழிக்க வேண்டுமென நம்மை எப்படி எதிர்பார்க்கிறார்களோ அதேமாதிரி இது விஷயத்திலும் எதிர்பார்க்கிறார்கள்''

ஸ்ரீமதி பண்டிட் பேசி முடிந்ததும் சபையினர் பலத்த கரகோஷம் செய்தனர்; பிரிட்டிஷ் பிரதிநிதி



யான ஸ்ரீ நோயல் பேக்கர் விரைந்தோடி அவர் பிரசங்கத்தைப் பாராட்டும் வகையில் கை குலுக்கினார். இதை ராய்ட்டர் நிருபர் அழகாக வர்ணித்தார்:—

''ஸ்ரீமதி பண்டிட் பேசி முடிந்ததும் சபையினர் பலத்த கரகோஷம் செய்தனர். மேடையிலிருந்து அவர் இறங்கியதும் பிரிட்டிஷ் பிரதிநிதியான ஸ்ரீ. பிலிப் நோயல் பேக்கர் விரைந்தோடி, அவர் பிரசங்கத்தைப் பாராட்டும் வகையில் கை குலுக்கினார். பிறகு ஸ்ரீமதி பண்டிட் தம் ஆசனமிருக்கும் இடத்துக்கு வரும்போது வழியில் பல பெண் பிரதிநிதிகள் அவரைப் பாராட்டி கை குலுக்கினார்கள்.

'ஸ்ரீமதி பண்டிட் ஆர்ப்பாட்டம் எதுவுமில்லாமல் சாவதானமாக' அழகாகப் பேசினார். எப்பொழுதாவது தாம் சொல்லும் விஷயம் சபையினர் மனதில் பதியவேண்டுமென்பதற்காக மட்டும் வலது கையை உயர்த்தி, கூற வேண்டியதை ஆணித்தரமாக சொன்னார்.

''இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் தேசிய சர்க்கார் சார்பாக நான் பேசுகிறேன். இம்மாதிரி சுதந்தரத்தோடு இந்தியப் பிரதிநிதி பேசுவது இதுதான் முதல் தடவை' என்று அவர் கூறியதும் சபையினர் சந்தோஷ மிகுதியால் பலத்த கரகோஷம் செய்தனர்.''

ஸ்ரீமதி பண்டிட்டின் பிரசங்கத்தாலும், நேருஜி தலைமையில் ஏற்பட்டிருக்கும் தேசிய சர்க்காரின் செல்வாக்காலும் நேச அசெம்பிளியில் பிரமாதமான ஆதரவு கிடைத்து வந்தது. இந்த ஆதரவை முன்னின்று முதலில் கொடுத்தது. ரஷ்யாதான். ஸ்ரீமதி பண்டிட் பேசிய சில நாட்களுக்குப் பிறகு அதாவது 30-ம் தேதி அன்று ரஷ்ய அயல் நாட்டு மந்திரியான ஸ்ரீ மாலட்டோவ் நேச பொது அசெம்பிளியில் பேசினார். இந்தியா தென்னாப்ரிக்காமீது கொடுத்திருக்கும் புகார் பற்றி அவர் குறிப்பிட்டார். நிறத்திமிர் பிடித்த கூட்டத்துக்கு அவர் பேச்சு சவுக்கடி கொடுப்பது போலிருந்தது. அவர் கூறியதாவது:—

"இந்தியாவின் நியாயமான கோரிக்கைகளை அங்கீகரிக்கவேண்டிய காலம் வந்துவிட்டது. நேச தேசக் குழுவில் இந்தியாவும ஒரு நாடு. பிரிட்டனுடன் அது கொண்டிருக்கும் உறவு சமத்துவ அடிப்படையில்தான் இருக்கவேண்டுமென நேச சாஸனம் கூறுகிறது என்றாலும், நாம், இந்த சபையிலேயே, இந்தியா உதவி கேட்டு நிற்பதை கேட்டோம். இந்த கோரிக்கைக்கு நாம் செவி சாய்க்காமல் இருக்க முடியாது.

"இந்தியாவின் கோரிக்கை எவ்வளவு நியாயமானதோ அதேபோல தான் இந்தோனேசிய மக்களின் கோரிக்கையும் நியாயமானது. இதையும் டச்சு சர்க்கார் அங்கீகரிக்கவேண்டும்."

ஸ்ரீ. மாலட்டோவ் ரஷ்ய தூதுகோஷ்டியின் தலைவர். ஸ்ரீ மாலட்டோவ் ரொம்ப நீளமாகப் பேசினார். அவரது இதரப் பகுதி பேச்சு, ஐரோப்பிய விவகாரம் பற்றியது. அதில் பிரிட்டனையும் அமெரிக்காவையும் அவர் படாதபாடு படுத்திவிட்டார். இப்பேச்சைக் குறித்து ஸ்ரீமதி பண்டிட் கீழ்வருமாறு கூறி சந்தோஷப்பட்டார் :—

"இந்தியாவைப் பற்றி ஸ்ரீ மாலட்டோவ் கூறியதை வரவேற்கிறோம். ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் நட்பும் ஒத்துழைப்பும் வளருவதை இது குறிக்கிறது.

'மாலட்டோவின் பிரசங்கம் ரொம்ப தைரியமான பேச்சு. ஒவ்வொருவர் மனதிலும் உறுத்திக் கொண்டிருக்கும் பிரச்னைகளை எல்லாம் மாலட்டோவ் பகிரங்கமாகப் பேசிவிட்டார், மற்றவர்களோ, தயங்கினார்கள். தன் பலத்தைத், நிலையை, உணர்ந்த ஒரு நாடு பேசுவதாக அவர் பிரசங்கம் இருந்தது."

ரஷ்யத் தவலைவரின் இப்பிரசங்கத்துக்குப் பிறகு அமெரிக்கா மற்றொரு தந்திரம் செய்தது. அதாவது தென்னாப்ரிக்காவும் இந்தியாவும் சமாதானமாகப் போக வேண்டுமெனக் கூறியது. இதற்காக ஒரு வட்ட மேஜை மகா நாட்டுக்கு ஏற்பாடு செய்வதாகவும் கூறியது. இதற்கு இந்தியப் பிரதிநிதிகள் ஒப்புக்கொள்ள வில்லை.



"தென்னாப்ரிக்க சட்ட புத்தகத்தில் பிறத்தியர் சட்டம் அமுலில் இருக்கும் வரை வட்ட மேஜை மகாநாடு என்பதே கூடாது" என்று இந்தியப் பிரதிநிதிகள் கூறி விட்டார்கள்.

நவம்பர் முதல் தேதி அன்று டில்லி மத்திய சட்ட சபையில் இடைக்கால சர்க்காரின் தலைவரான பண்டித நேரு பேசினார். தென்னாப்ரிக்க சத்தியாக்கிரகம் பற்றி கீழ்வரும் கணக்கைக் கூறினார்:—

"தென்னாப்ரிக்க சத்தியாக்கிரக போராட்டம், அது எப்படி ஆரம்பித்ததோ, அதே ரீதியில் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. அதாவது ஆசிய நில உரிமைத் தடைச் சட்டத்திலுள்ள ஷரத்துக்களை மீறி ஒதுக்கப் படாத பிரதேசங்களிலுள்ள நிலங்களை சாத்விகமாக ஆக்ரமித்துக் கொள்வதென்பது. போராட்டமுறை.

'சத்யாக்கிரகிகள் இன்னமும் கைது செய்யப்பட்டு, கலக கூட்டச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப் படுகிறார்கள்.

'செப்டம்பர் மாத முடிவு வரையில் 733 இந்தியர்கள் தண்டிக்கப் பட்டிருக்கின்றனர். இவர்களில் 450 பேர் தண்டனை அனுபவித்தபின், விடுதலையாகி யிருக்கிறார்கள்.

'பெரும்பாலும் எல்லோருக்கும் ஒரேவிதமான தண்டனைதான் விதிக்கப்படுகிறது. சில தலைவர்களுக்கு 6 மாத காவல் தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

'சத்யாக்கிரகிகள் கவுன்சிலிடமிருந்து அக்டோபர் 24-ந் தேதி கிடைத்துள்ள தந்தியில், அன்றுவரை மொத்தம் 1259 பேருக்கு தண்டனை விதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'அக்டோபர் 23-ந் தேதி, நேச தேச அசெம்பிளி கூட்டம் ஆரம்பித்த தினத்தில், ஒரு பெரிய ஆர்ப்பாட்டம் நடந்தது. அப்போது 323 சத்தியாக்கிரகிகள் சிறை தண்டனைக்கு துணிந்து முன் வந்தனர்.

'சத்யாக்ரக போராட்டத்தை நிறுத்தி வைத்துவிட்டு நிலைமை பூராவையும் பற்றி கவனிக்க ஒரு வட்டமேஜை மகாநாடு கூட்டலாமென்று இந்தியர்களில் சிலர் யோசனை கூறினார்கள். ஆனால், இந்தியர்களில் பெரும்பாலானோர் இந்த யோசனையை எதிர்க்கிறார்கள்.

'இந்த போராட்டம் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. இந்தியர்களின் கவனத்தை இது கவர்ந்திருக்கிறது.

'இது ஆப்ரிக்கர்களின் அனுதாபத்தை பெற்றிருப்பதாகவும் தெரிகிறது. சில ஆப்ரிக்கர்கள் இப்போராட்டத்தில் தீவிரமாக கலந்திருக்கிறார்கள் (கரகோஷம்.)

'சில ஐரோப்பியர்களும் இப்போராட்டத்தை ஆதரித்து, இதில் சேர்ந்திருக்கிறார்கள்.''

இடைக்கால சர்க்கார் சத்தியாக்கிரகிகளுக்கு மிகுந்த அனுதாபம் காட்டி வருவதாகவும் பண்டித நேரு கூறினார். நேருஜியின் இந்த அறிக்கை வெளியான அதே தினம் நியூயார்க்கிலிருந்து இந்த தந்தி வந்தது:

"அஜண்டாவிலுள்ள எல்லா விஷயங்களையும் நேச அசெம்பிளி அங்கீகரித்துக் கொண்டது. இந்தியா, தென்னாப்ரிக்காவுக்கு விரோதமாக செய்த புகாரும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஜெனரல்ஸ்மட்ஸ், இந்தியரை தென்னாப்ரிக்கா நடத்துவது சரியென்று பேசுவாரென்றும் இதைக் கண்டித்து, ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் பேசுவாரெனவும் இங்குள்ள விஷயமறிந்த வட்டாரங்கள் எதிர் பார்த்தார்கள். ஆனால் கடைசி நிமிஷத்தில் ஸ்மட்ஸ் தாம் பேசுவதாக இருந்த யோசனையை கைவிட்டு விட்டார். பிரிட்டிஷ் பிரதிநிதிகளுடனும் மற்றும் சில பிரதிநிதிகளுடனும் கலந்து பேசிய பிறகே ஸ்மட்ஸ் இவ்வாறு யோசனையைக் கைவிட்டாரென்று தெரிகிறது."



ராஜீய—சட்டக் கமிட்டியில் தங்கள் கைவரிசையைக் காட்டிக் கொள்ளலாமென ஜெனரல் ஸ்மட்ஸிடம் பிரிட்டிஷ் பிரதிநிதியும் அமெரிக்க பிரதிநிதியும் கூறியிருக்கிறார்கள். இதனாலேயே ஜெனரல் ஸ்மட்ஸ் எதிர்த்துப் பேசவில்லை. முதலில் எதிர்ப்பதாக அவர் பிரசங்கத்தைக் கூட எழுதி கொண்டு வந்திருந்தார். அதைப் பத்திரிகைகளுக்கும் அனுப்பினார். இந்தியாவுக்குக் கூட அந்த நகல் பிரசங்கம் முன் கூட்டியே வந்து விட்டது. ஆனால் கடைசி நிமிஷத்தில் பிரிட்டிஷ் அமெரிக்க தலையீட்டில் 'டங்கர்க்' செய்தார்.

டங்கர்க் செய்த ஸ்மட்ஸ் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. 5 நாட்களில் இந்தியரைப்பற்றி, ஒரு நீளமான வசை புராணத்தை வெளியிட்டார். துவேஷம், பொய், புனைச் சுருட்டுகள் இவை அத்தனையுமோடு 46 பக்கம் கொண்ட ஒரு அறிக்கையை நேசஸ்தாபனத்துக்கு அனுப்பினார். அந்த நீளமான அறிக்கையின் சாரத்தையாவது இங்கு கொடுத்தாக வேண்டும் :—

"தென்னாப்ரிக்காவிலுள்ள இந்தியர்கள், ஒன்று தென்னாப்ரிக்காவுடன் சேர்ந்து முன்னேறிக்கொண்டு போகவேண்டும். அல்லது தென்னாப்ரிக்காவை விட்டு விடவேண்டும். இந்திய மக்கள் இரண்டில் ஒன்றை இப்பொழுது செய்தாக வேண்டும்.

'தென்னாப்ரிக்கா ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் ரொம்ப முன்னேறியிருக்கிறது. தென்னாப்ரிக்கா அடைந்திருக்கும் முன்னேற்றம்போல வேறெந்த நாடும் அடையவில்லை. இந்த முன்னேற்றத்தால் இந்திய மக்கள் பெற்றிருக்கும் லாபத்தைப்போல வேறு யாரும் பெற்றதில்லை. இந்திய மக்கள் சதாகாலமும் இந்திய சர்க்காருக்கு புகார் செய்து கொண்டிருந்தால், அதைக் கேட்டு இந்திய சர்க்கார் தலையிட்டு வந்தால், சம்பந்தப்பட்ட கட்சிக்களுக்கிடையே உள்ள உறவு சீர்கெட்த்தான் செய்யும். தென்னாப்ரிக்க யூனியன் சர்க்காரிலும், நேட்டால் மாகாண சர்க்காரிலும் இந்திய மக்களுக்கு

பிரதிநிதித்துவம் அளித்திருக்கிறோம். ஆசிய நிலக்
கட்டுப்பாடு மசோதா மூலமே இந்த வசதியை அளித்தி
ருக்கிறோம். தென்னாப்ரிக்கா சரித்திரத்திலேயே இவ்
வாறு பிரதிநிதித்துவம் கொடுத்திருப்பது இதுதான்
முதல் தடவை.

" இந்திய மக்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கக்
கூடாது என்று நிறைய எதிர்ப்பிருந்தும், தென்னாப்
ரிக்க சர்க்கார் பிரதிநிதித்துவம் வாங்கிக் கொடுத்திருக்
கிறது. எனினும் இந்திய மக்கள் தென்னாப்ரிக்காவை
இல்லாததையும் பொல்லாததையும் கூறி தாக்குவது
ரொம்ப விசித்திரமாக இருக்கிறது. இந்திய மக்களுக்கு
பிரதிநிதித்துவம் கிடைத்திருப்பதால் இந்தியரின் அந்
தஸ்து மாறிவிட்டது. இந்தியாவிலிருந்து குடியேறின
தீண்டப்படாத மக்கள் தென்னாப்ரிக்காவிலே, பஞ்சமோ
பயமோ இல்லாமல் வாழ்கிறார்கள். அதோடு நிலபுல
மும் சம்பாதித்திருக்கிறார்கள். சுதந்திர அந்தஸ்தும்
பெற்றிருக்கிறார்கள். இதே சமயத்தில் இந்தியாவிலுள்ள
இவர்களின் சகோதரர்கள் நிலையோ இப்படி மாறவில்லை.
நேட்டாலில் வெள்ளையருக்கு காட்டப்படும் எந்த பொரு
ளாதார சலுகையையும், கல்வி வசதிகளையும் இந்திய
ருக்கு மறுக்கப்படுவதில்லை. எந்தத் துறையிலும்
வித்தியாசம் கிடையாது. சட்ட வரம்புக்கு உட்பட்டு
இந்தியமக்கள் அங்கு எல்லா சுதந்திரங்களையும் அனுப
விக்கலாம்.

' இந்திய மக்களுக்கு நிறவித்தியாசத்தின்மீது பிரதி
நிதித்துவம் வழங்கியிருப்பதாக இந்திய சர்க்கார்
இன்று புகார் கூறுகிறது. ஐரோப்பியர்களுக்குக்கொடுக்
கப்பட்டிருப்பதுபோல், பொதுப் பிரதி நிதித்துவம்
கொடுக்கப்படவில்லை என்று இந்திய பிரதிநிதிகள் கூறு
கிறார்கள். யூனியன் சர்க்கார் நிறவித்தியாசத்தின் மீது
பிரதிநிதித்துவம் கொடுப்பதற்கு தகுந்த காரணங்கள்
உண்டு. தென்னாப்ரிக்காவிலுள்ள பூர்வ குடிகளின்
தொகை 72 லட்சம். இவர்களின் நலனை காத்து வரும்
பொறுப்பு ஐரோபபியர் வசமே உள்ளது. ஐரோப்பியர்
தர்மகர்த்தா பொறுப்பை வகித்து வருகிறார்கள்



" தங்கள் நலனைக் கவனித்துவரும் பொறுப்பை
பூர்வகுடிமக்கள் ஐரோப்பியர் வசம் விட்டிருப்பதுபோல
இந்தியர் வசம் விட மறுக்கிறார்கள். தென்னாப்ரிக்க
பூர்வகுடி மக்கள் கிறிஸ்தவ தர்மத்தை வாழ்க்கையாக
ஏற்கவேண்டுமென்பதற்காக கடந்த 300 வருஷங்க
ளாக ஐரோப்பியர் பாடுபட்டு வருகிறார்கள். பூர்வ
வகுப்புகள், மேலைய நாடுகளின் கிறிஸ்துவ தர்மத்தை
ஏற்கவேண்டுமென்பதே ஐரோப்பியரின் லட்சியம்.

$72\frac{1}{2}$ லட்சம் பூர்வகுடிகளைவிட, $2\frac{1}{2}$ லட்சம் பேரு
டைய இந்திய மக்கள் பார்லிமெண்டில் அதிக பிரதி
நிதித்துவம்தான் பெற்றிருக்கிறார்கள்.

' இந்தியமக்களை தென்னாப்ரிக்கா வாசிகளென
மதிப்பதா அல்லது இந்திய மக்களென மதிப்பதா
என்பது முதலில் தீர்மானமாகவேண்டும். தென்னாப்
ரிக்கா சர்க்கார் ஒரு சுதந்திர சர்க்கார். ஆகவே
அதன் உள்நாட்டு விஷயத்தில் இந்திய சர்க்கார் தலை
யிடக்கூடாது. இந்தியா விஷயத்தில் யாரும் தலையிட்
டால் இந்திய சர்க்கார் பொறுக்குமா? தென்னாப்ரிக்காவி
லுள்ள இந்தியரை யூனியன் பிரஜைகளென பாவிக்க
வேண்டுமென்றால், யூனியன் சர்க்காருக்கு அவர்கள்
விசுவாசமாக நடக்கவேண்டும்."

ஜெனரல் ஸ்மட்ஸின் " இந்த தீண்டப்படாதார் "
என்ற வியாக்யானம் வெறும் புளுகு. இந்தியாவிலிருந்து
குடியேறினவர்களில் எல்லா ஜாதியினரும் மதத்தினரும்
இருக்கிறார்கள். மேலும் இந்தியாவிலுள்ள தீண்டப்
படாதவரைவிட இவர்கள் எவ்வளவோ மேலான நிலை
யில் இருக்கிறார்களெனக் கூறுவதும் பொய். இந்தியா
வில் தீண்டப்படாதார் என்ற ஜாதியே இருக்கக்
கூடாதென முயற்சி நடக்கிறது. மகாத்மா இதற்கு தம்
ஆயுள் நாளையே அர்ப்பணித்து பாடுபடுகிறார் மேலும்
தீண்டப் படாதவர்களுக்கு இன்று எந்த உரிமையையும்
இந்தியா மறுக்கவில்லை. அதிலும் சட்டத்தின் மூலமாக
மறுக்கவே இல்லை என்பதை உலகமே அறியும். இது
தான் போகட்டும். தென்னாப்ரிக்காவில் குடியேறின

நீண்டப்படாதவர்களுக்கு எவ்வளவோ உரிமை இருக்கிறதாக ஸ்மட்ஸ் சொல்லுகிறாரே அதாவது உண்மையா? அதுவும் இல்லை. இந்தியர் எவருக்கும் பார்லிமெண்டில் அங்கத்தினராக உரிமை கிடையாது. யாராவது 3 வெள்ளையரைத்தான் பிடித்து அனுப்பவேண்டும். பார்லிமெண்டாவது போகட்டும். நகர சபைகளிலாவது இடமுண்டா? அதுவும் இல்லை. சபையே வேண்டாம், காசு கொடுத்து போகும் ரயிலிலாவது இடமுண்டா அதுவுங் கிடையாது. ஒவ்வொரு துறையிலும் நிற வெறி தலைகாட்டும். இந்தியாவிலோ அப்படி இல்லை. அரசியல் நிர்ணசபைவரை நீண்டப் படாதவர்களின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். ஆகவே, ஸ்மட்ஸின் வாதம் பொய்யானது; மற்றநாடுகளை ஏமாற்ற செய்த விஷமமான பிரசாரமே இது!

நவம்பர் 13-ம் தேதி அன்று நேச தர்மகர்த்தா கமிட்டியில் பேசிய ஸ்மட்ஸ் மற்றொரு காரணம் கூறினார். அதாவது தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்தியரை ஒதுக்கி வைக்காவிட்டால், ஐரோப்பியர்—இந்தியர் என்ற வகுப்புப் பூசல், இந்தியாவில் நமது ஹிந்து முஸ்லிம் பூசல் இருப்பது போல், தென்னாப்பிரிக்காவிலும் ஏற்பட்டு விடுமென்றார். இப்படி ஏற்பட்டால், இந்தியர் தான் அவதிப் படுவார்களென்றும் அதற்காகவே இந்த நிறவெறி சட்டம் அமுலில் இருப்பதாகவும் கூறினார். இந்த வாதமும் அபத்தமானது என்பதை அதே கமிட்டியில் மறுநாள் பேசிய இந்திய பிரதிநிதி ஸர் மகராஜ் சிங் ரொம்ப அழகாகவும் விவரமாகவும் எடுத்துக் கூறினார். அதை இங்கு கூற வேண்டியது அவசியமாகிறது:—

“ஜெனரல் ஸ்மட்ஸ் நேற்று நிகழ்த்திய பிரசங்கத்தில் பெரும் பகுதி எனது பிரசங்கத்தைத் தாக்கும் ரீதியில் இருந்தது. அவர் பேசிய தோரணையை நான் கொஞ்சம் கூட ஆட்சேபிக்கவில்லை.

‘தென் மேற்கு ஆப்பிரிக்காவை தென்னாப்பிரிக்க யூனியனுடன் இணைத்துக் கொள்ளுகிற உத்தேசத்தை ஆசிய



பிரதிநிதி கோஷ்டிதான் முதன் முதலாக ஆட்சேபித்தது. இதைக் கண்ட பின்தான் அவர் ஆத்திரமடைந்து விட்டாரென்று எனக்குத் தோன்றுகிறது.

‘ஜெனரல் ஸ்மட்ஸின் யோசனையை ஆதரிப்பார் எவருமில்லாமல், அவர் தன்னந் தனியாய் பரிதபிக்கத்தக்க நிலையில் இருக்கிறார். இதற்காக நான் ரொம்பவும் அனுதாபப்படுகிறேன்!

‘இந்தியாவில் உள்ள ஜாதிமத வித்தியாசங்களைப் பற்றி தாக்கிப் பேசிவிட்டு, ‘இப்படி யிருக்கையில் யூனியன் சர்க்காரின் நிறபேத பாரபட்ச கொள்கையைப் பற்றி இந்தியா எப்படி குறை கூறலாம்?’ என்று கேட்டார். தென்னாப்பிரிக்க யூனியனில் உள்ள ஆப்பிரிக்கர்கள் நடத்தப்படும் விதத்தைப் பற்றி நான் விவரமாகத் தெரிவித்தேன். நான் நேரில் கண்டறிந்தவன் என்ற காரணத்தினால் மட்டும் நான் இவற்றைக் கூறவில்லை. நேச தேச பிரகடனத்துக்கு விரோதமாய், தென் மேற்கு ஆப்பிரிக்காவை யூனியனின் ஒரு பகுதியாக, நிரந்தரமாய் வைத்துக்கொள்ள அவர் விரும்பியதினால் தான் நான் இவைகளைப் பற்றி அவ்வளவு விவரமாக வெளியிட்டேன்.

‘தென் ஆப்பிரிக்காவை நான் நன்கறிவேன். தென் மேற்கு ஆப்பிரிக்காவைப் பற்றி யூனியன் சர்க்கார் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கைகளையும் நான் படித்திருக்கிறேன். இத்தகைய நிலையில் இருந்துகொண்டு கவனிக்கும்போது அப் பிரதேசத்தில் உள்ள ஆப்பிரிக்காக்காரர்களின் அபிலாஷைகளை அவர்கள் தாராளமாய் வெளியிட்டார்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது.

‘ஜெர்மனியின் கீழும் தென் ஆப்பிரிக்க சர்க்காரின் கீழும், தென் மேற்கு ஆப்பிரிக்கா 50 வருஷ காலம் பாஸிஸ்ட் ஆட்சிக்கு உட்பட்டதா யிருந்திருக்கிறது. இப்படி யிருந்தும் கூட, இப் பிரதேசத்தில் படித்தவர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பம். தென்னாப்பிரிக்க யூனியனுடன் இணைக்கிற விஷயத்திலும் தர்மகர்த்தா

பொறுப்பில் விடுவதென்ற விஷயத்திலும் உள்ள வித்தியாசத்தை தெரிந்து உணர்ந்து கொள்ளக் கூடியவர்கள் மிகமிகச் சொற்பந்தான்.

‘ஆப்ரிக்கர்களின் கல்வி விஷயத்தில் பிரமாதமாகச் சாதித்திருப்பதாய், ஸ்மட்ஸ் அளந்தார். தம் ஆசிய ஜனங்கள் விஷயத்தில் சோவியத் ரஷ்யா செய்திருக்கிறதோடு, அல்லது மேற்கு ஆப்ரிக்காவுடனே உகந்தாவுடனே இவர் கூறுவதை ஒப்பிட்டுப் பார்த்தால், இது எவ்வளவு மோசம் என்பது புலனாகும்.

‘மற்றுமொரு விஷயத்தை தென்னாப்ரிக்கர் குறிப்பிடத் தவறிவிட்டது. அதாவது தென் மேற்கு ஆப்ரிக்காவில் உள்ள சட்ட நிர்வாக ஆபீசர்களின் ஜாப்தா ஒன்றை யூனியன் சர்க்காரே வெளியிட்டிருக்கின்றது. இந்த நீண்ட ஜாப்தாவில் ஒரு ஆப்ரிக்காக் காரைக்கூட காணோம்!

‘1922-ல் தென்னாப்ரிக்காவில் ஏற்பட்ட ஒரு கலகத்தை அடக்க அந்த நிரபராதிகள்மீது யூனியன் சர்க்கார் குண்டுகள் வீசினதை உலகம் இன்னும் மறந்துவிடவில்லை.

‘மத்ய சட்ட சபையில் ஆப்ரிக்கர்களுக்குப் பிரதிநிதித்துவம் இருப்பதாக யூனியன் சர்க்கார் துணிச்சலுடன் பேச முற்பட்டது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. 200 பேர் உள்ள சபையில் ஆப்ரிக்காக்காரர்களுக்கு 7 ஸ்தானங்கள்தான் உண்டு. இவர்களும் ஐரோப்பியர்களாயிருக்கவேண்டும். இப் பிரதிநிதிகளில் ஒருவர் செனேட்டர் பாஸ்னர். இவர் தற்போது நியூயார்க் ஸிட்டியில் இருக்கிறார். 40 லட்சம் ஆப்ரிக்கர்களின் பிரதிநிதியாகிய இவர், தென்மேற்கு ஆப்ரிக்காவை இணைக்கக்கூடாதென்றும் பலமாக ஆட்சேபித்திருக்கிறார்.

‘ஆப்ரிக்கர்களுக்கு கல்வியளிப்பதில் பெரும்பாலும் கிறிஸ்துவ பாதிரிகள்தான் அதிக பிரயாசை எடுத்



துக்கொள்கிறார்கள். சர்க்கார் உதவி பணம் தருகிறதே ஒழிய, சர்க்காரே நடத்தவில்லை. ஆப்ரிக்கர்களுக்கு கல்வியளிப்பதை சர்க்கார் ஆதரிக்காமல் ஆட்சேபித்ததும் உண்டு.”

இதற்கு பல ஆதாரங்களைக் கூறிவிட்டு, இவைகளை யாராவது சந்தேகித்தால் தென் ஆப்ரிக்காவுக்குப் போய் பார்த்துவிட்டுவரலாம் என்று ஸர் மகாராஜ் சிங் கூறி மேலும் பேசியதாவது:—

“இத்தனை ஐரோப்பியர்களும் ஆசியாக்காரர்களும் ஆப்ரிக்கர்களும் தென் மேற்கு ஆப்ரிக்காவை இணைக்கக் கூடாதென்று சொல்லும்போது, இதுவரை ஒரு ஆப்ரிக்காக்காரர் கூட யூனியன் சர்க்காருக்குச் சாதகமாய் எழுத்துமூலம் தெரிவிக்காமல் இருப்பது உங்களுக்கு ஆச்சரியமாயில்லையா? ஜெனரல் ஸ்மட்ஸுக்கு ஒரு சவால் விடுகிறேன். 2 ஐரோப்பியர்கள், 2 அமெரிக்கர்கள், 2 ஆசியாக்காரர்களைக் கொண்ட ஒரு கோஷ்டி அங்கு போய் பார்த்துவிட்டு வந்து விவரம் கூறட்டும்.

‘இந்தியாவின் சில பகுதிகளிலே நடக்கும் வகுப்புச் சண்டைகளைப்பற்றி இந்திய பிரதிநிதி கோஷ்டியும் இதர கோடிக்கணக்கான இந்தியர்களும் கண்டித்திருக்கிறார்கள்.

‘சுதந்தர வாசலில் வந்து நிற்கிறபோது, பெரும்பாலான தேசங்களில் இந்தமாதிரி ஏற்படுவது சகஜம் என்பதை மறந்துவிடக் கூடாது. பயங்கரமான கடும் போராட்டங்கள் நடப்பது வழக்கந்தான்.

‘தென் ஆப்ரிக்காவில் கூட ஆப்ரிக்க ஜாதியினரை போயர்களும் பிரிட்டிஷாரும் விரட்டியடித்தார்கள். ஏராளமான பேரின் உயிருக்கும் சொத்துக்கும் நஷ்டம் ஏற்பட்டது.

‘தென்னாப்ரிக்காவில் சில வருஷங்களுக்கு முன்னால் போயர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் ஒரு யுத்தம் நடந்

தது. அதில் இருதரப்பினருக்கும் பலத்த உயிர் சேதம் ஏற்பட்டது.

'இந்த வருஷத்தில்தானே ஜோஹனஸ்பர்க்கைச் சேர்ந்த 1,245 ஆப்ரிக்கர்கள் போலீசாரின் தாக்குதலால் காயமடைந்தனர்! அதில் சிலர் செத்தும் போனார்கள்.

'தீண்டப்படாதவர்களை பற்றி ஸ்மட்ஸ் பேசுகிறார். அவருக்கு இந்த விஷயம் புரியாதென்று அவர் பேச்சிலிருந்தே புலனாகிறது. ஒவ்வொரு ஜாதியாருக்கும் அரசியல், முனிசிபல், சிவிக் உரிமைகள் மற்றவர்களுக்குள்ளதைப் போலவே உண்டு.

'உதாரணமாக எங்கள்பிரதிநிதி கோஷ்டியில் உள்ள 20 அங்கத்தினர்களில் 3 வெவ்வேறு மதஸ்தர்களும் பல ஜாதியார்களும் இருக்கிறார்கள். இருந்தாலும் கூட, இந்தியாவில் எங்களுக்கு சம உரிமைகள் இருக்கின்றன. மத்ய சர்க்கார் உள்பட ஒவ்வொரு மந்திரி சபையிலும் தாழ்த்தப் பட்ட அங்கத்தினர்கள் ஒருவரோ இதைவிட அதிகமாகவோ இப்போது இருக்கிறார்கள். மற்ற மந்திரிகளைப் போலவே சம அந்தஸ்தில் வேலை செய்கிறார்கள்.

'தாழ்த்தப் பட்டவர்களுக்கு வோட்டுரிமை யோக்யதாம்சங்களெல்லாம் வேண்டுமென்றே குறைவாக வைக்கப் பட்டிருக்கின்றன. சர்க்கார் உத்தியோகங்கள் இவர்களுக்கு அதிகமான விகிதத்தில் தரப்படுகிறது.

'இதே மாதிரி ஆப்ரிக்கர்களும் நடத்தப் படுகிறார்கள் என்று ஜெனரல் ஸ்மட்ஸினால் சொல்ல முடியுமா? அதே அரசியல், முனிசிபல், சமூக உரிமைகள் தென் ஆப்ரிக்காவில் உண்டா? ஓர் ஆப்ரிக்க பிரதிநிதியை கூட தன் கோஷ்டியில் ஏன் இவர் சேர்த்துக் கொண்டு வரவில்லை?

'அவருக்குத் தெரியும்; எங்களுக்குக்குள்ள தைரியம் தனக்குக் கிடையாதென்று!



'தீண்டாமையை ஒழிக்க நாங்கள் பல வருஷங்களாக பாடுபடுகிறோம். ஆனால் தென்னாப்ரிக்க சர்க்கார் அதை நீடித்து வளர்க்கப் பார்க்கிறது''

ஸ்மட்ஸின் 46 பக்கம் கொண்ட அறிக்கைக்கு இந்திய சர்க்காரும் ஒரு பதில் அறிக்கை பிரசுரித்தது. ஸ்மட்ஸ் சர்க்கார் கூறின புகார்கள் ஒவ்வொன்றையும் இந்த பதில் எடுத்து அலசி விட்டு, இந்தியர் ஆதிக்க நோக்கத்தோடு தென்னாப்ரிக்காவில் போராடவில்லை என்றும், சாதாரண பிரஜா உரிமைக்காகவே போராடுவதாகவும் கூறியது. இப்படியாக இந்தியரின் புகார் நேச தேச ஸ்தாபனத்தின் கவனத்தையே கவர்ந்தது!

# மாபெரும் வெற்றி!

நவம்பர் 22-ம் தேதி நேச பொது அசெம்பிளி கூடி யது. தென்னுப்ரிக்கா தூது கோஷ்டியின் தலைவர் என்ற ஹோதாவில் பேசிய ஜெனரல் ஸ்மட்ஸ் மீண்டும் கீழ் வருமாறு தனது பழைய பல்லவியை பாடினுர்:—

"தென்னுப்ரிக்காவிலுள்ள இந்தியரை தென்னுப் ரிக்க சர்க்கார் சரியாக நடத்த வில்லை என்று புகார் செய்திருக்கிறது. இந்த புகாரை விசாரிக்க நேச அசெம் பிளி ஒப்புக் கொண்டிருப்பதை நான் ஆக்ஷேபிக்கிறேன். இந்தியாவின் புகார் 2 பிரச்னைகளைக் கிளப்புகிறது. முதல் பிரச்னை; புகாரில் கூறப்படும் விஷயம். 2-வது விஷயம் இப்புகாரை விசாரிக்க சட்டபடி அசெம்பிளிக்கு உரிமை உண்டா என்பது. ஆகவே இப்பிரச்னையை சட் டக் கமிட்டிக்கும் ராஜீயக் கமிட்டிக்கும் அனுப்ப வேண் டுமென ஜெனரல் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது.

'முதலாவதாக இந்தியர் மோசமாக நடத்தப் படுகி ருர்களென்பது வாஸ்தவமா? இதைக் குறித்து நான் ஒன்றும் விவரிக்கப் போவதில்லை. ஆனுல் புகார், உள்ள விஷயத்தை மிகைப்படுத்தியும் திரித்தும் கூறுகிறது. மேலும் நேச ஸ்தாபனம் தலையிடும்படியாக அங்கு நிலைமை எதுவும் இல்லை என்பதை, அவசியமேற்பட் டால் நாங்கள் நிரூபிக்கவும் தயாராக இருக்கிறேம். குத் தகைக் கூலிகளாக இந்தியர் தென்னுப்ரிக்கா வந்தார் கள். பெரும்பாலும் இந்திய தீண்டப்படாத மக்கள் வகுப்பாரே இவர்களில் வந்தனர். தென்னுப்ரிக்காவில் இவர்கள் பெரும் முன்னேற்றத்தையும் கண்டிருக்கி ருர்கள். இந்தியாவில் கூட இவர்களின் சகோதரர்கள் அவ்வளவு முன்னேற்றமடைய வில்லை. கல்வி, சுகாதா ரம், சமூக அந்தஸ்து இவைகளில் எல்லாம் இவர்கள் பெரும் முன்னேற்றம் கண்டிருக்கிருர்கள். இந்தியாவில் நடப்பதுபோல இங்கு வகுப்புக் கலவரம் இல்லை.



இதே வகுப்புக் கலவரம் தென்னுப்ரிக்காவில் இந்தியருக்கும் வெள்ளையருக்கு மிடையே ஏற் பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் நாம் சமீபத் தில் சட்ட மியற்றினேம் (இந்தியர் எதிர்ப்பு சட்டம்). இந்த சட்டத்தின் காரணமாகத்தான் இன்று இவ்வளவு நெருக்கடியும் ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடி தற் காலிகமானது என்றுதான் நான் நினைக்கிறேன்.

'2-வது சட்டப் பிரச்னை. இந்த ஸ்தாபனம் இவ் விஷயத்தில் தலையிடுவது சரியல்ல வென்பது என் வாதம். தென்னுரிக்காவின் உள் நாட்டுப் பிரச்னை இது. இதில் தலையிடுவது என்பது சரியல்ல. இந்திய சர்க்கார் கிளப்பியிருக்கும் புகார் உள் நாட்டைப் பொறுத்த, ஸ்தல பிரச்னை. இந்தப் பிரச்னையை நாம் விவாதிக்க ஆரம்பித்தால், பிறகு ஒவ்வொரு தேச மைனுரிட்டி பிரச்னையையும் பற்றி நாம் விவாதித்துக் கொண்டு தானிருக்க வேண்டும்."

ஜெனரல் ஸ்மட்ஸின் இப்பேச்சுக்கு பிறகு இந்திய தூதுகோஷ்டி நேச ஸ்தாபன பொதுக்காரியதரிசிக்கு ஒரு கடிதம் எழுதினுர்கள். இந்தியாவின் புகாரை உடனே திருப்திகரமாக தீர்க்காவிட்டால், ஏற்கனவே சீர் கெட்டிருக்கும் இந்திய—தென்னுப்ரிக்க ராஜீய உறவு மேலும் சீர் கெடுமென்று அந்த புகார் எச்சரித்தது.

ராஜீய சட்டக் கமிட்டியில் பேசிய ஸ்ரீமதி பண்டிட் டும், இதையே கூறினுர். தென்னுப்ரிக்க இந்தியர் பிரச்னை என்று கூறுவது கேலிக் கூத்தாகும், முழுக்க முழுக்க இது ராஜீய பிரச்னை ஆகும், இன்னும் சொல்லப் போனுல் இது உலகப் பிரச்னையும் ஆகுமென்று ஸ்ரீமதி பண்டிட் முழங்கினுர்.

27-ம் தேதி அன்று தென்னுப்ரிக்க பிரதிநிதிகளில் ஒருவரான ஸ்ரீ. ஹீட்டன் நிக்கலஸ் என்பவர் ரொம்ப வாய்த் துடுக்குக்காக இந்தியாவின் புகாரைப்பற்றி ராஜீய சபையில் பேசினுர். ஆளத்தெரியாத இந்தியர் என்று ஆரம்பித்து, அநாகரிகர்கள் என்கிற வரையில் அவர் பேச்சு சென்றது. இந்தியாவின் ஜாதி மதங்களை

குறித்து அவர் இழிவாகவும் கிண்டலாகவும் பேசினர். ஒன்றுக்கு மேற்பட்ட கலியாணம் செய்து கொள்ளலாம் என்று அனுமதிக்கும் இந்தியர் கலாச்சாரம், மதக் கோட்பாடு இவையெல்லாம் ஒரு நாகரிகமா? இவர்களுக்கு சம உரிமை எப்படி தருவது என்றெல்லாம் ரொம்ப காரசாரமாகக் கூறினர். இவரின் பேச்சு கமிட்டித் தலைவருக்கே பிடிக்கவில்லை என்றால், இந்திய பிரதிநிதிகளுக்கு எப்படி இருக்குமென்பது சொல்லாமலேயே விளங்கும்.

மறுநாள் இவருக்கு ஸ்ரீமதி பண்டிட் பதிலளிப்பாரென அனைவரும் அறிந்திருந்தார்கள். சபை கூடின கட்டிடத்தில் எள் விழுந்தால் எள்விழ இடமில்லையாம். ஏகப்பட்டபேர் வந்து இந்தியாவின் பதிலைக் கேட்க ஆவலோடு இருந்தார்கள். மறுநாள் ஸ்ரீமதி பண்டிட் பதில் கொடுத்தார். இந்த பதில் தான் பிரமாதமாக வேலை செய்தது. பிலிப்பைன், எகிப்து, போன்ற நாடுகளை எல்லாம் இந்தியாவின் பக்கம் இழுத்து வந்தது. ஸ்ரீமதி பண்டிட் அளித்த பதிலாவது:—

“இந்தியாவின் புராதன நாகரிகத்தையும் மதப் பழக்க வழக்கங்களையும் நையாண்டி பண்ணி, தென்னாப்ரிக்க பிரதிநிதி பேசியதைக்கண்டு நாங்கள் ரொம்ப வருந்துகிறோம். கிறிஸ்துவ மதக் கோட்பாடுகளை ஒப்பிட்டு அவர் பேசியது பொருத்தமற்ற விஷயங்கள்.

'பலதார மணம் பற்றியும் அவர் குறிப்பிட்டார். ஒரு தாரத்துக்கு மேற்பட்டு கலியாணம் செய்து கொள்ளலாமென சில மதங்கள் அனுமதிக்கின்றன என்பது உண்மையே. ஆனால் இந்த வழக்கம் கீழ் நாடுகளில் மட்டும் தானிருக்கிறது என்று என்னால் கூற முடியாது. மேலும் கமிட்டி முன்னுள்ள பிரச்னைக்கும் பலதார மணத்துக்கும் என்ன சம்பந்தம்? பின் எதற்காக அவர் இதைக் குறிப்பிட்டார்? சும்மா தாக்கவேண்டுமென்ற காரணத்தைத் தவிர வேறெதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. தென்னாப்ரிக்காவுக்கு மட்டுமல்லாது, மேலைய நாடுகள் பூராவுக்குமே இப்பொழுது



பெரும் சோதனை ஏற்பட்டிருப்பதாக அவர் கூறினர். இதை நாங்களும் ஏற்கிறோம். மேலைய நாடுகள், தாங்கள் உயர்ந்த ஜாதியினர் என்று நினைத்து நடக்கப் போகிறார்களா, அல்லது நிற வித்தியாசம் சம்பந்தமாக இருக்கும் தடைகளை நீக்கப் போகிறார்களா என்பதே இப்பொழுது பிரச்னை. இந்த நேச ஸ்தாபனம் இல்லாமற் போனாலும் கூட நாங்கள் அடிப்படை ஜீவாதாரமான மனுஷ உரிமைகளை பாதுகாக்கவே முயலுவோம். இதுவே நாகரிகம். இந்த நாகரிகம் என்ன என்பதை விளக்க வேண்டிய அவசியமில்லை.

'கிறிஸ்துவ தர்மத்தைக் காக்கவே தென்னாப்ரிக்க சர்க்கார் இம்மாதிரியான (நிறவெறி சம்பந்தமான) விதிகளை ஏற்படுத்தியிருப்பதாக அவர் கூறினர். கிறிஸ்துவ தர்மத்தைப்பற்றி நாங்கள் நிறைய கேட்டிருக்கிறோம். ஆனால் ஒரு வகுப்பாரை இழிவாக நடத்த வேண்டுமென எந்த கிறிஸ்துவ தர்மமும் கூறுவதாக நான் அறியவில்லை. இந்தியருக்கு இந்த் தர்ம உபதேசத்தை போதிப்பது துர்ப்பாக்கியம்தான். கிறிஸ்து பெருமான் பிறப்பதற்கு 1000 வருஷத்துக்கு முன்பே இந்தியா உபதேசங்களைக் கொண்டிருந் திருக்கிறது.

'இந்தியாவின் பாஷைகளைப் பற்றி அவர் குறை கூறினர். இரண்டு லிபியில் இந்திய பாஷைகள் எழுதப்படுகின்றன என்றார். எத்தனை லிபியில் எழுதினாலும் என்ன? அதற்கும் சுதந்திரமும் உரிமையும் கேட்பதற்கும் என்ன சம்பந்தம்?

'தாய் நாட்டுக்கு திருப்பி அனுப்பிவிட வேண்டுமென்ற நிபந்தனையின் பேரிலேயே இந்தியரை தென்னாப்ரிக்காவுக்கு கூட்டிச் சென்றதாக ஸ்ரீ நிக்கலஸ் கூறியது பொய். குடியேறின இந்தியர் தாழ்த்தப்பட்ட மக்கள், தென்னாப்ரிக்காவிலோ இவர்களுக்கு கிடைத்தற்கு அரிய வசதிகள் கிடைத்தன என்று கூறுவது ரொம்பத் தப்பு.

'வசதிகள் எப்படி இருக்கிறது என்பதை பார்க்க வேண்டும். உதாரணமாக 25,000 இந்தியக் குழந்தை

கள், பள்ளிக்கூட வசதி இல்லாமல் அங்குதவிக்கிறார்கள்.
இது தான் வசதி. 2-வதாக தென்னாப்பிரிக்க பூர்வகுடி
மக்களான நீக்ரோக்கள், ரயில் ஓட்டுவதிலிருந்து சுப்ரீம்
கோர்ட் நீதிபதி பதவிவரை வகிக்கலாமென ஸ்ரீ நிக்கலஸ்
கூறினார். இதுவும் பொய். மாஜிஸ்டிரேட் பதவியைக்
கூட நீக்ரோக்களுக்கு தருவதில்லை. இவ்வளவு ஏன்
சாதாரண ப்ராசிகியூட்டர் பதவி, கோர்ட் குமாஸ்தாப்
பதவிகூட தருவதில்லை.

'தென்னாப்பிரிக்காவிலுள்ள வெள்ளையரல்லாத மக்
களை ஒதுக்கித் தள்ளுவது என்பதுதான் இவர்களின்
கொள்கை. இவர்களை நிறவெறி காட்டி அடக்கி ஒடுக்கி
விடுவதே இவர்களின் சரித்திரமாக இருந்திருக்கிறது.
கைத்தொழில் முன்னேற்றம் என்பதெல்லாம் இவர்
களுக்குத்தானே ஒழிய, வெள்ளையரல்லாதவர்களுக்கு
கிடையாது. தென்னாப்பிரிக்காவில் இந்தியர் இருப்பது
மேலைய நாடுகளுக்கே ஆபத்தாம். உண்மையில் யாருக்கு
ஆபத்து என்றால் வெள்ளைநிற ஆதிக்க மனப்பான்மை
கொண்டிருப்பவர்களுக்குத்தான் ஆபத்து. இந்த மனப்
பான்மையை பாதுகாக்க வேண்டுமென்று கூறுகிறார்
கள். பாதுகாப்பது என்றால், மற்றவர்கள் மீது ஆதிக்
கம் செலுத்துவது என்பதுதான் அர்த்தம்.

'இந்தியாவில் 2 நூற்றாண்டுகளாக ஆதிக்கம்
செலுத்தி வரும் பிரிட்டிஷார் இந்த நிறவெறியைக்
கைக் கொள்ளவில்லை. ராஜீய ஆதிக்கத்தைக் கொண்
டிருந்தார்கள். பொருளாதார வகையில் சுரண்டுவ
தற்கு ராஜீய ஆதிக்கம் ஒரு வசதியாக இருந்தது.
இதேபடி தான் தென்னாபரிக்காவும் செய்கிறது. மேலைய
நாடுகளுக்கு ஆபத்து என்று கூறி, 80 லட்சம் வெள்
ளையரல்லாத மக்களை, பொருளாதாரவகையில் சுரண்டப்
பார்க்கிறது. இதில் அவர்களின் ராஜாங்கத்தில் இரு
விதக் கட்சிகளே கிடையாது. அனைவரும் நிறத்தைக்
காட்டி ஆதிக்கத்தைப் பெற்றவர்கள். அவர்களின்
லட்சியமும ஒன்றுதான்.

'இந்தியாவிலுள்ள பிரிட்டிஷார் மீது நாங்கள்
கொண்டிருக்கும் விரோதத்துக்கு, தென்னாப்பிரிக்கா



பிரச்னை, ரொம்ப உதவியாக இருக்கிறது ஆகவே,
நாங்கள் தென்னாப்பிரிக்கா பிரச்னையைக் குறித்து பேசு
கிறோமென ஸ்ரீ நிக்கலஸ் கூறினார். சுதந்திரம் வேண்டி
போராடும் ஒரு தேசத்தினரின் மனப்போக்கை நிக்கலஸ்
அறியவில்லை என்பதைத்தான் இக்கூற்று காட்டுகிறது.
தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியரின் கஷ்டத்துக்கு
இந்தியாவில் நிறைய ஆதரவு இருக்கிறது என்றால்,
இந்த ஆதரவு, தானாக எழுந்தது ஆகும். இந்தியரை
அவமதிப்பது இந்தியாவையே அவமதிப்பது என்று
நாங்கள் கருதுகிறோம். இதிலுள்ள பொறுப்புகளை
உணர்ந்துதான் நாங்கள் நேச ஸ்தாபனத்துக்கு புகார்
கூறவந்தோம். இதில் துவேஷமே கிடையாது.

'இதோ என் கையிலிருக்கும் தந்தி, சிறிது நேரத்
துக்கு முன்னால்தான் எனக்குக் கிடைத்தது. இதை
உங்களுக்கு படித்துக் காட்டுகிறேன்.

"நேட்டாலில் உள்ள இந்திய மாதர்கள், ஒடுக்கப்
பட்ட மக்களுக்காக நீங்கள் நடத்தும் வீரப்போராட்டத்
தைக் கண்டு பெருமிதம் கொள்ளுகிறார்கள். சுதந்திரத்
துக்காக இதுவரை 204 இந்திய மாதர்கள் தென்னாப்பிரிக்
காவில் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். பூர்ண விடுதலை
கிடைக்கும் வரை நாங்கள் போராட்டத்தை நடத்தத்
தயார்."

"இந்த தந்தியை இந்திய தேசிய காங்கிரஸின் பெண்
கள் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் கையெழுத்திட்டு
எனக்கு அனுப்பியிருக்கிறார்கள்."

ஸ்ரீமதி பண்டிட் பேசி அமர்ந்ததும் சபையில் எழுந்த
கரகோஷம் கட்டிடத்தையே கிடுகிடுக்கச் செய்தது.
ஸ்ரீமதி பண்டிட்டை ஆதரித்து ரஷ்யபிரதிநிதி ஸ்ரீ.
ஆண்ட்ரூவ் கிராமிக்கோ, மெக்ஸிகோ பிரதிநிதி ஸ்ரீ.
காலினு, பிலிப்பைன் பிரதிநிதியான கார்லோஸ் முதலி
யோர் பேசினார்கள்

ஸ்ரீ. ஆன்ட்ரூவ் கிராமிக்கோ ஸ்ரீமதி பண்டிட்டைப்
பார்த்து:

"உங்கள் பிரசங்கத்தை நான் ஆதரிக்கிறேன்.

காரணம் உங்கள் கட்சியில் நியாயம் இருக்கிறது.
ரஷ்யா தன் ஆதரவை இதற்காகத் தரும்...."

என்று கூறினார். இந்தியர் பிரச்னையை திருப்தி
கரமாகத் தீர்க்காவிட்டால் நேச ஸ்தாபனமே உதவாக்
கரை ஸ்தாபனமாகி விடுமென ஸ்ரீ. காலினா எச்சரித்
தார். இதேமாதிரி வெனிஜூலா பிரதிநிதியும் கூறி
னார். ஸ்வீடன் பிரதிநிதி தென்னாப்ரிக்காவின் நிற
வெறி உச்சக்கட்டத்துக்குப் போய்விட்டது, இதை
மட்டந்தட்டியாக வேண்டும் என்று உணர்ச்சி ததும்ப
கூறினார். பிலிப்பைன் பிரதிநிதி ஸ்ரீ. கார்லோஸ்,
இந்தியர் பிரச்னையை சர்வதேசக் கோர்ட்டுக்கு அனுப்பு
வதைப்போல வேறு தப்பே கிடையாது என்றார். இவ்
வாறு சால்ஜவாப்புகளை நாம் எத்தனையோ செய்து
விட்டோம். முரண்டுபண்ணின ஹிட்லருக்காக மூனிக்
போனோம். யுத்தபேயைத் தடுக்காமல் ஜினிவா நாடகம்
நடத்தினோம். இப்பொழுதோ சர்வதேச கோர்ட் என்கி
றோம். இதெல்லாம் என்ன கூத்து என்றார் அவர்.

அமெரிக்கா, பிரிட்டன், தென்னாப்ரிக்கா ஆகிய
மூன்று நாடுகளும் திருதிருவென விழித்தன. ராஜீயக்
கமிட்டி தங்களுக்கு சாதகமாக இருப்பதற்கு பதி
லாக இப்படி வரிந்து கட்டி நிற்கிறதே என்று மலைத்
தார்கள். பரிதாபம்! தன் வினை தன்னையே சுடும் என்ற
சொல்லை அவர்கள் எப்படி அறிய முடியும்?

29-ம்தேதி பிரான்ஸும் மெக்ஸிகோவும் ஒரு
முக்கியமான தீர்மானம் கொண்டுவந்தன.
அதாவது தென்னாப்ரிக்காவும் இந்தியாவும் ஒத்துப்
பேசியாக வெண்டும். இதில் ஏற்பட்டிருக்கும் சம
ரஸத்தை அடுத்த பொது அசெம்பிளிக்குக் கூறி
யாக வேண்டும் என்று அந்த தீர்மானம் கூறியது.
தீர்மானத்தின் அசல் வாசகம் இதுதான்:

"தென்னாப்ரிக்க சர்க்கார், அங்குள்ள இந்தியரை
கொடுமைப் படுத்துவதாக இந்தியா புகார் செய்திருக்
கிறது.



'இதை நேச பொது அசெம்பிளி விவாதித்தது.
ராஜீய, சட்டக் கமிட்டிகளும் பரிசீலனை செய்தன. இந்த
பரிசீலனையில் பொது அசெம்பிளி இவ்வாறு கூற
வேண்டுமென முடிவாகி யிருக்கிறது:

'தென்னாப்ரிக்க இந்தியருக்குள்ள குறைகளை நீக்
குவது சம்பந்தமாக, இந்திய சர்க்காரும் தென்னாப்ரிக்க
சர்க்காரும் கலந்து பேசி என்ன நடவடிக்கை எடுத்திருக்
இறார்கள் என்பதை அடுத்த பொது அசெம்பிளிக்
கூட்டத்தில் தெரிவிக்க வேண்டும்"

இந்த தீர்மானம் டிசம்பர் 30-ம்தேதி யன்று ராஜீய,
சட்டக் கமிட்டியில் பிரேரிக்கப் பட்டது. அமெரிக்க,
பிரிட்டன், தென்னாப்ரிக்கா முதலிய நாடுகள் கஜகர்ணம்
போட்டு எதிர்த்தும் நிறைவேறி விட்டது. பிரிட்டன்
தான் மட்டும் எதிர்க்கவில்லை, பிரிட்டிஷ் டொமினியன்
களை ஏவிவிட்டும் எதிர்த்தது. என்ன எதிர்த்தும் பல
னில்லை. உலகம்தான் 19-வது நூற்றாண்டையும் கடந்து
20-வது நூற்றாண்டுக்கு வந்து விட்டதே! தீர்மானத்
துக்கு சாதகமாக 24 வோட்டுக்கள் கிடைத்தன. பாதக
மாக 19 வோட்டுக்கள் கிடைத்தன. 7 பேர் வோட்டு
போடும் சமயத்தில் சபையில் இல்லை. இந்தியா இந்த
செய்தியைக் கேட்டு சந்தோஷப்பட்டது. இந்த வெற்றி
யைக் குறித்து ஸ்ரீமதி பண்டிட் உடனே ஓர் அறிக்கை
வெளியிட்டார்:—

"நேச ஸ்தாபனத்தில் இது நமக்குக் கிடைத்திருக்
கும் 2-வது வெற்றியாகும். அடிப்படைக் கொள்கையில்
இது நமக்கு சிறந்த வெற்றிதான். மற்றொரு உலக
யுத்தத்துக்கு ஆதி காரணமாக விளங்கக் கூடிய நிற
வெறியைக் குறித்து நேச நாடுகளுக்கு எடுத்துச்
சொல்லி விட்டோம். இங்கு நமக்குக் கிடைத்த ஆதர
வைக் கண்டு திருப்தி அடைந்திருக்கிறோம். நமது கட்
சியை ஆதரித்தவர்களுக்கு நமது நன்றி. நிற வித்தி
யாசம் காட்டும் நெடு நாளைய கொள்கையைக் கண்டிக்க
மெஜாரிட்டி நாடுகள் முனைந்திருப்பது, உலகத்துக்கே
நல்ல சகுனமாகும்."

இந்த அறிக்கை வெளியான அதே தினம் ஸ்ரீமதி பண்டிட் இடமிருந்து மகாத்மாவுக்கு கீழ்க்கண்ட தந்தி வந்தது:—

"பாபுஜி, உங்களின் ஆசிர்வாதத்தால், நாங்கள், தென்னாப்பிரிக்க இந்தியரின் போராட்ட லட்சியம் சரியென நிரூபித்து விட்டோம். எங்களுக்கு சாதகமாக கமிட்டியில் 24 வோட்டுகள் கிடைத்தன. பாதகமாக கிடைத்த வோட்டு 19. கமிட்டி கூட்டம் முடிந்ததும் ஜெனரல் ஸ்மட்ஸை நெருங்கி, அவருடன் கை குலுக்கினேன். இவர் நான் வழக்காடிய விதத்தைப் பாராட்டினார்."

இந்தியாவுக்கு சாதகமாக வோட்டளித்த நாடுகளின் விவரமாவது:—

பைலோ ரஷ்யா, சிலி, சைனா, கொலம்பியா, கியூபா, செக்கோஸ்லோவாக்கியா, எகிப்து, எத்தோபியா, பிரான்ஸ், கௌதிமாலா, ஹெய்ட்டி, இந்தியா, ஈரான், ஈராக், மெக்ஸிகோ, பிலிப்பைன்ஸ், போலந்து, ஸவூதி அரேபியா, ஸிரியா, உக்ரைன், உருகுவே, ரஷ்யா, வெனிஜுலா, யூகோஸ்லாவியா.

இந்தியாவுக்கு எதிராக ஆஸ்டிரேலியா, பெல்ஜியம், பிரேஜில், கானடா, கோஸ்டாரிகா, டொமினியன் ரிபப்ளிக், எல்ஸால்வடார், கிரீஸ், ஐஸ்லாந்து, லக்ஸம்பர்க், ஹாலந்து, நிக்கார்குவா, நார்வே, பரகுவே, பெரு, ஸ்வீடன், தென்னாப்பிரிக்கா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் வோட்டளித்தன.

இந்த வோட் முடிவு அறிவிக்கப் பட்டதும் ஸ்ரீமதி பண்டிட் ஜெனரல் ஸ்மட்ஸிடம் சென்று கை குலுக்கினார். இதற்கு ஸ்மட்ஸ் உங்களுக்குத் திருப்தி தானே? என்றார்.

சிரித்துக் கொண்டே ஸ்ரீமதி பண்டிட் 'எனக்கு திருப்தியும் இல்லை; அதிருப்தியும் கிடையாது. என் தேச மக்களுக்காக எதை எடுத்து கூற விரும்பினேனோ அதை கூறியாகி விட்டது' என்றார்.



இதற்கு ஜெனரல் ஸ்மட்ஸ் "உங்கள் பிரசங்கத்தை நான் பாராட்டுகிறேன். ரொம்ப நன்றாக இருந்தது ஆனால் எங்களை தென்னாப்பிரிக்க யுத்தக் குற்றவாளிகள் என்று மட்டும் சொல்லி யிருக்கக் கூடாது" என்றார்.

இதற்கு பண்டிட் உடனே "நான் யுத்தக் குற்றவாளிகள் என்று சொல்லவில்லை. தென்னாப்பிரிக்காவில் நடக்கும் குற்றமும், யுத்தக் குற்றமும் நன்றாக இருக்கிறது என்று கூறினேன்" என்றார்.

"அது மாதிரி ஏற்படுவதை கடவுள் தடுப்பாராக" என்று ஸ்மட்ஸ் கூறிவிட்டு "பெண்ணே நீயும் நானும் உலகத்தில் எவ்வளவோ விஷயங்களை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது" என்று கூறினார்.

தென்னாப்பிரிக்காவுக்கு இந்த செய்திகளெல்லாம் சென்றதும் தென்னாப்பிரிக்க இந்திய மக்கள் பட்ட குதூகலத்துக்கு அளவே இல்லை. இனி என்ன செய்வது என்பதை ஆராய சத்தியாக்கிரகக் கமிட்டியை உடனே கூட்டினார்கள்.

பிரச்னை இன்னும் தீரவில்லை. நேச பொது அசெம்பிளிக்கு தீர்மானம் வந்துவிடு மென்பது உறுதியாய் விட்டாலும், பொது அசெம்பிளி எப்படி தீர்ப்பு அளிக்குமென அனைவரும் எதிர்பார்த்தார்கள். பொது அசெம்பிளியில் பிரேரித்த மெக்ஸிகோ தீர்மானம் நிறைவேறிவிட்டால் கவலை இல்லை. ஆனால் குறுக்கே ஸ்மட்ஸ் எதுவும் குதர்க்கம் பண்ணினால் ஆபத்து. மொத்த மெம்பர்களில் 3-ல் 2 பகுதியில் தீர்மானத்துக்கு சாதகமாக வோட்டு போட்டால்தான் தீர்மானம் நிறைவேறினதாகக் கருதப்படும். ஆகவே ஆங்கிலோ அமெரிக்க கோஷ்டிகள் அசெம்பிளியின் 54 மெம்பர்களில் பாதிப் பேரையாவது தங்களின் கைக்குள் போடுவார்களென அனைவரும் பயந்தார்கள். இந்த சமயத்தில் 8-ம் தேதி அன்று பொது அசெம்பிளி கூடியது. அன்று ஸ்ரீமதி பண்டிட் செய்த பிரசங்கம் என்றும் மறக்க முடியாத பிரசங்கம். இந்தியாவுக்கு வாகை சூடிய பிரசங்கம். சர்வதேச நாடு

களில் இந்தியா தன் மதிப்பை நிலை நாட்டுவதற்கு ஏதுவாக இருந்த பிரசங்கம். ஜெனரல் ஸ்மட்ஸும், பிரிட்டிஷ் பிரதிநிதி ஸர். ஷாகிராஸும், அமெரிக்க பிரதிநிதியான சார்ல்ஸ், பாஹியும் செய்த தகிடுதத்தங்களை எல்லாம் மட்டந்தட்டி வைத்த பிரசங்கம். அந்த பிரசங்கத்தை இங்கு தரவேண்டியது ரொம்ப அவசியம்:—

"நிறவெறி காட்டுவதாக தென்னாப்பிரிக்காவே ஒப்புக்கொண்டு விட்டது. ரொம்ப காலமாகவே, எங்களுடைய சர்க்கார் தென்னாப்பிரிக்க இந்தியரை நடத்தும் விதத்தைக் குறித்து புகார் செய்து வந்திருக்கிறது. முதலில் கோரிக்கை செய்தது. பிறகு புகார் அனுப்பியது. கண்டனமும் அனுப்பினோம். சமரசத்துக்கு வருகிறீர்களா என்றும் கேட்டோம். இதற்கெல்லாம் தென்னாப்பிரிக்க சர்க்கார் அசையவே இல்லை. கடைசியாக வேறு வழியில்லாமல் இந்த நடவடிக்கை எடுத்தோம். உலக மக்கள் முன்னிலையில் எங்கள் முறையீட்டைக் கூற முடிவு செய்தோம். தென்னாப்பிரிக்கா சர்க்கார் மட்டும் தம் போக்கை மாற்றிக் கொள்ளவே இல்லை. அசெம்பிளியில் விவாதம் நடக்கும் இந்த சமயத்தில் கூட, அது இந்தியரை இழிவு படுத்தும் அந்த சட்டத்தை அமுலில் நடத்தாமல் நிறுத்தி வைக்கக்கூட இல்லை.

'தென்னாப்பிரிக்க சர்க்காரும், மற்றவர்களும் நேச சாஸனத்தைக் காப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இது அவர்களின் கடமையுங்கூட. இந்த சாஸனத்தை நாம் மதித்து நடந்தால்தான் சாஸனத்தின் உயர்வு தெளிவாகும். மதிக்கா விட்டால் ஒன்றும் அவசியமில்லை. இந்தத் தகராறை இங்கு கொண்டுவந்திருக்கும் அவசியம் கூட ஏற்பட்டிருக்காது.

'சாஸனத்தின் கொள்கையை மீறி விட்டு, இது உள்நாட்டு விஷயம் என்று வாதிப்பது ரொம்ப பழைய விஷயம். இதைக் குறித்து விவாதிக்க கூட அவசியமில்லை. சாஸன அடிப்படைக் கொள்கையை மீறுவது உள்நாட்டு விஷயமென்றால், சாஸனத்தையே சாக அடிப்பதாகும். பிறகு உலக சுதந்திரம், சமத்துவ வாழ்வு என்பதெல்லாம் கேலிக் கூத்து.



'இந்தியர் புகார் பற்றி வந்திருக்கும் பிரெஞ்சு—மெக்ஸிகோ தீர்மானத்தை ஆதரிக்கும்படியாக நான் முக்கியமாக பிரிட்டனுக்கும், பிரிட்டிஷ் டொமினியன்களுக்கும் கோரிக்கை செய்து கொள்ள விரும்புகிறேன். பிரிட்டிஷ் சர்க்கார், தனது மந்திரிகள் மூலம் இது வரை தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் விஷயத்தில் அனுதாபம் காட்டி வந்திருக்கிறது. அடிக்கடி தம் மந்திரிகள் மூலம், தென்னாப்பிரிக்காவின் நிறவெறியை கண்டித்து வந்திருக்கிறது. ஆனால் இப்பொழுது நிலைமை வேறு விதமாக இருப்பதாகத் தோன்றுகிறது.

'நேச ஸ்தாபனத்தில் மெம்பர்களாக இருக்கும் நாம் நமது கடமையை நன்றாக உணரவேண்டும். எதிர்காலத்தின் தர்மகர்த்தாக்கள் நாம். புது உலக சிருஷ்டிகர்த்தாக்கள் நாம். ஆனால் நாம் பழைய குரோத மனப்பான்மையுடன் நடந்தால் தர்மகர்த்தாக்களாக நாம் நடக்க முடியாது.

'அநேக கோடி மக்கள், நிறத்தின் காரணமாகவும் மற்றவர்களின் துவேஷத்தின் காரணமாகவும், மற்றவர்களை விட கீழான நிலையில் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் நம்மிடம் நியாயம் எதிர் பார்க்கிறார்கள். நாம் புது உலகம் ஒன்றை ஏற்படுத்தப் போவதாக எதிர் பார்க்கிறார்கள். நியாயத்தின் அடிப்படை மூலம்தான் நாம் இந்த புது உலகத்தை ஏற்படுத்த முடியும். தென்னாப்பிரிக்காவில் ஏற்பட்டிருக்கும் நிறவெறியைக் கண்டு ஆசிய மக்களும் இந்தியரும் ரொம்ப ஆத்திரங் கொண்டிருக்கிறார்களென்பதை நான் இங்கு கூறியாக வேண்டும்.

'தென் ஆப்ரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டிருக்கும் தகராறு, நேச அசெம்பிளிக்கே ஒரு சோதனையாகும். இதில் நாம் தோல்வி அடைவோமா? இல்லை என்றுதான் நான் பதிலளிப்பேன்.

நான் கேட்பதெல்லாம் இதுதான். நேச சாஸனத்தை தென்னாப்ரிக்கா மீறியிருக்கிறது என்பது நிரூபணமாகி விட்டது. நிரூபணமான இவ்விஷயத்தின்

மீது தீர்ப்புக் கூறுங்கள் என்று நான் அசெம்பிளியை கேட்கிறேன். இது சிறு விஷயமல்ல. நேச சாஸனத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கும் கோடானு கோடிப் பேர் ஊன்றி கவனித்து வரும் பிரச்னை இது என்றும் நான் கூறுகிறேன். இதனால் பெரிய பெரிய விளைவுகள் ஏற்படுமென்பதையும் நான் சொல்லியாக வேண்டும்.

'உங்கள் ஹிருதய நல்லெண்ணத்துக்கு நான் முறையிடுகிறேன். உலக ஹிருதய நல்லெண்ணமே இந்த சபை என்ற நினைப்பில் நியாயம் கேட்டு நான் முறையிடுகிறேன்."

ஸ்ரீமதி பண்டிட் மொத்தம் 15-நிமிஷம் பேசினார். அவர் பேசி முடிந்ததும் சபையில் பலத்த கரகோஷம் எழுந்தது. பிரசங்க மேடையிலிருந்து அவர் தம் ஆசனமிருக்கும் இடம்வரை வந்து, உட்காரும் வரை கரகோஷம் நிற்கவில்லை.

ஸ்ரீமதி பண்டிட் பேசி அமர்ந்ததும் ஜெனரல் ஸ்மட்ஸ் பிரெஞ்சு மெக்ஸிகோ தீர்மானத்துக்கு ஒரு திருத்தப் பிரேரணை கொண்டு வந்தார் அதாவது:—

"இந்தியாவுக்கும் தென்னாப்ரிக்காவுக்கும் ஏற்பட்டிருக்கும் தகராறை சர்வதேச கோர்ட்டுக்கு அனுப்பி அக்கோர்ட்டின் முடிவை இந்த பொது அசெம்பிளி கோரவேண்டும்."

ஸ்மட்ஸின் பழைய பல்லவிதான் இது. இதைக் குறித்து ஜெனரல் ஸ்மட்ஸ் பேசியதாவது:—

"இந்தத் தகராறைக் குறித்து சட்ட, ராஜீயக் கமிட்டிக் கூட்டத்தில் ஒரு முடிவும் ஏற்படவில்லை. இந்த தகராறு எவ்வளவு தூரத்துக்கு உண்மையானது என்று தரா தம்மியமும் பார்க்கவில்லை. ஆகவே, நான் பிரேரித்திருக்கும் தீர்மானத்தின் பேரில் இந்த அசெம்பிளியில் வோட் எடுத்தாக வேண்டும். இந்த தீர்மானத்தைப் பிரேரிக்கும உரிமை தென்னாப்ரிக்காவுக்கு உண்டு. இப்பிரச்னையை ஒரு சர்வதேச கோட்டுதான் தீர்மானிக்கவேண்டுமே ஒழிய, ராஜீய பிரசாரத்தின்



மூலம் தீர்க்கக் கூடாது என்பதுதான் தென்னாப்ரிக்காவின் கோரிக்கை. இந்தக் கோரிக்கை ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் ராஜாங்கத்துக்கும் உண்டு என்பதை மறுக்கமுடியாது. மேலும் தென்னாப்ரிக்கா மீது இந்தியா கூறும் புகார் சாமான்யமானது அல்ல.

'கமிட்டியில் பிரஞ்சு-மெக்ஸிகோ தீர்மானம் பற்றி தீர்ப்பு எதுவும் கூறவில்லை. ஆகவே, இதில் முடிவு ஏற்பட்டாக வேண்டும். நேச ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர் நாட்டின் மீது பெரும் குற்றம் சுமத்துவது தவறு, இது பெரிய தவறாகும். இந்தத் தகராறு ரொம்ப முக்கியமானது என்பதை இந்தியப் பிரதிநிதிகளே ஒப்புக் கொள்ளுகிறார்கள். அதோடு இந்தத் தகராறினால், இந்தியாவுக்கும் தென்னாப்ரிக்காவுக்கும் இருந்த நேச உறவு ஏற்கனவே பாதிக்கப்பட்டு விட்டது இன்னும் மோசமான நிலையை அடைந்தாலும் அடையலாம்.

'ஆகவே இந்தத் தகராறின் முக்கியத்தை சபையினர் எளிதில் அறியலாம். இதனால் பெரிய விளைவுகள் ஏற்படும்.

'இந்தத் தகராறில் அநேக பிரச்னைகள் சிக்கியிருக்கின்றன. முதல் பிரச்னை இந்தியா கூறும் புகார், 2-வது புகார், நேச ஸ்தாபனம் உள்நாட்டு விஷயங்களில் தலையிடலாமா என்பது. இது விஷயத்தில் கோர்ட்டின் அபிப்பிராயம் தெரிந்தாக வேண்டும்.

'நேச அசெம்பிளிக்கு தலையிட உரிமை இருக்கிறதா என்பதை தீர்மானம் செய்யவேண்டியது சர்வதேச கோர்ட்தான். இந்த கோரிக்கையைத்தான் எனது திருத்த பிரேரணை கூறுகிறது."

ஜெனரல் ஸ்மட்ஸ் பேசி அமர்ந்ததும் அமெரிக்கப் பிரதிநிதியான சார்லஸ் பேசினார். அவர் ஸ்மட்ஸ் கட்சியை ஆதரித்து பேசியதாவது:—

'பிரெஞ்ச்-மெக்ஸிகோ தீர்மானத்தை அமெரிக்க சர்க்கார் ஆதரிக்க முடியாது. தென்னாப்ரிக்காவிலிருக்

கும் இந்தியர்களை சர்வதேச முறைப்படி, நடத்தி வர வேண்டுமென பிரஸ்தாப தீர்மானம் கூறுகிறது. இந்த தீர்மானத்தை ஒப்புக்கொண்டால், நேச அசெம்பிளி இவ்விஷயத்தில் ஒரு முடிவு கூறியதாகவே கருதப்படும். இவ்விஷயத்தைக் குறித்து சர்வதேசக் கோர்ட்டின் அபிப்பிராயம் தெரியவேண்டுமென தென்னாப்ரிக்கா கோருகிறது. தென்னாப்ரிக்காவின் கோரிக்கை நியாயமானது, விவேகமானது என்று நாங்கள் கருதுகிறோம். இது சர்வதேச சட்ட சம்பந்தமான பிரச்னை என்பதில் சந்தேகமே இல்லை. தென்னாப்ரிக்காவுக்கும் இந்தியாவுக்கும், சர்வதேச அடிப்படையில் எவ்வித ஒப்பந்தமும் நிறைவேறவில்லை என்று தென்னாப்ரிக்கா வாதிக்கிறது சர்வதேச அடிப்படையில் ஒப்பந்தம் இல்லையென்றால், இது உள்நாட்டுப் பிரச்னையாகி விடுகிறது என்பதில் சந்தேகமில்லை.

'இந்தியா இந்த வாதத்தை எதிர்க்கிறது. சர்வதேச அடிப்படையில் ஒப்பந்தம் இருந்ததாகக் கூறி, இதை தென்னாப்ரிக்கா மீறி விட்டதாகக் கண்டிக்கிறது. இதற்கு சரித்திர ஆதாரத்தை இந்தியப் பிரதிநிதிகள் எடுத்துக் காட்டுகிறார்கள். தென்னாப்ரிக்கா மீது இந்தியர் எந்தெந்த சட்டங்களைக் காட்டி புகார் கூறுகிறார்களோ, அந்தந்த சட்டங்களை எல்லாம் தென்னாப்ரிக்கா எடுத்துக் காட்டி, இவையெல்லாம் உள்நாட்டைப் பொறுத்த பிரச்னைகள் என்று விவாதிக்கிறது. இம்மாதிரியான சந்தர்ப்பத்தால் சர்வதேச கோர்ட்டுக்குப் போவது தான் சிறந்த வழி. இதன் மூலம் நாம் சர்வதேச கோர்ட்டை ராஜீய சர்ச்சையில் அனாவசியமாக ஈடுபடுத்துவதாக அர்த்தமில்லை. ராஜீயப் பிரச்னையில் சிக்கியிருக்கும் சட்டப்பிரச்னையை தீர்த்துக்கொள்ளவே நாம் கோர்ட்டை நாடுகிறோம்.

'நிறவித்தியாசம் என்ற தொல்லை, எப்பொழுதும் பெரும் பிரச்னைகளை கிளப்பி விடுகிறது. இவைகளை ஒரே வரியில் தீர்க்கமுடியாது. மனிதர் அனைவரும் சமம் என்ற அடிப்படையில், நல்லெண்ணத்துடன் தான் இதற்கு பாடுபட வேண்டும்."



அமெரிக்க பிரதிநிதி இவ்வாறு பேசி அமர்ந்ததும் சீனப் பிரதிநிதியான ஸ்ரீ வெல்லிங்டன் கூ எழுந்து இந்தியாவை ஆதரித்து கீழ்வருமாறு பேசினார்:—

"பிரெஞ்சு மெக்ஸிகோ தீர்மானத்தை சீனா ஆதரிக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். ஜெனரல் ஸ்மட்ஸ் ரொம்ப அழகாகப் பேசினார்.

'ஆனால் அசெம்பிளி, இப்பிரச்னையை இங்கேயே தீர்மானித்து உடனடியாக வோட் எடுக்க வேண்டும். ஏற்கெனவே நிலைமை கெட்டிருப்பதால் கால தாமதம் ஏற்படுவது உள்ள சீர் கேடான நிலைமையை இன்னும் அதிகமாக மோசமாக்கும். இப்பிரச்னையை சர்வதேச கோர்ட்டுக்கு அனுப்பவேகூடாது. இதனால், கோர்ட்டின் மதிப்பும் பாதிக்கப்படும்."

சீனப்பிரதிநிதி பேசி முடிந்ததும் பிரெஞ்சு—மெக்ஸிகோ தீர்மானத்தையும் ஸ்மட்ஸ் திருத்தப் பிரேரணையையும் மறுபடியும் வோட்டுக்கு விட்டார்கள். ஜெனரல் ஸ்மட்ஸ் எதிர்த்த பிரெஞ்சு—மெக்ஸிகோ தீர்மானம் நிறைவேறிவிட்டது. அதுவும் மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி வோட் பெற்று நிறைவேறிவிட்டது 54 பேர்கொண்ட சபையில் இந்தியாவை ஆதரித்து 32பேர் வோட் போட்டார்கள். எதிர்த்து 15 வோட்டுகள் தான் விழுந்தன. 7 பேர் நடுநிலைமை வகித்தார்கள். வோட் போடுவதில் கலந்து கொள்ளாத நாடுகளில் டென்மார்க் ஸ்வீடன், துருக்கி போன்ற தேசங்கள் இருந்தன.

வோட் முடிவு அறிவிக்கப்பட்டதும் ஸ்ரீ. பண்டிட்டை சபையினர் அனைவரும் சூழ்ந்துகொண்டு பாராட்டினார்கள். இந்தியாவுக்குக் கிடைத்த வெற்றி ஸ்ரீமதி பண்டிட்டுக்கு கிடைத்த சொந்த வெற்றி என்று அனைவரும் கூறினார்கள். ராஜீயக் கமிட்டியிலும் ஜெனரல் அசெம்பிளியிலும் ஸ்ரீமதி பண்டிட் நடத்திய போராட்டம் தான் இந்த வெற்றிக்குக் காரணமென்று கூறி எல்லோரும் அவரைக் கை குலுக்கினார்கள். செக்கோஸ்லாவாகிய அயல் நாட்டு மந்திரியான ஜான் மாஸரிக் பிரஞ்சு பிரதிநிதியான அலெக்ஸாண்டர் பரோடி, மெக்ஸிகோ

பிரதிநிதியான பாடிலா செர்வோ முதலியோர் ஸ்ரீமதி பண்டிட்டை பாராட்டியவர்களில் முக்கியஸ்தர்கள்.

7-ந் தேதியே ஜெனரல் ஸ்மட்ஸ் அவசரமாக நியூயார்க்கிலிருந்து விமானம் மூலம் லண்டனுக்குக் கிளம்பிஞர். இதனுல் அவர் வோட் போடும் சமயத்தில் சபையில் இருக்கவில்லை. லண்டனில் நிருபர்கள் அவரை சந்தித்து, நேச பொது அசெம்பிளியின் வோட் முடிவை அறிவித்தார்கள். ஜெனரல் ஸ்மட்ஸை அபிப்பிராயம் தெரிவிக்கும்படி கேட்டனர். இதற்கு ஜெனரல் ஸ்மட்ஸ் ஒன்றும் சொல்ல மறுத்துவிட்டார்.

நேச பொது அசெம்பெளியின் முடிவைக் குறித்து கீழ்கண்ட அறிக்கையை ஸ்ரீமதி பண்டிட் ராய்ட்டர் மூலம் வெளியிட்டார்:—

"இந்த வெற்றி கிடைத்த நேரத்தில், தன்னடக்க உணர்ச்சியே பெருகி இருக்கிறது. இந்தியாவை ஆதரித்த நாடுகளுக்கு என் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நேச ஸ்தாபனத்திடம் நீங்கள் கொண்டிருந்த நம்பிக்கை முன்னைவிட இப்பொழுது அதிகப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லியாக வேண்டும்."

நீதிபதி சாக்ளா கூறியதாவது:—

'ராஜீய கமிட்டியின் முடிவை பொது அசெம்பிளி ஊர்ஜிதம செய்ததற்காக நான் சந்தோஷப்படுகிறேன். உலக அபிப்பிராயத்தின் முன் தென்னுப்ரிக்காவின் நிறவெறி கண்டிக்கப்பட்டு நிற்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. இந்த முடிவால் நேச ஸ்தாபனத்தின் மதிப்பே ரொம்ப தூரத்திற்கு உயர்ந்து விட்டது'

இந்திய தூது கோஷ்டியின் தலைவருக்கு பண்டித ஜவாஹர்லால்நேரு கீழ்கண்ட தந்தியை அனுப்பிஞர்:—

"தென்னுப்ரிக்காவிலுள்ள இந்தியர் பற்றி பொது அசெம்பெளியில் தீர்மானம் நிறைவேறியிருப்பது பற்றி நானும் என் சகாக்களும் சந்தோஷப்பட்டு இந்திய தூது



கோஷ்டியின் மெம்பர்களின் வெற்றிக்காக பாராட்டு
கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்ள ஆசைப்படு
கிறேன்.

'இத்தீர்மானம் நிறைவேறியதின்மூலம் இந்தியாவின்
கவுரவத்தை நேச பொது அசெம்பிளி வெளிப்படுத்தி
விட்டது. அதோடு மனுஷ உரிமையைக் காக்கும்
ஸ்தாபனம் நேச அசெம்பிளி என்பதையும் உறுதிப்
படுத்தி விட்டது. நேச ஸ்தாபனத்தை எதிர் காலமும்
மனித வர்க்கமும் ரொம்ப நம்பியிருப்பார்கள்.

' இந்தியாவுக்கு சாதகமாக வோட் அளித்த நாடு
களுக்கு எங்கள் நன்றியையும் விசுவாசத்தையும் தெரிவி
யுங்கள். உலகத்தை மிரட்டிவரும் பிரச்னைகளை இந்
நாடுகளுடன் ஒத்துழைப்பதன் மூலம் இந்தியா தீர்க்க
முயலும் என்பதையும் தெரியப்படுத்துங்கள். உலக
மக்கள் முன்னேற்றத்துக்காக பாடுபடுவதே இந்தியா
வின் லட்சியம்.

'தூதுகோஷ்டிக்கு தலைமை வகித்து திறம்பட நடத்
தியதற்காக உங்களுக்கு எங்கள் வாழ்த்துக்களை கூறிக்
கொள்ளுகிறோம். உதயமாகிவரும் நவ இந்தியாவின்
மகள் ஒருத்தி, இவ்வளவு திறமையாக அசெம்பிளியில்
பிரதிநிதித்துவம் வகித்தது பொருத்தமானதே. இன்று
கூடின அரசியல் நிர்ணய சபைக்கு உங்கள் வெற்றி
நல்லதொரு சகுனமாகும்."

இந்த செய்தி இந்தியாவில் ஏற்படுத்தின சந்தோ
ஷத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. செய்தி கூறி
யதுபோல, உதயமாகி வரும் நவ இந்தியாவின் முதல்—
முக்கிய வெற்றியிது. இதற்காக நேச தேச அசெம்பிளிக்
கும், இந்தியாவுடன் தோளோடு தோள் நின்று போரா
டிய ரஷ்யா, சீனு, பிரான்ஸ் முதலிய நாடுகளுக்கும் இந்
தியா ரொம்பக் கடமைப்பட்டிருக்கிறது. அதோடு
ஸ்ரீமதி பண்டிட்டையும் நீதிபதி சாக்ளாவையும் இந்தியா
மறக்காது.

பண்டித மோதிலால் நேருவின் குடும்பத்தில் பிறந்த ஸ்ரீமதி பண்டிட் அக்குடும்பத்தின் கீர்த்தியை நிலைநாட்டினார். அதோடு சர்வதேச நாடுகளில் இந்தி யாவின் கவுரவம் ராஜ கம்பீரத்துடன் விளங்க ஒப்பற்ற சேவை செய்து விட்டார். தேசத்துக்காக அவர் சிறை சென்றிருக்கிறார். சொல்லொண்ணு துன்பங்களுக்கு ஆளாகியிருக்கிறார். இந்த சேவைகளுக்கெல்லாம் சிக ரம் வைத்தாற்போல அவரின் பிரஸ்தாப சேவை விளங் கும். தென்னாப்பிரிக்க இந்தியரின் சரித்திரத்தையும் சுதந்தர இந்தியாவின் சரித்திரத்தையும் எழுதும்போது அவரை சரித்திராசிரியர்கள் மறக்கவே முடியாது.

எதை எவர் மறந்தாலும் தென்னாப்பிரிக்க இந்தியர் ஒவ்வொருவரும் ஸ்ரீமதி பண்டிட்டின் சேவையை மறக்க மாட்டார்கள். அவர் வாழ்க! அவரின் சேவை மற்றவருக்கு சேவை உணர்ச்சியை உண்டாக்குவதாக!

தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை இனி சரியாய் விடுமா என்று கேட்கலாம். உலகத்தின் தீர்ப்பை ஒட்டி நிறவெறிகொண்ட வெள்ளையர்கள் வழிக்கு வருவார்களா என்றும் கேள்வி போடலாம். இதற்கு திட்டமான பதிலை எவரும் இப்பொழுது கூறமுடியாது. நிறவெறி உடலில் ஊறிப்போயிருக்கும் தென்னாப்பிரிக்க வெள்ளையர்கள் ஒழுங்கீக நடப்பார்களென்று நம்மால் சொல்ல முடி யாது. அதே சமயத்தில் உலகத்தை பகைத்துக் கொள் ளும் படியான துணிச்சல் அவர்களுக்கு இருக்குமா என் பதையும் நிச்சயமாகக் கூறமுடியாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்லலாம். அதாவது தென்னாப்பிரிக்க இந்தி யர் பிரச்னை முன்போல இனி இருக்காது. வைஸ்ராய் பிரபுக்களின் கடாட்சத்தையும் காலனி மந்திரியின் அரு ளையும், இந்தியாமந்திரியின் நல்லெண்ணத்தையும் எதிர் நோக்கிக்கொண்டு கடல் கடந்த இந்தியர் உட்கார்ந் திருக்கவேண்டியதில்லை. நவ இந்தியாவில் ஏற்படும் தேசிய சர்க்கார் தென்னாப்பிரிக்க இந்தியர் கோராமலேயே உதவிக்கு வரும் என்பது திண்ணம். அப்பொழுது தென்னாப்பிரிக்க வெள்ளையரல்ல உலக முழுவதும் குதிரை



சவாரி செய்துகொண்டிருக்கும் அவர்கள் வர்க்கமே எதிர்த்தாலும் ஒன்றும் அசைக்கமுடியாது!

தென்னாப்பிரிக்க இந்தியருக்குக் கிடைத்திருக்கும் இந்த வெற்றி இந்தியருக்கு மட்டும் சொந்தமல்ல. உல கத்தில் ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் எல்லா மக்களுக்கும் கிடைத்த வெற்றியாகும் இது. அதிலும் முக்கியமாக கறுப்பர் என்ற நாமகரணத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் ஆப்ரிக்க, அமெரிக்க நீக்ரோக்கள், மற்றும் அனைவருக் கும் இது மகத்தான வெற்றியாகும்!

தென்னாப்பிரிக்காவையே முதலில் எடுத்துக்கொள்ளு வோம். அங்கு கறுப்பர் ஐக்கிய அணி இனி திரண்டுவிட் டால், தென்னாப்பிரிக்காவில் அநேக விஷயங்கள் ஒழியும். முதலில் நிறவெறி ஒழியும். இரண்டாவதாக ராஜீய ஆதிக்கம் தொலையும். மூன்ருவதாக பொருளாதார சுரண்டல் இருந்த இடம் தெரியாமல் ஓடும். இவை அத்தனையும் ஒழிந்தால் என்ன ஏற்படும்? உழுது விளைத்த பூர்வகுடி மக்கள்—சுரங்கத்துக்குள்ளே மூச்சுத் திணறத் திணற உழைத்த பாட்டாளி மக்கள்—கற் பிளந்து மலைபிளந்து காட்டை நாடாக்கிய பூர்வகுடி மக் கள் மனித வாழ்வு வாழ ஆரம்பித்து விடுவார்கள். இதே விழிப்பு உலகமெங்கும் பரவினல் நொடிப் பொழு தில், மாஸ்கோ உத்தரவுக்கோ, புத்திமதிக்கோ காத் திராமல் உலகமே பாட்டாளி மக்களின் ஒரே உலகமாக மாறிவிடும் இதற்கு கத்தியோ புரட்சியோ அவசிய மில்லை. இதுதான் மகாத்மாவின் சத்தியாக்கிரக சக்தி யின் மகத்துவம். இது எப்படி ஏற்படுமென்ருல், கறுப் பர், ஆசியாக்காரர், கீழ்நாட்டு மக்கள் என்று உலகத் தில் ஒடுக்கப்பட்டிருக்கும் மக்களின் தொகை உலக ஜனத்தொகையில் முக்கால்வாசி. இவர்களை நிறவெறி, முதலாளித்துவ ஆதிக்கம், ஆளும் உரிமை முதலியவை களைக்கொண்டு அடக்கியாளும் நபர்களின் ஜனத் தொகையோ ரொம்ப ரொம்பக் குறைவு. ஆகவே, காட்டையும் மலையையும் அடித்துக் கொண்டுவரும் காட்டாற்றின் வெள்ளத்தின் முன்பே இந்த நாணல்

தட்டைகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். ஆனால் அந்த விழிப்பு ஏற்படும் நாள் எந்நாள்? தூரத்தில் இல்லை என்று மட்டும் தைரியமாகக் கூறலாம். ஜே ஹிந்த்!

# அநுபந்தம்

——:o:——

**நேட்டாலில்** இருக்கும் இந்தியர் ஜனத்தொகை எவ்வளவோ அவ்வளவுதான் ஐரோப்பியரின் ஜனத்தொகையும். ஆனால் மாகாண கவுன்ஸிலுக்கு இந்தியர் 2 பேரைத் தான் பிரதிநிதிகளாக அனுப்பலாம். அதுவும் வெள்ளையர்களைத் தான் அனுப்பவேண்டும். மேலும் படிப்பு, சொத்து, வயது, இனம் இவைகளைக் கொண்டு இந்தியருக்கு வோட்டுரிமை உண்டு.

வெள்ளையர்களுக்கோ அவ்வளவு பேருக்கும் இங்கு வோட்டுரிமை உண்டு. ஆண் பெண் வித்தியாசம் கிடையாது. வெள்ளையர்களின் பிரதிநிதித்துவ தொகை 25. இவர்களுக்கு வோட்டுரிமை, வயது வந்தவர் என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

**கேப் காலனி:** நேட்டால் மாகாண வோட்டுரிமை போலவே இங்குள்ள இந்தியருக்கும் இனம், படிப்பு, சொத்து, வயது இவைகளின்படி வோட்டுரிமை தரப்பட்டிருக்கிறது. வெள்ளையர்களுக்கோ, இப்படி இல்லை.

**ஆரஞ்ச் பிரி ஸ்டேட்:** இந்தியர் இங்கு குடியேற முடியாது. ஆகவே வோட்டுரிமை பிரச்னை எழவில்லை.

**யூனியன் பிரதேசம்:** யூனியன் அசெம்பிளியிலோ, செனட் சபையிலோ, வெள்ளையரல்லாத எவரும் மெம்பராக முடியாது. யூனியன் அசெம்பிளியில் இந்தியரின் பிரதிநிதிகள் (வெள்ளையர்) தொகை 3. இதே சபையில் வெள்ளையரின் பிரதிநிதிகள் தொகை 150. செனட் சபையில் இந்தியரின் பிரதிநிதிகள் எண்ணிக்கை 2. வெள்ளைக்காரரின் எண்ணிக்கை 40.

நேட்டால் நகர சபையில் இந்தியருக்கு பிரதிநிதித்துவம் என்பது கிடையாது. டிரான்ஸ்வாலிலும் இதே தான் நிலைமை ஆரஞ்ச் பிரி ஸ்டேட்டில், இந்தியர்தான் புக முடியாதே!

## கல்வி வசதி

வெள்ளைக்காரர்களுக்கு என்றிருக்கும் பள்ளிக் கூடங்களிலும் காலேஜ்களிலும் இந்தியர் எந்தக் காரணத்தைக் கொண்டும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

சர்க்கார் பள்ளிக்கூடங்களுக்கு உபகாரச் சம்பளம் தருவது வழக்கம். வெள்ளைக்காரர் பள்ளிக்கூடத்தில் எத்தனை பிள்ளைகள் படிக்கிறார்கள் என்று கணக்கெடுத்து தலைக்கு 16 பவுன் 7½ ஷில்லிங் வீதம் உபகார நிதியாக ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் தருவார்கள். ஆனால் வெள்ளையரல்லாதவர்களின் பள்ளிக்கூடத்துக்கு 5 பவுன் 5 ஷில்லிங்தான்.

இந்தியர் யாரும் வாத்தியாராக இருந்தால் அவருக்கு பென்ஷன் குறைவாகத்தான் கிடைக்கும்.

## கலியாணம்

டிரான்ஸ்வாலில் இந்தியர் யாரும் வெள்ளைக்கார பெண்களை கலியாணம் செய்து கொள்ளுவது கூடாது. 1897-ம் வருஷத்திலிருந்து இந்த உத்தரவு அமுலில் இருந்து வருகிறது. நேட்டாலில் இம்மாதிரி சட்டமில்லை. ஆனால் புத்தி கெட்டு எந்த இந்தியராவது வெள்ளைக்காரி ஒருத்தியை மணந்தால் அவர் உயிர் அவரிடம் தரிக்காதபடி வெள்ளை குண்டர்கள் செய்து விடுவார்கள்! ஆகவே சட்டமோ, உத்தரவோ இங்கு அவசியமில்லை.

## பிரயாண வசதிகள்

1, 2 வது வகுப்புகளில் பிரயாணம் செய்யும் இந்தியர், கண்டபடி ரயில்களில் ஏறக்கூடாது. இந்தியருக்கும் இதர கறுப்பர்களுக்கும் தனியாக ஒதுக்கி வைத்திருக்கும் வண்டியில் தான் ஏறவேண்டும். இந்த வண்டி எப்படி இருக்குமென்றால், வெள்ளைக்காரர் ஏறியிருக்கும் வண்டிகளைவிட நூறு மடங்கு மோசமாக இருக்கும். ஆனால் கட்டணத்தில் மட்டும் மாறுதல் கிடையாது!

## இதர தடைகள்

1. ஒரு தொழிற்சாலையில் இந்தியத் தொழிலாளி ஒருவன் திறமையாக வேலை செய்தால், அவனுக்கு அந்த தொழிற்சாலை அதிகாரிகள் "திறமையைப் பற்றின யோக்கியதாம்ஸ பத்திரங்கள்" வழங்கக் கூடாது.

2. வேலை கற்றுக் கொடுக்க ஒவ்வொரு தொழிற்சாலையும் சிலரை "பயிற்சியாளராக" எடுத்துக் கொள்வது உண்டு. ஆனால் இந்த சலுகை எந்த இந்தியருக்கும் கிடையாது.



3. ஐரோப்பிய வக்கீல்களோ, டாக்டர்களோ, மற்றும் பிரபல அதிகாரிகளோ, உதவி வேலைக்கு இந்தியரை எடுத்துக் கொள்ளுவதில்லை.

4. சர்க்காரில் உழைக்கும் வெள்ளைக்கார ஊழியர் ரிடையராகும்போது பெறும் பென்ஷனுக்கும் இந்திய ஊழியர் பெறும் பென்ஷனுக்கும் வித்தியாசம் உண்டு.

5. இந்தியரை சர்க்கார் வேலைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சட்டபூர்வமாக எதுவும் இல்லை என்றாலும், வழக்கத்தில் அநேகமாக எந்த இந்தியரையும் எடுத்துக் கொள்ளுவதில்லை.

6. வெள்ளைக்காரர்களுக்கென்று இருக்கும் ஹோட்டல்கள், சினிமாக் கொட்டகைகள் இவைகளுக்குள் இந்தியர் புகக்கூடாது என்று டர்பன் நகரசபை தீர்மானமே நிறைவேற்றியிருக்கிறது.

7. வெள்ளையர் தவிர இந்தியரோ மற்றவர்களோ ஆயுதம் எதுவும் வைத்துக் கொள்ளக்கூடாது.

8. பாங்குகள் அநேகமாக இந்தியருக்குக் கடன் கொடுப்பதில்லை, வெள்ளையருக்கோ, கேட்குமுன் கடன்கள் கொடுக்கும்.

9. இந்தியருக்கென சில இடங்களில் தனி ஆஸ்பத்திரிகள் வைத்திருக்கிறார்கள். ஐரோப்பியர் ஆஸ்பத்திரிகளுக்குள் இந்தியர் நுழையக் கூடாது என்று தடுக்கவே இந்த ஏற்பாடு.

10. தந்தி, தபால் ஆபீஸ்களில் இந்தியருக்கு தனியிடம். வெள்ளையருக்கு தனியிடம் என்று பிரித்துவிடப்பட்டிருக்கிறது.

11. ரயில்வே ஸ்டேஷன், டிக்கட்டு வாங்கு மிடங்களில் இந்தியருக்கு தனியிடத்தில் தான் டிக்கட் கொடுப்பார்கள். ஐரோப்பியர் டிக்கட் வாங்குமிடத்தில் இந்தியர் தலைகாட்டக் கூடாது.

12. பொது வாசகசாலைகளில் இந்தியர் புகக்கூடாது.

இவ்வளவு தடைகளை ஏற்படுத்தும் இந்த வெள்ளையரின் ஜனத்தொகை என்ன தெரியுமா? 20 லக்ஷம்தான். இவர்களில் ஐந்தில் 3 பங்கினர் போயர்கள். பாக்கி 8 லக்ஷம் பேர்தான்

44244



பிரிட்டிஷ்காரர்! 12லக்ஷம் பேர் போயர்கள்! இவர்கள் அடக்கி யாளும் கறுப்பர்களின் தொகையைக் கேட்டால் ஆச்சரியப் படுவீர்கள்!

இந்தியரின் தொகை 35 லக்ஷம். பூர்வ குடிமக்களென்ற நீக்ரோக்களின் தொகையோ 6,600,000. மலேயா, ஜாவா இங்கிருந்தெல்லாம் சென்றவர்களின் தொகை 220.000. இவர்களையும், இந்தியரை அழைப்பது போல ஆசியாக்காரர்கள் என்றுதான் அழைப்பது.

இவர்களல்லாமல் மற்றொரு 770,000 பேர் இருக்கிறார்கள், இவர்கள் வெள்ளையர்—கறுப்பர் கூட்டுறவால் பிறந்தவர்கள்

இந்த 20 லட்சம் பேர்தான் இன்று 35 லக்ஷம் இந்தியரையு. 66 லக்ஷம் நீக்ரோக்களையும், மற்றும் 99 லக்ஷம் மக்களையும் இந்த பாடு படுத்துகிறார்கள். கிறிஸ்தவ தர்மம் பேசும் இவர்களை கிறிஸ்து பெருமான்தான் காக்கவேண்டும்!

ARCHIVES LIBRARY
108896

Printed at the Oriental Printing Works, Madras.
For Tamizhagam, Ramachandrapuram.